# அருள்மிகு வீரபத்திரர் கருத்தரங்கு மலர்

2982



21-22 டிசம்பர் 2002, சென்னை

# SAKTHI SUGAR LIMITED

## A PACE SETTER FOR RURAL PROSPERITY

**Sakthi Sugars** have enriched the springs of rural life by contributing over Rs.170 crores as sugarcane price annually to over thirty thousand farmers and generating gainful rural employment to over one lakh families in the primary, secondary and tertiary sectors.

**Sakthi Suagars** have engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in the yield of sugarcane to over 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs.12, 000/- per acre.

**Sakthi Sugars** have modern distilleries at Sakthinagar and Haripur to produce superior quality of Industrial Alcohol (Nuetral spirit & Rectified Spirit). With the Bio-methanisation process, the bio-gas generated from the distillery effluent serves as a valuable fuel for the boilers while endeavouring a pollution free environment.

**Sakthi Sugars** have an Effluent Treatment division to provide Turn-key projects to the various distilleries to endeavour a clean environment in the country.

**Sakthi Sugars** have Soya Processing facilities to produce protein rich edible grade Soya Flour, Soya Bite and Soya Oil to fight protien deficiency from our midst.

**Sakthi Sugars** have promoted a number of rural development programmes viz. (1 ) Sakthi Higher Secondary School. (2) Sakthi Institute of Technology. (3) V. M. Kailasam Hospital with a chain of mini PHCs (4) Voluntary Health Services -Leprosy Hospital, etc.

**Sakthi Sugars** spread sweetness to millions of homes with her superior quality white crystal sugar. SAKTHI SUGARS stand poised for greater strides in the years to come.

SAKTHI SUGARS LIMITED

A PACE SETTER FOR RURAL PROSPERITY

Head Office: 180, Race Course Road
Coimbatore : 641 018

FACTORIES

| | | |
|---|---|---|
| **Regd. Office, UNIT-I & Distillery**<br>Sakthi Nagar-638 315<br>Erode District<br>Tamil Nadu | **UNIT II**<br>Kannariruppu Mathur<br>Padamathur - 623 560<br>Sivaganga Tk, Sivaganga Dist.<br>Tamil Nadu. | **UNIT III & Distillery**<br>Haripur Village<br>Korian P.O.- 759 013<br>Dhenkanal Dist.<br>Orissa |
| **UNIT IV**<br>Barambahar<br>Synapal P.O. - 754 031.<br>Cuttack District<br>Orissa | **SOYA UNIT**<br>Marchinaickenpalayam<br>Ambarampalayam Post<br>Pollachi Tk, - 642 103<br>Tamil Nadu. | **Sakthi Auto Component Ltd.**<br>Mukasipallagoundenpalayam<br>Perundurai Tk. - 638 056<br>Erode District<br>Tamil Nadu |

Dr. U.V. SAMINATHAIYER LIBRARY
Besant Nagar
Chennai - 90



சுவாமி மலை வீரபத்திரர்



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
புரவலர்

37052|2982



அருட்செல்வர் நா. மகாலிங்கம்
புரவலர்



தர்மதிருமதி AVM இராஜேஸ்வரி அம்மையார்



அருள்மிகு ஆதிபராசக்தி பீடம்
அருள்திரு பங்காரு அடிகளார்



ஸ்ரீஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்
இவருக்கு வீரபத்திரர் குலதெய்வம்



ஸ்ரீஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதிபதி
ஸ்ரீஸ்ரீ ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



ஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன் MBBS DA (Lond) FACP
தலைவர்



டாக்டர் வை. கௌரி சங்கர் Ph.D.
துணைத்தலைவர்



பேரா டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்
செயலர்



திரு த.நா. மதிவாணன்
துணைச் செயலர்



திரு எஸ். அண்ணாமலை
பொருளாளர்



முனைவர் சரளா இராசகோபாலன் முனைவர் மலையமான்
மலர் பதிப்பாசிரியர்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்



தவத்திரு பித்துக்குளி
முருகதாஸ்



வித்துவான்
வே. லட்சுமணன்



திரு C. சிவசுப்பிரமணியம்



திரு ஆர். காந்தி



திரு எஸ்.கே. குலசிங்கம் மலேசியா



திருமதி இந்திராணி சிவகுருநாதன்
ஆஸ்ட்ரேலியா



திருமதி சாரதா நம்பிஆரூரன்



கலைமாமணி விக்கிரமன்



பேரா சு.நா. சொக்கலிங்கம்



முனைவர் ச. முத்துக்குமரன்



திரு ஆர். நாகசுந்தரம்



திரு V.G. சந்தோஷம்



திருமதி மணிமேகலை கண்ணன்



திரு சிவபரமசிவம்



திரு T.S.K. கண்ணன்

# செயற்குழு உறுப்பினர்கள்



திரு கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்



திருமதி வாசுகி கண்ணப்பன்



திரு இதயகீதம் இராமனுஜம்



திருமதி லலிதா சுந்தரம்



திரு T. பால சுப்புரமணியம்



முனைவர் விஜயலட்சுமி இராமசாமி



திரு V. வசந்தாகுமார்



திரு J.P. முத்துகுமார்



திரு வி. சபாபதி



முனைவர் கிருஷ்ணவேணி அருணாச்சலம்



திரு J.S. முருகப்பன்

**மேலும் செயற்குழு உறுப்பினர்கள்**

வாஸ்து வியாசகர் V. கணபதி ஸ்தபதி

திரு.B.S. ஞானதேசிகன் M.P.

டாக்டர் S.P. சபாரத்தினம்

M.A. உசேன்

திரு இரா. முத்துகுமாரசாமி

டாக்டர் N.K. சண்முகம்

# அருள்மிகு வீரபத்திரர்
# கருத்தரங்கு அழைப்பிதழ்

சிவனின் அம்சமே வீரபத்திரா போற்றி
சிவனின் வடிவமே வீரபத்திரா போற்றி
சிவாயநம ஓம் வீபத்திரா போற்றி
வீரபத்ரா ஓம் நமச்சிவாய போற்றி

இடம் : **ஏ.வி.எம்.ராஜேஸ்வரி திருமண மண்டபம்**
மைலாப்பூர், சென்னை 600 004.

Place : **AVM Rajeswari Tirumana Mandabam**
Mylapore, Chennai - 600 004.

நாட்கள் : **21-22 டிசம்பர் 2002**
இரு முழு நாட்கள்

Days : **21 - 22nd December 2002**
Two full days

## அருள்மிகு வீரபத்திரர்
## கருத்தரங்கு - தொடக்க விழா

21 டிசம்பர் 2002
காலை 9.30 மணி

திருமுறைஓதுதல் : **தேவார ஓதுவார் சற்குருநாதன்**

காலை 10.31 மணி

குத்துவிளக்கு ஏற்றுதல் : திருமதி **AVM இராஜேஸ்வரி அம்மையார்**

வீரபத்திரர் வாழ்த்து : திருமதி ரு. **கற்பகம் லோகநாதன்**

வரவேற்புரை : டாக்டர் **ஜே.ஜி. சண்முகநாதன்**

தோரணவாயில் : பேரா டாக்டர் **ஜே.ஜி. கண்ணப்பன்**

இலலிதா சுந்தரம் படைத்த அருள்மிகு வீரபத்திரர் அருள்தலங்கள் நூல் வெளியிட்டு கருத்தரங்கு தொடங்கிச் சிறப்புரை : தவத்திரு குன்றகுடி **பொன்னம்பலம் அடிகளார்**

கருத்தரங்கு மலரை வெளியிட்டு சிறப்புரை : அருட்செல்வர் **நா. மகாலிங்கம்**

மலர், நூல் பெறுபவர்கள் : திரு **கே. வீரமணி**, ஜெம் கிரானைட்ஸ்
திரு **ஆர். சின்னக்கண்ணன்**, ஸ்டார்லிங் கம்ப்யூட்டர்ஸ்
திரு **எம். முரளி**, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
திரு **வி.ஜி. சந்தோஷம்**
வித்வான் **வே. லட்சுமணன்**
திரு **பி.எஸ். ஞானதேசிகன், M.P.**
மற்றும் பலர்

அருளாசி வழங்குபவர் : **ஸ்ரீலஸ்ரீ இராசலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்**
கூனம்பட்டி ஆதினம்

வாழ்த்துரை : முனைவர் **வி. கௌரிசங்கர்**

ஆதிபராசக்தி பீடம் சார்பாக

**திரு அன்பழகன்**

முனைவர் **குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்**

தருமையாதீனம்

அருள்திரு **முத்துக்குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள்,**

திருமூலர் மிஷன்

தவத்திரு **பித்துகுளி முருகதாஸ்**

நன்றியுரை : திரு. **நா. மதிவாணன்**

# கருத்தரங்கு

21 டிசம்பர் 2002

சிறப்புச் சொற்பொழிவு : சிற்ப விஞ்ஞானம்
பகல் 12 மணி வாஸ்து வியாசகர்
கலைமாமணி
**கணபதி ஸ்தபதி**

மாலை 1.00 மணி : மதிய உணவு

## கருத்தரங்கம் முதல் அமர்வு

(மாலை 2.00 மணி)

தலைமை : டாக்டர் **எம்.ஏ. உசேன்**

பங்கேற்பவர்கள்

1. பேரா முனைவர் **த. சுந்திரகுமார்** : சிற்பங்களில் வீரபத்திரர்
2. முனைவர் பொதிகை **இரா. முத்துக்குமரன்** : வானறிவியல் கண்ணோட்டத்தில் வீரபத்திரர்
3. பேரா முனைவர் **சரளா இராசகோபாலன்** : ஒட்டக்கூத்தர் கண்ட வீரபத்திரர்
4. நீதிபதி **சேது முருகபூபதி** : வேள்வியை அழித்த வீரபத்திரர்
5. பேரா முனைவர் **ஹேமா சந்தானராமன்** : செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் வீரபத்திரர்
6. முனைவர் **மலையமான்** : வீரபத்திரரின் பல பெயர்கள்
7. பேரா முனைவர் **சாரதா நம்பி ஆரூரன்** : சமயப் பார்வையில் வீரபத்திரர்
8. பேரா முனைவர் **கஸ்தூரி ராஜா** : வீரபத்திரர் காட்டும் வாழும் வழி
9. வித்வான் **அ. பாண்டுரங்கனார்** : இலக்கியத்தில் வீரபத்திரர்
10. திரு. **ஆ. திருவாசகன்** : தக்கயாகத்தின் வெற்றியே சிவராத்திரி
11. திரு. **சி.பி. சிவப்பா** : வீரபத்திரர் வருகை
12. பேரா **சு.ந. சொக்கலிங்கம்** : Veerabadra Temple at Pillayar Kuppam
13. முனைவர் **விஜயலட்சுமி இராமசாமி** : கோட்டை வீரபத்திரர்
14. முனைவர் **த. பெரியாண்டவர்** : குலதெய்வ வழிபாடு
15. திருமதி **செல்விராஜன்** : தாத்தா தந்த தெய்வம்
16. முனைவர் **கிருஷ்ணவேணி அருணாசலம்** : வியர்வையில் விளைந்த வீரபத்திரர்
17. திருமதி **வாசுகி கண்ணப்பன்** : வாழ்வியல் வீரபத்திரர்
18. திரு. **சிவ பரமசிவம்** : வீரபத்திரரும் குறுமன்ஸ்களும்

மாலை 5.00 மணி

**குறுமன்ஸ் பழங்குடி வீரபத்திரருக்குப் பூஜை செய்யும் முறைகள்**

அமைப்பு : **அருள்மிகு வீரபத்திர சுவாமி பக்த சமாஜம்,** சென்னை - 101

திரு. எல். மணி

திரு. வி. சேகர்

திரு. சி. இராமலிங்கம்

திரு. சிவ பரமசிவம்

திரு. எம். ஜெயஜீலன்

திரு. எஸ். குபேரன்

மாலை 6.00 மணி
நாட்டிய நிகழ்ச்சி : வெற்றி தரும் வீரபத்திரர்
நடத்துபவர் : நர்த்தகி நடராஜன் குழுவினர்

இரவு 8.00 மணி : இரவு உணவு

# இரண்டாம் நாள் கருத்தரங்கு

22, டிசம்பர் 2002

காலை 8.15 மணி
திருமுறைஓதுதல் : திருமுறைத் தேவிகள்
திருமதி ரங்கநாயகி சுப்பிரமணியம்
திருமதி இந்திரா முருகானந்தம்

9.00 மணி
சிறப்புச் சொற்பொழிவாளர்களைச்
சிறப்பு அறிமுகம் : பேரா முனைவர் சாரதா நம்பி ஆரூரன்
சிறப்புச் சொற்பொழிவு : சொல்லின் செல்வர் திரு. சுகிசிவம்
"குலதெய்வ வழிபாடு"

காலை 10.00 மணி
சிறப்புச் சொற்பொழிவு : கவிப்பேரரசு இளந்தேவன்
"கடவுள் மொழி"

காலை 11.00 மணி
முனைவர் திருமதி
விஜயலட்சுமி இராமசாமி
திருமதி வாசுகி கண்ணப்பன் : வீரபத்திரர் கதை இசைப்பொழிவு
திருமதி லலிதா சுந்தரம்
திருமதி ஞ. கற்பகம் லோகநாதன்
கலைஞர் வாசுதேவராவ் : பக்கவாத்தியம்

## கருத்தரங்கம் இரண்டாம் அமர்வு

தலைமை

### முனைவர் உலக நாயகி பழனி

1. திரு க. சரவணன் — வீரபத்திரரும் குறும்பரும்
2. பேரா புரிசை ச. நடராஜர் — கச்சியப்பர் கண்ட வீரபத்திரர்
3. திருமதி லலிதா சுந்தரம் — சிற்பங்களில் வீரபத்திரர்
4. செவாலியர் வி.ஜி. சந்தோஷம் — திருவானைக்கா வீரபத்திரருக்கும் புகழ்மாலை
5. திருமதி பொதிகை மு.கோமதி — இன்றைய வழிபாட்டில் வீரபத்திரர்
6. திரு இதயகீதம் இராமானுஜம் — அருள்தரும் வீரபத்திரர்
7. திருமதி மீனாட்சி வசந்தகுமார் — வீரபத்திரர் என்ற சரபேஸ்வரர்

மாலை 1.00 மணி — மதிய உணவு
மாலை 2.00 மணி — சிறப்புச் சொற்பொழிவு
முனைவர் அரங்க. இராமலிங்கம் — வீரபத்திரர் அறிவியல்

## கருத்தரங்கம் மூன்றாம் அமர்வு

22 டிசம்பர் 2002
மாலை 3.00 மணிக்கு

தலைமை

பேரா முனைவர் சரளா இராசகோபாலன்

| | |
|---|---|
| 1. முனைவர் கே. சந்தானராமன் | கச்சியப்பர் காட்டும் வீரபத்திரர் |
| 2. புலவர் பொன். தெய்வநாயகி ஜோதி | வீரபத்திர வரலாறும் குடிகொண்ட தலமும் |
| 3. பேகன் பி. பாண்டியன் | வீரபத்திரரின் விஸ்வ ரூப தரிசனம் |
| 4. திருமதி பானுமதி நரசிம்மலு | புறடர் காட்டா வீரவாள் |
| 5. திருமதி ஜெகதீஸ்வரி | ஓவியத்தில் வீரபத்திரர் |
| 6. சிவத்திரு ஜே.ஜி. செயசீலன் | திருவானைக் கோயில் கல்வெட்டில் பாடல்கள் |
| 7. திரு. சுகுமாரன் | வீரபத்திரர் வழிபாடு |
| 8. கவிஞர் சீனி திருநாவுக்கரசு | வீரபத்திரர் அறிவியல் கவிதை |
| 9. கவிஞர் குமரிச்செழியன் | வீரபத்திரர் வழிபாடும், வரலாறும் |
| 10. திரு இராமசுப்பிரமணியன் | தேவாரத்திலும், திருவாசகத்திலும் வீரபத்திரர் |

மாலை 5.00 மணி

## வில்லுப் பாட்டு

வில்லிசை வேந்தர்

கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம்

திருமதி பாரதி திருமகன், MA MPhil.,

திரு எஸ். காந்தி MA., MPhil., குழுவினரின் வீரபத்திரரின் வில்லிசை

## நிறைவு விழா மாலை 7.00 மணி

22–டிசம்பர்
மாலை 6.00 மணி

அருளாசி வழங்குபவர்கள்

ஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

தீர்மானங்கள், விழா முடிவு
நாட்டுப்பண்

விருந்தோம்பல்

கங்கா மருத்துவமனை, கோவை
மற்றும் பலர்



வெற்றி தரும் வீரபத்திரர் நாட்டிய நடனம் வழங்கும் நர்த்தகி நடராஜ்

உ

சிவ சிவ

*"தன் கடன் அடியேனையும் தாங்குதல்*
*என் கடன் பணிசெய்து கிடப்பதே!"*

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி : 04577-264227
264466

நாள் :3.12.2002

# வாழ்த்துரை

சென்னையில் மிகச்சிறப்பாக வீரபத்திரர் கருத்தரங்கு நடைபெற வாழ்த்துகின்றோம். சிவபெருமானின் மூர்த்தி பேதங்களில் மிகச் சிறப்புடையது வீரபத்திரர் கோலம். ஊழிக் காலத்தில் உலகை இயக்கும் தலைவன் தீமையை-தக்கன் வேள்வியை அழிக்கும் நிலையில் வீரக்கோலம் கொண்டிருப்பதுதான் வீரபத்திரர் திருக்கோலம். இக்கருத்தரங்கை மிகச் சிறப்பாக இயக்கிக் கொண்டிருக்கும் மருத்துவர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

அருள்மிகு வீரபத்திரர் கருத்தரங்கம் வெற்றிபெற எல்லாம் வல்ல இறையருளைப் போற்றி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**பொன்னம்பல அடிகளார்**

Phone : (04112)222115
Fax : (04112) 224305
Email : skmkanchi@md3.vsnl.net.in

Sri Chandramouleeswaraya Namaha:

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# Jagadguru Sri Sankaracharya Swamigal

*SRIMATAM SAMSTHANAM*

***No. 1, Salai Street, Kanchipuram - 631 502.***

Date: 12 . 12. 2002

ஸ்ரீ பரமேஸ்வரனுடைய அம்சமாக கால
பைரவர், வீரபத்ரர் போன்றவர்களெல்லாம்
தக்ஷபிரஜாபதி தக்ஷயாகம் செய்தபோது
பரமேஸ்வரனை நிந்தை செய்த சமயம் தக்ஷ
னின் கர்வத்தை அடக்க தோன்றினார்கள்.
அநேகமாக காலபைரவர் எல்லா கோவில்
களிலும் இருக்கும். வீரபத்ரர் பல இடம்
மக்களுக்கு குல தெய்வமாகவும் விளங்
குகிறார். அப்படிப்பட்ட வீரபத்ரரின்
நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் தொகுத்து
ஒரு நிருத்தரங்கம் சென்னையில் நடை
பெறுவதையும் அப்பொழுது ஒரு மலர்
வெளியிடுவதையும் கேட்டு சந்தோஷிக்
கிறோம்.

மேன் மேலும் இதே போல நல்ல
நிகழ்சிகள் தொடர ஆசீர்வதிக்கிறோம்

— நாராயணஸ்ம்ருதி —

**Dr.K. Venkatasubramanian**
Member
Planning Commission
Goverment of India

Yojana Bhawan
Parliament Street
New Delhi 110001
Tel: (O) 3096566
3384606 (R)
Fax : 3096567
E-mail.: man@yojana.inc.in

सत्यमेव जयते

November 7,2002

**பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய டாக்டர் கண்ணப்பன் அவர்களுக்கு,**

வணக்கம். நலம். நலமறிய ஆவல்.

தங்களையும் திருமதி வாசுகி அம்மையையும் எங்கள் இல்லத்தில் சந்தித்தது பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

அருள்மிகு வீரபத்திரர் கருத்தரங்கைத் தாங்கள் ஆரம்பிக்க இருப்பது கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். அருள்மிகு வீரபத்திரரைப் பற்றித் தமிழகம் இன்னும் நன்கு அறிய வேண்டும்.

அருள்மிகு வீரபத்திரன் அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் எல்லா நலனும் அருளப் பிராத்திக்கிறேன்.

நன்றி

என்றும் தங்கள்

**கி. வேங்கடசுப்ரமணியன்**

துணைத் தலைவர்
அனைந்திந்திய முதலியார் நன்னலச் சங்கம்
எண் 9, இராஜீவ் காந்தி நகர்,
கொளத்தூர், சென்னை-600 099.
தொலைபேசி எண் : 6506114

# வாழ்த்துரை

அருள்மிகு வீரபத்திரர் சுவாமி, பல்வேறு நாடுகளில் வீற்றிருக்கும் சிறப்பு அம்சங்களை ஒன்று திரட்டி நல்ல முறையில் வடிவமைத்து நாட்டு மக்களுக்கு எளிய நடையில் புரியும் வகையில் ஆன்மீகத்தைத் தெளிவுபடுத்தி ஒரு தாய் தன் கருவறையில் ஐயிரண்டு திங்கள் காத்து ஒரு மழலைச் செல்வத்தை ஈன்றெடுக்க எப்படி அரும்பாடுபடுகிறாளோ அதே வகையில் பல நாடுகள் சுற்றி நல்ல பல ஆன்மீக கருத்துக்களைத் திரட்டி வீரபத்திரர் சுவாமிகளின் கருத்தரங்கு மலர் தொகுப்பினை வெளியிட உறுதுணையாக நின்ற

திரு.J.G. கண்ணப்பன் அவர்களையும்

திருமதி வாசுகி கண்ணப்பன் அவர்களையும் பாராட்டி

அவர்களின் முயற்சி வெல்க! வெல்க!

மலர் இனிதே மலர்க! மலர்க!

விழா சீரோடு சிறப்போடு சிறக்க! சிறக்க! என்று எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

**மு. இராதாகிருஷ்ண முதலியார்**

# தலைவர் செய்தி

இறையருள் ஒன்றே இவ்வுலகில் மனிதனுக்கு நிலையான இன்பமும், மன அமைதியும் அளிக்க வல்லது. தன் அறிவாலும், திறமையாலும், கற்ற கல்வியாலும் மனிதன் எத்துணைப் பொருள் சேர்த்தாலும், மற்றும் உயர் பதவி அடைந்தாலும் அந்தச் செயற்கையான செல்வம் அவனுக்கு நிலையான நிம்மதியும் இன்பமும் அளிப்பதில்லை. மதுவுண்ட குரங்கு போல் அலைபாயும் அவன் உள்ளம் மேன்மேலும் எதை எதையோ தேடுவதிலேயே காலம் செலுத்தி நிம்மதி இழக்கிறது. இடுக்கண் நேர்ந்த போதும், இறையருள் மனிதனுக்குத் தைரியமும், நம்பிக்கையும் அளித்து அந்தக் கஷ்டமான நிலையைச் சமாளிக்க உதவுகிறது.

ஆகவேதான் அலைந்தலைந்து ஓய்ந்தபின் முதிய வயதில் நம்மில் பலர் இறையன்பில் வயப்பட்டு, அவன் நாமம் துதித்து இறைவனின் சிந்தையால் உலகில் மாயை, மருள் தவிர்த்து இதுவரை அவர்களுக்கு எட்டாத அமைதியில் கலந்து இன்பம் அடைவதைக் காண்கிறோம்.

இந்த இறையருள் பெற நமது வாக்கும், மனமும், செயலும் இறைவன் பால் சேர்தல் வேண்டும். இதன் வழி காணவே, அருள்மிக வீரபத்திரர் குடிமக்களும், பக்தர்களும், அன்பர்களும் அவரது பெருமை, வரலாறு, ஆன்மீகம், தோற்றம், எல்லையில்லாக் கருணை ஆகிய யாவையும் நன்கு அறிந்து புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக ஒரு சிறப்புக் கருத்தரங்கு நடத்த முடிவெடுத்தது மகிழ்ச்சிக்குரியது. இதில் ஆய்ந்து தெளிந்த ஆன்றோர்களும், தெய்வீகச் சான்றோர்களும், கல்விமான்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

*'கற்க கசடறக் கற்பவை - கற்றபின்*
*நிற்க அதற்குத் தக'*

எனும் வள்ளுவர் வாக்கின் வழி நின்று இக் கருத்தரங்கில் பங்கு ஏற்கும் அனைவரும் ஆண்டவன் அருமை, பெருமைகளை முற்றும் அறிந்து உணர்ந்து அவன் அருள் நாடிப் பலன் பெறுவோமாக!

வாழ்க வளமுடன்
வாழ்க இவ்வையகம்

**டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன்**

# வீரருக்கு மலர் மாலை

பெருவிழா நடத்துவது என்பது அரிய நிகழ்ச்சி. அதை ஒட்டி மலர் ஒன்று வருவது, நிலையான நினைவுச் சின்னம். அருள்மிகு வீரபத்திரர் கருத்தரங்கை விரிவான அளவில் நடத்தவேண்டும் என்று டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பனும், டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதனும் இவர்களைச் சார்ந்தோரும் தீர்மானித்தார்கள். இதற்குப் பல துறையினரும், பல நிலையினரும் பக்கத்துணை ஆனார்கள். கருத்தரங்கை ஒட்டி மலரை உருவாக்கும் முயற்சி முளைவிட்டது. நாளிதழ்கள் செய்தியைக் கூறின. தனி நிலை மடல்களும் அறிஞர்கள் கை ஏறின. வந்த கட்டுரைகள், கவிதைகள், படங்கள் அளவை மீறின.

வீரபத்திரரின் தோற்றம், செயற்பாடு, பெருமை ஆகியவை பற்றி வந்த கட்டுரைகள் சிறப்பைக் குவித்தன. இவை, அவரைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆய்வு நிகழ்த்தின. மெய்ப்பொருள், வரலாறு, சிற்பத்துறை, ஓவியம், அறிவியல், இலக்கியம், புராணச் செய்தி முதலிய பல கூறுகளைத் திரட்டித் தந்தன.

வீரபத்திர வழிபாடு தமிழகத்திற்கு மட்டும் உரியதன்று. கருநாடகம், ஆந்திரம், மகாராட்டிரம், வங்காளம், முதலிய மாநிலங்கள் அவரைப் போற்றி வணங்கின, வணங்கு கின்றன என்ற உண்மை புரிந்தது. எந்தெந்த ஊர்களில் வணங்குவதற்குரிய வீரபத்திரரின் சிலைகள் உள்ளன, சிற்பம் தாங்கி நிற்கும் கோயில்கள் உள்ளன என்பன போன்ற செய்திகள் தெரிந்தன. சமயப் பார்வையிலும், வழிபாட்டிலும் வாழ்வியலிலும் வாழும் வீரபத்திரரை அடையாளம் காட்டின. தமிழ்க் கடவுளைத் தமிழால் போற்றிக் கவிதைகளும் பெருமை சேர்த்தன. பல்லவரின் மரபினர் என்ற உரிமையைத் தெரிவிக்கும் குறும்பருக்கும் இவரே குலதெய்வம் என்ற உண்மையை இம்மலர் வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. வீரபத்திரரைப் பற்றிய பல வகை நிழற் படங்கள், மலரின் தகுதியை மேலும் உயர்த்தியுள்ளது.

வீரபத்திரரைப் பற்றி ஏறத்தாழ எல்லாச் செய்திகளும் உள்ளடக்கிய இம்மலர் அவரைப் பற்றிய கலைக் களஞ்சியமாக உள்ளது. இது சமயவாணர்களின் தேன்கூடு; ஆய்வு மாணவருக்குக் கையேடு; அறிவுப் பசியாளருக்கு அமுதசுரபி; மெய்ப் பொருளாளருக்கு இன்ப அருவி.

இம்மலருக்குக் கட்டுரை, கவிதை, படம் வழங்கிய பெருந்தகையாளர்களுக்கு நன்றி உரியது. வாழ்த்து கூறிய தாய் உளத்தினருக்கும் நன்றி உரியது. விளம்பரத்தால் வளம் சேர்த்த விழுமியோருக்கும் நன்றி உரியது. வீரருக்குரிய மலர் மாலைக்கு வடிவம் தந்த மாசறு, ஜெயராஜுக்கு நன்றி உரியது. இம்மலர்ப் பணியில் எங்களை இணைத்த மருத்துவமாமணி ஜே.ஜி.கண்ணப்பருக்கும் இசை மாமணி வாசுகி கண்ணப்பருக்கும் எங்கள் நன்றி என்றும் உரியது.

**முனைவர் சரளா இராசகோபாலன்**
**முனைவர் மலையமான்**
*மலர் பதிப்பாசிரியர்கள்*

# வீரபத்திரர் வேகம்

**தொ**ன்று தொட்டு விளங்கும் சமுதாயம் - சமயம் தெருள் நயந்த தமிழ் இலக்கியத்திலும் வடமொழி இலக்கியத்திலும், மற்றும் இந்திய நாடு பூராவும் அருள்மிக வீரபத்திரர் உள்ளார். கோயில்களிலுள்ள அவரது கற்சிலைகளில் மிக நுண்ணிய வேலைப்பாடுகள் வியக்கத்தக்கதாக உள்ளன. சாதாரணமாக மனித உருவம் என்றாலும், தனது வலிமையைக் கைகளின் எண்ணிக்கை களைக் கொண்டும், கையில் ஏந்திய போர் ஆயுதங்களைக் கொண்டும் அறியலாம். மனிதனுக்கு வீரமும், அழகும் தேவை. இவற்றைப் பத்திரமாக உபயோகப்படுத்த வேண்டும்.

வீரபத்திரர் சில கோயில்களில் சிறிய உருவம் கொண்டும் பல கோயில்களில் வியத்தகு பெருஉருவங்களைக் கொண்டும் காணப்படுகிறார்.

சிற்பிகளிடம் அளவளாவும்போது சிற்பக் கலையின் உன்னத நிலை, தில்லை நடராசரும், கோயில்களிலுள்ள வீரபத்திரரும் ஆகும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சிவனின் மறுதோற்றமெனக் கூறப்படும் வீரபத்திரர், பலருக்குக் குல தெய்வமாக விளங்குகின்றார். காஷ்மீரிலுள்ள சைவர் களுக்கும் முக்கிய தெய்வம் வீரபத்திரர் ஆவார்.

இந்தியாவின் தென்னாட்டிலுள்ள ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலுள்ள புராணக் கோயில்களில் வீரபத்திரர் சிலைகள் கம்பீரமாக உள்ளன. சில கோயில்களில் பரிவாரத் தெய்வமாகவும், சில சிவன் கோயில்களில், முக்கியத்துவம் பெற்று அருகிலேயே ஒரு தனித் தெய்வமாகவும் தனிக் கோயில்களில் மூல சந்நிதானத்தில் கர்ப்பக்கிரக மூலவராகவும் விளங்குகின்றார். இவர் சிலையாகவும் உள்ளார். பல இடங்களில் வீரபத்திரர் ஊர்க் கடவுளாகவும் காவல் தெய்வமாகவும் உள்ளார்.

கைகளின் எண்ணிக்கை, மகுடம் போன்ற அமைப்புகள் போன்ற சில வேறு பாடுகளைத் தவிர, சாதாரண சூழ்நிலையில், வீரபத்திரரின் அடிப்படை உருவ அமைப்பில் ஒற்றுமையைக் காண முடிகிறது. விரிவாக ஆராயும் போது ஒவ்வொரு சிலையின் அம்சமும், பெரிய அறிவியல் விளக்கம் கொண்டுள்ளது.

தென்னாடுடைய சிவன் சாந்தமானவர். அக்கடவுளுக்கு அவதாரங்கள் இல்லை. எனினும், தேவைகளுக்கு ஏற்ப, அவரது மறு தோற்றங்கள், உலக நியாய தர்மங்களுக்காக, உருவகப்படுத்தப்படுவதில், வீரபத்திரர் ஒருவர் ஆவார்.

ஒட்டக்கூத்தர் முதல் பல மூத்த தமிழ் முன்னோர்கள் வீரபத்திரரைப் போற்றினர். யஜுர் வேதத்திலும் வீரபத்திரர் குறிப்பிடப்படுகிறார் என்பது வீரபத்திரரின் தொன்மையையும் முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது. தெளிவாகக் குறிக்கிறது. ஆகையினால், வீரபத்திரர் தொன்மையானவர்; சைவ சமய ஆளுநர்; நுட்பக் கற்சிலை வடிவானவர்; பலருக்கு, குலதெய்வமானவர். இவரைப்பற்றி, விவரமாகவும், அறிவியல் பூர்வமாகவும் அறிய "அருள்மிகு வீரபத்திரர் கருத்தரங்கு, சென்னையில் 21-22 டிசம்பர் 2002 ஆம் ஆண்டு நடத்தப்படுகிறது. இந்தக் கருத்தரங்கின் அறிவிப்பு தெரிவிக்கப்

பட்டபின், பலர், மிக்க ஆச்சரியத்துடன் கருத்தரங்கில் பங்கு கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். வீரபத்திரரின் புராணங்கள் யாவரும் அறிந்ததே. ஆனால் அவரைப்பற்றி அறிவியல் சார்ந்த அறிவு பெற வேண்டுவது தான் இந்தக் கருத்தரங்கின் குறிக்கோள்.

ஆலோசனைக் கூட்டங்களில் தெரிவிக்கப் பட்ட ஆய்வுத் தலைப்புக்கள் விரிவாக உள்ளன. அவையாவன:

1. இலக்கியத்தில் வீரபத்திரர்
2. இதிகாசத்தில் வீரபத்திரர்
3. சிற்பக் கலைவடிவில் வீரபத்திரர்
4. ஓவியக் கலைவடிவில் வீரபத்திரர்
5. கல்வெட்டுகளில் வீரபத்திரர்
6. சமுதாயப் பார்வையில் வீரபத்திரர்
7. சமயப் பார்வையில் வீரபத்திரர்
8. வீரபத்திரரும் பத்திரகாளியும்
9. வீரபத்திரரும் ஒட்டக்கூத்தரும்
10. சோழர் காலத்தில் வீரபத்திரர்
11. வீரபத்திரரின் மென்மை, சாத்வீகம் - அக்னி
12. விஜய நகரப் பேரரசர்கள் காலத்தில் வீரபத்திரர்
13. தேவாரம், திருவாசகத்தில் வீரபத்திரர்
14. நடன வீரபத்திரர்
15. அறிவியல் கண்ணோட்டத்தில் வீரபத்திரர்
16. வட்டார மக்கள் நம்பிக்கையில் வீரபத்திரர்
17. நாட்டுப் புறப் பாடல்களில் வீரபத்திரர்
18. கர்நாடகத்தில் வீரபத்திரர்
19. ஆந்திராவில் வீரபத்திரர்
20. கேரளாவில் வீரபத்திரர்
21. காவல் தெய்வம் வீரபத்திரர்
22. நூற்றாண்டுக் காலங்களில் வீரபத்திரர்
23. மலைபடுகடாம் - பர்வதமலை வீரபத்திரர்
24. இன்றைய வழிபாட்டில் வீரபத்திரர்
25. வேதங்களில் வீரபத்திரர்
26. வீரபத்திரர் கரங்களில் உள்ள கருவிகள்/ ஆயுதங்கள்

இப்படியாகப் பல தலைப்புகள் உள்ளன.

நமது வீரபத்திரர் பற்றி, மேன்மக்கள் ஆர்வமாக முன் வந்து, மேற்கண்ட தலைப்புகளில் கட்டுரைகள், படங்கள், புகைப்படங்கள், மலருக்குக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியதாகும். அறிவியல், ஆன்மீகம், தொல்பொருள் பெருமை கொண்ட வீரபத்திரருக்கு இன்றைய வடிவமாகப் படைக்கப்படும் நூலும், மலரும், எதிர்காலச் சந்ததியருக்கு ஒரு நல்ல கல்வெட்டாகத் திகழும். இந்த இருநாள் கருத்தரங்கில் ஸ்தபதிகள், அகழ்வாராய்ச்சியாளர்கள், தமிழறிஞர்கள், இசைச் சொற்பொழிவாளர்கள், நடன நர்த்தகிகள், ஆன்மீகச் சித்தர்கள், பூஜை அர்ச்சகர்கள், தங்கள் தங்கள் பாணியில் வீரபத்திரர் பற்றி விரிவுரை யாற்றுகிறார்கள்.

வீரபத்திரர் பற்றி நினைக்கவும், கேட்கவும், அறியவும், நினைவிலே நிறுத்திக் கொள்ளவும், இக்கருத்தரங்கு வழிவகுக்கிறது. மேலும்அவரது கலாச்சார, நாகரிகப் பெருமையில் நாம் வாழ்வதும், நமக்குப் பெருமை சேர்க்கிறது. அதனை எண்ணி மனம் நிறைவும் கொள்ளுகிறது.

அடுத்தடுத்து மேலும் விரிவாக விளக்கம் தேடும் எதிர்காலக் கருத்தரங்கு களுக்கு இந்தக் கருத்தரங்கு ஒரு முன்னோடியாகும், வழி காட்டியுமாகும்.

இந்தக் கருத்தரங்குக்குப் புரவலராக, வேண்டியபோது, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார், அருட்செல்வர் நா. மகாலிங்கம் மற்றும் தர்ம தேவதை திருமதி.ஏ.வி.எம். ராஜேஸ்வரி அம்மையார், ஆகியோர் உடனே ஆர்வமுடன் ஒத்துக் கொண்டார்கள். மற்றும் டாக்டர் ஜே. ஜி. சண்முகநாதன் தலைவராகவும், ஆ. கௌரி சங்கர் துணைத் தலைவராகவும், பணிமேற் கொண்டனர். திருமதி முனைவர். சரளா இராசகோபாலன், (முனைவர், மலையமான் (இருவரும் வாழ்க்கைத் துணைவர்கள்)

மலர் தயாரிக்கும் பொறுப்பாளர்களாகவும், பணி ஏற்றுக் கொண்டார்கள். திரு எஸ். அண்ணாமலை பொருளாளராகப் பணி ஏற்றுத் திறம்படச் செய்துள்ளார்.

செயற்குழுவில் ஆர்வமான ஏனையோர் இசைவு கொடுத்துக் கருத்தரங்கு சிறப்பாக நடக்கத் தங்கள் தங்கள் பணியினைச் செய்துள்ளார்கள். எனது செயலர், செயலர் பணியை மிகவும் எளிமையாக்கிய திரு. நா. மதிவாணன் துணைச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

ஆர்வமுடன் நன்கொடை வழங்கியவர்கள், விளம்பரம் நல்கியவர்கள், பேராளர்கள், நிதிகொடுத்துத் தமது பணியினைச் செய்துள்ளார்கள். பல வியக்கத்தகு செய்தி களில் ஒன்று மேற்கூறிய செய்திகளில் மற்றத் தெய்வங்களை வணங்குபவர்கள், வீரபத்திரரைக் குல தெய்வமாகக் கொண்டவர் களாக உள்ளனர். காஞ்சிபுரம் ஜகத்குரு பரமாச்சாரியாருக்குக் குலதெய்வம் வீரபத்திரர் என்று அறியும்போது மெய்சிலிர்க்கிறது.

காஞ்சிபுரம் தவத்திரு ஜெயந்திர சுவாமிகள் தானும் உடனே வருகை தந்து நிறைவு விழாவில் அருளாசி வழங்க உள்ளார்கள். இது உண்மையிலேயே மன நிறைவைத் தருகிறது.

ஒரு எனது சில அனுபவக் கருத்துக் களையும் தெரிவிக்க விழைகிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையினரிடம் அணுகியபோது, நமது கோயில்களிலுள்ள சிற்பங்களின் கணக்கீடு இல்லை என்று கூறினார்கள். இது வருத்தத்திற்குரியது. ஆனால், அருள்மிக வீரபத்திரர் அருட்தலங்கள் பற்றிய நூல் வெளியிடுவதற்கு, ஆகம சாத்திரங்கள் மற்றும் அந்தந்தக் கோயில் பழக்க வழக்கங்களின்படி வீரபத்திரர் சிலையைப் புகைப்படம் எடுக்க அனுமதி கொடுத் துள்ளார்கள். ஆனால் பல கோயில்களில் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. மேலும், கோயிலிலேயே பணிபுரியும் பணியாளருக்குக் கோயிலுக்குள் வீரபத்திரரின் சிலை இருப்பது தெரியவில்லை.

மேலும் கோயில் சிலைகள் மிகவும் பிரமாதமானவை. ஆனால் அவைகள் கவனிப்பாரின்றி உள்ளன. சிலைகள் மீது தூசியும், சிலந்தி வலைகளும் இருப்பதைக் காணும்போது அது உள்ளத்தை வருத்துகிறது. நெஞ்சையுறுத்தும் ஒரு செய்தி என்ன வென்றால், அருமையான பெட்டகமான வீரபத்திரர் சிலைகள் சிதைக்கப்பட்டிருப்பது தான்.

ஆத்திகமானாலும், நாத்திகமானாலும், கோயில்களும், கோயில் சிலைகளும் தமிழரின் உயர் கலைத் திறமையையும், அறிவியல் சிந்தனையையும் சித்திரிக்கின்றன. இது இன்று நாம் காணும் உண்மை. புராணம் தவிர்த்த வீரபத்திரர் பற்றிய அறிவியல் தொனிப்பு என்றபோது, பலர் இது முடியுமோ எனச் சந்தேகித்தார்கள்.

இன்று நாம் காணும், முனைவர் சரளா இராசகோபாலன், முனைவர் மலையமான், இருவரும் இணைந்து உருவாக்கிய கருத்தரங்கு மலரையும், திருமதி லலிதா சுந்தரம் படைத்த அருள்மிக வீரபத்திரர் அருட்தலங்கள்" என்ற நூல் மாலையையும் வீரபத்திரருக்கு அறிவியல் பூ மாலையாகச் சமர்ப்பிக்கின்றோம். இதனின் வெற்றிக்கு எல்லாப் பேராளர்களையும், நல்லெண்ணப் பெருமக்களையும் விழாவினைச் சிறப்பிக்க எழுந்தருளியுள்ள உயர் மனிதர்களையும் மனத்தில் எண்ணி, மகிழ்ந்து நெகிழ்ந்து நன்றி கூறுகிறேன்.

**பேரா. டாக்டர் ஜே.ஜி.கண்ணப்பன்**
***செயலாளர்***



கும்பகோணம் வீரபத்திர மடத்திலுள்ள வீரபத்திரர் ஓவியம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. வீரபத்திரர் | -அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம் | I |
| 2. சிற்பங்களில் வீரபத்திரர் | -பேரா. முனைவர் த. சந்திரகுமார் | 11 |
| 3. வானறிவியல் கண்ணோட்டத்தில் - வீரபத்திரர் | -முனைவர், பொதிகை முத்துக்குமரன் | 22 |
| 4. வீரபத்திரர் துணை இருப்பார் | -தவத்திரு, பித்துகுளி முருகதாஸ் | 30 |
| 5. ஆன்மவியல் ரீதியாக வீரபத்திரர் | -திரு சேது. முருகபூபதி | 31 |
| 6. வாழ்வியல் வீரபத்திரர் | -திருமதி வாசுகி கண்ணப்பன் | 38 |
| 7. இன்றைய வழிபாட்டில் வீரபத்திரர் | -பொதிகை மு. கோமதி | 50 |
| 8. செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் வீரபத்திரர் | -பேரா. டாக்டர் ஹேமா சந்தானராமன் | 53 |
| 9. திருவானைக்காவல் வெளிப்பிரகாரத்தில் அமைந்துள்ள திருவீரபத்திரர் கோயிலில் பதித்துள்ள கல்வெட்டில் உள்ள பாடல்கள் | - சைவசித்தாந்த ரத்தினம் ஜே.ஜி. ஜெயசீலன் | 55 |
| 10. வீரபத்திரரின் பல பெயர்கள் | -முனைவர் மலையமான் | 57 |
| 11. ஒட்டக்கூத்தர் கண்ட வீரபத்திரர் | -பேரா. முனைவர் சரளா இராசகோபாலன் | 59 |
| 12. சமயப் பார்வையில் வீரபத்திரர் | -பேரா. முனைவர் சாரதா நம்பி ஆரூரன் | 65 |
| 13. கச்சியப்பர் கண்ட வீரபத்திரர் | -பேரா. புரிசை. ச. நடராசன் | 71 |
| 14. கச்சியப்பர் காட்டும் வீரபத்திரர் | -பருத்தியூர் டாக்டர் மு. சந்தானராமன் | 78 |
| 15. கோட்டை வீரபத்திரர் | -பேரா. டாக்டர் விஜயலட்சுமி இராமசாமி | 82 |
| 16. **THE VEERABHADRA TEMPLE AT PILLAYARKUPPAM** | -PROF. S.N. CHOKKALINGAM | 86 |
| 17. வியர்வையில் விளைந்த வீரபத்திரன் | -பேரா. டாக்டர் கிருஷ்ணவேணி அருணாசலம் | 89 |
| 18. குலதெய்வ வழிபாடு | -முனைவர் த. பெரியாண்டவன் | 90 |
| 19. தேவாரங்களிலும் திருவாசகங்களிலும் வீரபத்திரர் | -திரு வ.த.இராமசுப்பிரமணியம் | 93 |
| 20. சிற்பக் கலையில் வீரபத்திரர் | -திருமதி லலிதாசுந்தரம் | 97 |

21. வீரபத்திரர் வழிபாடு -*திரு ப.சுகுமாரன்* 102

22. வீரபத்திரரும் குறுமன்ஸுகளும்-*திரு சிவ. பரமசிவம்* 104

23. அகர வரிசையில் வீரபத்திரர் புகழ்மாலை
-*திருமதி ராஜலக்ஷ்மி, சிங்கப்பூர்* 106

24. ஓவியக்கலையில் வீரபத்திரர் -*திருமதி ஜெகதீசுவரி ராஜு* 107

25. ஸ்ரீ வீரபத்திரர் வழிபாடும் வரலாறும்-*கவிஞர், குமரிச் செழியன்* 111

26. தக்கயாகத்தின் வெற்றியே சிவராத்திரி!!
-*திரு ஆ. திருவாசகன்* 118

27. புறடர் காட்டா வீரவாள்-*திருமதி அ. பானுமதி நரசிம்மலு* 121

28. திருவானைக்கா அருள்மிகு வீரபத்திரசுவாமிக்குப் புகழ் மாலை
- *கவிச்சக்ரவர்த்தி, ஞானஒளி டாக்டர் வி.ஜி. சந்தோசம்* 126

29. அருள்மிகு அகோர வீரபத்திரரும் குறும்பர் (அ) குறுமன்ஸ்
பழங்குடியினர் சமுதாயமும் -*திரு ச. சரவணன்* 127

30. அருள் தரும் வீரபத்திரன் -*திரு இதயகீதம் இராமானுஜம்* 131

31. வீரபத்திரர் என்ற சரபேஸ்வரர்-*திரு மீனாட்சி வசந்தகுமார்* 134

32. தாத்தா தந்த தெய்வம்-*திருமதி செல்வி ராஜன்* 136

33. வீரபத்திரசாமி - வரலாறுகளும் குடிகொண்ட தலங்களும்
-*புலவர் பொன். தெய்வநாயகி சோதி* 140

34. வீரபத்திர சுவாமி வருகை-*திரு சி.பி. சிவப்பா* 144

35. பக்தி இலக்கியங்களில் வீரபத்திரர்
-*திருமதி இளந்தென்றல் அருணாசலம்* 147

36. திருவினையும் வழங்கி அருள்கவே-"தமிழ்மாமணி"
-*கவிஞர் சீனி. திருநாவுக்கரசு* 151

37. வீரபத்திரர் காட்டும் வாழும் வழி
-*சித்தாந்த இரத்தினம், பேரா. முனைவர் கஸ்தூரி ராசா* 152

38. இலக்கியத்தில் வீரபத்திரர் -*வித்வான் அ. பாண்டுரங்கனார்* 155

39. வீரபத்திரர் வழிபாடு -*திருமதி திரிபுரசுந்தரி கார்த்திகேயன்* 156

40. வீரபத்திரை விசுவ உருவக்காட்சி -*கவியோகி பி. பாண்டியன்* 161

41. வீரபத்திரரும் பத்திரகாளியும் -*செல்வி தி.ரமா* 162

# வீரபத்திரர்

அருட்செல்வர், டாக்டர் நா. மகாலிங்கம்

AMINATHA IYER LIBRARY Besant Nagar Chennai

**சி**வபெருமான், புராணங்களில் வரம் கொடுக்கும் முதல்வராகப் போற்றப் படுகிறார். அவர் தாம் ஆயுதம் ஏந்திப் போர் செய்து அரக்கனை அழித்ததாக எந்த வரலாறும் இல்லை. சிரிப்பால் திரிபுர அசுரர்களை அழித்தார். பஸ்மாசுரனை அழிப்பதற்குத் திருமால் வர வேண்டியிருந்தது. ஜலந்தராசுரனை அழிப்பதற்குக்கூட அவர் தான் ஆயுதத்தை எடுத்துக் கொள்ள வில்லை. அந்த அசுரன் தரையில் கீறியவட்டமே சக்கரமாக மாறி அவனைப் பலி கொண்டது. இந்தப் புராணச் செய்திகளின் உள்நோக்கம், கடவுள் தீமையை அழிப்பதற்குக்கூட ஆயுதங்களை ஏந்தியதில்லை என்பதே. இதற்கு மாறாக, சிவபெருமான் தாம் வரம் கொடுத்து வீரத்தின் மகிமையால் தலைதடுமாறி மற்றவர்களுக்குத் துன்பம் விளைவித்த தீய சக்திகளை அழிப்பதற்குத் தம் மக்களை அனுப்புகிறார். சூரபன்மனையும் அவன் தம்பியரையும் ஒடுக்குவதற்கு முருகப் பெருமானை அனுப்பினார். கஜமுகாசுரனை அழிக்க விநாயகப் பெருமானை அனுப்புகிறார். இந்தப் புராணங்களில்கூட அந்த அசுரர்கள் உயிரைப் பலிகொள்ளாமல் அவர்களைத் திருத்தி ஆட்கொண்டதையே காண்கிறோம். வைரவரை உருவாக்கிப் பிரமன், திருமால் முதலியவர்களைக் கண்டித்து ஆட்கொள்கிறார். வீரபத்திரர் என்கின்ற சிவகுமாரரைத் தோற்றுவித்துத் தட்சப் பிரஜாபதியின் செருக்கை அடக்குகிறார். இந்தப் புராணத்தில் தட்சன் தலை அறுக்கப்பட்டாலும் அதற்குப் பதிலாக ஆட்டுத்தலை பொருத்தப்பட்டு உயிர் பெறும் செய்தியைக் காண்கிறோம். அம்பிகையின் கருணையினால் இறந்த தேவர்களும் தட்சனுடைய உறவினர்களும் மீண்டும் உயிர் பெறுவதையும் காண்கிறோம். நமது இறைக் கொள்கை, தனிப்பெருங் கருணையே ஆண்டவனுடைய இலக்கணம் என்பதை வலியுறுத்துகிறது. வீரபத்திரரைப் பற்றிய வரலாறுகளும் ஆய்வுகளும் விரிவாகச் செய்யப்பட வேண்டும்.

வீரபத்திரர் வரலாறு முருகனைப் போலவே புராண, காப்பிய, வரலாற்றுப் பின்னணி உடையது. அவரைப் பற்றிய ஆய்வுகள் ஸ்கந்த முருகனுக்குச் செய்தது போலச் சிறப்பாகச் செய்யப்பட வேண்டும்.

கோவைக்கருகில் உள்ள துடியலூர் ஒரு சிற்றூர். அ. சிதம்பரனார் என்று ஒரு அறிஞர் அவ்வூரைச் சார்ந்தவர். திருமந்திரமணி துடிசைக்கிழார் என்று தமிழுலகம் அவரை அறியும். காவல் துறை அதிகாரியாய் இருந்த அவர் தமிழறிஞரும் ஆவார். நம் இலக்கியங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவர் அவைகளுக்குள்ளாகவே வரலாற்று மூலங்களைத் தேடிச் சில வரலாற்றுக் கண்டுபிடிப்புகளைச் செய்து நூல்கள் எழுதியிருக்கிறார். இன்னும் சில நூல்கள் வெளி வாராமலேயிருக்கின்றன.

இவருடைய உத்திகள் மேல்நாட்டுத் தொல் வரலாற்று அறிஞர்கள் கடை பிடித்தவைதாம். மறைமலையடிகள், கா. சு. பிள்ளை முதலிய மிகச் சில அறிஞர்களே இம்முறையில் வரலாறுகள் எழுதியவர்கள்.

பொதுவாக அறிஞர்கள் மற்றவர் எழுதிய வரலாறுகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு நூல் எழுதுவார்கள். இவர்கள் தாமாக மூலங்களை இணைத்துக் கொண்டு வரலாறுகளை எழுதும் அளத்தற்கரிய ஆற்றல் பெற்றவர்கள். இவர்களின் கண்டு பிடிப்புகளில் கருத்து வேற்றுமை எழலாம்.

கருத்து வேற்றுமை கொள்வது தனிப்பட்ட மனித உரிமை. ஆனால் இவர்களது ஆழ்ந்த மதிநுட்பத்தையும் ஆற்றலையும் வியக்காதவர்கள் இருக்க முடியாது.

திருவிளையாடல் புராணம் பழைய சரித்திரம் என்ற அடிப்படையில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். இராமகிருஷ்ண மடத்துத் துறவி சாக்யானந்தா அவர்கள் மீனாட்சி சுந்தரேசனார் காலத்தையும், தலபுராணங்கள் காலத்தையும் ஆய்வு செய்து சுமார் கி.மு. 30000-க்கு முன் என்று நிர்ணயம் செய்துள்ளார்.

இறையனார் அகப்பொருளில் நச்சினார்க்கினியர் உரையிலும், துடிசைக்கிழார் உரையிலும் பஃறுளியாற்றுத் தென் மதுரைத் தமிழ்ச் சங்கம் கி.மு. 30000 முதல் கி. மு. 16000-க்குட்பட்ட காலம் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்தம் 10 சங்கங்களையும், காலத்தையும் துடிசைக்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

இதே போல தசாவதாரத்தில் இராமபிரான், கிருஷ்ண பரமாத்மா சரித்திரப் புருஷர்கள் அல்ல என்று அறிஞர் சாமிக்கண்ணு பிள்ளை கூற, சுமார் 50 ஆண்டுகள் (1925-1975) முயற்சி எடுத்துச் சப்தரிஷி பஞ்சாங்கத்தில் வரலாறு கொடுத்து, அவர்கள் சரித்திரப் புருஷர்கள்தான் என பேராசிரியர் சீனிவாசராகவன் கணக்கிட்டபோது சப்தரிஷி மண்டலத்து நட்சத்திரத்திற்குப் பயணம் செய்ய 100 ஆண்டுகள் என வைத்துக்கொண்டு கணக்கிட்டுள்ளார்.

1979-இல் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் மாநாட்டினை நடத்தி வெளியிட்ட நூல்களை வைத்து 1985 முதல் 1997 வரை இதுபற்றி முயற்சி செய்த தஞ்சை இராமதுரை அவர்கள் விஷ்ணு புராணத்திலும், மற்றும் இதர நூல்களிலும் ஆய்வு செய்து சப்தரிஷி சஞ்சாரம் 81 ஆண்டுகள் எனக் கண்டுபிடித்துப் புதிய கணக்கிட்டு சப்தரிஷ் சகாப்த தொடக்கம் கி.மு. 15261 என நிர்ணயித்துள்ளார். மேலும் ஒரு மகாயுகத்திற்கு 12160 வருஷங்கள் என்றும், முருகப் பெருமான் 27வது சதுர்யுகத்திலும், ராமபிரானும், கிருஷ்ண பரமாத்மாவும் 28வது சதுர்யுகமென்றும், இப்போது 29வது சதுர்யுகத்தில் நாம் திரேதா யுகத்தில் உள்ளதாக நிர்ணயித்துள்ளார்.

இதுபற்றிச் சமீபமாக அண்ணா பல்கலைக்கழகத்தில் பெரிய அளவில் அகில இந்தியக் கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்க முடிவுகள் வெளிவர உள்ளன.

மெக்சிகோ, தென் அமெரிக்கா, பிரான்சு, ஸ்பெயின் தேசங்களில் உள்ள குகை ஓவியங்கள் 40000 முதல் 80000 வருடங்கள் பழமையானவை என நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

இந்திய நாட்டில் தமிழும், வடமொழியும், பாலியும் பழைய மொழிகள். இவைகளில் உள்ள நூல்கள், ஆய்வுகள், புராண இதிகாசங்களில் உள்ள வரலாற்று நட்சத்திரக் குறிப்புகளை வைத்துப் பழங்காலச் சரித்திரங்கள் பற்றி எதிர்காலத்தில் பலர்கூடி ஆய்வுகள் செய்யவேண்டும்.

ரோம் நகரிலும், ஏதென்சிலும் பழைய நகரத்தில் அழிந்த கட்டிடங்கள் புதுப்பிக்கப் படுகின்றன. இந்தியாவில் கட்டிடங்களைப் புதுப்பிக்காவிட்டாலும் வரலாற்றை ஆய்வு செய்து நல்ல முடிவுகள் எடுப்பது அவசியம்.

ஆக, வீரபத்திரர் பற்றிய கருத்தரங்கு பழைய சரித்திரக் காலங்கள் பற்றிய முயற்சிக்கு நல்ல உதவியாக இருக்கும். இதை ஏற்பாடு செய்துள்ள திருவாளர் கண்ணப்பன் தம்பதிகளுக்கு எனது வாழ்த்துக்கள். ❑

# சிற்பங்களில் வீரபத்திரர்

பேரா. முனைவர் த. சந்திரகுமார், எம்.ஏ., பி.எச்.டி, தஞ்சாவூர்.

**வீ**ரபத்திரர் வழிபாடு மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது. சிவனின் மற்ற வடிவங்களான பைரவ மூர்த்தி, அகோரர், கங்காளர், விரூபாட்சர் போன்று இவரும் உக்கிர வடிவினர்தான். இவரின் தோற்றம் பற்றிப் புராணங்கள் பலவாறு இயம்புகின்றன. அந்தகாசூரனைச் சம்மாரம் செய்தபோது வீரபத்திரர் ஏழு கன்னிமார்களுடன் சென்று அந்தகனை அழித்தார். சிங்க உருவம் பூண்டு நீலன் என்ற யானை உருக்கொண்ட அரக்கனை அழித்தார். மற்றுமொரு முறை, சிவனை அழைக்காமல் யாகம் செய்ய முயன்ற தக்கனை அழித்தார். சதிதேவி (தாக்ஷாயினி) தீயில் விழுந்து தன்னைத்தானே மாய்த்துக் கொண்டார். அதனால் வருத்தமுற்ற சிவனார் யோக வடிவினை மேற்கொண்டிருக்கையில் காமக்கணை தொடுத்து இடர்விளைத்த காமனை அழித்தார். ரதிதேவி வேண்ட, மன்மதனை அநங்கனாகும்படி சிவன் வரமளித்தார். தானும் கலியாணசுந்தரராகப் பார்வதியை மணந்தார். இச்செய்திகள் மகாபாரதம் (சாந்திபர்வம்) மட்சியப்புராணம் (அத்தியாயம் 72) பாகவதபுராணம் (4.3-7) கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணம் (தட்சகாண்டம்) இலிங்க புராணம் (அத்தியாயம் 100. 4-38) கூர்மபுராணம். வராக புராணம் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. சிவனின் சடா முடியிலிருந்து தோன்றியவர் என்றும், வியர்வையிலிருந்து தோன்றியவர் என்றும் இவர் கூறப்படுகிறார். பார்வதி தன் சக்தியாகப் பத்திரகாளியை உருவாக்கினார். (கிராம்ரிட்ஸ் 1981: 322 - 23) இவரைப் பல பெயர்களில் போற்றி வணங்குகின்றனர். வீரப்பர், வீரன்னர், முட்டு வீரன்னர். உத்தானவீரபத்திரர், தட்சாரி, வீரேசுவரர், வீரசூடாமணி, வீரஹர், கிரதுத்வம்சி தக்ஷயக்ஞ்ஹன் போன்ற பெயர்களால் இவர் போற்றி வழிபடப்படுகின்றார். (தேவாரம். 7202) வீரபத்திரரின் வழிபாட்டிற்குச் செவ்வாய்க்கிழமை உகந்த நாள் என்பதனால் அவரை அங்காரகன் என்றும் கூறுவதுண்டு. இவர் சினம் தணிந்து பரத்துவாச மகரிஷியிடம் சீடனாக இருந்து கல்வி கற்று, அங்காரகன் என்ற பெயருடன் வைத்தீஸ்வரன் கோயிலில் மங்கள உருவத்துடன் காட்சி தருகின்றார்.

இக்கதை வடிவம் இந்தியாவின் பல இடங்களில் காணப்படினும், இது குறிப்பாகத் தென்னகத்தில் மிகவும் போற்றப்பட்டு வருகிறது. இது வங்காளத்திலுள்ள ஜலதா பகுதியில் பின்பற்றப்பட்டு வரும் சௌவி நடனத்தில் உள்ளது. கருநாடகத்தில் யக்ஷகானமாகவும், கேரளத்தில் கதகளியாகவும் இவ்வடிவம் இடம் பெற்றிருக்கிறது. (காஸ்டன் 1982 - 167) ஆந்திர மாநிலத்தில் காடுறை தெய்வமான மல்லிகார்ஜுனரை (அல்லது) மல்லனரை வீரபத்திரர் என்றே மக்கள் வழிபடுகின்றார். ஆந்திரக் கிராமங்களில் மல்லனர் என்கிற வீரபத்திரர் வழிபாடு பெரிதும் நிலவி வருகிறது. இயக்ஷ வீரர் என்று கருநாடக மாநில மக்களால் வணங்கப்படும் தெய்வம், வீரபத்திரர் வழிபாட்டுடன் இணைந்து விட்டதைக் காணலாம். சில இடங்களில் பைரவரின் வடிவம் என்று கொள்ளப்படும் சேத்திரபாலருடன் 'மெல்ல கேட்டுவில்' (கர்நாடகக் கடற்கரையில்) உள்ள பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு வாயிற்காக்கும் பணியை வீரபத்திரர் மேற்கொண்டுள்ளார்.

தமிழகத்தில் குறும்பர் இனமக்கள் இவரைப் போற்றி வழிபடுகின்றனர். (கஸ்டவ்வு 1972:237) விஜயநகர சாம்ராஜ்யத்திற்கு வித்திட்ட புக்கராயர் (1334-1370) முதல் விரூபாட்சர் (1473-1488) வரை ஆண்ட மன்னர்கள் குறும்பர் அல்லது தாங்கள் குறும்ப வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டது ஈண்டு நினைவுகூறத் தக்கது. விஜயநகர அரசரான ஹரிகரரின் (1370-1400) உறவினரான இராக வையங்கார் எழுதிய வீரேச விஜயே (127 பாடல்கள்) என்ற நூலில் வீரபத்திரரின் வரலாறு கன்னடத்தில் இயற்றப் பெற்றுள்ளது. ஹம்பியிலுள்ள பம்பாபதி மகாத்மியத்திலும் இவரைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. தலைநகர் ஹம்பியில் மட்டும் இவரைப் பற்றிய 38 சிற்பங்கள் கணக்கில் உள்ளன. (பாலசுப்ரமணியர் 1985:133) அனந்தபூர் மாவட்டத்திலுள்ள (ஆ.பி.) இலேபாட்சியில் அமைந்த வீரபத்திரர் கோயிலைக் கட்டிய இரண்டு குறுநில மன்னர்களான விரூபன்னரும், வீரன்னரும் வீரபத்திரரைக் குலதெய்வமாக வணங்கினார்கள். இந்தக் கோயிலின் மண்டப விதானத்தில் வீரபத்திரர் ஓவியம் மிகப்பெரிய அளவில் அச்சுதராயர் காலத்தில் கி.பி.1542இல் தீட்டப்பட்டது. இதில் அவரிடமிருந்து இவர்கள் விபூதிப் பிரசாதம் பெறுவதும் அழகுற அமைந்துள்ளது.

### சிற்ப நூல்களில் வீரபத்திரர் வடிவங்கள்

இந்தப் பயங்கர வடிவினரான வீரபத்திரரை உருவாக்குவதற்கு எந்த இலக்கணங்களுடன் செய்யப்பட வேண்டும் என்ற குறிப்புகள் சிற்பநூல்களில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. இவர் அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும், நடந்து செல்லும் பாங்கிலும் காட்ட வேண்டும் என்று சில்பசங்கிரகம் குறிப்பிடுகிறது. (கிருஷ்ண சாஸ்திரி 1916 : 159) இவர்களை முறையே யோகவீரர், போகவீரர், வீரவீரர் என்ற பெயர்களால் இந்நூல் குறிப்பிடுகின்றது. இவர் காளையூர்தியைக் கொண்டவர் என்றும் நான்கு கைகளுடனும் மூன்று கண்களுடனும் இருப்பவர் என்றும் பின்னிரு கைகளில் சூலமும் தண்டமும் ஏந்தியவர் என்றும் முன்னிரு கைகளில் வீணையேந்தி வாசிப்பவராகவோ அபய வரதம் காட்டியவராகவோ சிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மயமதம் (36 : 213 - 215) குறிப்பிடுகின்றது. அனைத்து ஆபரணங்களைத் தரித்தவராகத் தாமரை ஆசனத்தில் அமர்ந்து, ஆலமரத்தின்மீது சாய்ந்த வண்ணம் வீற்றிருப்பார் என்றும் சப்தமாதர்களின் அதிபதியாகக் கருதப் படுபவர் என்றும் மேலும் அந்நூல் குறிப்பிடுகிறது. சிற்பங்களில் அமர்ந்த நிலையில் உள்ள இவரது வடிவங்களைச் சப்தமாதர்கள் என்று அழைக்கப்படும் ஏழு கன்னிமார்களுடன் வீற்றிருக்கும் நிலையில் பார்க்கலாம்.

*"வீரேஸ்வரஸ்ச... மாத்ரநாம கரதோ பவேல!*
*மத்யே ச மாத்ரஹ கார்யா அந்தே தேஷாம் விநாயகஹ."*

சப்த மாதர்களான பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகியோரின் சிற்பங்களுடன் வீரபத்திரரும் கணபதியும் வீற்றிருப்பதைப் பார்க்கலாம். சுவாமி ஐயப்பன் வடிவம் போன்று யோகாசனத்தில் அமர்ந்து கால்களைச் சுற்றி யோகபட்டம் பந்தனம் செய்யப்பட்ட நிலையில் இவர் காணப் படுகிறார். முன்கைகள் வீணையை மீட்பது போன்றும் பின்கைகள் மயமதம் கூறுவது போன்றும் மான் மழுவினைத்தாங்கி இருப்பது போன்றும் காட்சி தருகிறார். வீணையேந்தாத நிலையில் அபய வரதம் காட்டியிருப்பார். இந்தக் கோலத்தை யோகவீரர் என்று குறிப்பிடலாம். யோக தட்சிணாமூர்த்தி வடிவம் போன்று காட்டப்பட்டிருக்கும். அமைதியான முகப்

பொலிவுடன் உக்கிரத்தன்மை நீங்கப்பட்ட நிலையில் இவரைக் காணலாம்.

இவர் நான்கு அல்லது எட்டுக் கைகளுடன் இருப்பவர் என்று ஸ்ரீகுமாரரின் சில்பரத்னம் (அத்தியாயம் 25 பாடல் 84) குறிப்பிடுகிறது. பின்னிரு கைகளில் மானும் மழுவும் முன்னிரு கைகளில் அபயவரதமும் காட்டப்பட வேண்டும் என்றும் அந்நூல் கூறுகிறது. மேலும், தண்டம், வில், அம்பு, கத்தி போன்றவற்றை இவர் பெற்றிருக்க வேண்டும் என்று பாஞ்சராத்ராகமம் கூறுகிறது. (கிருஷ்ணாசாஸ்திரி 1916 : 155). இதையே சிரிதத்துவநிதியும் (பகுதி 1-3.55) வலியுறுத்துகிறது. பார்வதி தேவியின் அம்சமான பத்ரகாளியுடன் இவர் இருப்பவராகச் சில சிற்பங்கள் உள்ளன. இவர் வீரபத்திரருடன் சென்ற தோழியே தவிர, மனைவி என்று கூறுவதற்கு இல்லை. தலை துண்டிக்கப்பட்ட நிலையை மாற்றி, ஆட்டுத்தலையை அணிவித்து, தந்தையின் உயிரை மீட்டுத் தந்து, தக்கன் வீரேஸ்வரரை வணங்குவது போன்று காட்டப்பட்டிருக்கும் சிற்பங்களைக் காணலாம். ஆயிரம் தலைகள், கண்கள், கால்கள் ஆகியவற்றுடன் ஆயிரக் கணக்கான தண்டம், அம்பு, வில், மழு, சக்கரம் போன்றவற்றைக் கைகளில் பெற்றிருப்பவர் என்று விட்டுணுபுராணம் குறிப்பிடுவதாகத் தி.ஏ. கோபிநாத்ராவ் அறிவிக்கின்றார். (தொகுதி 1 ப 128-132) வீரபத்திரர் எட்டுப் பரிவாரத் தேவதைகளில் ஒருவராகக் காட்டப்பட வேண்டும் என்று காச்யபசில்ப சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. (பாலசுப்பிரமணியன் 1971: 328)

வெள்ளை நிறமேனியுடன் புலித்தோல் ஆடையணிந்தவராகவும், சர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமேனியுடைய வராகவும் மூன்று கண்களுடனும், நறுமணம் வீசும் பூமாலையை அணிந்தவராகவும் சடாமுடி அலங்காரத்துடன் காட்டப்பட வேண்டும் என்று வீரபத்திர தியானம் குறிப்பிடுகின்றது. வேறொரு வீரபத்திர தியானப் பாடலில் இவர் மூன்று முகங்களைக் கொண்டவராகவும், ஆறு கண்களுடனும், தலையில் தீச்சுடர் போன்ற சடைமுடி உடையவராகவும் நீலநிறம் கலந்த கருமேனி உடையவராகவும் காட்டப்பட வேண்டும் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. பூதங்களையும், இறந்தோரின் ஆவிகளையும் அடக்கியவராகவும் இவர் விளங்குபவர் என்றும் மேருமலையில் வீற்றிருப்பவர் என்றும் அப்பாடல் குறிப்பிடுகிறது. (மூர்த்தி தியானம் : பாடல்கள் 121, 122)

நல்கொண்டா மாநிலத்திலுள்ள 1314-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட் டொன்று (ஆந்திரப்பிரதேசம் கல்வெட்டுகள் 1992, பக்கம் 284 பதிப்பு பி.வி.பி. சாஸ்திரி)

*"வாமே ஹஸ்தே திரிசூலம் கனகமய*
*சதா பாத்ரம் துவிதியே*
*பிப்ராணம் தீக்ஷண கட்கம்சித தசமாபரே*
*தைத்யாநாசைக ஹேது மானா ரத்நௌகபட்டம்*
*தமருகமபரே சாருகம்பீரநாதம்"*

என்று குறிப்பிடுகின்றது.

கைகளில் சூலம், கத்தி, தேன் ஊற்றப்பட்டிருக்கும் வெண்மையான பாத்திரம் ஆகியவற்றுடன், அழகான கம்பீரமான குரலுடன் இவர் திகழ்பவர் என்று போற்றிப் பாடுகிறது.

சிற்பங்களில் தர்சனிமுத்திரை (எச்சரிக்கை) தக்கனின் தலை, மான், உளி, சூலம், தண்டாயுதம் அல்லது உடுக்கை போன்றவைகளைத் தாங்கியவராகக் காணப்படுகின்றார். கபாலமலை அல்லது தேள்களாலான மாலை அணிந்தும் சர்ப்பயக்ஞோபவீதம் தரித்தும் காணப் படுகிறார். உயரமான பாதணிகளைக் கொண்டிருப்பவராகவும் இருக்கின்றார். இவர் சிவகணங்களால் சூழப்பட்டும்

இருப்பதைச் சில இடங்களில் பார்க்கலாம். சில சிற்பங்கள் மீசையுடன் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன.

**சிற்பங்களும் சிறப்பும்**

வடநாட்டுப் பகுதிகளில் சப்தமாதர் களுடன் காணப்படும் வீரபத்திரரின் சிற்பங்களைப் பார்க்கலாம். அஹிச்சத்ராவி லுள்ள (பாஞ்சாலி, பரேலி மாவட்டம்) தக்கனை அழித்தல் போன்று உள்ள சுடுமண் பொம்மை வடிவம் 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது குப்தர் காலத்திற்குரியது. இது தற்போது தில்லி அருங்காட்சியகத்திலுள்ளது. (எண் 62.638). அவர் வேறொரு தெய்வ வடிவத்துடன் இணைந்துவிட்ட நிலையையும் பார்க்க முடிகிறது. எல்லோரா (குகை 21 மற்றும் 14) (7-ஆம் நூற்றாண்டு) உள்ள சப்தமாதர்களுடன் இவர் யோகவீரராக இருப்பதைப் பார்க்கலாம். எல்லோராவில் (குகை 21) உமாசகிதருடன் வீரபத்திரர் இருக்கிறார். பலதெய்வ வடிவங்களான திருமால், பிரம்மா, இந்திரன், நாரதர், பிருங்கி, பைரவர், கணேசர், கந்தன் ஆகியோரும் அருகில் உள்ளனர். ஒரிசா மாநிலத்திலுள்ள பூரியில் சப்தமாதர்களுடன் (8-ஆம் நூற்றாண்டு) வீரபத்திரரும், கணபதியும் இருப்பதைப் பார்க்கலாம். (பானர்ஜி 1974 : படம்.25) இலக்னோ அருங்காட்சியகத்திலும் இதைப் பார்க்கலாம். சிவன் தன்னுடைய அகோர வடிவங்களில் (அபராஜித பிரச்சம் 212.15) தேளாலான மாலை அணிந்திருப்பார் என்று குறிப்பிடுகிறது. தேளுக்குக் கஜூரம் என்று பெயர். கஜூரஹா என்ற பெயரும் இந்தப் பின்னணியில் பெயர் பெற்றதே என்று கூறலாம். (தேவாங்கன தேசாய் 1987 : 383-87) புரா என்ற (சிமோகா மாவட்டம்) இடத்திலுள்ள சோமேஸ்வரர் கோயிலிலுள்ள இவரின் சிற்பத்தின் பீடங்களில் தேள்வடிவங்கள் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கலாம். (அமெரிக்கன் இன்ஸ்டிடியூட் ஆப் இன்டாலஜிக்கல் ஸ்டடிஸ் (A.I.I.S) நெகட்டிவ் எண் 468-16) இதேபோன்று பேரூரிலுள்ள அக்கினி வீரபத்திரரின் தலையின் ஜடா மகுடத்தில் தேள் உருவம் செதுக்கப்பட்டுள்ளதைத் தொடர்புப் படுத்திப் பார்க்க வேண்டும். தற்போது பிரிட்டன் அருங்காட்சியகத்தில் உள்ள இமாத்பூர் உலோகச் சிற்பங்கள் மிக உன்னதமானவை. அதில் சப்தமாதர்களுடன் வீரபத்திரரும் கணபதியும் காட்டப்பட்டிருப் பதைக் காணலாம். (பானர்ஜி 1974: 505) ஹைதராபாத் அருங்காட்சியகத்திலும் (12-ஆம் நூற்றாண்டு) திராட்சாராமத்திலும் இதைப் பார்க்கலாம். அய்ஹோலியிலுள்ள (கடப்பா மாவட்டம்) களகநாதர் கோயிலிலுள்ள கற்பலகையில் இவர் சித்திரிக்கப் பட்டுள்ளார்.

தமிழகத்தில் சப்தமாதர்களுடன் வீரபத்திரர் வீற்றிருக்கின்ற கோலத்தைப் பல்லவர் காலத்திலும் (7-9-ஆம் நூற்றாண்டுகள்) சோழர் (10-13- ஆம் நூற்றாண்டுகள்) காலத்திலும் கட்டப்பட்ட கோயில்களில் காணமுடிகிறது. முதன் முதலாக இராசசிம்ம பல்லவ மன்னனால் (700-730) எழுப்பப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சப்தமாதர்களுடன் இவர் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. (ஸ்ரீனிவாசன் 1972:104) பல்லவர் காலத்தில் தனியொரு சிற்பமாக இவரைக் காண இயலவில்லை. திருக்கட்டளையி லுள்ள சப்தமாதர் சிலைகள் ஆதித்த சோழன் (871-907) காலத்திலும் நார்த்தா மலையிலுள்ள சப்தமாதர் சிலைகள் 875-லும் செய்யப்பட்டவை. எசாலத் திலுள்ள (விழுப்புரம் - செஞ்சி சாலை) சப்தமாதர் சிலைகள் 10-11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இங்கு வீரபத்திரர் அபயத்திலும் (வலக்கை) மடித்துவைக்கப்பட்டு முட்டிமீது வைத்த நிலையிலும் (இடக்கை) இருக்கின்றார்.

சென்னை வேளச்சேரியிலுள்ள சப்தமாதர் சிலைகள் (தற்போது செல்லியம்மன் கோயில்) சுந்தர சோழனால் (956-970) கட்டப்பட்டது. மூல விக்கிரகங்களாகவே முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது மாத்ரு சைவர்கள் கண்காணிப்பில் இருந்தது என்று கல்வெட்டு கூறுகின்றது. (க.ஆ.கு 1911) பெங்களூர் அருங்காட்சியகத்திலுள்ள சிற்பம் 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மேலும் இக்காலத்தில் பனையவரம் (விழுப்புரம் அருகில்) நல்லூர் (கும்பகோண மருகில்) திருப்பாச்சூர் போன்ற இடங்களில் வீரபத்திரர் யோக வீரராகக் காட்சி தருகிறார்.

சோழர் காலத்திலும், வீரபத்திரர் சிற்பங்கள் மிக அரிதாகவே உள்ளன. தமிழகத்தில் மயிலாடுதுறை தாலுக்கா, செம்பொன்னார் கோயில் அருகில் உள்ள திருப்பறியலூர் என்ற இடத்தில்தான் வீரபத்திரரின் வெற்றி நிகழ்ச்சி நடந்ததாக நம்பிக்கை நிலவுகின்றது. இங்கு எட்டுக் கைகளுடன் உள்ள இச்சிலை 10, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதனாலேயே இந்த இடம் தட்சபுரம் என்று அழைக்கப் படுகின்றது. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலில் புடைப்புச் சிற்பமாக வீரபத்திரர் வரலாறு உள்ளது. இது இராஜஇராஜசோழனால் (985-1014) உருவாக்கப்பட்டது. திருவோத்தூர் வேதநாதேஸ்வரர் கோயில் - (செய்யாறு தாலுக்கா) மகாமண்டபத்திலுள்ள சிற்பம் பைரவர் போன்று செய்யப்பட்டுள்ளது. இது பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்தது. (க.ஆ.கு. 76/1900) தஞ்சாவூர் கலைக் கூடத்திலுள்ள சிற்பம் 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது முதலில் செந்தலை சுந்தரேஸ்வரர் கோயிலில் இருந்தது. இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150) காலத்தில் தாராசுரத்தில் செய்யப்பட்ட வீரபத்திரன் சிற்பம் மிகப்பெரியது.



*வீரபத்திரர் தஞ்சை, சரஸ்வதி மகால்*

பின்னர் வந்த விஜய நகர ஆட்சிக் காலத்திலும் (14-16-ஆம் நூற்றாண்டுகள்) நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் (17-18) வீரபத்திரர் சிற்பங்கள் தென்னகமெங்கும் மிக அதிகமாக அமைக்கப்பட்டன. இவருக்கு இக்காலத்தில் தனிக்கோயில்கள் பல கட்டப்பட்டன. முட்டு வீரன்னா என்று இவர் அழைக்கப்படுகிறார். இலேபாட்சி (அனந்தபூர் மாவட்டம் ஆ.பி)யிலுள்ள வீரபத்திரர் கோயில் அச்சுதராயர் (1529-1542) கீழ்ப் பணியாற்றிய இரண்டு குறுநில மன்னர்களால் (விரூபன்னா மற்றும் வீரன்னா) கட்டப்பட்டது. இக்கோயிலின் மூலவர் இவரே. ஐந்து அடி உயரத்துடன் நேராக நின்று, 4 கைகளுடன் வில், அம்பு, கத்தி, கேடயம் ஆகியவற்றை இவர் தாங்கியிருக்கிறார். இங்குள்ள தக்கனின் உருவம் ஆட்டுத்தலையுடன் காட்டப் படவில்லை. தக்கசம்ஹாரம் நடப்பதற்கு

முன்னிருந்த நிலையினை உணர்த்தும் வகையில் இது உள்ளது. இக்கோயில் மண்டப விதானத்தில் 10 கைகளுடன் தக்கன், பத்திரகாளி சூழ்ந்த நிலையில் காட்டப்பட்டிருக்கும் வீரபத்திரன் ஓவியம் அளவில் மிகப்பெரியது. இது விஸ்வரூப வீரபத்திரராக அமைந்துள்ளது. இது மிகவும் நேர்த்தியானது. இக்கோயிலில் இரண்டு வெண்கலச் சிற்பங்கள் (வீரபத்திரர், பத்திரகாளி) வழிபாட்டிலுள்ளது.

கெளுதியை ஆண்ட (சிமோகா மாவட்டம்) நாயக்கர்கள் 1530-1540இல் வீரபத்திரர் கோயிலைக் கட்டினார்கள். இதன் மூலவர் வீரபத்திரராக இருக்கின்றார். நுழைவாயிலில் மிகச் சிறந்த நிலையில் உருவாக்கப்பட்ட ஆட்டு முகத்துடனுள்ள தக்கனின் சிலையைக், காணலாம். இக்கேரி அகோரேஸ்வரர் கோயிலின் வடக்குப்புறச் சுவரில் சிறிய அளவிலான வீரபத்திரர் சிற்பமுள்ளது. சிருங்கேரி வித்யாசாகர் சுவரில் மூன்று சிற்பங்கள் இருப்பதைப் பார்க்கலாம்.



*வீரபத்திரர் ஹம்பி*

ஹம்பியில் வீரபத்திரரின் 38 சிற்பங்கள் உள்ளதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. (பாலசுப்பிரமணியன் 1985) (படம் 2 நன்றி : தொல்பொருள் ஆய்வு மையம் - பெங்களூர்). ஹம்பி விருபாட்சர் கோயில் கோபுர நுழைவு வாயிலில் வீரபத்திரர் சிற்பம், காவல் தெய்வம் போன்று நிறுவப்பட்டுள்ளது. இரண்டு முதல் பல கைகளுடனும், நடந்து செல்லும் பாங்கிலும் காட்டப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, இக்காலத்தில் மக்கள் வீரபத்திரர் வழிபாட்டினை மிகவும் போற்றினர் என்பதை உணரலாம். இங்குள்ள உத்தான வீரபத்திரர் கோவிலில் 6 அடி உயரமுள்ள சிற்பமுள்ளது. (1545) இலிங்காயதர்கள் இக்கோயிலில் பூசனை புரிவதற்குரிய உரிமை பெற்றவர்கள். நிதிகொண்டா (வாரங்கல் மாவட்டம்) வீரபத்திரன்மீது நாகக் குடை உள்ளதைப் பார்க்கலாம். இது 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. (A.I.I.S. 566-93) வாரங்கலிலுள்ள மேலும் ஒரு சிற்பம் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. (சலார்ஜங் அருங்காட்சியகம்) வாரங்கலிலுள்ள வீரபத்திர கோயிலும், (ஸ்ரீனிவாசன் 1972: 145) வாரங்கல் கோட்டையிலுள்ள கோயிலும் மிகப் புகழ் பெற்றவை. வாரங்கல் மகுபாபாத்திலுள்ள கரிவி கற்சிற்பம் 5அடி உயரமுள்ளது. இதில் 12 கைகள் காட்டப் பட்டிருக்கிறது. இங்கே திருமணமாகாதவர்கள் இவரை வழிபடக் கூடாது. பத்ரகாளியின் சிற்பம் வைக்கப் பட்ட பின்னர்தான் இவரை அனைவரும் வழிபடுவர். ஹைதராபாத்தில் சலார்ஜங் அருங்காட்சியகத்திலுள்ள வீரபத்திரர் உலோகத்திருமேனி 15-ஆம் நூற்றாண்டைச்

சார்ந்தது. உதயகிரி (கொண்டையப் பட்டனம்) உள்ள அனுமார் (வீரசித்தர்) கோயிலுக்கு அருகிலுள்ள வீரபத்திரரின் சிற்பம் மிக அழகானது.

இராயசோதியிலுள்ள (கடப்பா மாவட்டம்) வீரபத்திரர் கோயில் 1500-இல் கட்டப்பட்டது. இவருக்கு இரண்டு கைகள் மட்டுமே காட்டப்பட்டிருக்கின்றன. இவர் கத்தியும், கேடயமும் வைத்துக் கொண்டுள்ளார். தக்கன் வணங்கிய நிலையில் உள்ளான். பெனுகொண்டாவில் (அனந்தபூர் மாவட்டம்) உள்ள இரண்டு சிற்பங்களும் இரண்டு கைகளுடன் மட்டுமே காட்டப்பட்டுள்ளன. ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயிலினுள் வீரபத்திரர் சன்னிதி ஒன்று தனியாக உள்ளது. 10 கைகளுடன் உக்ர வடிவத்தில் இது இருப்பதைப் பார்க்கலாம். இக்கோயிலின் அந்தராளப் பகுதியில் 32 கைகளுடன் உள்ள மிகப்பெரிய சிற்பத்தைக் காணலாம். பத்திரகாளி இடப்புறமாகவும், மனைவி வீரினியுடன் தக்கன் வலப்புறமாகவும் இருப்பதைப் பார்க்கலாம். (காமேசுவரராவ் 1976 : 199)

வில், அம்பு, கத்தி, கேடயத்துடன் கூடிய வீரபத்திரரைக் (14-ஆம் நூற்றாண்டு) காளத்தி கோயிலில் காணமுடிகிறது. காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயிலின் முன் மண்டபத்தில் (நாயக்கர் காலம்) தேள் மீதமர்ந்த வீரபத்திரரைக் காணமுடிகிறது. அவிநாசியிலுள்ள அம்மன் கோயிலில் தேள் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தால் எப்படிச் சிவாலயத்தைக் குறிக்குமோ அதே போன்று, தேள் உருவம் இருப்பின், அது வீரபத்திரரைக் குறிப்பாக உணர்த்துகிறது என்று கொள்ளலாம்.

ஹலோல்குண்டி (அலூர் தாலுக்கா - கர்நூல்) உள்ள கோயில் 1125-இல் கட்டப் பட்டது. ஆனால் இங்குள்ள சுவரோவியங்கள் 18-ஆம் நூற்றாண்டில் விஜயநகர ஓவியப் பாணியில் தீட்டப்பட்டுள்ளன. தொடர் ஓவியங்கள் நம் கருத்தினைக் கவரக் கூடிய அளவில் உள்ளன. தக்கன் திட்டமிட்டுள்ள யாகத்தினைப் பற்றி நாரதர் கூறுதல், சதிதேவி தந்தையிடம் வேண்டுதல், தந்தை மறுத்தல், தன்னை மாய்த்துக் கொள்ளுதல், வீரேசர் தோற்றம், யாக துவம்சம் போன்ற நிகழ்வுகள் கட்டம் கட்டமாகக் காட்டப் பட்டுள்ளன. (இராஜசேகரா 1982)



*வீரபத்திரர் காஞ்சி, ஏகாம்பரேஸ்வரர், கோயில்*

தமிழகத்தில் விஜய நகர நாயக்கர் காலத்தில் பல இடங்களில் வீரபத்திரர் வழிபாடு போற்றப்பட்டு வந்தது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள இவரின் உலோகத்திருமேனி (11-12-ஆம் நூற்றாண்டு) மிக அழகான ஒன்றாகும். (கோபிநாத ராவ் தொ-3 ப-1. படம் 44) குறிப்பாக மதுரை

(மீனாட்சியம்மன் கோயில்). கொடுங் குன்றம் (பிரான் மலை) குடுமியான் மலை (புதுக்கோட்டை வட்டம்) தஞ்சாவூர் (படம் 2-தஞ்சைக் கலைக்கூடம்). (வீரபத்திரர் கோயில் மற்றும் கோட்டைக் காளியம்மன் கோயில், விருத்தாச்சலம் திருக்கோயிலூர், சிதம்பரம், காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயில் தூண் சிற்பம் (படம் 3) ஸ்ரீவில்லிபுத்தூர், கிருஷ்ணாபுரம், தென்காசி, ஸ்ரீவைகுண்டம், நாங்குனேரி (வானமாமலை கோயில்) தேவிகாபுரம், வேலூர், முடிகொண்டம் (கோயம்புத்தூர்) தாரமங்கலம், பேரூர் (பட்டிபெருமாள் கோயில்) மாடமதுரை, தருமபுரி, தாடிக்கொம்பு, திருப்பாச்சூர், (திருவள்ளூர் அருகில்) திருப்பறியலூர், பனையவரம் போன்ற இடங்களில் மிக உயரமான சிற்பங்கள் பெரிய திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுத் திறம்படச் செய்து முடிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அகோர வீரபத்திரர் அக்கினி வீரபத்திரர் என்ற பெயர்கள் தாங்கிய மிகப்பெரிய சிற்பங்கள் மதுரை (8-10 கைகளுடன்) தாடிக் கொம்பு (10 கைகளுடன்) பேரூர் (10 கைகளுடன்) மாடமதுரை (8-10 கைகளுடன்) தென்காசி (10 கைகளுடன்) போன்ற இடங்களில் உள்ளன. குடுமியான் மலையில் வீரபத்திரர் தன் முடியைப் பிய்த்து எடுக்கும் பாங்கில் செதுக்கப்பட்டுள்ளது (படம்.4)

இலேபாட்சி வீரபத்திரர் கோயிலில் உள்ள நிருத்த மண்டபத்தில் வீரபத்திரர் நடனக் கோலத்தில் இருக்கின்றார். ஸ்ரீவைகுண்டம், கிருஷ்ணாபுரம், ஸ்ரீவில்லிப் புத்தூர் போன்ற இடங்களிலுள்ள சிற்பங்கள் நடன வீரபத்திரர் வகையைச் சார்ந்ததாக உள்ளன. இவை வெற்றிக்குப் பின் கொண்டாடப்படும் நடனவகை போன்று உள்ளன. வீரபத்திரர் நடனமாடிப் பாடி ஆடினார் என்ற மட்ஸியப்புராணம் (அத்தியாயம் 72) குறிப்பிடுகிறது. வலது காலைத் தூக்கிய நிலையிலும் இடது கால்



*வீரர் குடிமியான் மலை*

குறுக்காகவும் உள்ளது. முகம் வேறொரு பக்கமாகத் திரும்பியுள்ளது. இதில் இரண்டு கைகள் மட்டும் காட்டப்பட்டுள்ளன. கத்தி, கேடயம் மட்டும் தாங்கியுள்ளது. அகன்ற கேடயத்தின்மேல் நடன வீரபத்திரரின் சிற்றுருவம் காட்டப்பட்டுள்ளது. (படம்.5) நாங்குனேரி வானமாமலைக் கோயிலின் உட்புறச் சுவரிலுள்ள சிற்றுருவத்தில் (வடக்கிலிருந்து தெற்கிலுள்ள ஐந்தாவது கட்டம்) நடனக் கோலத்திலுள்ள வீரபத்திரரைப் பார்க்கலாம்.

ஆயிரம் தலைகளுடனும், ஆயிரம் கால்களுடனும், ஆயிரம் கண்களுடனும் வீரபத்திரர் தோற்றம் பற்றி விட்டுணு புராணம் கூறும் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் பத்துத் தலைகளுடனும் இருபது கைகளுடனும் பல்வேறு ஆயுதங்களைத் தாங்கியும் வீராவேச வடிவினராகவும் உள்ள



கேடயத்தின் மேல் வீரபத்திரர்

வீரபத்திரர் திருவுருவைத் தாளில் தீட்டப் பட்ட ஓவியம் ஒன்றினை மூன்றாம் மைசூர் மஹாராஜா உடையார் தொகுத் தளித்துள்ளார். (காண்க: நகல்) (இராமச்சந்திர ராவ் 1981:95)



பத்துத் தலை வீரபத்திரர்

## முடிவுரை

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு பார்க்கையில் பல்லவ-சோழர் காலங்களில் சப்த மாதர்களுடன் காட்சியளிக்கும் சௌம்மிய வடிவினராக வீரபத்திரர் தோற்றம் பெற்றிருக்கின்றார். விஜயநகர நாயக்கர் காலம் முதல் இவரின் சிற்பங்களும் கோயில்களும் நாடெங்கும் தோன்றின. உக்கிரத் தோற்றமுள்ள தெய்வச் சிற்பங் களைப் பெரிதும் ஆதரித்ததினால் அக்கால அரசியல் சூழ்நிலையில் மக்களுக்கு உக்கிரத் தன்மையைப் புகுத்தும் வண்ணம் மன்னர்கள் செயற்பட்டனர் என்று கருதலாம். பல கிராமங்களில் சுதையால் வீரபத்திரர் சிற்பங்களைச் செய்து பல வண்ணம் கொண்டு தீட்டி வழிபட்டு வருவதைப் பார்க்கலாம். கிராமங்களில் தற்போது எல்லைக் காவல் தெய்வமாக இவர் திகழ்கிறார். இவரின் வழிபாட்டினை ஆராதிப்பவர்கள் பெரும்பாலும் வைதீக மார்க்கத்தவர்கள் அல்லர். ❑

### வீரபத்திரர்

*தமிழகத்தின் தலைநகரான சென்னையில் அனேக இடங்களில் வீரபத்திரர் தனித்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்றார். மயிலாப்பூர் மாதவப்பெருமாள் கோயிலுக்கு அருகில் வீரபத்திரர் ஆலயம் உள்ளது. இங்கு அபயாம்பிகை என்ற காளிதேவியுடன் வீரபத்திரருக்குரிய பரிவாரங்கள் சூழ வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் சிவபெருமான் துர்க்கை, அனுமன், விநாயகர், ஆதிசங்கர பகவத்பாதர், நவக் கிரகங்கள் ஆகியோருக்கான சந்நிதிகள் உள்ளன.*

# துணைநூற்பட்டியல்


1. இராசசேகரா. எஸ் (1982) - **Holalagundi Paintings**, தார்வாட்

2 . கஸ்டவ்வு ஓபர்ட் (1972) - **On the original Inhabitants of India**, தில்லி

3. காமேசுவரராவ்.வி. - **Select Vijayanagar Temple of Rayalaseema**, Govt. of Andhra Pradesh, Hyderabad.

4. காஸ்டன் ஆ.மே. (1982) - **Siva in Dance, Myth and Iconography**, Delhi.

5. கிருஷ்ணாசாஸ்திரி ஹெச். (1916) - **South Indian Images of Gods and Goddesses**: Madras.

6. கிராம்ரிட்ஸ் - ஸ்டெல்லா (1981) - **The Presence of Siva**, Mumbai.

7. கோபிநாத ராவ் தி.எ.(1971) - **Elements of Hindu Iconography**, Vol-2; Part - I, Varanasi

8. சாலிடோர் ஆர்.என். (1982) - **Vijayanagara Art**, Delhi

9. சில்பரத்தினம் - (பதிப்பு) தேவநாதாச்சாரியார் (1989) சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்

10. தேவாங்கன தேசாய் - "Puns in Intentional Language at Khajuraho" 383-87. **Kusumanjali: New Interpretations of Indian Art and Culture**, C. Sivaramamurthi Commemoration Volume II (ed) M.G. Nagaraja Rao, Delhi.

11. பானர்ஜி ஜே. என்.(1974) - **The Development of Hindu Iconography**, New Delhi

12. பாலசுப்பிரமணியம் எஸ். ஆர். (1971) - **Early Chola Temples**, Mumbai.

13. பாலசுப்ரமண்யா (1985) - "Virabhadra Sculptures in Hampi" **Vijayanagara: Progress of Research** (ed) M.S. Nagaraja Rao, Directorate of Archeology and Museum, Mysore.

14. மயமதம் ( மொழியாக்கம்) - Bruno Dagens Delhi, 1985.

15. மூர்த்தி தியானம் (பதிப்பு) - எஸ். சுவாமிநாத சாஸ்திரி (1985) சரசுவதி மஹால் நூலகம், தஞ்சாவூர்

16. ராமச்சந்திர ராவ் எஸ்.கே. (1981) - **Indian Iconography**, Bangalore 1981.

17. ஸ்ரீநிவாசன் கே.ஆர்.(1972) - **Temples of South India**, New Delhi

18. ஜெயகர். புபுல் - **The Earthern Drum**, National Museum, Delhi.


## வீர பத்திரதேவர் துதி

ஆளு டைத்தனி யாதியை நீத்தொரு
வேள்வி முற்ற விரும்பிய தக்கனோர்
நீள்சி ரத்தை நிலத்திடை வீட்டிய
வாள்படைத்த மதலையைப் போற்றுவாம்"

-திருச்செந்தூர்ப் புராணம்

# Bharat Overseas Bank

presents

## A variety of loan schemes to enrich your life



**Shakti**

Car & Consumer Durable Loan Schemes



**Sree Griha**

Easy Home Finance



*Saraswathi*

***Easy Loans for Education***

A Customers' Bank, Bharat Overseas Bank has a variety of loan schemes to match your requirements. We also have schemes for industrial and other loans..

***Banking as it should be-Fast, Friendly and Futuristic***

**Chennai Branches:** Chennai Main ✆ 8114655 Adambakkam ✆ 2452608 Anna Nagar ✆ 6220201 George Town ✆ 5384656 Jafferkhanpet ✆ 4894892 Kalakshetra Colony ✆ 4918022 Nungambakkam ✆ 8218551 Mylapore ✆ 4983914 T.Nagar ✆ 4331340

FORTUNE-CH

For more details Visit us at : **www.bharatoverseasbank.com**

# Bharat Overseas Bank Ltd.

**A bank owned by 7 banks.**

H.O: Habeeb Towers, 196, Anna Salai, Chennai 600 002. Tel: 852 2983, 852 0748. Fax: (91)-(044)-859 4615.
Telex: 041-7493 BOB-IN E-mail : bobl@vsnl.com

*We'll be with you, right through*

G.Krishna Murthy
Chairman

# வானறிவியல் கண்ணோட்டத்தில் - வீரபத்திரர் (அருள்மிகு வீரபத்திரரின் பெருமையும் வான்தனிச் சிறப்பும்)

முனைவர், பொதிகை முத்துக்குமரன், பிஎச்.டி

*ஓம் நமச்சிவாயா - ஆதி வானவனே போற்றி!*

**வீ**ரபத்திரர் யார்? அவர் உறைவிடம் எது? அதன் தத்துவம் யாது? அவர் பெயர்ச் சிறப்பு யாது? அவர் வீரம் எத்தகையது? அவர் ஆயுதச் சிறப்புகள் யாவை? இன்றைய சமய நல்லிணக்கத்திற்கு அவர் வழிபாடு உதவுமா? சமூக முன்னேற்றத்திற்கு உதவுமா? என்ற எட்டு ஆய்வுக் கேள்விகளுக்கு வானறிவியல், சமய, தத்துவ, இலக்கிய, கலை, மொழியியல், உயர்உயிர் ஆய்வுத் துறைகளின் உயர் ஆய்வுக் கருத்துகளோடு ஒப்பீட்டாய்வு செய்து புதுமைக் கருத்துக் களைக் கண்டறிந்து வீரபத்திரனின் பெருமையை உலகிற்குத் தெரியப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். இங்கு வீ - உரோகிணி, பிள்ளையார் சுழி உ எழுத்து உடையது. வானில் உள்ள ஒரு உடு. வீ - வான வீதியையும் வீரட்டத்தையும், மலரையும் குறிக்கும்.

ர - இரத்தக் களரியினைத் தக்கனின் தகாத வேள்வியில் ஏற்படுத்தியவர், பேரழிவை உண்டாக்கியவர், தீவேள்வியை அழித்தவர், வீரட்டம் எட்டினுள் இரண்டாவதற்குத் தலைமை ஏற்றவர், சிவபெருமானின் திருமுடித்திருமகனார் வீரபத்திரர் என்று பத்தாம் திருமுறையும் எட்டாம் திருமுறையும் பறை சாற்றுகின்றன. (திருமந்திரம் 326, 329-344, திருவாசகம் 298-309 திருவுந்தியார் 5-16) இரண்டு திருமுறைகளும் சித்திரைத் திங்கள் நிறைமதி போன்ற அவர் பெருமையைப் பகர்கின்றன. ர, சக்கரம் காளி, கையிலுள்ளதைக் குறிக்கும். சரம்-வாளி அம்பையும் குறிக்கும்.

ப - பழமையோன், பகழியோன், பதி, பசு, பாசத்தின் தலைவராம் பரமசிவக் கடவுளின் உறைவிடம் உரோகிணியின் அருகிலுள்ள மிருகசீரிடம் திருவாதிரை யருகில் என்பர் உயர் உயிர் ஆய்வாளர் அரசி அகத்தியன். அவ்விண்மீனின் அருகில் ஒரு பால்வழி உள்ளது. அதன் உருவம் +50 முதல் -50 அசுவினி - பெருசியசு அருகில் தொடங்கி மீனம், ரேவதியின் எதிர்த்திசையில் முடிவடைந்து ஒரு வான் மனித உருவ வடிவில் பால்வழி உள்ளது. (படம்) அதிலிருந்து உருவானவரே வீரபத்திரர் என்பது இக்கட்டுரை ஆய்வாளன் கருத்து. இது புதிய கண்டுபிடிப்பு. இதனை உறுதி செய்ய உயர் உயிர் ஆய்வு வருங்கால அறிஞரால் இயலும் என்க. வான் அண்டத்தில் பத்திரமான இடத்தில் அவ் வீரபத்திரன் உறையும் இடம் அமைந்துள்ளது எனலாம். கிரேக்கப் புராணத்தில் வரும் பெருசீயசு, வீரபத்திரனின் கிரீடத்து முடியாகும். இதனையே சிவ பெருமானின் தலைமுடியிலிருந்து வீரபத்திரர் பிறந்தார் என்ற கதை எழுந்துள்ளது. வான்வெளி போன்று அமைந்துள்ள கோயிலின் ஒரு பகுதியில் மண்ணில் வீரபத்திரருக்குத் தனிக்கோயிலும், கோயிலின் ஒரு சிறு பகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. பங்குனி உத்திரம் அன்று நிறைமதி இருக்கும் பொழுது நடைபெறும் விழா சாத்தன் - வேள்வியைச் சாய்த்தவனுக்கு எடுக்கும் விழா ஆகும். அவ்விழா இவர்

பெருமையைப் பகரும். ப-பகலவன் பதிந்திருக்கும் விண் மீன்கள் குழுவைக் குறிக்கும். பன்னிருகை வீரனையும், பலகை வீரனையும் குறிக்கும். பகழி வீரனையும் குறிக்கும்.

த் - தலைமைச் சுவாதி சுடரொளியை நாள்தோறும் இடையறாது வழிபட்டுத் தத்துவம் 96 முழுவதையும் உணர்ந்த திருமூலர் தத்துவமாவது அருவம், சராசரந் தத்துவமாவது உருவம் திருமந். 1708, தத்துவமாவது சகள அகளங்கள் (திருமந். 2357) சக்திகளம் ஓம், அகரக்களம் அகல்விளக்கு விண்மீன், மேடம், இடபம், பெருசீயசு சேர்ந்த பகுதி. அங்கிருந்து பத்து விண்மீன் குழுக்களிலிருந்து எட்டு வகை ஆயுதங்களைப் பெற்று வந்தவர் வீரபத்திரர் என்பது இக்கட்டுரை ஆய்வாளன் கருத்தாகும். அகர ஓரத்திலிருந்து பிறந்தவர் ஆனதால் அகோர (அஃகுஓர) வீரபத்திரர் எனப்பட்டார். கோரமான, கோபமான உருவுடையவர் ஆனதால் அப்பெயரைப் பெற்றார் என்று இன்னொரு கருத்தும் நிலவுகிறது. த் - விண் தலைவரிடம் உள்ள பத்து ய எண் வடிவம் கொண்ட திரிசூலத்தையும் குறிக்கும். சத்தம் தரும் உடுக்கையையும் குறிக்கும். ஆயுதங்கள் அனைத்தும் செயற்படும் பொழுது சத்தம் தரும்.

தி - திருவாதிரையானின் இன்னொரு பதி, இருப்பிடம் விசாகம், விசாக ஐயன் மகேசன், எண்ணப்படி, திருவாதிரை விண்மீனின் செந்தீ போன்று கோபமுடைய வீரபத்திரர் சிவனின் கூறாகச் செயற்பட்டார். தக்கன் வேள்விச்சாலை உறைவோர் அனைவரின் தீவினைகள் திரண்டு சிவபெருமானை அடைய அவற்றைத் தம் நல்வினையால் ஒருருவாக்கித் திருப்பி அவர்களைச் சென்றடையச் செய்து அவர்களின் ஆணவத்தை அடக்க உருவாக்கப் பெற்றவரே அக்னி வீரபத்திரர் ஆவர். திசை எங்கும் பரந்து சென்று தாக்கும் வலிமையும் வீரமும் பெற்றவர். பத்துத் திசைகளில் நிகழ்வதை அறிந்து செயற்படும் வீரருக்கு வீரபத்திரர் என்று பெயரிட்டது மிகவும் பொருத்தமான தேயாகும். தக்கன் வேள்வியைப் பூத கணங்களோடும், பத்திரகாளியோடும் சென்று அழித்துவிட்டுப் பத்திரமாகத் திரும்பி வந்தார் என்பது அவரது செயல் பெருமையாகும். தி - திரண்ட பெரும் படை, திருவருள் படைத்தலைவர் என்பதைக் குறிக்கும்

ர - அரனின் மகன் ரணதீரன் வீரபத்திரன். ரவி எனப்படும் ஆதவன் ஞாயிறு பன்னிரு இராசி - விண்மீன் குழுவில் மேடம் முதல் மீனம் ஈறாகக் காணப்படுவது போல, பால் வழியினின்றும் பிறந்த பாலமுருகன் போன்று வீரபத்திரரும் பிறந்தார். அண்டவெளியில் காணப்பெறும் 88 விண்மீன் குழுவினைச் சுருக்கி எட்டுக் கைகளாகவும் எட்டு ஆயுதங்களாகவும் அகர அகல் விண்மீன் குழுவிலும், ஓம் என்னும் விண்மீன் குழுவிலும் (விசாகம், துலாம், விருச்சிகம்) உறையும் சிவபெருமான், உலகம் உய்யும் பொருட்டுத் தீ நோக்கு வேள்விகளைச் செய்யாதிருக்க வீரபத்திரரைப் படைத்தருளினார். பன்னிரு விண்மீன் குழுக்கள் 89,90 இக்கட்டுரை ஆய்வாளன் தலைமையில் தனித்தமிழ் வானியல் புலவர் குழு உயர் உயிர்த்தியானத்தால் கண்டறிந்தது. வீரபத்திரருக்கு 'ஆதி வானவன்' என்ற பெயருண்டு. அது மிகப் பொருத்தமானதே என்பதை வானறிவியல் கருத்துக்கள் விளக்குகின்றன. வானாகி என்று இறைவனை மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் குறிப்பிடுவது இக்கருத்து பற்றியேயாகும்.

ர் - நாதர் முடிமேல் இருக்கும் நந்நாகனார் உறைவிடத்திலிருந்து தோன்றிய வீரபத்திரன்

பெயரில் நமச்சிவாயன், முத்துக்குமரன், திருமுருகன், குமரிக்கோடன், குமரியூரன் என்ற பெயர்களில் ஐந்து அக்கரம் (பஞ்சாட்சரம்) இருப்பது போல் ஐந்து எழுத்துக்கள் அமைந்துள்ளன. இது வீரபத்திரனின் பெயர்ப் பெருமையாம். வாரத்தின் நாள் ஏழு, நாள் ஒளிக்கு வண்ணம் ஏழு அமைந்துள்ளது போன்று வீரபத்திரருக்கு ஏழு எழுத்துகள் அமைந்துள்ளன. ஏழுகோள், ஏழு விண் மீன்கள் போன்ற பெருமை வீரபத்திரருக்கு உண்டு. ர் - அவர், வீரவர், திருமூலர், உறையும் நீர்ப்பகுதியை, வான் பொய்கையைக் குறிக்கும். பற்றி எரியும் தீ உடைய திசைபத்தும் சென்று வீழ்த்தும் வீர ஆயுதம் பெற்றவர் என்பதை அவர் பெயரிலுள்ள எழுத்துகளே உணர்த்தும். ஈர (அருள்) பத்திரரும் அவரே என்பதை அவர்பெயர் சுட்டிக்காட்டும்.

## பெருமையும் சிறப்பும்

1°-30° அ - 1 சமயச்சிறப்பு - சைவ சமய ஒடுக்கப் பிரணவம் 'அ' -எட்டு 8. இதற்கு ஏற்ப எட்டு வீரட்டம் செய்தார் சிவபெருமான். பதிவலியில் வீரட்டம் எட்டு என்ற தலைப்பில் திருமூலர் தம் காமிகாகமம் என்னும் இரண்டாம் தந்திரத்தில் (325-332) எட்டுச் செய்யுளில் பொதுவாகவும் தக்கன் வேள்வி என்ற தலைப்பில் (339-347) 9 செய்யுள்களில் சிறப்பாகவும், 356-இல் வீரபத்திரரை நல்வீரர் என்றும் குறிப்பிடுகிறார். திருமூலரால் போற்றப் பெறுவது ஒரு சமயச் சிறப்பு. சமயச் சிறப்பு வாய்ந்த ஒடுக்கப்பிரணவமான அகரம் எட்டு எண்களையும் எழுத்துகளையும் தன்னுள்ளே அடக்கியுள்ளது போல வீரபத்திரர் தன்னிடம் தன் எட்டுக் கரங்களில் எட்டு ஆயுதங்களைத் தரித்து வேள்வியை வீயச் செய்யும் வீரச் செயலைச் செய்தமை ஒரு பெருமையாகும். இது அகரச் சிறப்பு. முதல் பெருமைச் சிறப்பு. அகர் அகல் விண்மீன் அனைய சிறப்பு. அகரத்தின் பின்புறம் கா ஒளிந்திருக்கிறது. கா- காளி. கால் (காற்று) போல் காப்பதில், ஆளி - யாளி விலங்கு போன்றவள் என்பதைக் குறிக்கும். யாளியைக் கோயில் சிற்பத்தில் காணலாம்.

31°-60° ஆ - 2 தத்துவச் சிறப்பு அறப்பயன் தீரின், அமிழ்தேயானும் கடுப்பாடெய்தல் நஞ்சாதல், விடுத்தோ இன்றே' (விட்டொழியுமாறு இல்லை) என்ற நீதித் தத்துவத்தை விளக்கத் தக்கன் எடுத்த முத்தீ வேள்வியையும் அதன் பயன் தீமையானதையும், ஞானாமிர்த ஆசிரியர் வாகீச முனிவர் தீவினை நிகழ்ச்சியை விளக்கத் தம் அகவல் 40இல் தக்கன் இருஞ்சிரம் இழந்து தகர் (ஆடு) சிரம் எடுத்துப் பிழைத்ததை அரிதே என்று வீரபத்திரர் கதையை மேற்கோள் காட்டுகிறார். அந்தி எயிறும் (பல்) வாணி துண்டமும் (மூக்கும்), இந்து (சந்திரன்) முகனும் அரி (அக்னி) கையும் இழப்பத் தக்கன் தன் இருஞ்சிரம் இழந்தான் எனக் குறிப்பிடுகிறார். இது வீரபத்திரரின் நீதித் தத்துவச் சிறப்பையும், வீரப் பெருமையையும் காட்டுகிறது. ஆ -பசு, உலக உயிர்களுக்கு வேள்வியினால் பயன் இல்லை. அறம் செய்து அறவாழி அந்தணனை, அண்ணலை வணங்குவதே சிறந்தது என்ற தத்துவத்தையும் இக்கதை விளக்குகிறது. இது ஒரு பெருமையாகும். இது ஆ - வியப்பு, ஆச்சரியச் சிறப்பு ஆகாரச் சிறப்பு.

வீரா என்பதிலுள்ள ஈற்று எழுத்து ஆ எகுபதியக் கடவுள் 'ரா' போன்றவர் என்பதையும் சுட்டிக்காட்டும். ஆவு எருது என்பதையும் அம்மொழி எகுபதியம் குறிப்பதை உன்னுக.

61°-90° இ-3 அருள்மிகு அகோர அக்னி வீரபத்திரர் என்ற ஒரு சொற் றொடரை மொழியியல் பகுப்பாய்வு -

பிணைப்பாக்கம் என்ற புதிய, தமிழ் கற்பிக்கும் முறை (இக்கட்டுரை ஆய்வாளர் குழுவால் கண்டுபிடிக்கப் பெற்றது)யைப் பயன் படுத்தினால் அவர் பெயரில் அ + ர் + உ + ள் + ம் + இ + க் + உ + அ + க் + ஓ+ர்+அ+அ+க்+ ன்+இ+வ்+ஈ+ர்+அ+ப்+ அ + த் + த் + இ + ர் + அ + ர் + அ + அ + அ = ஆ இ,ஈ,உ,உ+உ=ஊ, அ+இ+ஐ, ஒ+ஒ =ஓ, அ+உ=ஔ என்ற பத்து உயிர் எழுத்துகளும், ர், ள், ம், க், ன், வ், ப், த், எட்டு மெய்யெழுத்துகளும் வந்துள்ளன. 10+8 = 18. கணங்களை இவை சுட்டிக்காட்டும். பிணைப்பாக்கத்தில் அ+உ+ம்=ஓம், ஆம்,ஊம், ஐம், அத்தம், இரத்தம், கடகம், வானம், அகரம், அக்கம், பக்கம், அத்தி(யானை), புத்தி, அதிபதி, ஆதி, திதி, துதி, வை, அம்பு, வாள், அட்டம், ஆடு, (வெற்றி) ஈடு, பீடு, பாடு, திடம், வதம், விதி, அரி, இருள், அருள், வீதி, அகம், புரம், முப்புரம், வரம், வதி, பதி, அவதி, அவத்தை, பீடம், முடம், இதம், இரக்கம், பாதி, பீதி, மீதி, மீனம், திருகு, குருதி, உருவம், அருவம், அகோரம், வீரம், தீரம், அத்திரம், உத்திரம், உரம், திரள், புரள், களம், குதிரை, அக்னி போன்ற அறுபதுக்கு மேற்பட்ட சொற்கள் வீரபத்திரர் என்ற பெயரிலிருந்தே தோன்றி அவர் செய்த வீரச்செயல்களைச் சுட்டிக் காட்டுகின்றன. இது ஒரு மொழியியல் எழுத்துச் சிறப்பு. சொற் சிறப்புமாகும். இவை அவர் பெயரிலுள்ள (இரட்டைச் சிறப்பு) 12 எழுத்துகளும் பன்னிரு விண் மீன்கள் குழுவையும், 7 எழுத்துகள் எழுமை யையும், ஏழு உலகங்களையும் குறிக்கும், இது இகரச் சிறப்பு. ஓம் நமச்சிவாய என்பதிலிருந்து பிறந்தவர் வீரபத்திரர் என்பதை மொழிப் பகுப்பாய்வு காட்டும். அதுவும் ஒரு சிறப்பு. இணையில் சிறப்பு அருள்மிகு என்பதனுள்ளும் அ + உ + ம்ஓம் ஒளிந்திருப்பது ஒரு சிறப்பு. இறைச் சிறப்பு. அருள்மிகு என்பது ஓம் என்பதற்குச் சமம்.

91°-120° ஈ - ச ஈரண்டச் சிறப்பு. வானறிவியல் சிறப்பு. வீ என்பது உரோ கிணியையும், ர என்பது சித்திரையையும், ப என்பது உத்திரத்தையும், த - சுவாதி யையும், தி- விசாகத்தையும், பூரட்டாதி யையும் குறிக்கும் என்பர் சோதிட இயலார். அவ்விண்மீன்கள் மேடம், சிம்மம், துலாம், மீனம் என்ற ராசிகளையும் குறிக்கும். இவ்வாறு குறிப்பது ஒரு வானியல் சிறப்பாகும். அவரும் காளியும் ஏந்திய சூலம், வாள், வில், அம்பு, சக்கரம், சங்கு, உடுக்கை, பூ, மழு, தண்டம் என்ற எட்டாயுத வடிவங்களும், ஓரையான் - வேட்டைக்கார விண்மீன் குழுவிலும், ஓமக விண்மீன் குழுவிலும், துலாம், விருச்சிகம், தனுசு, மேடம், போன்ற விண்மீன் குழுக்களிலும் அன்றும் இருந்தன. இன்றும் இருக்கின்றன. நாளையும் இருக்கும். என்றும் அழியாது இருக்கும். இது ஒரு வானியல் - அறிவியல் சிறப்பாகும். ஈசன் சிறப்பு. (படம்) எட்டுத் திக்குப் பாலர்களை அழிக்க எட்டு ஆயுதங்களை வீரபத்திரரும் காளியும் பெற்றிருந்தார்கள். 36 கைகளை யுடையவர் வீரபத்திரர் என்பது 36 தத்துவங்களைக் குறிக்கும்

121° - 150° உ - 5 உ உடு அரிவீரச் சிறப்பு சிம்மக் குரலோன் வீரபத்திரன். அவன் குரலைக் கேட்டுத் திருமால், வாள்வீரன் வீர பத்திரரை நோக்கி வீசிய சக்கராயுதம் தன் வலுவிழந்து அடங்கிப் போயிற்று என்பது புராணக் கதை. காட்டில் சிங்கக் குரலைக் கேட்டு ஏனைய உயிர்கள் நடுங்குவதைப் போன்று தேவர்கள் அஞ்சி அலறி வேள்வியை விட்டு வெருவி ஓடினார்கள். அவ்வாறு ஓடச் செய்த வீரபத்திரனின் வீரம், வீரியம் வாய்ந்தது. சிறப்பு மிகுந்தது. பெருமை மிக்கது. உயர் உகரச் சிறப்பு. உடுக்கை ஏந்தியவன்

சிறப்பு. கிரேக்கப் புராண வீரன் பெருசியசு வீரச் செயல் புரிந்து ஆண்டிராமடாவைக் கொடிய கடல் விலங்கிடமிருந்து காப்பாற்றியது போல வீரபத்திரர் சிவன் பெருமையைத் தக்கன் வேள்வியிலிருந்து வீரச் செயல் புரிந்து காப்பாற்றினார். உ - உடுக்கைச் சிறப்பு. உடுக்கை ஒலி, பேயை ஓட்டும் வலிமை உடையது.

151°-180° ஊ-6 ஊஞ்சல் கன்னியர், ஊஞ்சல் அறுந்தால் எவ்வாறு பயப்படு வார்களோ அவ்வாறு தக்கன் மனைவி, வாலையும் வெருவினாள். தாட்சாயணி, தன் தந்தை என்றும் பாராது 'உன் வேள்வி அழியட்டும்' என்று சாபம் கொடுத்தாள். தீவினை செய்தவர் யாவராயினும் தண்டிக்கப்படுவர் என்பதற்கு ஏற்ப அவளின் சாபக் கோபம் வீரபத்திரர் உருவத்தை அகோரமாகக் கண்டார். பயப்படும்படியாக மாற்றியது. சிவனின் மனைவி தாட்சாயணி தீயில் விழுந்து உயிரை விட்டாள் என்பர். இதுவும் சிவ பெருமான் கோபத்திற்கு ஒரு காரணம் ஆயிற்று. பெண் பாவம் பொல்லாதது. 'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை' என்ற வள்ளுவர் வாக்கிற்கு விளக்கமாக வீரபத்திரர் கதை அமைந்துள்ளது எனலாம். ஏழை (பெண்கள்) ஏந்திழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும் என்பது பழமொழி. வீரபத்திரரின் வாள்கை அப்பழமொழியை விளக்கியது. சிவன் பிரம்மாவுக்கு வாள் கொடுத்தார். அவ்வாளின் தாய்வாளை வீரபத்திரர் தம் கையில் வைத்திருந்தமை ஒரு சிறப்பு. ஊ - பேய். ஆணவப்பேய். தக்கன் ஆணவப்பேயை ஊரைவிட்டே ஓட்டியவர் வீரபத்திரர். இது ஒரு ஊக்கம் தரும் சிறப்பு.

181°-120° எ - 7 எடை நிறைத்தராசு - நீதி தேவதைக் கன்னியிடம் தராசு இருப்பதாகவும், கண்ணைக் கட்டிக் கொண்டு, தீர்ப்பு வழங்குவதாகவும் மேலை நாட்டினர் கூறுவர். அது போன்று ஒருவரின்- ஒரு குழுவினரின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை, எழுவகைப் பிறவிகளை விண்ணவர்க்கும் மண்ண வர்க்கும், மக்கள், தேவர், நரகர்க்கும் இறைவன் வகுத்தளிப்பான்; ஊழ் ஆக மாற்றி அளித்தருள்வான் என்ற தத்துவப் பேருண்மையை வீரபத்திரர் புராண வரலாறு நமக்கு அளிக்கிறது. அசுரர் களாயினும் தேவர்களாயினும் அவர்களுக்குத் தண்டனை உண்டு. அதிலிருந்து யாரும் தப்ப முடியாது. தீவினை தீரும் வரை அறிந்து, அறிந்து செய்த பாவத்தை அழுது அழுது தொலைக்க வேண்டும். கேள்வியாலோ, வேள்வியாலோ பொய்கைத் தீர்த்தங்களாலோ சமய மாற்றத்தினாலோ தீவினையிலிருந்து தப்ப முடியாது. இறைவனை எக்கருவி கொண்டும் அழிக்க முடியாது என்ற நீதிகளை, தத்துவ உண்மைகளை உலகிற்கு வீரபத்திரர் கதை அளிக்கிறது. இரு ஒரு நீதிச் சிறப்பாகும். தீவினைகள் தீர நல்வினைகள் ஆற்ற வேண்டும் என்றும் நல்வினைகள் 32-னுள் வழிபாடும் ஒன்று என்பதையும் இக்கதை தெரிவிக்கிறது.

211°-240° ஏ-8 ஏற்றத்தேள் - விருச்சிகம். இதன் அருகில் வானில் நான்கு பெரிய சூலங்களும் ஒரு சிறிய சூலமும் வாள் வடிவமும் ஓம் விண்மீன் குழுவில் உள்ளன. வீரபத்திரர் கையிலும் சூலம் உள்ளது. வாள் உள்ளது. ஏற்றத் தெளிவு- புத்தேளிர் புதுமையான தெளிவு பெற்றவர் உறையும் உம்பர், உலக உயர் உயிர்கள் உறைவிடம், சுவர்க்கபுரி, இறை உயிர் இருப்பிடம், ஓம் விண்மீன் குழு என்பது தமிழக உயர் உயிர் ஆய்வுக் குழுவினர் கண்டறிந்த உண்மை. வானறி வியல் தமிழ்ப் புலவர்கள் உணர்த்தியருளிய உண்மை. அவர்கள் அனைவரும் உலக உயிர்கள் செய்யும் அனைத்துச் செயல்

களையும் கண்கூடாகக் கண்டறிந்து தவ மேற்கொண்டு இறைவனிடம் வேண்டு வார்கள். அவ்வேண்டுகோளை ஏற்று இறைவன் எண்ண, அவன் எண்ணப்படியே உலகியல், அரசியல் கட்சி மாற்றங்கள், நிகழ்ச்சிகள், நடைபெறுகின்றன என்ற உயர் உயிர் ஆய்வு முடிவுகளை வீரபத்திரர் கதையும், ஏனைய கதைகளும் நமக்கு உணர்த்துகின்றன. இது ஓர் உயர் உயிர் ஆய்வுத் தத்துவப் பெருமையாகும்.

241° - 270° ஐ -9 ஐயன் வில்லும், அம்பும் வானில் தனுசு இராசியில் உள்ளன. வீரபத்திரர் கைகளில் வில்லும் அம்பும் கேடயமும் உள்ளன. மேட ராசி மேற்கில் மறையும்பொழுது வில் வடிவம் பெறுகிறது. இது வானவில் அன்று. நிலையான வில் வடிவ விண்மீன்கள் குழு. தக்கன் வேள்வியை அழித்தமையில் இவ்விரு ஆயுதங்களுக்கும் பெரும்பங்கு உண்டு. வேள்விக்களம் முழுதும் நிறைந்த அம்புகள். தேவர்கள் அனைவரையும் வருத்தியது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதைத் தக்கனுக்குத் தக்க தருணத்தில் உணர்த்திய பெருமை வீரபத்திரரைச் சாரும். வேள்விப் பயனான அமுது உண்பதைத் தடை செய்தவர் வீரபத்திரர். அன்றைய வானுலக ஆட்சியாளர்களான இந்திரன், சந்திரன், சூரியன், பிரமன், மைத்துனன் மாலவன், மாமன்தக்கன் போன்ற உற்றார் உறவினருக்கும் தண்டனை உண்டு என்பதைப் படம் பிடித்துக் காட்டிய பெருமை வீரபத்திரர் கதைக்கு உண்டு. இது இக்கால சமய, அரசியல், பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். திரிபுரம் எரித்த தீ, சலந்திரனை அழித்த சக்கரம், தக்கன் தலையை அறுத்த பிறைபோன்ற வாள், அந்தகாசுரனைக் கொன்ற சூலம் போன்ற கருவிகளை வீரபத்திரர் பெற்றிருப்பது ஒரு பெருமை. ஆயுதப் பெருமை. இக்காலத்திலும் திரிசூல் ராக்கெட் திட்டம் அச்சூலப் பெருமையைக் காட்டும்.

271°-300° ஒ-10 தமிழ் மொழியின் சிறப்பு எழுத்து 'ழ' வடிவில் அமைந்த ஒ- ஒரு யாழ் ஒரு (ஒப்பற்ற) மகர யாழ் வடிவ விண்மீன் குழு வானில் உள்ளது. யாழிசையில் மலர்ந்த கமலப்பூவும் உள்ளது. வீரபத்திரரின் துணைவி காளியின் கையிலும் பூ உள்ளது. பூவுறைக் கடவுளர் அருள் பெற்றவர் வீரபத்திரர். வீரபத்திரர் வீரத்திற்கு இணையாகக் காளியும் உடன் சென்று தக்கன் வேள்வியை அழித்தாள். கணவரின் பணிக்கு உதவினாள் என்று வீரபத்திரக் கதை கூறுகிறது. அவ்விருவரும் 'பூ'ப் போன்ற மென்மையான அருள் உள்ளம் உடையவர்கள். தக்கன் வேள்வியை அழித்த பின் இறுதியில் அனைவருக்கும் திருவருள் இன்பம் என்னும் மலரை அளித்தனர். தீவினை தீர்ந்தபின் அதன் பயனை நுகர்ந்தபின் நல்வினையால் மலர்போன்ற யாழிசை போன்ற நிகழ்வு நடைபெறும். இறைக் காட்சி கிடைக்கும் என்ற தத்துவ, பண்பாட்டு உண்மையை வீரபத்திரர்கதை உலகிற்கு உணர்த்துகிறது. வானிலும் விண்மீன் கமலமும், கமலம் என்ற சொல்லும் உள்ளன. இக்காட்சியை இன்றும் வான் மேகக்கூட்டங்களில் காணலாம்.

301°-330° ஓ-11 ஓரைக்குடம்- கும்ப நீரில் மலர்ந்தது யாழ் மலர். வீரபத்திரர் கதை அக்குட முழுக்கு நீர் போன்றது. பிரம்மா, விசுணு, சிவன் இம்மூவரில் யார் பெரியவர் என்ற போராட்டத்தில் அம்மூவரின் உருவங்களை அழித்து அகத்தியர் இலிங்கம் உருவாக்கினார். மூவர் இங்கு அகம் கொண்டுள்ளனர் என்ற ஒருமைப்பாட்டை அக்காலத்தில் திருமூலர் ஏற்படுத்தினார். அது போன்று ஆதவன், சுடர் ஒளியில் நீலம், பச்சை, சிவப்பு

ஒளிப்பகுதிகளை இன்றும் காணலாம். அருவி நீர்ச் சிதறலில் வானவில் வண்ண ஒளியைக் காணலாம். ஒன்றின் தொடர்ச்சி மற்றதில் காணப்படும். வானத்தில் அனைத்துச் சமயக் குறியீடுகளும் தமிழ் ஓம் வடிவ விண்மீன் குழுவில் காணப்படுகின்றன. அவற்றை ஒன்றிணைத்து உலக சமய நல்லிணக்கம் காண வானறிவியல் சைவசமயக் கொள்கையும் வீரபத்திரர் பற்றிய ஆய்வுக் கட்டுரைக் கருத்துக்களும் உலகிற்கு உதவும். அதற்கும் ஒரு வீரபத்திரர் தேவை. அதனை இறைவன் அளித்தருள்வானாகுக. (இக்கட்டுரை ஓம் நமச்சிவாய மந்திரச் சிறப்பு என்ற தலைப்பில் காசியில் திருஞான சம்பந்தர் இலக்கிய மாநாட்டில் ஆய்வாளனால் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரையின் தொடர்ச்சியாகும். அதில் மேலும் விளக்கங் களைக் காணலாம். இரு கட்டுரைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்.)



*வீரபத்திரரும் விண்மீன்களும்*

330° - 360° ஔ - 12 அ + உ மீனம் வானத்தின் தென், வடபகுதிகளில் பரவியுள்ளது, மீனம் என்னும் விண்மீன் குழு. அது போன்று அக்காலப் பாண்டி நாடு பரந்து விரிந்திருந்தது. தென்னாடு உடைய சிவன் ஆட்சி எந்நாட்டவருக்கும் இறைவன் ஆட்சி என்ற நிலை இருந்தது. அக்காலத்தில் பாண்டி நாட்டு மீனக் கொடியில் வான் மீனின் சின்னம் பொறிக்கப் பெற்றிருந்தது. எண்ணெண் கலைகள் அக்காலத்தில் வளர்க்கப் பெற்றன. அது போன்று எதிர்காலத்தில் 2500க்குள் அவன், பண்பாடு வளரச் சிவனை வழிபடுவோமாக. வழிபட்டு உயர்வடைவோமாக. உயர்வடைய வானியல் சைவப் பேரவை ஆய்வு நிறுவனம் அமைத்து வானியல் வழிபாடுதனைக் கண்ணைத் திறந்துகொண்டே விண்மீன்களை நோக்கி இறையுணர்வுடன். நிகழ்த்துவோமாக.

அதற்கு அறக்கட்டளைகள் அமைத்து எட்டுத் திசைகளிலுமுள்ள ஏழு கண்டங்களில் வாழ் நல்லவர்களைப் பாதுகாத்து இறைப் பணியில் நிற்போமாக. மேற்குறிப்பிட்ட 19 பத்திகளில் அருள்மிகு வீரபத்திரரின் பெருமையையும் வானறிவியல் அடிப் படையில் அவரது சிறப்புகளையும் ஆராய்ந்து முன்னுரையில் விடுக்கப்பட்ட கேள்விக்கணைகளுக்கு விடைகளை வீரபத்திரர் திருவருளால் விளக்கினோம். விளங்கியவர்கள் ஓம் நமச்சிவாய கட்டுரையில் கூறிய கருத்துக்களைச் செயற்படுத்தி, ஓரணியில் ஒன்று திரண்டு, இன்றைய சமய நல்லிணக்கத்தை வானறிவியல் அடிப் படையில் எற்படுத்தி, சமயப் பிணக்குகளை நீக்கி, உலக அமைதியை ஏற்படுத்தும் பணியில் ஈடுபடுவார்களாக. அதற்கு அகரம் உறை இறைவனை மறவாது போற்றிப் புகழ்வோம். அவன், அவள் அருளை வேண்டுவோம் (ஓம்). ❑




அண்டப்பால் வெளியில் வீரபத்திரரும் காளியும் (ஆயுதம்)




அண்ட வான்வெளியில் வீரபத்திரரும் காளியும் (வடதிசை, தென் திசைத்தோற்றம்)

# வீரபத்திரர் துணை இருப்பார்

தவத்திரு, பித்துகுளி முருகதாஸ்

பத்திரமாக இருக்க வேண்டும். அது உடலுக்கும் உள்ளுணர்வுக்கும் (காப்பு) பத்திரத்தைத் தருவதாக இருக்க வேண்டும்.

அடுத்து அவன் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளை நல்லதாகவும் வெற்றியாகவும் ஆக்கி உறுதுணையாக இருக்க வேண்டும்.

வீர உணர்வும் உடற்கட்டும் உடைய காப்பே வாழ்வை நீடூழி வாழவைக்கும். கோழைத்தனமும் பலவீனமும் உள்ள பக்தி நாத்திகவாதத்துக்குத் துணைபோகும். முரட்டுத்தனமும் பிடிவாதமும் உடைய வீரம் அறிவை மழுங்கச் செய்து விடும்.

இக்காலத்தில் விவேகமுள்ள வீரமும் கருணை நிறைந்த பக்திக் காப்பும் வேண்டும். பக்தியும் வீரமும் தடுமாறும்போது ஏற்படும் சூழ்நிலை தான் தற்காலம். முரட்டுத்தனமும் விதண்டாவாதமும் நிறைந்த சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம்.

நாத்திகம் - ஆத்திகம் இரண்டும் ஒரு முன் எழுத்து மாற்றத்தால் விளங்குகிறது. ஒன்று தாழும் போது மற்றது சிலிர்த்து எழுந்து கவலைப்படுத்தி விடுகிறது. எனவே (வீரம் + கருணை நிறைந்த உறுதி) (பத்திரம் + கருணை நிறைந்த பக்தி) இவை இரண்டையும் அளிக்க வீர + பத்திரர் நமக்குத் துணையாக இருப்பார்.

## திருப்பெருந்துறையில் உள்ள ஆவுடையார் கோவில்

*ஆயிரக்கால் (அறுபதுகால்) மண்டபத்துக்கு உள்ளே போனால் வாயிலின் இருபுறமும் இரண்டு வீரபத்திரரைக் காணலாம். இவ்விருவரும் தக்க யாகத்தை அழித்தவர்கள். இவர்களுடைய கோபத்தின் கொடூரத்தை இவர்களின் விழிகளும் புருவங்களும் மீசையும் வெளிப்படுத்துகின்றன. இவ்விருவரில் கிழக்குப் புறத்தில் இருப்பவர் உக்கிர வீரபத்திரர்., இவர் எதையும் பொருட்படுத்தாமல் நிமிர்ந்து நிற்கிறார். இவருக்கு எட்டுக் கைகள் உள்ளன. தலையின் வலப்பக்கத்திலிருந்து காலின் இடப்பக்கம் வரை ஒரு நீளமான சூலம் குறுக்காகக் கீழ்நோக்கி வந்து கீழே கிடக்கும் எச்சனின் கழுத்தில் குத்தியபடி காணப்படுகிறது. நீண்ட அந்த சூலத்தின் அடிப்பகுதியை வலக்கையாலும் நடுப்பகுதியை இடக்கையாலும் பிடித்துக் கொண்டு இவர் நிற்கிறார். மற்ற ஆறு கைகளில் வலப்பக்கத்தில் தமருகம், கத்தி, வேதாளம் என்பவற்றையும் இடப்பக்கத்தில் கபாலம், கேடகம், மணி என்பவற்றையும் ஏந்தியிருக்கிறார். தலையில் அக்கினிக் கொழுந்துகள் காணப்படுகின்றன. மற்றொருவர் தட்ச சிரச்சேத வீரபத்திரர் ஆவார். இவர் மேற்குப் புறத்தில் நிற்கிறார். இவருக்குப் பத்துக் கைகள் உள்ளன. தட்சனைப் பிடித்து இடது துடையில் கிடத்தி இடது கை ஒன்றால் அவன் தலையைப் பிடித்திருக்கிறார். வலது கை ஒன்றில் வாள் ஏந்தித் தட்சனின் தலையை அறுக்கிறார். மற்ற கைகளில் வலப்பக்கத்தில் அம்பும், பரசும், சூலமும், கட்கமும் ஏந்தி இடப்பக்கத்தில் வில்லும் மானும், தமருகமும், கேடகமும் ஏந்திக் காட்சித் தருகிறார்.*

*- நன்றி:திருப்பெருந்துறை தலவரலாறு*

# ஆன்மவியல் ரீதியாக வீரபத்திரர்

## ("வேள்வியை அழித்த வீரபத்திரர்")

சேது. முருகபூபதி, புதுச்சேரி

பராபரவஸ்து

| | |
|---|---|
| பராபரம் | பராபரை |
| ↓ | ↓ |
| பரம் | பரை |
| ↓ | ↓ |
| பராபரசிவம் | பராசக்தி |
| ↓ | ↓ |
| நிட்கள சிவம் | ஆதிசக்தி |
| ↓ | ↓ |
| சிவம் | சக்தி |
| ↓ | ↓ |
| நாதம் | விந்து |
| ↓ | ↓ |
| நாதவிந்து | விந்து நாதம் |
| ↓ | ↓ |
| சுத்தவித்தை | சுத்தமாயை |



என்னும் குடிலை

↓

| | | |
|---|---|---|
| அ | உ | ம |
| ↓ | ↓ | ↓ |
| சிவம் | சக்தி | மாயை |
| ↓ | ↓ | ↓ |
| ஞானம் | கிரியை | இச்சை என்ற அசுத்தமாயை |

- அ → சிவம் → ஞானம் → ஞானம் = கிரியை
  - சதாசிவம் = மனோன்மணி
- உ → சக்தி → கிரியை
  - கிரியை = ஞானம் → மகேஸ்வரன் = மகேஸ்வரி
    - மகாவிஷ்ணு = மகாலக்ஷ்மி
    - பிரம்மா = சரஸ்வதி
  - ஞானம் = கிரியை → ருத்ரன் = ரௌத்திரி
- ம → மாயை → இச்சை என்ற அசுத்தமாயை → மான் → தன் மாத்திரை → பூதங்கள் → பிரபஞ்சம் என்னும் சேறு → அதில்பூத்த உலகங்கள் என்னும் பூக்கள்

பிரபஞ்சத்தைப் படைத்த விவரத்தையும் அதனால் ஏற்பட்ட விளைவையும் திருமூலர், தான்பாடிய திருமந்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“*பாழே முதலாஎழும் அப்பயிர் அவ்விடம்*
*பாழே யாகினும் பண்டைப் பாழ்,ஆகாம்*
*வாழாச் சங்காரத்தின், அயன்மால் செய்தியாய்*
*பாழே யாகினும், அப்பயிர் அடங்கும்அப்பாழிலே*”
என்றார்.

பராபரசிவமாய் இருந்து பராசக்தியோடு கூடிக் காத்தல், படைத்தல், மறைத்தல், அழித்தல், அருளுதல் என்ற ஐந்து வகைத் தொழில்களைச் செய்யப் பரசிவமானது, நிட்களசிவமாய் அருவ நிலையாய் வடிவம் பெறும் போது, பாழ்ப்பட்ட பராபரசிவம், மீண்டும், பரசிவமாக, ஆகமுடியாது. எப்பொழுது, பாழ்ப்பட்ட சிவம், பரசிவமாக மாறும் என்றால் நாலுவித சங்காரங்களைச் சந்தித்து, பின்பு அயன், மால், செய்யும் கடமைகளுக்குள் நின்று பாழ்ப்பட்ட பின்பு, ஆன்மப் பயிராகித் தனித்து இருக்கும்போது அதனை ஆணவம் மேவக் கன்மங்களை நுகர்ந்து, அனுபவித்து, ஆணவ வலிமை குன்றத் தான் இழந்த இறையாண்மை என்ற பரசிவத்துள் ஒடுங்கும் என்கிறார் திருமூலர்.

“வாழாச் சங்காரத்தின் அயன்-மால்” செய்தி என்பது, யுகமுடிவில், சங்காரம் செய்ததும் ஆன்மாக்கள் ஓய்வடையும். வினைநீக்கம் பெறவில்லையென்றால், அவை தத்தமது, வினைபோகங்களை அனுபவிக்கக் காக்கப்பட்டும், பிரமன் கைப்பட்டுப் பிறக்கும். இப்படிப் பிறந்தவன்தான் தக்கன் என்னும் ஆன்மப்பயிர்! உலகாயுதரீதியாகச் சொல்லும் போது

பிரம்மா
↓
சுவயம்பு மனு
=
சதரூபை
↓

பிரியவிரதன் | உத்தானபாதன | ஆவுதி | தேவுதி | ஆவுதி | பிரவுதி = தக்ஷக்ஷப்பிரஜாபதி என்னும் தக்கன்

பிரவூதி
=
தக்ஷக்ஷப்பிரஜாபதி மகள்
↓
சதி
=
சிவபெருமான் (ருத்ரன்)

ஆகமரீதியில் திருமூலர்

*"அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்*
*குலந்தரும் கீழங்கி கோளுற நோக்கிச்*
*சிவந்த பரமிது சென்று கதுவ*
*உவந்த பெருவழி யோடி வந்தானே"*

என்று திருமந்திரத்தில் கூறினார். எப்பொழுதும், இதுபோன்ற யாகத்தில், எல்லா அதிதேவதைகளையும், அயன், மால், அரன், எல்லோரையும் கனல்தலத்தில் வளரும் நெருப்பு வடிவில் வரவழைத்து அவரவருக்குரிய உயிருணவு என்ற பரிபாகம்பட்ட ஆன்மாக்களை, அவிர்பாகமாய்க் கொடுத்துத் தீவண்ணனான சிவபெருமானை எண்ணி வழிபட, இறைவன் மகிழ்ச்சியுடன் வெளிப் படுவான். இதுதான் எப்பொழுதும் எந்த வேள்வியினும் நடப்பது. ஆனால், இதற்கு மாறாகத் தக்கன் என்ற ஆன்மா மூலாதாரம் என்ற யாககுண்டத்தில், இறைவனை நினையாமல், நெருப்பு வடிவாய் உள்ள அந்தச் சிவனையே மறந்து, அந்தத் தீவண்ணம், மேல்நோக்கிச் சென்றதனால் அதுபர வெளியைச் சென்று அடைய, அந்த யாகத் தீயில் இருந்த இறைவனை மறந்த ஆன்மா என்ற தக்கனை அழிக்கும் ஜ்வாலையாக, வீரபத்திரன் எனத் தோன்றி அவனை அழித்தார். தக்கனை எந்தச் சிவம் அழித்ததோ அதே சிவம் தக்கனுக்கு அருளவும் செய்தது. இது யோகமார்க்கத்தில் பிறந்த உண்மை. யோகமார்க்கத்தில் பின்வருமாறு கூறுவார்கள்.




குறிப்பு

குண்டலினிசக்தியைப் பிரமரந்தரத்தில் உள்ள நாதத்தோடு சேர்த்தால் இறைவன் வெளிப்படுவான். இறைவனை மறந்து நாதத்தோடு குண்டலினியைச் சேர்த்தால், அதே இறைவன் அழிக்கும் சக்தியாய்த் தோன்றுவான். இதுதான் தக்கயாகத்தின் உண்மை.

இதையே கிரியையரீதியாக அருணகிரியார் திருப்புகழில் பாடினார். அதிலிருந்த ஒரேஒரு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன். இது காஞ்சிபுரத் திருப்புகழ்.

*“கதிபொருந்தக் கற்பித்து நடத்துங்*
*கனல்தலம் புக்குச் சக்ர மெகுக்குங்*
*கடவுளும், பத்மத்தச்சனு முட்கும் படிமோதிக்*
*கதிரவன் பற்குற் றிக்குயி லைத்திண்*
*சிறகரிந் தெடுத்துத் திக்கவர் குக்குங்*
*கடகமுற் றட்டுப்பட் டொழியக் கோன் றபிராமி*
*பதிவ்ரதம் பற்றப் மகப்பெண்*
*பரிவொழிந் தக்கிக்குட்படு தக்கன்*
*பரிபவம் பட்டுக் கட்டொழி யத்தன் செவியோய்ப்*
*பனவபங்கப் பட்டப்படிவெட்டும்*
*படிமுனிந்தற்றைக் கொற்றம் விளைக்கும்*
*புராரி வந்திக்கக் கச்சியில் நிற்கும் பெருமாளே”*

தான் வளர்க்கும், யாகத்தில் உள்ள, யாக நெருப்பாக உள்ளவரே, அந்தச் சிவபெருமான் என்னும் சிந்தனை இல்லாத பித்துப்பிடித்த தக்கன் தான் நடத்தும் யாகத்திலிருந்து, தோன்றியதும் அந்தச் சிவம்தான் என்பதையும் மறந்து, மதிக்க வேண்டியவர்களை, மதிக்காமல், அவமானப் படுத்தப்படவேண்டும் என்பதையே நோக்கமாய்க் கொண்டான். தக்கனால் வேள்விக்கனல் எழுப்பப்பட்டுள்ள அக்கினிக் குண்டங்கள் உள்ள யாகசாலையில், நுழைந்து அங்கு இருந்த திருமாலையும், பிரமனையும் பயப்படுத்தும்படி தாக்கியும் ஒரு சூரியனின் பற்களைக் குத்தி உடைத்தும், இன்னொரு சூரியனின் கண்களைப் பிடுங்கியும், குயிலாக மாறிப்பறக்க இருந்த இந்திரனின் சிறகை வெட்டியும், அட்டதிக்குப் பாலகர்களின் தலைமையில் நிறுத்தப்பட்டிருந்த சேனைகளையும் அந்த அட்டதிக்குப் பாலகர்களையும் அழித்தும், தன்னைத் தக்கன் இகழ்ந்தான் என்ற கவலை கொண்ட உமையவளின் கவலையை நீக்கியும், கலைமகளின் மூக்கை அறுத்தும், அவள் வெட்கி நடுங்கும்படி செய்து அன்றைய தினத்தில் வெற்றியோடு விளங்கிய, பரமரான சிவபெருமான் வணங்கிய முருகப்பெருமான் என்று அருணகிரியார் பாடுகிறார்.

அப்படியென்றால் வீரபத்திரஸ்வாமி, என்பவர் யார்? தக்கன் என்பவன் யார்? யாகம் என்பது என்ன? இங்கே, தக்கன் என்ற ஆன்மா, தனக்கும் மேலே இறைவன் ஒருவன் உண்டு என்பதை உணராமலும், மதிக்காமலும், மறந்தும், உரியதைத் தராமலும், வேள்விகளின் துணைக்கொண்டு, இடைகலை, பிங்கலை துணைக்கொண்டு, வேள்வியில் நிலை நிறுத்தியதனால், வெளிப்பட்ட இறை ஆற்றல், தண்டிக்கும் ஆற்றலாய் எச்சரிக்கையாக வெளிப்பட்டு அழித்தது. தக்கன் என்ற ஆன்மா செய்த தவறு என்ன என்றால், இறைவனை மறந்ததுதான். இப்படித் தக்கன் என்ற ஆன்மா இறைவனை மறக்கச் செய்ததும், இறையருள்தான். இறைவன் இந்த மறதியை ஆன்மா என்ற தக்கனுக்குக் கொடுத்தது கூட பிராரர்த்த கன்மத்தை நுகர்வதற்காகத்தான். அதாவது இந்த மறதியின் துணைக்கொண்டு பிராரர்த்த கன்மங்களைத் தக்கன் அனுபவித்தான். இப்படிப் பிராரர்த்த கன்மங்களை, அநுபவிக்கப்பதற்காகக் கொடுத்த “மறைத்தல்” என்ற தன்மையின் உண்மை புரியாமல், எந்த நேரத்திலும், மறக்கவே முடியாத-மறக்கக் கூடாத பொருளான, இறைவனை, அழைத்து நன்மை பெறும் யாகக்கனலின் உரிமையாளனான, இறைவனையே அழைத்து உரிய அவிர்பாகம்தராமல், அவமதிப்பது என்ற பித்தான செய்கையைச் செய்ததனால், இறைவனின் அருளைப்பெறத் தகுதி இல்லாமல், அழிவுக்குரிய பொருளாகத் தக்கன் என்ற ஆன்மா ஆனது என்று, உணர்வை எச்சரிக்கும் வகையில் வந்த வடிவம்தான் வீரபத்திரஸ்வாமி.

இறைவனை நினைத்து வழிபட்டிருந்தால், வெளிப்பட்ட இறைவனிடமிருந்து தக்கன் நல்லதைப் பெற்று இருப்பான். அதை மறந்து விட்டதால், வெளிப்பட்ட இறையருள், தக்கனைத் தண்டித்தது. இறைவனை மறந்து, வழிபட்டால் தீமையே விளையும். நன்மை விளையாது என்ற உண்மையை, மற்ற உயிர் இனங்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதனால் இந்தத் தக்கன் - வேள்வியில், சிவபெருமான் எச்சரிக்கைப் பொருளாக வெளிப்பட்டுத் தண்டித்தார் என்ற ஆன்மீகக் கருத்தை அறிவியல் ரீதியாக நாம் புரிந்து கொள்ளமுடிகிறது. கர்மாவினால் பல துன்பங்களை அனுபவிக்கும் காலத்து, இறைவனே சிலவற்றை மறைப்பது உண்டு. ஏன்? கர்ம பலன்களை அனுபவித்து, வினைநீக்கம் பெற இந்த உண்மை அறியாமல், துன்பத்தின் கொடுமையோ, ஆணவத்தின் வன்மையோ அதிகமாகும்போது சிலர் பலவாறு இறைவனை நிந்திப்பது உண்டு. இந்தக் "கடவுளுக்குக் கண் இல்லை", "கடவுளே இல்லை" என்று பேசியும், சிலவேளைகளில் ஆணவமிகுதியால் - அதிகார துஷ்பிரயோகத்தால் - கடவுளை மறந்து சிலர் செயற்படுகின்றனர். எந்த நோக்கத்திற்காக, இறைவன் தன்னை மறைத்தானோ அப்படி மறைத்த இறைவனையே மறப்பது என்பதுதான் தக்கன் செய்த தவறு. இந்த மறதியிலிருந்து மீண்டு வந்த தக்கன், இறைவனை வழிபட்டுத் தான் இழந்த இறையாண்மையை மீண்டும் பெற்றான். ஆக மறைத்தல் என்பது வேறு! மறப்பது என்பது வேறு! மறைத்தல், ஆன்ம நன்மைக்காக இறைவன் செய்வது! மறப்பது என்பது ஆன்மா செய்யும் தவறு, ஆக, மறைத்தல் வயப்பட்டு ஆன்மா இன்ப-துன்பங்களை அனுபவித்துத் தன்னுடைய பிரார்த்த துன்பத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். இந்த மறைத்தல் தன்மையின் உண்மையை மறந்து, நிந்திக்கச் செய்யும் யாகத்தின் பயன், எவன் அந்த யாகத்தைச் செய்தானோ அவனே தண்டிக்கப்பட வேண்டியவனாவான். இந்த எச்சரிக்கையை நமக்கு சுட்டிக்காண்பிப்பது வீரபத்திர ஸ்வாமிகளின் அவதாரமாகும்! எத்தகைய நிலையிலும், ஆன்மா தன் இன்ப துன்பங்களை, அனுபவிக்கும்போது இறைவன் தன்னை மறைத்துக் கொள்வது ஆன்மாக்களுக்குச் செய்யும் நன்மைக்காக என்பதை ஆன்மா புரிந்து கொள்ளவேண்டும். மறைத்து நிற்கும் இறைவனை, மறப்பது என்பது மன்னிக்கமுடியாத குற்றம் என்பதனால், தக்கனின் யாகம் அழிக்கப் பட்டது. "பத்திரம்" என்ற சொல்லுக்கு எச்சரிக்கையின் வடிவம் என்று பொருள். வீர என்ற சொல்லுக்குச் "சேவகன்" என்று பொருள்! இப்பொழுது எண்ணிப்பாருங்கள், வீரபத்திரர் என்பது யார் என்று தெரியும்.

இந்த, ஞானச் செய்தியை எல்லா அறிவினத்தவரும் புரிந்து கொள்ள முடியாது என்பதனால், எதை எப்படிச் சொன்னால் எளிய அறிவுடைய மற்ற சாமான்ய மக்களும் எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்பதற்காக மனித சரீரத்தில் ஏற்றிச் சொல்லும் பழக்கம் காலங்காலமாய் இருக்கிறது. எப்படி, மானைக் காட்டி மானைப் பிடிக்கிறார்களோ அதுபோல, அருவநிலையில் உள்ள ஞான-யோகச் செய்தியைச் சரியை ரீதியாகச் சொல்ல, சிவ ஆலயங்களில், இறைவனின் அம்சமாக, உள்ள சிவன், எச்சரிக்கை செய்து, அழிக்கும் தெய்வமாய்க் காட்ட வேண்டும் என்றால் அதற்கென்ற ஓர் அகோர வடிவம் தந்து, சிலையாய் வடித்தால் அது மக்களைக்கவரும். சிலைவடிவில் பார்க்கும்போது சொல்லக்கூடிய பதில் ஒன்றுதான். இறைவனை நினைக்க வில்லை என்றும், இறைவனை மறந்தான் என்றும், மதிக்கவில்லை என்றும்,

அவமதித்தான் என்றும் உணரும் ஆன்மீக அறிவியல் உண்மையை மக்களிடத்தில் கொண்டு சேர்த்துள்ளது என்பதில் ஐயம் இல்லை. ஆக, இறைவனை மறந்து, சடங்குகளில் மட்டும் நம்பிக்கை வைப்பவன் அழிக்கப்பட வேண்டியவன் என்ற உண்மையை இந்த வீரபத்திரசாமி தோற்றம் விளக்குகிறது. இதிலிருந்து ஓர் உண்மை தெரிகிறது! அது என்னவென்றால், ஆண்டவனை மறந்து, சத்தியத்திற்கு விரோதமாய்ச் சாமர்த்தியத்தை நம்புவனுக்கு அழிவு நிச்சயம் என்பதுதான், இது அறிவியல் ரீதியாக நாம் கண்டு கொள்ளும் உண்மை! மேலும், தெய்வீகத்தை மறந்து, தெய்வத்தின் பெயரால் சண்டையிட்டு, உலக அமைதியைக் குலைக்கும் மதவாதத்தை அழிக்க, எச்சரிக்கைச் சேவகனாய், வந்தவர் வீரபத்திரர். ஒழுக்கம் என்னும் உண்மை செயற்படும் என்பதை மறந்து விடாதீர்கள் என்பதை நினைவுபடுத்தும் சம்பவந்தான் வீரபத்திரரின் தோற்றம்! ❑

## காஞ்சிபுராணம் திருத்தல விளக்கம்

**தக்கேசம்**

வேள்வி நாயகனான சிவபிரானை மதியாது வேள்வி வடிவினராம் திருமால் முதலியோரைக் கொண்டு ஒரு வேள்வியைத் தொடங்கினான் தக்கன். உமையம்மையார் காணச் சென்று பழித்த தந்தையாகிய தக்கன் யாகம் பாழ்படச் சாபமிட்டுக் கயிலையை அடைந்தவழிச் சிவபிரான் தன் கூற்றில் வீரபத்திரரையும் அம்மையார் தன் கூற்றில் காளியையும் தோற்றுவித்து வேள்வியை அழிக்குமாறு செலுத்தப் பூதகணங்களுடன் போய்த் ததீசி முனிவர் தன் மொழியைக் கேளாத தக்கனையும் அவையையும் நோக்கிச் சிவபிரானுக்குரிய அவியைக் கொடுக்குமாறு தூண்டினார்.

மறுத்தமையால் பூதகணங்களைக் காவற்படுத்திய வீரபத்திரர் உள்ளே புகுந்து சூரியர் கண்களைப் பறித்தும் பற்களைத் தகர்த்தும் சந்திரனைக் காலாற்றேய்த்தும் அக்கினியின் கையையும் நாவையும் துண்டுபடுத்தியும் ஏனைத்தேவரையும் பொருந்திய தண்டங்களைச் செய்தும் செய்வித்தும் நிறுத்தினார்.

உடன் சென்ற காளியும் சரசுவதியின் கொங்கையையும், மூக்கையும் அரிந்தும் பெண்டிர் பிறரைத் தண்டித்தும் நின்றனள். அந்நிலையில் காக்கநின்ற திருமால் விடுத்த சக்கரப் படையை வீரபத்திரர் அணிந்திருந்த தலைமாலையுள் ஓர் தலை விழுங்கியது. இவ்வாறாகப் பெருமானார் அம்மையோடும் விடைமேற்றோன்றி போற்றி அடைக்கலம் புக்க விண்ணோரைக் காத்து அருள் புரிந்தனர். தக்கனை ஆட்டுத் தலையைப் பொருத்தி உயிர் பெறச் செய்தார் பிரானார்.

பெருமான், திருமால் முதலான விண்ணோரை நோக்கித் தக்கன் யாகத்திற் பங்கு கொண்ட பாவந்தீர எம்மைப் பூசனை புரிவீராக; புரியுங்காறும் சூரபதுமன் முதலாக அவுணர் நுமக்குப் பகைவராய் நலிவு செய்வர் என அருளித் திருவுருக் கரந்தனர். தக்கன் தன் மக்கள் பூசனை புரிந்த அச்சூழலை அடுத்துச் சிவலிங்கம் தாபித்துப் பூசனை புரிந்து சிவகணத் தலைமை பெற்றனன். பூசனையை மறந்த விண்ணோர் சூரபதுமன் ஆட்சியில் துன்பக் கடலில் மூழ்கினர். பிரமனால் அறிந்த விண்ணோர் யாவரும் சிவபூசனை புரிந்து அச்சூரன் முதலானோரை முருகப் பெருமான் தொலைவு செய்தமையால் மகிழ்ந்து வாழ்ந்தனர். "தக்கேசம்" என்னும் இத்தலம் பிள்ளையார்பாளையம் கச்சியப்பன் தெருவில் உள்ளது.

*- நன்றி: காஞ்சிபுராணம்*

*With Best Compliments from*

# *Aalayam of Textiles*

P

**POTHYS**

***Silk Sarees • Mill Goods • Readymades***

Usman Road, Panagal Park, T.Nagar, Chennai - 600 017.
Ph : 431 0901 Web: www.pothys.com

*With Best Wishes From:*

# B.S.S. HOSPITAL

***200, R.K. Mutt Road,***
***Mandavali***
***Chennai 600 028***
***Ph. No. 4939323 ; 4939797***

# வாழ்வியல் வீரபத்திரர்

திருமதி வாசுகி கண்ணப்பன்

"எங்கள் தெய்வமாம் திருவானைக்கா உறையும் வீரபத்திர சுவாமியே
என்இரு கரம்கூப்பி உம் இருதாள் பணிந்தேனே
எடுக்கும் நற்செயல்க ளெல்லாம் வெற்றி பெற வாழ்த்திடுவாயே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வாழ்த்திடுவாயே"



அருள்மிகு வீரபத்திரர்

**முன்னுரை**

ஆதி அந்தமில்லாப் பரவெளியில் நிறைந்து நிற்கும் உண்மை, உயர் சக்தியைத்தான் - உலகத்தை இயக்கிவரும் உன்னத சக்தியைத்தான் - அந்தரத்தில் அண்டங்களை ஆட்டிவைக்கும் அபூர்வ சக்தியைத்தான் - மரம், செடி, கொடி கரியமிலவாயுவை உட்கொண்டு, பிராண வாயுவை வெளியிட, மனிதன், மிருகம் பிராணவாயுவை உட்கொண்டு கரியமில வாயுவை வெளியிட்டுச் சுழற்சியைத் தந்திடும் சக்தியைத்தான் - உயிர்களை உய்வித்து வாழவைக்கும் ஒப்புவமை இல்லாச் சக்தியைத்தான் - எல்லாம் வல்ல இறைவன் என்று அழைக்கின்றோம். நம் சைவ சமயத்தில் இத்தகைய உயர் பரம்பொருளைச் "சிவாய நம" என்ற ஐந்தெழுத்து மந்திரத்தில் அடங்கிய ஆதிமூலவனை, ஆதிசிவன் என்று அழைக்கின்றோம்.

நமது சமயம்தான் இயற்கையோடு, நல் வாழ்க்கையோடு ஒட்டிய சமயமாகும். இயற்கையான வாழ்க்கை முறையையும், வாழ வேண்டிய நெறிமுறைகளையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூறுவது நமது சமயமாகும். நம் மானுட வாழ்க்கையைப் போன்று குடும்பமாக இறைமை நிலை அமைக்கப்பெற்றுள்ளது. கணவனும் மனைவியும் எப்படி இருக்கவேண்டும். பிள்ளைகள் எப்படி இருக்கவேண்டும். எப்படி ஒருவரை ஒருவர் சார்ந்து வாழவேண்டும் என்ற வாழ்க்கை அடிப்படைத் தத்துவங்களை மிக எளிமையாகக் கூறுகின்றது. உண்மையும் நேர்மையும் வாழ்க்கை என்ற வண்டியின் இரு சக்கரங்களாகும். இவை சரியாக இருக்கும்போது வண்டியும் ஒழுங்காக, உயர்வாக, நிறைவாக ஓடும். அப்பொழுதுதான் உயிர்ப்பிணி நீங்கி வீடுபேறு அடையமுடியும். அதேசமயம்

தவறுக்குத் தண்டனை உண்டு என்று உறுதியாகச் சொல்வதும் நம் சமயம்தான். நல்வினை செய்யின் நன்மையும், தீவினை செய்யின் துன்பமும் ஏற்படும் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றது. இதைத்தான் "தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்றும் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்றும் பழமொழிகளும் வலியுறுத்து கின்றன.

இப்படிப்பட்ட தத்துவங்களைத் தெரிவிப்பதுதான் நமது புராணங்கள். இதிகாசங்களும் இவற்றையே அறிவிக்கின்றன. அந்த வகையில் உலகம் உய்யும் பொருட்டு-படிப்பினையாக அமையும் பொருட்டு-ஆதிசிவன் பலப்பல லீலைகள் புரிந்துள்ளார். அதனை வகைப்படுத்தி, மக்கள் மனதில் நிலைப்படுத்த அட்டவீரட்டம் என்று சிலவற்றை வகைப்படுத்தியுள்ளனர். இதனைத் திருநாவுக்கரசர் அடைவுத் திருத்தாண்டகத்தில்

*காவிரியின் கரைக்கண்டி வீரட் டானங்*
*கடவூர்வீ ரட்டானங் காமருசீ ரதிகை*
*மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்*
*வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்*
*கோவல்நகர் வீரட்டங் குறுக்கைவீ ரட்டங்*
*கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி*
*நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்*
*நமன்தமருஞ் சிவன்தமரென் றகல்வர் நன்கே"*

என்று அழகாகப் பாடியுள்ளதிலிருந்து அறியலாம். இந்த எட்டினில், ஆறில் சிவனே நேரடியாக அதர்மத்தை அழித்து, ஆட்கொள்ளவும் செய்தார். மற்ற இரண்டில் அவரின் அருள் தோற்றத்தின் வடிவமாகச் சிவனால் படைக்கப்பட்ட, வீரபத்திரரும் பைரவரும் தர்மத்தை நிலைநிறுத்தியுள்ளனர். அரசனாகயிருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் தவறுக்கேற்ற தண்டனை நிச்சயம் என்பதையும் தடுத்தாட்கொள்ளும் உன்னதத் தன்மைதான் தெய்வீகம் என்பதையும் உணரலாம். அதனால்தான், "அன்பே சிவம்" என்று கூறுகின்றோம். இதனைத் திருமூலர்,

*"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது யாவரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது யாவரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாக அமர்ந்திருந் தாரே"*

என்ற பாடல் மூலம் உணர்த்துகின்றார். அப்படிப்பட்ட "அன்பே சிவம்" என்ற சிவனின் மறுதோற்றமான வீரபத்திரரைப் பற்றிய ஆராய்ச்சியே இந்தக் கருத்தரங்கின் நோக்கம். பொதுவாக வீரபத்திரர் சிலையின் சிரசில் லிங்கம் இருப்பதன் மூலம், வீரபத்திரர் சிவனின் அம்சம் என்பதை நாம் அறியலாம். குறிப்பாக எங்கள் குல தெய்வத்தின் சிரசில் ஒரு முழுமுகமே இருப்பதைக் காணலாம். ஆகவே வீரபத்திரர் சாட்சாத் சிவன்தான் என்பதைப் பூரணமாக உணரலாம்.

இவரின் ஆன்மீகக் கொள்கைகள், அறிவியல் சார்ந்த கொள்கைகள் என்பதைக் கூறுவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கமும் ஆகும்.

இப்படிப்பட்ட அருள்மிகு வீர பத்திரரைப்பற்றிய செய்திகள் வேதத்தில் உள்ளன. தட்ச சங்காரம், மகாபாரதம், புராணங்கள் எனத் தொன்மை நூல்களிலும் இருக்கின்றன. மகாஸ்கந்தம், சிவமகா புராணம், பாகவதம், காசிக்காண்டம், தக்கயாகப் பரணி, திருக்குற்றாலப்புராணம், காஞ்சிப்புராணம், பறியலூர்ப் புராணம், குமாரசம்பவம் ஆகியவற்றிலும் காணப் படுகின்றன. அங்காள பரமேஸ்வரியைப் புகழும் தட்சயாகப் பங்கத்தில், சிவ பெருமானைப் போற்றும் தட்ச சம்ஹாரத்திலும் இதைக் காணலாம். இனி வீரபத்திரரின் உண்மையான, அறிவார்ந்த நிலையைப் பற்றிச் சிந்திப்போம்.

## வீரபத்திரர் என்ற பெயரின் பெருமை

"வீரபத்திரர்" என்ற சொல்லிலேயே. - திருப்பெயரிலேயே-இத்தெய்வத்தின் சொரூபம் செறிந்து கிடக்கின்றது. வீரம் + பத்திரர் - வீரபத்திரர். வாழ்க்கையில் நாம் எப்படி வாழ வேண்டும்? வீரமுடன் வாழ வேண்டும். விவேகமான, நேர்மையான வீரமோடு வாழ வேண்டும். மன உறுதிப் பாட்டுடன் கூடிய தைரியத்துடன வாழ வேண்டும். நீதிக்குப் பங்கமென்றால் சிலிர்த்தெழும் உண்மை வீரம் வேண்டும். அப்படிப்பட்ட வீரம் இருக்குமாயின் நீதி பத்திரமாகப் பாதுகாக்கப்படும். நீதிமான்கள் பத்திரமாகப் பாதுகாக்கப் படுவார்கள். அதன்வழி வாழ்க்கையும் பத்திரமாகப் பாதுகாப்பாக வழி நடத்தப்படும் என்பதைத் தன் திருப்பெயராலேயே உணர்த்துகின்றார் வீரபத்திரர். அதுமட்டு மல்ல, அவர் படைப்புக்குக் காரணமான, வீரவரலாறும் அதைத்தான் உணர்த்துகின்றது. தட்சனின், தான் என்ற கர்வத்தை அடக்க வீரபத்திரராகத் தோன்றினார். நரசிம்மரைச் சாந்தப்படுத்த சரபேசுவரரானார். இப்படி அவருடைய திருவிளையாடல்கள் பலப்பல. அப்படிப் பட்ட அவரை நாம் வணங்கினால், நமக்கு ஏற்படும் அநீதிகளுக்காக வீரத்துடன் போரிட்டுப் பத்திரமாக நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை நாமும் பெறுவோம் என்பது உறுதி. அத்தகைய தெய்வம் தான் திருவானைக்கா உறையும் எங்கள் அருள்மிகு வீரபத்திரசுவாமி.

## வீரபத்திரரின் யந்திர பதுமப் பீடப் பெருமை

வீரபத்திரர் யந்திரத்தில் ஆயிரம் எழுத்துகள் இடம் பெறுகின்றன. ஆயிரம் இதழ் கொண்ட தாமரையை வரைந்து, அதில் ஆயிரம் அட்சரங்களை முறைப்படி எழுதுவதுடன் மையப்பொகுட்டில் அறுகோணம் அமைத்து, அதனுள் வீரபத்திரரின் மூல மந்திரத்தை எழுதுகின்றனர். உரிய மந்திரங்களால் அர்ச்சனை செய்து, வன்னி சுமித்தால் மூலமந்திரத்தைக் கொண்டு ஹோமம் செய்தல் நல்லது என்று கூறப்படுகின்றது. செல்வமும் பெருகும் என்பது அனுபவ உண்மையாகும். இப்படி உருவில் பெரிய தாகவும், அட்சர எண்ணிக்கையில் அதிகம் கொண்டதாகவும் உள்ள யந்திரம் வேறு தெய்வங்களுக்கு இல்லை என்று சிவ மஞ்சரியின் 35வது மலரில் காணலாம். இப்பதும வெள்ளிப்பீடம் கொண்ட கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள வீரபத்திர சுவாமி புகைப்படம் இதனை உறுதி செய்கின்றது. *(புகைப்படம் நன்றி: திரு ஹரிகிருஷ்ணன்.)*

## வீரபத்திரரின் உடையின் உன்னத நிறம்

வீரபத்திரரின் உடையின் நிறம்



*வீரபத்திரர், சென்னை*

தூய்மையான வெண்மை நிறம். வெண்மை நிறம் எதற்கு அடையாளம்? தூய மனத்திற்கு அடையாளம். நல்ல, உயர்ந்த, உண்மையான எண்ணத்திற்கு அடையாளம். உறுதியான நெஞ்சுரத்துடன், எடுத்த காரியத்தை முடிக்கும் வைராக்யத்துடன், வாழவேண்டும் என்பதை உடையின் நிறத்தாலேயே நமக்கு உணர்த்துகின்றார் அவர். சேவை மனப்பான்மை மிக்க மருத்துவர்களுக்கும், செவிலியர் களுக்கும் அதனால்தானே வெண்மை நிறத்தில் உடையை வைத்துள்ளார்கள். அத்தகைய வாழ்க்கையைப் பெற்றுவிட்டால், வாழ்விலும் வெற்றி, சிவபதவி அடைவதிலும் வெற்றி என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை.

### வீரபத்திரர் விரும்பும் மலர்

பழந்தமிழர்கள் போர்புரிவதை மிகவும் சிறப்புடன் போற்றிக் கலையாக மதித்துக் காப்பாற்றி வந்தனர். ஒவ்வொரு விதமான போருக்கும் ஒவ்வொரு வகையான பூமாலை அணிந்து செல்வதை மரபாகக் கொண்டிருந்தனர். உதாரணமாகப் பகைவரின் பசுக் கூட்டத்தைக் கவர - வெட்சிப் பூமாலை. கவரப்பட்ட பசுவை மீட்க - கரந்தைப் பூமாலை. அஞ்சாத அதிரடிப்போர் புரிய வெற்றிச் சின்னமாக - தும்பைப் பூமாலை. இப்படிப்பட்ட பெருமை மிக்க தும்பைப் பூமாலையை வீரபத்திரர் அணிந்திருந்தார் என்பதுதான் நாம் அறியும் செய்தி ஆகும். இதிலிருந்து நாம் அறிவது என்ன வென்றால், நாம் போர்க்கலையிலும் சிறந்து விளங்கி, எதிரிகளின் தாக்குதலை எதிர்த்துப் போராடும் சக்தியினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

### வீரபத்திரருக்கு உகந்த வெற்றிலை

வீரபத்திரருக்கு வெற்றிலை மாலை சாற்றுதல், வெற்றிலைப்படல் சாற்றுதல் ஆகியவை மிக மிக விஷேசமான ஒன்றாகும். இதிலும் அறிவியல் பூர்வமான கருத்துகள் பொதிந்து கிடக்கின்றன. போருக்குச் செல்லும் வீரர்களுக்கு மனைவி, மக்கள், உற்றார், உறவினர் ஆகியோர், மங்கல வெற்றிலை, பாக்கு கொடுத்து வெற்றி வாகை சூடி வருக என்று வாழ்த்தி அனுப்புவர். ஏனெனில் வெற்றிலை வெற்றிக்குரிய அடையாளச் சின்னமாகும். வெற்றிலை என்ற பெயரிலேயே அதன் பெயர் பொருத்தம் அடங்கிக் கிடக்கின்றது. வெற்றியைத்தரும் இலை வெற்றிலை. அதனால்தான் வெற்றியைத் தரும் முருகனின் கைவேலின் பரந்தபாகம் வெற்றிலை போல் அமைந்துள்ளது என்பதும் சிந்திக்கத்தக்கதாகும். இவர் வெற்றிக்கடவுளாக விளங்குவதால், வெற்றிலைப் படல் உற்சவம், அனுமந்தபுரம் கோவிலில் இன்றும் வருடா வருடம் சிறப்பாக நடக்கின்றது. இப்படலை அவர்கள் 12800 வெற்றிலைகளைக் கொண்டு தயாரிக்கின்றார்கள். பிள்ளையார்



*வெற்றிலைப் படலில் வீரபத்திரர்*

குப்பத்திலும் இதே போல் வெற்றிலைப்படல் சாத்தி வணங்குகின்றனர். (நன்றி:க.நா. சொக்கலிங்கம்.) மேலும் இவ்வெற்றிலைப் பிரசாதத்தை உட்கொள்வதன் மூலம் பக்தர்கள் மருத்துவப் பலனை அடைவதுடன், சுண்ணாம்புச்சத்தும் பெற்று நலமும் வளமும் பலமும் பெறுகின்றனர்.

### வீரபத்திரர் பரணி

போர்க்களத்தில் வீரத்தைப் பாடும் இலக்கியத்தைப் பரணி என்பர். அந்த வகையில் சோழர் ஆண்ட பொற்காலத்தில், ஒட்டக்கூத்தர் என்ற கவிச்சக்கரவர்த்தி - கவிராட்சசன் - பெருங்கவிஞர் - தெய்வக்கவிஞர் - ஒட்டக்கூத்தர் பாடிய "வீரபத்திர பரணி" என்ற "தக்கயாகப் பரணி" என்ற போர்ப் பரணியும், தரணிக்குத் தேவை என்பதை உணர்த்துவதாகும். இன்றும் எல்லைப் பகுதியில் ஏற்படும் அத்துமீறலுக்கு, நாம் போர்ப்பயிற்சி பெற்றிருந்தாலன்றிப் பகைவரை எதிர்கொள்வது கடினமாகும். போர்ப்பயிற்சி வாழ்க்கை நெறியில் எவ்வளவு அத்தியாவசியமான ஒன்று என்ற நடைமுறை உண்மையை உணர்ந்து செயற்படவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். அத்தகைய "வீரபத்திரர் பரணி" பாடல் இயற்றப்பட்ட தாராசுரம் கோவிலில் உள்ள அருள்மிகு வீரபத்திரரின் படம் இது.



*வீரபத்திரர்-தாராசுரம்*

### வீரபத்திரரின் போர்க்கோலம்

வம்புச் சண்டைக்குப் போகக் கூடாது. வந்த சண்டையை விடக்கூடாது. அதே போல் நீதிக்குப் பங்கம் இழைக்கப்பட்டால், வீராவேசமாகப் போராடவேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதே அவருடைய போர்க்கோலச் சிலைவடிவம். பழிவந்த விடத்துப் பேசா மடந்தை கண்ணகியும் காளியெனச் சினந்து எழுந்து மன்னனின் குற்றத்தை, அஞ்சாது மெய்ப்பித்துக் கற்புக்கரசியானாள். அத்தகைய அநீதியை எதிர்க்கும் உணர்வை உணர்த்துவதற்காகத்தான் தக்கன் என்ற படைப்பு அமையப்பெற்றுள்ளது. தான் என்ற ஆணவத்துடன், சிவபெருமானை மதியாது கங்கைக் கரையில் 'கனகலகம்' என்னும் இடத்தில் வேள்விச்சாலை அமைத்து அவன் வேள்வி நடத்தினான். அவனுடைய சிறுமதிச் செயலான அவ்வேள்வியை அழித்து, அவன் மூலம், உலகிற்கு நீதி புகட்டும் வகையில், ஆதி சிவனின் அம்சமாக வீரபத்திரர், பறியலூர் என்ற பரசலூரில், கிருஷ்ணபட்ச, பிரதமைத் திதியில், பௌர்ணமிக்கு அடுத்தநாள் பூரநட்சத்திரத்தில் தோற்றுவிக்கப்பட்டார். அநீதியின் அளவைக் கொண்டு அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர் என்று படைக்கப்பட்டுள்ளார். அவர் உருவங்கள் பல கோயில்களில் பிரம்மாண்டமாகப் பலரும் வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது. உதாரணமாக மதுரை மீனாட்சி அம்மன்

கோயில், கோவை பட்டீஸ்வரன் கோயில் போன்ற பல கோயில்களில் மிகப்பெரிய உருவச்சிலைகள் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணமாக அமைந்துள்ளன. *(நன்றி: அறங்காவலர்கள் சென்னை. ஸ்ரீ காளிகாம்பாள் கபடேஸ்வரர் தேவஸ்தானம்.)*



*அகோர வீரபத்திரர்*



*அக்னி வீரபத்திரர்*

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது. அதில் ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது. மேலும் சக்தி யில்லையேல் சிவனில்லை. சிவனில் லையேல் சக்தியில்லை. Kinetic energy potential energy இரண்டும் இருந்தால் தான்- இணைந்திருந்தால்தான் - உலக இயக்கமே நடைபெறும் என்பது, விஞ்ஞானப் பேருண்மையாகும். ஆகையால் பார்வதியின் அம்சமாக, பத்ரகாளியின் துணைக் கொண்டு, வெற்றி கண்டு, உண்மையை, நேர்மையை, நீதியை நிலை நாட்டுகின்றார் வீரபத்திரர். சென்னை மயிலாப்பூரில் தனி வீரபத்திர சுவாமிகோயில் உள்ளது. அங்கு வீரபத்திரரின் தேவியான அபயாம்பாள் அம்பாளுக்கும் தனிச் சன்னிதி உண்டு. அதே போல் இறைவி வில்லிவாக்கத்தில் பத்திரகாளி என்ற பெயரில் அருள் பாலிக்கின்றார். இப்படி எண்ணற்ற கோயில்களில் இருவருமாக அருள்பாலிக் கின்றார்கள். மேலும் ஆண், பெண் சமம் என்ற இன்றைய விஞ்ஞானக் கருத்தை இவர் தன் உருவத்தில் அர்த்தநாரீஸ்வரராக நிலைநிறுத்தியுள்ளது பெரிதும் போற்றுதற் குரியதாகும். மயிலை மாதவப்பெருமாள் கோயில் தெருவில் உள்ள வீரபத்திரர் சிலையில் அர்த்தநாரீஸ்வரர் சிறப்பைக் காணலாம். அதேபோல் அனுமந்தபுரத்தில் வீரபத்திரர் காலையில் குழந்தை வடிவிலும், மதியம் வாலிப வடிவிலும், மாலையில்




*மயிலாப்பூர் வீரபத்திர சுவாமி*



*வீரபத்திரர், சிங்கப்பூர்*

முதிய வடிவிலும் தோன்றுவது ஆச்சரியப் படத்தக்க செய்தியாகும். இது நம் வாழ்க்கை நிலையை உணர்த்து வதாகவும் அமைகின்றது.

இவ்வாறு அநீதியை எதிர்த்துப் போர் புரிவதற்காக வீரபத்திரர் 2 கைகளிலிருந்து 4,6,8, என 32 கைகள் கொண்ட வகையில் 150க்கும் மேற்பட்ட வகையில் மூலவராகவும் பரிவாரத் தெய்வமாகவும், காவல் தெய்வ மாகவும் தூண்களிலும், வெளிப்பிரகாரங் களிலும் விளங்குகின்றார். இவருடைய சிலைகள் கொண்ட தலங்கள் பல உள்ளன. தஞ்சை சரஸ்வதி மகால், சிங்கப்பூர் மாரியம்மன் கோயில், லண்டன் அருங்காட்சியகம் ஆகிய இடங்களில் காணப்படுவது பெருமை கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு கையிலும் இவர், ஆயுதங்களுடன் காணப்படுகின்றார். சென்னை, காரணீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள வீரபத்திரர் சன்னிதி



*வீரபத்திரர், லண்டன்*

முகப்பில், சுதையில் ஆயுதங்களுடன் 32 கைகள் கொண்ட வீரபத்திரரின் சிலைவடிவம் கண் கொள்ளாக் காட்சியாகும். கத்தி, பாணம்,




*வீரபத்திரர் காரணீஸ்வரர் கோவில்*

கேடயம், வில், மழு, மான், சூலம், டமருகம், மணி, கபாலம், தோமாரம், படமரம், முசலம், பிண்டி, தண்டு, பாலம், காசம், சரஹம்,பஞ்ச, ஏகம், கோடாலி, சூரிய, பாகு, கிளி, கலப்பை, வீரத்துஜா், அதிரு சுத்தி, பிதரு சுத்தி, பிச்சு கத்தி, ருத்திர, அலகே, அம்பு என்ற 32 ஆயுதங்களைக் கையிலேந்திய போர்க்கோலக் காட்சி, நமக்கு நெஞ்சுரத்தைக் கொடுக்கும் வண்ணம் அமைந்துள்ளது. அத்தகைய பிரளயகால வீரபத்திரசுவாமி பெங்களூரிலுள்ள கவிபுரம், குட்டக் கல்லியில் மிகச் சிறப்பாக உள்ளது. *(படம் நன்றி : திருமதி லலிதா)*



*வீரபத்திரர்-கவிபுரம் குட்ட கல்லி*

இவ்வளவு ஆயுதங்கள் ஏன் என்றால் அந்த அளவுக்கு ஒருவர் போர்ப்பயிற்சி பெற்று, திறமையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகத்தான். போர்ப்பயிற்சி என்பது ஓர் அடிப்படைத் தேவையாகும். இன்று எங்கும் பரவியுள்ள யோகா என்னும் பயிற்சியில் "வீரபத்ராசனா" என்ற பெயருடன் ஓர் ஆசனம் உள்ளது. இதை நாம் ஆராய்ச்சியோடு கவனிக்க வேண்டும். ஆரோக்கிய வாழ்விற்கான தற்காப்புக்கான, ஆசனத்திற்கு இவரின் திருப்பெயரில் "வீரபத்ராசனா" என்று ஓர் ஆசனம் இடம் பெற்றுள்ளதை என் மகன் டாக்டர் கங்காதர சுந்தர் தன்னிடமுள்ள புத்தகத்தில் காண்பித்தார். பி.கே.எஸ். அய்யங்கார் எழுதிய Yoga the path to holistic health என்ற புத்தகத்தில் "வீரபத்ராசனா 2ல் 56, 57, 58, 59, வீரபத்ராசனா 1ல் 76, 77,

78, 79 வது பக்கத்தில் விளக்கப் படங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளது. (படம் 12)




Virabhadrasana 1




Virabhadrasana 2

ஆகவே ஒரு பக்கம் எதையும் எதிர்கொள்ளச் சண்டைப்பயிற்சி. மற்றொரு பக்கம் யோகப் பயிற்சி. இப்பயிற்சிகள் தேக ஆரோக்கியத்திற்கு, அடிப்படைத் தேவையாகவும் உள்ளன என்பது அறிவார்ந்த உண்மை யாகும். ஆண்களுக்கு "வீரபத்ராசனா - 2" மார்பை விரிவடையச் செய்கிறது. மூச்சு விடச் சுலபமாக்குகிறது. நுரையீரலுக்கும் இருதயத்திற்கும் நல்ல பயிற்சியாக இது அமைகின்றது. இன்றைய prolapsed disc or slipped disc வியாதிக்கான சிகிச்சையாகவும் இது சிறப்புப் பெறுகின்றது. வாயுத் தொல்லையை நீக்கிச் செரிமான சக்தியை அதிகரிக்க வைக்கின்றது. இடுப்பைச் சுற்றியுள்ள சதையைக் குறைக்கின்றது. உடைந்த, இடம் மாறிய வால் எலும்புகளைச் சீர் செய்கின்றது. சிறுநீர்ப்பையைப் பலப் படுத்துகின்றது. பெண்களுக்குக் கீழ்வலி, இடுப்புவலி, மாதவிடாயின்போது ஏற்படும் வலி ஆகியவற்றைத் தீர்க்கின்றது. இடம் பெயர்ந்த கர்ப்பப்பையைச் சரி செய்கின்றது என்பதை அப்புத்தகத்தில் விளக்கமாக விளக்கியுள்ளதைப் பார்க்கும்போது யோகாசனத்தின் பெயருக்குரிய வீரபத்திரரை மருத்துவராவும் கண்டு மேலும் பெருமை கொள்ளலாம்.

### வீரபத்திரர் ஒரு போர்வீரர், காவல் வீரர்

வீரபத்திரர் மேலே சொன்ன சிறப்பான பயிற்சி பெற்று, வீர ஆயுதங்களைக் கையிலேந்திப் பல திருத்தலங்களில்

போர்வீரராகவும், பாதுகாவலராகவும் திகழ்கின்றார். சென்னை வேளச்சேரி செல்லி அம்மன் கோயிலில் பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்ற சப்த மாதர்களுக்குத் துணையாக இவர் எழுந்தருளியுள்ளார். கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பட்டீஸ்வரன் கோயில் என்ற ஊரில் உள்ள தேனுபுரீஸ்வரர், துர்க்கை அம்மன் திருத்தலத்திலும் சப்தமாதர் களுக்குத் துணையாக வீரபத்திரர் இருப்பதைப் படத்தில் காணலாம். கும்பகோணத்தில்



*ஸ்ரீ வீரபத்திரர், ஸ்ரீ சப்த மாதா, ஸ்ரீ விநாயகர்*

கங்கா தேவிக்குத் துணையாக-காவலாக-வீரபத்திரர் சுவாமியை இறைவன் பணித்துள்ளார். அப்படி வீரபத்திரர் பெருமான் மகாமகக் குளத்தின் வடகரையில் எழுந்தபோது சிவபெருமானே குருமூர்த்தமாக எழுந்தருளி, வீரபத்திரருக்குச் சிவதீட்சையும் இலிங்கத்தாரணமும், ஆச்சாரிய அபிடேகமும் செய்வித்து, வீரசிங்காதன பீடத்து அமர்த்தி, வீரசைவ குருஞான முடிசூட்டிச் சைவத்தை புவியின் கண் வளர்த்திட அருளாணை வழங்கினார். அண்மையில் 22.11.01இல் இக்கோவிலில் குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடந்தது. அப்பத்திரிக்கையில் வந்த படத்தை இங்குக் காணலாம். சென்னை வில்லிவாக்கத்தில் அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் அகத்தியர் செய்யும் பூஜைக்கு. அசுரர்களால் ஏற்படும் இடையூறினின்று காக்கும் வண்ணம் வீரபத்திரர் அமைந்திருக்கின்றார். மூகாம்பிகை



அருள்மிகு அகோரவீரபத்திர சுவாமி

*வீரபத்திரர்-மூகாம்பிகைக் கோயில்*

கோயிலில் அம்மனைப் பாதுகாக்கும் வகையில் அம்மனுக்குப் போரில் உதவும் வகையில் வீரப்பத்திரர் அமைந்துள்ளார் என்பதை 18.8.02இல் வெளியான ஆனந்த விகடனில் காஷ்யபன் எழுதியுள்ள கட்டுரை வாயிலாக அறியலாம். அதில் வந்த புகைப்படத்தையும் வெளியிட்டு மகிழ்கின்றேன். அம்மனுக்கு நடத்தப்படும் பூசைகள் அனைத்தும் இவருக்கும் உண்டு என்றால் எந்த அளவு வீரபத்திரர், இறைவனுக்கும் பக்தர்களுக்கும் வெற்றி வீரராகத் திகழ்கின்றார் என்பதை உணர முடிகின்றது.

இவர் ஒரு போர்வீரர், காவல் வீரர் என்பதற்கு உண்மையில் நடந்த சம்பவத்தை உலகறிய செய்வது என் கடமையாகும்.



வீரபத்திரர், கொல்லூர்



வீரபத்திரர், கும்பேசுவர சுவாமி திருக்கோயில்



வீரபத்திரர், கும்பேசுவரசுவாமி திருக்கோயில்

தென்னாட்டை முகலாய மன்னர்கள் படையெடுத்துச் சூறையாடின பொழுது இறுதியாக வெற்றிக் களிப்பில் கும்பகோணத்தில் கும்பேசுவரர் கோயில் தூணில் உள்ள கம்பீரமான, கலை வேலைப் பாடுமிக்க, கண்ணைக்கவர்ந்த, எதிர் எதிராக இருந்த எட்டுக் கைகளை உடைய அக்னி, அகோர வீரபத்திரரின் கைகளை உடைக்க முனைந்தபோது அவர் உயிர்பெற்றுக் கோபக்கனலுடன், தன் பரிவாரங்களுடன், அப்படைகளைத் துரத்தி, ஓட, ஓட விரட்டினார். இவ்வாறு முகலாயர் களின் வெற்றி மூக்கை உடைத்தமையால் இவ்வூருக்குக் 'குடமூக்கு' என்று ஒரு

காரணப்பெயர் உள்ளதாக வரலாற்றைக் கூறுகின்றனர். (படம்) கைகள் உடைந்த நிலையிலும் கம்பீரத் தோற்றத்தில் வீரபத்திரரைக் காணும்போது கண்ணில் செந்நீர் வருகின்றது. ஆகவே அருள்மிகு வீரபத்திரர், இலக்கியக் காலத்திலும் சரி. சரித்திரக் காலத்திலும் சரி, அன்றாட வாழ்வியலிலும் சரி நம்மைக் காத்து வழிநடத்தும் உன்னத உயர் தெய்வமாகும்.

இப்படிப் பட்ட காக்கும் கருணைத் தெய்வம், காஞ்சிப் பெரியவரின் குலதெய்வம் என்று அறிந்து பெரிதும் பூரித்து மகிழ்கின்றேன். அவர் தந்தைவழிக் குலதெய்வமாக திருவிடை மருதூர் வீரபத்திரரையும், தாய்வழிக் குல தெய்வமாகச் சிறுவாச்சூர் மதுரகாளியம்மனையும் போற்றி வணங்கி வந்தார்.

இதன் மூலம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் என்ற மனிதநேயக் கருத்தை ஆராய்ந்து தெளிவோமாக!

**முடிவுரை**

இறுதியாக எப்படிப்பட்டவர்களுக்கும் கர்மவினைகளின் காரணமாகச் சோதனைகள் வரத்தான் செய்யும். அச்சோதனைகளின்று நம்மை நாம் காத்துக்கொண்டு, சோதனை களைச் சாதனைகளாக்க வேண்டும். சோகத்தைச் சுகமாக்க வேண்டும். துன்பத்தை இன்பமாக்க வேண்டும் என்பதே அருள்மிகு வீரபத்திர சுவாமியின் உண்மைத் தத்துவமாகும் என்பதைப் பெருமையுடன், மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இது வெறும் எழுத்துகள் அல்ல, எங்கள் வாழ்வில் நடந்த சத்திய சோதனையின் - உண்மை வேள்வியின் அனுபவங்களாகும் எனவே,

*"படைக்கலமாக நின்நாமம் நாவில் கொள்வேன்*
*இடைக்கலமாக நின்பாதம் நாளென்றும் பணிவேன்*
*துடைக்கினும் நான்போகேன் வணங்கிஉம்*
*வெண்ணீறணிவேன்*
*அடைக்கலம் எனக்குஎன்றும் திருவானைக்கா*
*வீரபத்ரே!*

என்று பாடி வணங்குகின்றேன்.

*வாழ்க அருள்மிகு வீரபத்திரர் புகழ்!*
*வளர்க அவர் அறக்கருணையுடன் கூடிய*
*மறக்கருணை!*
*வளம்தர ஓங்குக அவர் பெருமை!* ❑

## வீரபத்திரர்

*தக்கன் சிவமூர்த்தி தன்னை மாமன் என்று மதியாது இருந்ததைப் பற்றிச் செருக்கடைந்து, சிவமூர்த்தியை நீக்கி ஓர் வேள்வி செய்யத் தொடங்கினன். அவ்வேள்வியை நாரதரால் அறிந்த தாக்ஷாயினி சிவமூர்த்தியிடம் விடை பெற்று வேள்விச் சாலையை அடைந்தனள். தக்கன் தாக்ஷாயினியை அன்புடன் வருவிக்காததால் கோபித்து வேள்வி சுடலையாகச் சபித்துச் சிவமூர்த்தியை அடைந்தனள். இவள் மன வேறுபாட்டைக் கண்ட சிவமூர்த்தி தமது திருச் சடையில் ஒன்றைப் பூமியில் மோதினர். அதனின்றும் வீரபத்திரர் அவதரித்தனர். இவர் இறைவன் கட்டளை பெற்றுத் தம்முடன் தோன்றிய பூதகணங்களுடனும் தாக்ஷாயினி அனுப்பிய காளியுடனும் சென்று தக்கனது வேள்வியை அழித்தனர். இவ்வேள்வியில் இந்திரன் குயிலாய்ப் பறந்தோடினான். அக்னி நா அறுப்புண்டான். பூஷா என்னும் சூரியன் பல்லிழந்தான். சந்திரன் வீரபத்திரர் காலால் தேய்ப்புண்டனன். தக்கன் தலையறுப்புண்டனன். இது நிற்க காளியொரு புறத்து இருந்த சரசுவதி, லட்சுமி, இந்திராணி முதலியவர்களை உறுப்பழித்தனர். இதனால் யஞ்ஞ புருஷன் பயந்து மான் உருக் கொண்டு ஓட, ஒரு பூதம் மானின் தலையைத் திருகியது. இவ்வகை வெற்றி பெற்று வீரபத்திரரென்னும் திரு நாமம் அடைந்து வீர மாகாளியுடன் அமர்ந்த சிவமூர்த்தியின் அம்சம், இவர் அசுரன், பஞ்சமேட்டிரன், அக்னிமுகன், சற்பாசுரன், வியாக்ரன், வீரமார்த்தாண்டன் முதலியவரைக் கொன்றவர். தக்கன் யாகத்தில் இவரது கோபந்தணிய விஷ்ணு அசரீரியின் சொற்படி பினாகத்தின் நாணியை அறுத்தனர் என்ப.*

*நன்றி: அபிதான சிந்தாமணி*

# இன்றைய வழிபாட்டில் வீரபத்திரர்
# வீரபத்திரர் அர்ச்சனை மலர்கள்

பொதிகை மு. கோமதி

அரனின் கரனே ஐய்யா போற்றி!
ஆவுடையான் தந்த அருளே போற்றி!
இழிந்த யாகத்தை இடறினாய் போற்றி!
ஈசன் மகனே இறைவா போற்றி!
உருத்திரன் சேவகன் ஆனாய் போற்றி!
ஊக்கமும் அருளும் தருவாய் போற்றி!
எட்டுக் கைகள் உடையாய் போற்றி!
ஏறு ஊர்தியான் செல்வனே போற்றி!
ஐயன் ஆணை முடித்தாய் போற்றி!
ஒன்றான வடிவம் கொண்டு ஒட்டாரை
ஓட்டம் பிடிக்கச் செய்தாய் போற்றி!
ஔடதத் தடை செய்தாய் போற்றி!
சிவனார் சிகையில் தோன்றினாய் போற்றி!
சீலம் அளித்துக் காப்பாய் போற்றி!
தும்பை சூடி அதிரப் பொருது
பஞ்ச ஆயுதம் பஞ்சாய்ப் பறக்க
வெஞ்சமர் புரிந்த வீரவா போற்றி!
அரக்கர் படையை அரக்கப் பரக்கப்
பறந்தே ஓடச் செய்தாய் போற்றி!
பூத கணங்கள் பெருவலி பெற்றிட
நாத(ன்) நாமம் நல்கினாய் போற்றி!
காளிப் படையை முன்னே அனுப்பிக்
கவின்மிகு வெற்றி பெற்றாய் போற்றி!
பைரவர் படையைத் துணையாய்க் கொண்டு
பாங்காய் வெற்றி அடைந்தாய் போற்றி!
திக்குப் பாலரைத் திக்குமுக்காடச் செய்து
திசையெல் லாம்வெற்றி பெற்றாய் போற்றி!
பகனின் கண்ணைப் பறித்தாய் போற்றி!
பகலவன் பற்களைப் பறித்தாய் போற்றி!
ஒளியால் உலகை ஆளும் கதிரவன்
ஒளியை இழக்கச் செய்தாய் போற்றி!
சந்திரனைக் காலால் தேய்த்தாய் போற்றி!
அக்னி நாவை அறுத்தாய் போற்றி!
அவனது தடக்கை தறித்தாய் போற்றி!
அமரர் வாழ்வை முடித்தாய் போற்றி!
குயிலின் சிறகை ஒடித்தாய் போற்றி!
வசிட்டர் காமதேனு பறித்தாய் போற்றி!
அகத்தியனைக் குகையில் அடைத்தாய் போற்றி!
அமரர் ஆணவம் அழித்தாய் போற்றி!
எமனின் வாகனம் பற்றினாய் போற்றி!
எல்லா வாகனமும் அழித்தாய் போற்றி!
வாகனம் பறித்து வலிமை அழித்து
ஏகன் பணியை முடித்தாய் போற்றி!
எமனின் கொடியைப் பற்றியவா போற்றி!
வருணன் தடக்கை பிணைத்தாய் போற்றி!
மலைகளைத் தகர்த்த மன்னவா போற்றி!
காடு கொண்ட விருட்சப் படையைப்
பீடு கொன்றைக் கீழடக்கியவா போற்றி!
முனிவர் வெருவ முடித்தாய் போற்றி!
வேதியர் வெருவி வெருண்டு புரண்டு
ஓடியே ஒளியச் செய்தாய் போற்றி!
தக்கன் தலையை அறுத்து ஒழித்து
தகரின் தலையை அளித்தாய் போற்றி!
மாமக மொடியத் தக்கனைத் தடிந்திடு
தமருகன் தந்த தனயனே போற்றி!
தக்கன் செருக்கைச் சிதைத்து அழித்துத்
தாட்சாயணி சாபம் முடித்தாய் போற்றி!
காளியைத் துணையாய்க் கொண்டாய் போற்றி!
காக்கும் தெய்வத் தெய்வமே போற்றி!

வேள்வியை அழித்த வெவ்வுருவே
போற்றி!
தோல்வியே அறியாத் தூயவரே போற்றி!
அட்டமா ஆயுதம் ஏந்தினாய் போற்றி!
இட்ட பணியை முடித்தாய் போற்றி!
மின்னல் தோன்றி மறையும் பொழுதில்
தக்கன் அவனின் வேள்விக் களமே
நன்காட்டுக் களமாய் மாற்றினாய் போற்றி!
தண்டமிழ் போற்றும் செந்தமிழ் நாட்டில்
தனித்த கோயில் கொண்டாய் போற்றி!
தரணி எங்கும் நிறைந்தாய் போற்றி!
தமிழர் வாழ்வைக் காப்பாய் போற்றி!
ஆசறு ஆதி வானவனே போற்றி!
ஆந்திராவில் அழகுற அமர்ந்தாய் போற்றி!
கர்நாடகத்தில் கவினுற இருந்தாய் போற்றி!
கேரளாவில் கோயில் கொண்டாய் போற்றி!
பர்வத மலையுறை பாலனே போற்றி!
காஷ்மீர் மாநில சைவப்பெரு மக்கள்
பேசும் தெய்வம் ஆனாய் போற்றி!
தேவாரப் பண்ணில் மிளிர்ந்தாய் போற்றி!
திருவாசக உந்தியில் அமர்ந்தாய் போற்றி!
வேதத்தில் சிறப்பிடம் பெற்றாய் போற்றி!
நாட்டுப்புற பாடல்களில் நல்லிடம் பெற்று!
கழங்காடல் வரிகளில் கண்டோம் போற்றி!
சிவனின் திருஉரு பெற்றாய் போற்றி!
தீமைகளை அழித்துக் காப்பாய் போற்றி!
திருமூல ரருளிய மந்திர வாசகத்தில்
நல்இடம் பெற்ற இனியவா போற்றி!
சூலம் ஏந்திச் சூறாவளியாய் வந்து
ஓலமிட்டு ஒடச் செய்தாய் போற்றி!
சசிமுடி கண்டும் அஞ்சா மாலின்
சக்கரம் அடங்க அதட்டொலி செய்த
அற்புத வாயுடை வீரபத்ரா போற்றி!
சினத் தீயின் வெம்மையே போற்றி!
சிந்தனையில் நிறைந்த சிவஉருவே
போற்றி!
சிவனின் தோற்றம் கொண்டாய் போற்றி!
சீராய் வினைகள் முடித்தாய் போற்றி!
அல்லோரை அழித்து ஒழிப்பாய் போற்றி!
நல்லோரை வாழ வைப்பாய் போற்றி!
கற்கும் பிள்ளைகட் கருள்வாய் போற்றி!
கவலைகள் தீர்த்து அருள்வாய் போற்றி!
கருவைக் காத்து நிற்பாய் போற்றி!
காலம் தோறும் சிறப்பாய் போற்றி!
கணபதியின் கருணைமிகு சோதரா போற்றி!
முருகனுக்கு மூத்த முதல்வனே போற்றி!
அருள்மிகு வீரபத்ர தெய்வமே போற்றி!
அடிப்பெருங் கடவுள் ஆனாய் போற்றி!
வினைகள் அறுக்கும் வீரனே போற்றி!
வீரத்தை வழங்கும் வித்தகா போற்றி!
நின்னை வேண்டி வந்திடு வோர்க்கு
நித்தம் அருளைப் பொழிவாய் போற்றி!
உன்னை ஏற்றுத் துதித்திடு வோர்க்கு
உன்னத வாழ்வை அளிப்பாய் போற்றி!
காளியை மன்றல் முடித்து நீயும்
காவல் தெய்வம் ஆனாய் போற்றி!
சைவம் தழைக்கச் செய்தாய் போற்றி!
சிவந்த செம்பொற் கழலடி போற்றி!
வம்சம் செழிக்கச் செய்வாய் போற்றி!
வளமான வாழ்வு அளிப்பாய் போற்றி!
நாமகள் நாசியை அரிந்தாய் போற்றி!
நானிலம் சிறக்கச் செய்வாய் போற்றி!
திண்மை நிறைந்த தோளாய் போற்றி!
தீமை மனத்தைத் தீய்ப்பாய் போற்றி!
உலகம் உய்யச் செய்வாய் போற்றி!
உத்தமத் தெய்வமே பத்திரா போற்றி!
தேவரை விரட்டிய தேவரே போற்றி!
தேயமெலாம் போற்றும் வீரரே போற்றி!
மாண்டவர்க்கு மீண்டுயிர் கொடுத்து மீண்டும்
மீண்டும் போரிட்ட புத்திரா போற்றி!
மங்கையர் மாங்கல்யம் காப்பாய் போற்றி!
மாண்புறு தெய்வமாய் ஆனாய் போற்றி!
போற்றி போற்றி வீரபத்திரரே போற்றி!
போற்றி போற்றி போற்றி போற்றியே!

*With Best Compliments From*

# SVT

# SRI VENKATESH TRAVELS

***TOURIST CAR OPERATORS***

# 13, (OLD NO. 6) 1ST STREET,
JAGADAMBAL COLONY, ROYAPETTAH
CHENNAI-600 014
PHONE: OFF: 8475494, 8474751, 8475861, 8473708
RES: 8474842

*FOUR DECADES IN SERVING TOURISM*

V. KRISHNAMURTHY K. VENKATESH

*With Best Compliments from:*

# Swarnalaya Jewellery

# 5, Bazulla Road,
T.Nagar, Chennai 600 017
Ph-8157787

# செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் வீரபத்திரர்

**பேரா. டாக்டர் ஹேமா சந்தானராமன்,**
பிஎஸ்சி., எம்.ஏ.எம்.எட்., பிஎச்.டி

### முன்னுரை

சிவகுடும்பத்தைச் சேர்ந்த வீரபத்திரர் பல்வேறு நூல்களிலும் இடம் பெற்றுள்ளார். சிவமகாபுராணத்தில் வீரபத்திரர் பற்றிய செய்திகள் உள்ளன. வியாசர் இயற்றிய ஸ்காந்த மகாபுராணத்தில் வீரபத்திரரின் தோற்றமும், வீரமும் விரிவாகப் பேசப் படுகின்றன. கந்தபுராணத்தைத் தமிழில் இயற்றிய கச்சியப்பர், வியாசர் மூலநூலில் குறிப்பிட்ட செய்திகளை அப்படியே அளித்திருக்கிறார்.

விஷ்ணு புராணங்களில் முக்கியமான ஸ்ரீமத் பாகவதத்தில் தட்சயாகமும், வீரபத்திரரின் வீரச் செயல்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.

### தமிழ்ப் பாகவதம்

தமிழில் கம்பர் இராமாயணம் இயற்றி யுள்ளார் என்பதும், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதத்தை இயற்றியுள்ளார் என்பதும் அனைவரும் அறிந்த செய்தியாகும். ஆனால், தமிழில் ஸ்ரீமத் பாகவதம் இயற்றப் பட்டுள்ளது என்பது மிகச் சிலருக்கே தெரிந்திருக்கும்! செவ்வைச் சூடுவார் என்பவர் தமிழில் பாகவதத்தை இயற்றியுள்ளார்.

### வேம்பத்தூர் புலவர்

மதுரைக்கு வடகிழக்கே இரண்டு காத தூரத்தில் வைகை நதியின் வடகரையில் உள்ளது வேம்பத்தூர். சங்கப் புலவர்களுள் ஒருவராகிய வேம்பற்றூர்க் குமரன் என்பவர் இவ்வூரைச் சேர்ந்தவர் என்பர். மேலும், பல புலவர்களும் வேம்பத்தூரில் தோன்றி வாழ்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவரே செவ்வைச் சூடுவார். இவர் திருஞான சம்பந்தர் தோன்றிய கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரது வம்சத்தினர் தென்காசியில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அறியமுடிகிறது. இவரது காலம், வாழ்க்கை முதலிய செய்திகள் கிடைத்தில.

### திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு

ஏறக்குறைய ஐயாயிரம் பாடல்களைக் கொண்ட செவ்வைச்சூடுவாரின் பாகவதத்துக்கு டாக்டர் உ. வே. சா. அவர்கள் குறிப்புரை எழுதியுள்ளார்கள். அவர்தம் குமாரர் திரு கல்யாண சுந்தர ஐயரவர்களைப் பதிப்பாசிரி யராகக் கொண்டு, திருமலை-திருப்பதி தேவஸ்தானம் செவ்வைச் சூடுவார் பாகவதத்தை இரண்டு பகுதிகளாக வெளியிட்டுள்ளது. அண்மைக் காலத்திலும் சில பதிப்பகங்கள் இதனை உரையுடன் வெளியிட்டுள்ளன.

### பாகவதத்தில் வீரபத்திரர்

செவ்வைச் சூடுவார் பாகவதத்திலுள்ள நான்காம் ஸ்கந்தத்தில், தக்கன் வேள்வி அழித்த அத்தியாயத்தில் வீரபத்திரரைப் பற்றிச் செய்திகள் கிடைக்கின்றன.

தட்சன் வேள்வி அழிய வேண்டு மென்று பிருகு முனிவர் சாபமிட்டார் என்று பாகவதம் உரைக்கிறது. மேலும், சிவ பெருமான் தனது சடைமுடியின் ஒரு பகுதியைத் தரையில் அடித்தவுடன் வீரபத்திரர் வந்தார் என்றும் பாகவதம் கூறுகிறது.

*மணிதயங்கு முடிவான்முகடு முட்ட*
*வரைநேர்*
*திணிபுயந் திசைகள் எட்டையும்*
*நெருக்க எழுதீ*
*அணிநிறங் கிளரும் வீரனவன்நின்று*
*முனையா*
*"பணி என்?" என்று பவன் வார்கழல்*
*பணிந்தனன்அரோ.*

நெடிய உருவத்துடனும் தீப்போன்ற நிறத்துடனும் தோன்றிய வீரபத்திரர், ஈசனிடம், எனக்குரிய பணி என்ன?" என்று கேட்டார்.

*மிக்க வேள்வியை அழித்து,*
*நெடுவேள்வி புரியத்*
*தொக்க வானவர் தொலைந்து இரிய*
*மோதி, நெறிதீர்*
*தக்கன் வன்தலை தடிந்திடுதி என்று*
*உரைசெய்தான்*
*செக்கர் வானொடு சிவந்துபொரு*
*செஞ்சடையினான்.*

"தக்கனின் வேள்விச்சாலை எங்கே உள்ளது?" என்று சினத்துடன் வினவினார். இங்கு, செவ்வைச் சூடுவார் வீரபத்திரரை, "முக்கண் அடல் வீரன்" என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, சிவகுடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களைப் போலவே வீரபத்திரருக்கும் மூன்று கண்கள் உண்டு என்பது தெளிவாகிறது.

பூதப்படைகள் சூழ, மின்னல் ஒளி வீசும் வாளை உருவி, வீரபத்திரர் வருவதைக் கண்டவர்கள் அனைவரும், என்னவாகுமோ? என்று அஞ்சியோடினர்.

*மின்விளையும் வாளுருவி வீரன் வரும் அந்தோ!*
*என்விளையுமோ? என இயம்பினார் இரிந்தார்.*

## அழகிய தமிழாக்கம்

ஆட்டுத்தலையைச் சீவுவது போல, வீரபத்திரர் தட்சனின் தலையை அறுத்து 'தட்சிணாக்கினி' என்ற வேள்வித்தீயில் இட்டார் என்று செவ்வைச் சூடுவார் கூறுகிறார். தட்சிணாக்கினி என்ற சொல்லைச் செவ்வைச் சூடுவார், 'தென்தலை அழல்' என்று அழகிய தமிழில் அளித்துள்ளார்.

வீரபத்திரர் அக்கினி பகவானைத் தாக்கினார். அதனால், அக்கினி பகவானின் பற்கள் உதிர்ந்தன. அதனைக் கூறவந்த செவ்வைச் சூடுவார், வீரபத்திரரைப் பலராமருக்கு ஒப்புமைப் படுத்துகிறார். பலராமர் கலிங்க நாட்டு மன்னனுடன் போரிட்டார். அப்போரில், பலராமர் தாக்கியதால் கலிங்க மன்னனின் பற்கள் உதிர்ந்தன. "கலிங்க மன்னவன் கதிர்கெழு பல்லுகுத்தன்ன" என்று பாடுகிறார் செவ்வைச் சூடுவார்.

## நிறைவுரை

செவ்வைச் சூடுவாரின் பாகவதத்தில் வீரபத்திரர் பற்றிய சில பாடல்களே உள்ளன. எனினும், அவற்றுள் அவரது வீரம் முதலியவற்றைத் தெளிவாக அறியமுடிகிறது. ❑

### வீரபத்திரர் - விளக்கம்

**வீரபத்திரம் என்பதற்குப் பல்வேறு பொருட்கள் அகராதிகளில் சொல்லப்பட்டுள்ளன. அசுவமேதக் குதிரை, பாதுகாப்பு தருதல், யானைகளின் வரிசை, குதிரைகளின் வரிசை எனப் பலவாகும். வீரம் என்பதற்கு அழகு என்றும் பத்திரம் என்பதற்குக் காப்பவன் என்பதும் பொருளாகும். நம்மைக் காத்து அருள்வதால் சிவகுமாரன் வீரபத்திரன் எனப்பட்டான்.**

*-சிவமஞ்சரி*

# திருவானைக்காவல் வெளிப்பிரகாரத்தில் அமைந்துள்ள திருவீரபத்திரர் கோயிலில் பதித்துள்ள கல்வெட்டில் உள்ள பாடல்கள்

திருப்பூர் வாரியார், சைவசித்தாந்த ரத்தினம் ஜே.ஜி. ஜெயசீலன், திருப்பூர்.

உன்னை வணங்கி வழிபடுவதற்கே திருவீரபத்திரா
என்னையும் ஒருவனாக்கி மண்ணுலகில் படைத்திட்ட
உன்னதமான நினதன்புத் திருவருட் கரங்களால்
முன்னை வினைகள் முழுவதும்நீக்கி ஆட்கொள்வாயே!

சனவிகுல தெய்வ நாயகா திருவீரபத்திரா
நினதுதிருவடி நிழலில் வாழப் பிறந்தேன்
மனங்குளிரச் சுகம் நல்கும் அப்பேற்றுக்கு
எனது உயிரைக் கொடுத்தாலும் ஈடாகுமோ!

உலகம் தழைக்க அவதரித்த திருவீரபத்திரா
நலம் பெற வேண்டி உன்னை நாடி வந்தேன்
காலன் எனை அணுகாமல் உனதிருகாலில்
மூலவெழுத்து ஓதியே அடைய அருள்வாயே!

ஐந்தெழுத்து நாயகன் அவதார திருவீரபத்திரா
சந்ததமும் உன்னையே நினைந்து உருகுகின்றேன்
தந்தையை யிழந்த பிரிவால் வாடுமெனக்கு
எந்தையாக ஆறுதலளித்து வாழ்விப்பாயே!

அருட்சோதியாய் காட்சி தரும் திருவீரபத்திரா
இருவினை நீங்கி முக்தியடைய நாடுகின்றேன்
திருவுளமிரங்கி ஒன்றுமறியாத பேதையெனக்குக்
கருணை முகங்காட்டிக் கைகொடுத்து இரட்சிப்பாயே!

கரங்களில் ஆயுதம் தாங்கிய திருவீரபத்திரா
நரகவேதனைக்கு ஆளாகாமல் வாழவேண்டும்
நிரபராதியாக வாழுமென்னை அருட்கூர்ந்து
பரமபிதாவாகிய நீஆட் கொண்டு காப்பாயே!

அங்கமெல்லாம் அன்பாகி நின்ற திருவீரபத்திரா
ஆங்காரம் நீங்க வழிகேட்டு நாடி வந்தேன்
பாங்காய் எனதுள்ளத்தில் தெவிட்டாத செழுந்
தேங்கனியாக எழுந்து மமதையை அழிப்பாயே!

அடிமையாக்கி என்னை உயர்வித்த திருவீரபத்திரா
குடிப்பிறப்பு காத்திட அருளை வேண்டி நின்றேன்
பிடித்த கல்விப் பெரும் புகழோடு பிறரிடம்
நாடி இரவாமல் வாழ்ந்திட வகைபுரிவாயே!

பாலில்படு நெய்யென உட்கலந்த திருவீரபத்திரா
ஒலியிசையில் நினது புகழைப் பாடவேண்டும்
சலிப்பு அடையா வண்ணம் எங்கணுமே சென்று
கிலிநீங்கி அவையில் தோன்றிட அருள்வாயே!

குற்றங் களைவித்து மன்னித்தருளும் திருவீரபத்திரா
பற்றுமிகு பாசம் தொடர்ந்திருக்க வேண்டுகிறேன்
பெற்றெடுத்த பிள்ளையைப் பாரமென்று எண்ணாத
நற்றவ தாய்தந்தை எனவேயாகி ஆதரிப்பாயே!

வேதமந் திரங்களுக்கு அப்பாற்பட்ட திருவீரபத்திரா
சதவயது வாழ்ந்தாலும் நோயின்றி வாழவேண்டும்
சோதனைக்கு ஆளாக்கித் துன்புறுத்தாமல் நினது
பாதமடைய மெய்ஞ்ஞானம் புகட்டிச் சேர்ப்பாயே

நினது குழந்தையல்லவோ நான் திருவீரபத்திரா
எனது அறியாமையால் செய்துள்ள தவறுகளை
மனங்கொண்டு பெரிதாக எண்ணாமல்
சினங்களை வித்து மன்னித்து அருள்வாயே!

துன்பமுற லாமோ நான் திருவீரபத்திரா
அன்பே யென்று கரங்களால் அணைத்து
இன்னமுதூட்ட இளமுலை காட்டித்
தன்னையே மறக்கும் தாயாக வருவாயே!

அகில மனைத்தும் காணும் திருவீரபத்திரா
மகிமை பொருந்திய நினதழகிய திருவடியினை
நெகிழ்ந்து மலரிட்டு வழிபடும் அளவிலா
மகிழ்ச்சிதனை என்னென்று சொல்வேனே!

நினது திருவடியைத் தொழுதே திரவீரபத்திரா
எனது பாவவினைகளைப் போக்கிடப் பிறந்தேன்
மனதில் அகலாது வீற்றிருக்கும் உன்னைத்
தினமும் வழிபடும் எனக்கு அருள்வாயே!

# வீரபத்திரரின் பல பெயர்கள்

**முனைவர் மலையமான்** எம்.ஏ.,பி.லிட்., பி.லிப்.எஸ்.சி,
டிப்.பிரெஞ்சு, புலவர், பிஎச்.டி

ஒரு மொழியில் முதல் நிலையில் வினைச் சொற்கள் தோன்றின. பிறகு பெயர்ச் சொற்கள் பிறந்தன. எல்லாப் பெயர்ச் சொற்களும் ஒரு காரணம் பற்றியே உதித்தன. ஆனால், காலப்போக்கில், சொல் பிறந்த தற்கான காரணம் மறக்கப்பட்டு விட்டது.

இதனைத் தொல்காப்பியர்,

"*எல்லாச் சொல்லும் பொருள்*
*குறித்தனவே*" *என்றும்*
" *மொழிப் பொருள்*" *காரணம்*
*விழிப்பத் தோன்றா.*

என்றும் எடுத்துரைத்தார்.

சில சமயம் ஒரே பொருளுக்குப் பல பெயர்கள் அமையக் கூடும். இவை வெவ்வேறு காலக் கட்டத்தில் மொழியில் இடம் பெறும். அம்மொழி வழங்கும் வெவ்வேறு பகுதி களில் அவை பயன்படுத்தப் பட்டிருக்கும்.

வீரபத்திரர் என்ற சொல், வீரம் + பத்திரர் என்ற இரு சொற்களால் உருவானது. பத்திரம் என்பதற்கு அழகு என்ற பொருளும் உண்டு. எனவே, வீரமும் அழகும் கொண்ட கடவுள் வீரபத்திரர் எனப்பட்டார். வீரபத்திரருக்குப் பன்னிரண்டு வேறு பெயர்கள் உள்ளன. இவர் சிவனுடைய நெற்றி (நெருப்பு) கண்ணிலிருந்து தோன்றியவர் என்று சொல்லப்படுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் இவர் 'அழற்கண் வந்தோன்' (நெருப்புக் கண்ணில் தோன்றியவர்) என்று சொல்லப்பட்டார். இவர் சிவனுடைய துணைவியான உமை அம்மையின் மகன் எனப்பட்டதால், 'உமைமகன்' என்ற பெயரும் இவருக்கு உரியதாயிற்று. இவர் அளவு கடந்த சினம் கொண்டவர் என்பதன் காரணமாக, 'உக்கிரன்' என்றும் 'குரோதன்' என்றும் இவருக்குப் பெயர்கள் சூட்டப்பட்டன. இவருடைய கையில் ஆற்றல் மிக்க வில் இருந்தமையால், இவர் 'வில்லி' என்றும் குறிக்கப்பட்டார். இவருடைய உடம்பு, மாலை நேரத்து மேற்கு வானத்திலிருக்கும் சிவப்பு நிறம் போல இருந்தபடியால், இவர் 'செக்கர் வான் நிறத்தோர்' என்று கூறப் பட்டார். இவருடைய துணைவி பத்திரை என்று சொல்லப்பட்டதால், 'பத்திரைக்குக் கேள்வன்' (பத்திரையின் கணவன்) என்ற பெயரும் இவருக்குத் தரப்பட்டது.

காலப்போக்கில் இவர் சிவனுடைய மறு தோற்றம் என்ற எண்ணம் எழுந்தது. அப்போது, சிவனுக்குரிய இயல்புகள் இவரிடம் பொருத்தப்பட்டன. சிவனுக்கு மூன்று கண்கள் உண்டு. ஆகவே இவரும் 'முக்கணன்' (மூன்று கண்கள் உடையவன்) என்று சுட்டப்பட்டார்.சிவனுக்குச் சடைமுடி உண்டு. அதனால் இவருக்கும் சடைமுடி உண்டு என்று கொள்ளப்பட்டு இவர் 'சடையோன்' என்று அழைக்கப்பட்டார்.

தக்கன் யாகம் செய்தான். அவன் சிவ பெருமானைத் தன் வேள்விக்கு அழைக்க வில்லை. மகள் நிலையிலிருந்த உமை அந்த வேள்விக்கு வந்தாள். அவளைத் தக்கன் அவமதித்தான். எனவே, தக்கனின் வேள்வியை அழிக்கும் கடமை வீரபத்திரருக்குத் தரப்பட்டது. அவர் தக்கனின் வேள்வியை அழித்தார். அப்போது அவர் சிறுவிதி மகம் சிதைத்தோன் (தக்கனின் வேள்வியை அழித்தவர்) என்று அழைக்கப் பட்டார். வீரபத்திரரைப் பற்றிய

கதைகள் பெருகின. அவற்றில் ஒன்றில் இவர் எட்டுக் கால் கொண்ட பறவை வடிவத்தில் இருந்ததாகக் கூறப்பட்டது. அதன் அடிப்படையில் 'சிம்புள் ஆனோன்' (எட்டுக்கால் பறவை வடிவம் பெற்றவன்) என்ற பெயர் இவருக்குச் சூட்டப்பட்டது. விநாயக வணக்கம் தமிழகத்தில் வேர் ஊன்றியபிறகு, இவர் அந்த 'யானைமுகக் கடவுளின் தம்பியாக- யானைமுகனுக்கு இளையோன்' என்று சொல்லப்பட்டார். இப்படி வீரபத்திரருக்குப் பன்னிரண்டு பெயர்கள் உருவாயின.

இச்செய்தியைச் சூடாமணி நிகண்டிலுள்ள ஒரு பாடல் தெரிவிக்கிறது.

*உக்கிரன் அழற்கண் வந்தோன்*
*உமைமகன் சிம்புள் ஆனோன்*
*முக்கண், சடையோன், யானை*
*முகவனுக்கு இளையோன் வில்லி*
*செக்கர் வான் நிறத்தோன் குரோதன்*
*சிறுவிதி மகம் சிதைத்தோன்*
*மிக்கப் பத்திரைக் கேள்வன்*
*வீரபத்திரன் பேராமே.*

*(சூடாமணி தேவப்பெயர்:22)*

என்பது அந்தப் பாடலாகும். ❑

## கருநாடக நாட்டுப்புற இயலில் வீரபத்திரர்

*தட்சன் வளர்த்த யாகத்துக்கு மருமகனான சிவனை அழைக்கவில்லை. பார்வதி யாகக்குண்டத்தில் வீழ்கிறாள். ஞானக் கண் கொண்டு காணும் சிவன் ருத்ரதாண்டவம் ஆட வியர்வை கொட்டுகிறது. நூற்றியெட்டு போர்க் கருவிகளோடு அவ்வியர்வையிலிருந்து உரு பெறுகிறான் வீரபத்ரன். வீரபத்ரன் தட்சனைக் கொன்றதின் அடையாளமே 'வீரகாசே' என்பதும் அன்றிலிருந்து தோன்றியதே இவ்வாட்டம் என்பதும் ஆட்டக்காரர்களின் நம்பிக்கை, ஆட்டக்காரர்கள் 'லிங்கத வீரர்' என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆட்டத்துக்கு 'வீரகாசே குனித' என்ற பெயருமுண்டு.*

*ஆட்டக்காரர்களைத் தத்தம் கிராமங்களுக்கு வரவழைத்து வீரபத்ரனின் கதையைச் சொல்லக் கேட்டால் மக்களுக்கும் கால் நடைகளுக்கும் இடையூறு நேராது என்பது கிராமத்தார்களின் நம்பிக்கை. வீரபத்ரனின் கதையை உரையாடல்களோடு வர்ணிக்கின்றனர். இதனைத் தொடர்வது சமளா, காடே, டிரம் தோளு, ஷெனாய், தாளக் கருவி போன்றவைகளின் இசைகளுக்கேற்பவும், பாத்திரங்களின் தன்மைகளுக்கேற்பவும் வாள், கேடயம் ஏந்தி வீராவேசமாகச் சுழன்று, சுழன்று ஆடும் ஆட்டம்.*

*காவி வேட்டி, வெள்ளைச் சட்டை, மஞ்சள் வண்ணத் தலைப்பாகை, கழுத்தில் உருத்திராட்ச மாலை, இடுப்புப் பட்டியினூடே பித்தளைத் தகட்டினாலான தட்சனின் தலைகள், முழங்கையின் மேலே வீரபத்ர கடவுளின் உருவம் தாங்கிய தகடு ஆகியன ஆட்டக்காரர்களின் ஒப்பனைகள்.*

*"இளைய தலைமுறையினரான உங்களுக்கு இவ்வாட்டத்தைக் கற்று ஆடவேண்டுமென ஏன் ஆர்வம் வந்தது?" எனக் கேட்டபோது, "வீரகாசே கிராமியக் கலையென்பதாலும் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வருவதாலும் இதனை நாங்கள் ஆடுகிறோம்" என்றார், சிக்க மகளூர்த் தாலுக்கா கடூர் கிராமவாசியான முப்பது வயதுள்ள பசவராசு என்பவர்.*

*துரித கதியில் ஆடும்போது மேளம் நடுவிலும் ஆடுவோர் சுற்றிலுமாக வருவர். பொதுவான நிகழ்ச்சிகளில் வீரகாசே இடம் பெறுவதில்லையென்றும் ஆட்டத்தைப் புனிதமாகக் கருதுவதால் கடவுள் வழிபாட்டின் போது மட்டுமே கடைப்பிடிப்பதாகவும் சொல்கிறார்கள்.*

*- நன்றி: கருநாடக நாட்டுப்புற இயல்-ஓர் அறிமுகம்*

*-இறையடியான்*

# ஒட்டக்கூத்தர் கண்ட வீரபத்திரர்

பேரா. முனைவர் சரளா இராசகோபாலன் எம்.ஏ., பி.

பரணி என்பது தமிழில் உள்ள 96வகைப் பிரபந்தங்களில் ஒன்று. ஆயிரம் யானைகளை வென்ற வீரனின் மேல் பரணி பாடப்பட்டது.

*"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற*
*மானவ னுக்கு வகுப்பது பரணி"*

என்று பரணிக்கு இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. தொல்காப்பியர் கூறிய வனப்பு எட்டனுள் இது விருந்து என்னும் வகைக்கு உரியது.

*"காடு கிழவோள் பூத மடுப்பே*
*தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப்*
*பாகு பட்டது பரணிநாட் பெயரே"*

என்று திவாகரம் கூறுகிறது. படைக் கருவிகளால் அமைக்கப்பட்ட பரண்மேல் நின்று புலவரால் பாடப்பட்டதால் இது பரணி எனப்பட்டது என்று சிலர் கூறுவர். காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்ற பரணி என்ற நாண்மீனால் இதற்குப் பெயர் அமைந்தது என்றும் சிலர் சொல்வர். பரணி நாளில் கூழ் சமைத்துக் கூளிகள் காளிக்குப் படைப்பது மரபு. அதன் காரணமாகவும் பரணி என்ற பெயர் இவ்வகை நூலுக்கு அமைந்தது என்றும் கூறுவர்.

கலிங்கத்துப்பரணி, இரணியவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி முதலிய பரணி நூல்கள் பல உள்ளன. தக்கயாகப் பரணியும் சிறப்பான பரணி நூல்களுள் ஒன்றாகும். தக்கன், சிவபெருமானை அவமதித்து யாகம் செய்தான். அப்போது சிவபெருமான் வீரபத்திரரை அனுப்பி அந்த யாகத்தை அழிக்கச் செய்தார். தக்கனுக்கு உதவி செய்ய வந்த தேவர்களை வென்றார். இந்த நிகழ்ச்சிகளைப் பற்றித் தக்கயாகப் பரணி கூறுகிறது.

இந்த நூலைப் பாடியவர் ஒட்டக்கூத்தர். விக்கிரம சோழன், குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றவர் இவர். அதனால் மூவருலா பாடினார். இவருக்குக் குலோத்துங்கன் ஓர் ஊரைப் பரிசாக அளித்தான். அது இன்று கூத்தனூர் (தஞ்சை மாவட்டம்) என்ற பெயரால் உள்ளது. இவர் திருஞானசம்பந்தர்மேல் பக்தி கொண்டவர். இவர் பாடிய தக்கயாகப்பரணி, மற்றப் பரணிகளிலிருந்து சில துறைகளில் மாறுபட்டுள்ளது.

தக்கயாகப் பரணியின் சில மூல ஏட்டுப் பிரதிகளில் இந்நூலின் பெயர் 'வீரபத்திரபரணி' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்நூல் வீரபத்திரபரணி என்று அழைக்கப் பட்டமையை அறிய முடிகிறது.

இந்நூல் வைரவக் கடவுள் பெயரில் அமைந்த காப்புடன் தொடங்குகிறது. (பைரவன் என்பதும் வைரவன் என்பதும் ஒருபொருட்சொற்கள்) வீரபத்திரர் வைரவக் கடவுளின் கூறு என்பது ஒரு சாரார் கொள்கை. ஆகவே வீரபத்திரரின் வெற்றியைக் கூறும் இந்த நூலின் காப்பாக, வைரவக் கடவுளின் காப்பு கூறப்பட்டிருக்கலாம்.

வீரபத்திரர் சிவபெருமானுடைய கூறு என்ற காரணம் பற்றிச் சிவபெருமானுடைய சிறப்புகள் வீரபத்திரர் மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. வீரன் (405) குன்றவில்லி (511) நாயகன் (644) ஆதியானவன் (647)

ஐயா் (648, 618, 661) நக்கா் (649) ஆலமொன்றும் பண்டமுது செய்யும் ஐயா் (650) விடப்பட அணியோன் (619) பணி மதாணியோன் (654) நிசிந்தன் (658) அடிபெருங்கடவுள் (656) நாதன் (659) எங்கள் பிரான் (660) செம்மல் (662) மேருதரன் (724) என்று வீரபத்திரா் சிறப்பிக்கப்படுகிறாா். தாய் தந்தையரின் மரபணு மக்களுக்கும் வருவதாக அறிவியல் கூறுகிறது. தந்தை சிவனாரின் ஆற்றல், மகன் வீரபத்திரரிடம் அமைகிறது. இது இன்றைய மரபணுவை (Genes) உறுதிப் படுத்துகிறது.

தக்கயாகப் பரணியில் வீரபத்திரரைப் பற்றிய குறிப்புகள் கடைதிறப்பு (47) காளிக்குக் கூளி கூறியது. (333-727) கூழடுதலும் இடுதலும் (768), களங்காட்டல் 788, 793, 797) ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன.

## வீரபத்திரா் தோற்றம்

வீரபத்திரரின் தோற்றம் பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. சிவன் தன் சடைமுடியின் ஒரு பகுதியைத் தரையில் அடித்தவுடன் வீரபத்திரா் தோன்றினாா் என்று அபிதான சிந்தாமணி குறிக்கிறது. செவ்வைச் சூடுவாரின் பாகவதத்திலும் இக்குறிப்பு உள்ளது. சிவன் ருத்ர தாண்டவம் ஆட, உடலிலிருந்து வியா்வை கொட்டியது. அதிலிருந்து வீரபத்திரா் தோன்றினாா் என்று கன்னடத்து வீரகாசே கதை கூறுகிறது. சிவன் தன் கூறிலிருந்து வீரபத்திரரைத் தோற்றுவித்தாா் என்று காஞ்சிபுராணம் கூறுகிறது. நெற்றிக்கண் வழியாக இவா் குமரனாக வெளிப்பட்டாா் என்று சிவமஞ்சரி என்னும் நூல் கூறுகிறது. சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரா் தோன்றினாா் என்று கந்தபுராணம் கூறுகிறது.

*"அன்றுவானவ ருய்யவையா் மிடற்றடக்கிய ஆலமே*
*சென்றுவானவ ருயிர்கொளத்திரு வுள்ளம்*
*வைத்தமை தெரியவே"* **(333)**

*"காலைநெற்றியி னகிலமுஞ்சுடு கனலிகுறைபட*
*விறைவா்தம்*
*மேலைநெற்றி விழிக்கவந்து பணிந்துநின்றனன்*
*வீரனே"* **(334)**

என்று தக்கயாகப் பரணி கூறுகிறது. தேவா்களும், அசுரா்களும் உயிா் பிழைப்பதற்காக இறைவன் ஆலகால விடத்தை உண்டாா். இப்போது அவா்களின் உயிரை அழிப்பதற்காக இறைவனுடைய மிடற்று நஞ்சே வீரபத்திரராக உருவெடுத்தது. இறைவனின் சினத்திற்கு முன்னால் நடுப்பகல் கதிரவனின் வெம்மையும் குறைவு என்னும் படியான நிலையில் இறைவனின் நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரா் தோன்றினாா். இறைவன் திருநயனம் யோகப்பயிற்சியால் தோன்றியது. அதனால் கோதண்டவெளி, யென்றும் கோதண்ட வெள்ளம் என்றும் புருவத்து மேலதென்றும் கூறப்படுவதை ஞானயோகங்களிலும் அட்டாங்கயோகங்களிலும் யோகபட்ச சாத்திரங்களிலும் காணமுடிகிறது. யோகீஸ்வரனான இறைவனின் யோகப் பயிற்சியால் தோன்றியதால் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவராக வீரபத்திரா் விளங்கினாா் என்பது பெறப்படுகிறது. யோகப் பயிற்சி அறிவியல் சாா்ந்ததாகக் கருதப்படுகிறது. விடம், அழிப்பதற்குத் தோன்றியது போன்று வீரபத்திரா் அழிப்பதற்காகவே தோன்றியவா் என்று அவா் பிறப்பதற்கான காரணம் கூறப்படுகிறது.

## போா்க்கோலம்

இறைவன் தன் முன்னே நின்ற வீரபத்திரரைப் பாா்த்து

*நின்ற வீரனை மாமன் வேள்வி தகா்க்கவென்று*
*நெடுஞ்சிலைக்*
*குன்றவீரா் பணித்தலும்பணி யாமல்வந்தன*
*கூளியே"* **(335)**

என்று சிவபெருமான் ஆணையிட்டார். வீரபத்திரர் திருமலையை வலம் வந்து பூதகணங்களும், பிசாசகணங்களும் பெருந்திரளாகச் சுற்றி நிற்க 'உலகு' என்னும் தேரில் ஏறி வந்தார். அவர் பொதியில் வாழ் முனிவரான அகத்தியரின் புராணநூலில் கூறியபடி தும்பைமாலை சூட்டிக் கொண்டார். காஞ்சிபுரத்திலிருந்த மாமரத்தின் துளிரைத் தலையில் வைத்துக் கொண்டார். திரிபுரம் எரித்தபோது ஏந்திய அம்பு போன்ற மற்றொரு அம்பை வலக்கையில் ஏந்தினார். பன்றி (பூமியை மீட்ட திருமால்) சிங்கம் (நரசிங்கம்) ஆகியவற்றைக் கொன்ற அம்புகளை எடுத்துக் கொண்டார். அவர் வில்லின் நாணொலி எழுப்பினார். அது அண்டங்களின் சுவர்களைப் பிளந்து சென்றது. அவர் எறிந்த சூலம் நெருப்பைக் கக்கியது. அவர் அருகில் மாலை வெண்குடை இருந்தது. நந்திக்கொடி அசைந்தது என்று அவருடைய போர்க்கோலம் விளக்கப்படுகிறது. இப்பகுதி தெய்வத்தின் போர்க்கோலமாக இல்லாமல் போருக்குச் செல்லும் வீரன் ஒருவனின் போர்க்கோலமாக விளக்கப்படுவதுகுறிப்பிடத்தக்கது. சங்கத் தமிழர் போருக்குச் செல்லும்போது, தும்பைப் பூவைச் சூடிக்கொண்டு போவார்கள். 'அதிரப் பொருவது தும்பை' என்று இலக்கணம் கூறுகிறது. வீரபத்திரரும் தேவர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போர் செய்வதாகக் கூறப்படுகிறது. ஒட்டக்கூத்தர் வீரபத்திரருக்கும் தேவர்களுக்கும் நடந்த போர்முறையைச் சங்ககாலப் போர்முறையாகக் கூறியுள்ளார். காஞ்சிபுரத்திலிருந்த மாமரத்தின் துளிரையும் அவர் தலையில் வைத்துக் கொண்டார் என்ற செய்தி காஞ்சிக்கும் மாமரத்திற்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. தமிழர்கள் தாவரங்களைப் போற்ற வேண்டும் என்ற கருத்தையும் குறிப்பாக அறிவிப்பதாகவும் தோன்றுகிறது.

**போராற்றல்**

வீரபத்திரரைச் சூரியனுக்கு ஒப்பாகக் கவிஞர் உரைக்கின்றார்.

*"இப்படையோடு மையன்மகராலயத்தில்*
*ரவிபோ லெழுந்தருளுமென்*
*றப்படையோடு நின்ற சுரர்சென்றுதங்க*
*ளரசற் கிசைத்த பொழுதே'' **(434)***

என்னும் உவமை சிறப்புடையது. கதிரவன் அழிக்கவும் செய்வான். ஆக்கவும் செய்வான். அவன் நுண்ணிய உயிரிகளைக் கொடிய வெப்பத்தினால் அழித்து விடுகிறான். அதே சமயத்தில் செடி, கொடி, விலங்கு போன்ற அஃறிணைகளையும் மனிதனாகிய உயர்திணைகளையும் வாழ வைக்கிறான். இந்த இரண்டு முரண்பட்ட செயல்களும் வீரபத்திரரிடம் பொருந்தி இருந்தன. தவறான வழியில் சென்ற தக்கனை அவர் அழித்தார். இது அவரிடம் இருந்த அழிக்கும் சக்தி. அவரிடம் ஆக்கச் சக்தியும் இருந்தது என்கிறார் ஆசிரியர். அவர் இறந்தவர்களை உயிர்ப்பித்தார். இது அவருடைய ஆக்க சக்தியாகும்.

இது அறிவியல் யுகம். அறிவியல் பல புதுமைகளை மனிதருக்கு அளித்துள்ளது. கெட்டுப்போன இதயத்தை எடுத்துவிட்டு வேறு ஒருவரின் இதயத்தைப் பொருத்தி நீண்டகாலம் உயிர்வாழும்படி செய்திருக்கிறது. இதை மருத்துவ இயலார் மாற்றுறுப்பு பொருத்துதல் (Transplantation) என்பர். தக்கனுக்கு ஆட்டுத்தலை பொருத்தப் பட்டிருப்பது இன்றைய அறிவியல் புதுமையை நினைவூட்டுகிறது. உடலின் ஒரு நுண்மைக் கூறிலிருந்து ஒட்டுருவாக்கம் (cloning) முறையில் ஆட்டையும் கன்றையும் உருவாக்கும் சிறப்பை வழங்கியுள்ளது. வீரபத்திரரின் தோற்றம் இந்த அறிவியல் புதுமையை எண்ணச் செய்கிறது. வருங் காலத்தில் இறந்த ஒருவர் சிலமணி

நேரமோ சில நாட்களோ அதற்கு மேலுமோ உயிர்ப்பித்து வாழவைக்கும் நிலைமை வரக்கூடும். வீரபத்திரர் இறந்த தேவர்களை உயிர்ப்பித்தார் என்ற செய்தி இந்த எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

வீரபத்திரரின் படைகள் எதிரிப் படைகளை அழித்தமை விரிவாகக் கூறப் படுகின்றது. (473-510) வீரபத்திரர் அழித்த உயிர்களைப் படைப்புக் கடவுளான பிரமன் மீண்டும் படைக்கிறான்.

*"அடப்படப் பொறா தமரர் தம்படை*
*படப்படப்ரசா பதிபடைக்கவே"* **(535)**

என்று பிரமன் மீண்டும் மீண்டும் படைப்பதாகக் கூறப்படுகிறது. தேவர்களையும் மானிட சாதியில் தேவர்களுடைய நாமம் இட்டாரையும் பேய்கள் கொல்கின்றன. (559)

*"தேரில்லை கரியில்லை பரியில்லை யிவைநிற்க*
*தேவென்பதோர்*
*பேரில்லை சுரராசன் விடுசேனை பேய்தின்று*
*பேயாகியே"* **(559)**

என்று தக்கயாகப்பரணி குறிப்பிடுகிறது. தேவர்கள் அழிந்ததால் மீண்டும் பத்துப் பிரமரும் தேவர்களைப் படைக்கிறார்கள். (591) அவர்களுடன் பத்திரகாளி போருக்குச் செல்கிறாள். மாகாளிப்படை வீரபத்திரர் படைக்கு முன்னே செல்கிறது. (592-596) காளியின் படைகளினால் தேவர்கள் இறக்கின்றனர். (597-617) பிரமனின் பத்துப் பிள்ளைகளும் மீண்டும் மீண்டும் தேவர்களைப் படைத்தமையைக் கணநாதர் வீரபத்திரரிடம் கூறியதால் வீரபத்திரரே போருக்கு எழுகிறார். வீரபத்திரர் போர்க்கோலம் கொள்ளுதல், பல பாடல்களில் கூறப்படுகின்றது. (624-634) தேவர்களும் தும்பை சூடிப் போர் புரிகின்றனர். மகாவிஷ்ணுகள் நடுவில் நிற்க, தேவர்கள் படைக்குத் தலைமை தாங்கித் தேவேந்திரன் வருகிறான். அவர்களுக்கும் வீரபத்திரருக்கும் நடக்கும் போர் கூறப்படுகிறது. (642-668) வீரபத்திரரால் தேவர்கள் அழிய அழிய, பிரமன் அவர்களை மீண்டும் படைக்கிறான். (669) மீண்டும் இந்திரன் போர் செய்யத் தொடங்கியபோது பிருதுவி, பாற்கடல், அக்கினி, காற்று, மின்னல், ஆதித்திய சந்திரர்கள், கூற்றுவன், மேகம், திக்கயங்கள் ஆகியவை வீரபத்திரர்க்கு எதிர்நிற்க மாட்டாமல் அஞ்சிப் புறங்காட்டு கின்றனர். (670-681) வீரபத்திரர் கொல்லாமலே இந்திரன் முதலியவர்கள் தாமே அழிகின்றனர். வச்சிராயுதன் தானேறிய மேகத்தின் உருமாற்றால் அழிகிறான். அக்கினித்தேவன், இயமன், நிருதி, மாருதன், சந்திரன், ஈசானன் ஆகியோரின் வாகனங்களே அவர்களை அழிக்கின்றன. வருணனை மீன்கள் உணவாக்கிக் கொள்கின்றன. (682-692) தக்கன் சார்பாக வந்த பிரமன், தசப்பிரம்மன்கள், விஷ்ணுகள் ஆகியோர் அழிகின்றனர். (693-697) திருமால் வீரபத்திரருடன் போருக்குச் செல்கிறார். படையிழந்த திருமாலுக்கு வீரபத்திரர் தண்டு, வாள், வளை, தனு, திகிரி என்பனவற்றைக் கொடுத்துப் போரிடச் சொல்கிறார். திருமால் அவற்றுடன் பொருதபோது வீரபத்திரரின் வெய்ய மழுவாள், அனைத்தையும் அழிக்கிறது என்று வீரபத்திரரின் போர்த்திறத்தைக் காளிக்குக் கூளி சொல்கிறது.

### தக்கன் முடிவு

வீரபத்திரருடன் போர் செய்த தேவர்கள் பேயாகினர். தக்கன், வீரபத்திரருடன் போர் செய்ததை ஆசிரியர் நேராகக் காட்டவில்லை. அவன் பேயானமையைக் கூறுவதால் அவனும் வீரபத்திரருடன் போர் செய்தமை குறிப்பாக உணர்த்தப்படுகிறது. பேய்கள் கூழ் செய்து எல்லாப் பேய்களுக்கும்

பரிமாறுகின்றன. மாகாளி அதைப் பார்வையிடுகிறார். அப்போது,

*"மாய்கு டிக்கு நிமித்த மாக*
*மகட்பெ றுந்திரு மாமடிப்*
*பேய்கு டிக்க வநேக கோடி*
*மடாவெ டுத்தலை பெய்ம்மினோ" (768)*

என்று தட்சன் பேய்க்குக் கூழ் ஊற்றப் படுகிறது. களங்காண்பதற்காக இறைவனும் எழுந்தருளுகிறான். சிவபெருமான், தேவிக்குப் பேய்களைக் காட்டுகிறான். அப்போது தக்கனுடைய பேயையும் பார்த்த தேவி சினம் ஆறுகிறாள். இறைவனிடம் வேண்டுகிறாள். சிவபெருமான் தக்கனுக்கு மோத்தைத் தலை (ஆட்டுக்கிடா) அருளுகிறான்.

*"மிக்கன பேசித் தம்மை*
*வேள்வியி லிகழ்ச்சி செய்த*
*தக்கனை முதிய மோத்தைத்*
*தலைபெற அருளிச் செய்தே" (797).*

என்று ஒட்டக்கூத்தர் கூறுகிறார்.

சிவபெருமான் தக்கனுக்கு மோத்தைத் தலை அருளியமை கடைதிறப்பிலும் கூறப்படுகிறது.

*"ஊத்தைத் தலைநீத் துய்த்தொழிந்த*
*வொருமா மடிகள வொருமுருட்டு*
*மோத்தைத் தலைபெற் றமைபாட*
*மூரிக் கபாடந் திறமினோ" (47)*

என்று பொல்லாத் தலையை அழித்து தக்கனார் மோத்தைத் தலையைப் பெற்ற (ஆட்டுத்தலை) புராணக்கதையைப் பாடப் பெரிய கதவுகளைத் திறமின் என்று வேண்டுகின்றனர்.

**முடிவுரை**

தக்கயாகப் பரணி, வீரபத்திரர் பரணி என்ற ஒரு காலக்கட்டத்தில் சிறப்பிக்கப் பட்டது. வீரபத்திரர் வைரவராகவும் சிவபெருமானாகவும் கருதப்படுகிறார். வீரபத்திரரின் ஆற்றல் காரணமாக வீரர் என்றும் தலைமைத்தன்மை காரணமாக ஐயர் என்றும் அவர் போற்றப்படுகிறார். சிவனுடைய சிறப்புகள் வீரபத்திரருக்கு ஏற்றிக் கூறப்படுகின்றன.

பரணி நூலாதலால் போருக்கு முதன்மை கொடுக்கப்படுகிறது. வீரபத்திரர் தக்கனுடன் போரிட்டதாக நேரிடையான குறிப்பில்லை. தேவேந்திரன், பிரமன், திருமாலுடன் நடந்த போர்கள் விரிவாகக் கூறப்படுகின்றன.

பூதகணங்கள், மகாகாளி ஆகியோர் போர் செய்ய முடியாத நிலையில் வீரபத்திரர் போர் செய்வதாகக் காட்டுவது அவருடைய பேராற்றலை-போராற்றலை - அறிவிக்கிறது. பிரமன், திருமால் ஆகியவர்களை அழிப்பதாகக் காட்டுவதன் மூலம் வீரபத்திரரின் ஏற்றம் கூறப்படுகிறது. இது சைவ, வைணவ சமயப் போராட்டத்தை மறைமுகமாகப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது.

தொல்காப்பியரின் புறத்திணை இலக்கணத்திற்கேற்ப வீரபத்திரரும், தேவர்களும் தும்பை மாலையைச்சூடிப் போரிடுகின்றனர். இது தமிழர் போர் முறையை அறிவிப்பதாக அமைகிறது.

வீரபத்திரன் சிவபெருமானின் யோகக் கண்ணிலிருந்து வருவதால் ஆற்றல் பெற்றவராகக் காட்டப்படுகிறார். அவருடைய ஆக்கல், அழித்தல் என்ற இரு செயல்கள் இன்றைய அறிவியலுக்கு உட்பட்டதாக உள்ளது. மரபணுத் தொடர்ச்சி, (Genes) ஒட்டுருவாக்கம், (cloning) மாற்றுறுப்பு பொருத்துதல் (Transplantation) ஆகிய அறிவியல் புதுமைகள் வீரபத்திரர் வரலாற்றில் அமைந்திருக்கின்றன. ❑

*With Best Compliments*

From

# DINAMALAR

(Tamil Daily)

**Printed simultaneously from:**

Chennai, Vellore, Pondicherry, Erode, Salem, Coimbatore, Trichy, Madurai, Tirunelveli, Nagercoil.

அருள்மிகு வீரபத்திரரின்
அருள்
எல்லோருக்கும் பயன்பெற
எங்களது வாழ்த்துக்கள்

**லலிதா ஜுவெல்லரி மார்ட்**
**(பி) லிமிடெட்**

123, உஸ்மான் சாலை, பனகல் பார்க்,
சென்னை 600 017.
போன்: 8141577 - 8141155

# சமயப் பார்வையில் வீரபத்திரர்

பேரா. முனைவர், சாரதா நம்பி ஆரூரன் எம்.ஏ., பிஎச்.டி.

*அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்*
*முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்*
*உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்*
*தடிந்திடும் சேவகன் சரணம் போற்றுவோம்*
- (கந்தபுராணம்)

**வரலாற்றில் வீரபத்திரர்:**

உலகம் யாவையும் படைத்து, காத்து, அழித்து, அனைத்தையும் இயக்கி, ஒடுக்கி, தன்னுள்ளே ஆழ்த்தி, அதே சமயம் தான் அதனில் ஆழாது தனித்து நிற்பதே பரம் பொருள். அரு, உரு, அருஉரு மூன்று நிலைகளில் இப்பரம்பொருள் சிவமாக வழிபடப்படுகிறது.

ஆனந்தமாக ஆடும் போது நடராசராகவும் யோக நிலையில் தட்சிணாமூர்த்தியாகவும், தீயவற்றை அழித்து நல்லவற்றைக் காப்பதில் பைரவராகவும் அமைகின்றது.

சிவனுக்குரிய முகங்கள் ஐந்தும், ஐந்தொழில்களைச் செய்கின்றன. ஸத்யோ ஜாதம் படைப்புத் தொழிலைச் செய்யும் ப்ரும்ம ரூபமாகவும், வாமதேவம் காக்கின்ற விஷ்ணு ரூபமாகவும், அகோரம் அழித்தலைச் செய்யும் ருத்ரனாகவும், தத்புருஷம் மறைத்தலுக்குரிய மகேஸ்வரனாகவும், ஈசானம் அநுக்ரஹ காரியத்தைச் செய்யும் சதாசிவ ரூபமாகவும் இருந்து அருளுகின்றன.

சிவன் உச்சக்கட்ட கோபத்தில் அவதரிக்கச் செய்த மூர்த்தியே 'அகோர மூர்த்தி' என்ற அகோர வீரபத்ர மூர்த்தி.

சிவன், அகோர மூர்த்தி - அகோர வீரபத்திரர் - வீரபத்திரர் என்ற மூன்று நிலைகளில் அருள் புரிகின்றார்.

வரப்பலமுடைய மிகப் பெரிய வீரர்களும் விதி வசத்தால் சிவ நிந்தனை புரியும்போது அவர்களுக்கு மறக்கருணை புரிய அவர் கொள்ளும் உக்கிரக் கோலங் களில் ஒன்று அகோர மூர்த்தியாகும். இது சிவபெருமானின் பஞ்சதேகங்களில் ஒன்றான அகோரமூர்த்தமாகும். பார்வைக்கு உக்கிரமாக இருந்தாலும் இவருடைய மேனி இதமும் குளிர்ச்சியும் நிறைந்தது என்பதைக் கருப்பு வண்ணமும், தேள் மாலையும், சிலந்திப் பூச்சியும், பதினான்கு பாம்புகளும் குறிக்கின்றன. (இவ்வுயிரினங்கள் குளிர்ந்த இடத்தில் மட்டுமே வசிக்குமென்பது குறிப்பிடத் தக்கது). இவரைச் சுற்றித்



மாதவபெருமாள் கோயில், வீரபத்திரர்

தண்ணீரின் தேவதைகளான அஷ்ட பைரவர்கள் இருப்பதாகவும், இவருடைய உக்கிரக் கோலத்திற்கேற்ப 'அகோரேசி' என்னும் தேவியாகப் பார்வதி தேவி உறைவதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

அகோர மூர்த்தியையும், அகோர் சியையும் திருவெண்காட்டில் கண்டு தரிசிக்கலாம்.

தட்சனின் யாகத்தை அழிப்பதற்காக இறைவனின் உக்கிரமயமான தெற்கு முகத்திலிருந்து வெளிப்பட்டவரே அகோர வீரபத்ர மூர்த்தியாவார். இவருடைய சினத்தைக் கண்டு அஞ்சிய பூதர்கள் அவருடைய கோபத்தை மாற்றியமைக்க வேண்டினர்.

சிவபெருமான் தன் கண்ணின் வழியே தனது ஆயிரத்திலொரு கூறாக வீரபத்திரரைத் தோற்றுவித்து அவரிடம் தட்சனுடைய யாகத்தை அழிக்கும்படி கூறினார்.

இப்படிச் சிவபெருமானின் பஞ்சதேகத்தில் ஒன்றாகத் தோன்றிய அகோர வீரபத்திர மூர்த்தியின் வடிவமே திருப்பறியலூர் வீரட்டத்துள் எழுந்தருளியிருக்கும் சிவ மூர்த்தியாகும். இவர் எட்டுக்கரங்கள் கொண்டவர். வலது கரங்களில் வாள், கதை, சூலம், மழு ஆகியவற்றையும், இடது கரங்களில் கபாலம், கேடயம், மணி, உலக்கை ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார். இவர் காலடியில் தட்சன் வீழ்ந்து கிடப்பதைக் காணலாம்.

இந்த அகோர வீரபத்திரரின் தேவியான அகோர வீரமாகாளி உருவம் தாங்கி வெளிப் படாது அவருடைய திருமேனிக்குள்ளேயே ஒளி வீசிக் கொண்டிருப்பதால், இவருக்குத் தனியாகத் தேவியை அமைக்காமல் இவருடைய தலைக்குமேல் ஜ்வாலா முடியாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட அகோர வீரபத்திர மூர்த்தியின் ஆயிரத்திலொரு கூறாக அவருடைய நெற்றிக்கண் வழியாக எழுந்தவரே வீரபத்திரராவார். இவர் வில், அம்பு, கத்தி, கேடயம் ஏந்தியவர். இவருடைய தேவியான பத்ரகாளி வில், அம்பு, கத்தி, கேடயம் ஏந்திப் போர்க் கோலத்துடன் நிற்கிறாள்.

இவற்றை வரிசைப்படுத்திப் பார்க்கையில் திருவெண்காடு முதலிய தலங்களில் வீற்றிருக்கும் அகோரேசி உடனுறை அகோரமூர்த்தி, திருப்பறியலூரில் வீற்றிருக்கும் அகோர வீரபத்ர மூர்த்தி ஆகிய வடிவங்கள் சிவபெருமான் நேரடியாக அன்பர்களைக் காக்க மேற்கொண்ட திருக்கோலங்கள் ஆகும்.

மேலே குறித்த அகோர வீரபத்திரரின் நெற்றிக் கண்ணிலிருந்து, மூலசிவத்தின் ஆயிரத்திலொரு கூறாக வீரபத்திரர் வெளிப் பட்டதால் சிவகுமாரர் என்று அழைக்கப் படுகிறார்.

சிவபெருமானின் மகேச மூர்த்தங்களில் குறிக்கப்படும் வீரேசன், வீரபத்திரன் என்பன அகோர முகத்தின் வெளிப்பாடான அகோர வீரபத்திரர் எனும் மூலசிவமே ஆவர். (சிவமஞ்சரி - 35வது மலர் ஸ்ரீ வீரபத்திரர், ப.1111)

## தமிழ் மறையில் வீரபத்திரர்

தேவாரத்துள் சிவபெருமான் நேரில் சென்று தட்சனின் யாகத்தை அழித்ததாகவே பாடப்பட்டுள்ளது. புராணங்களிலும், இதிகாசங்களிலும் வீரபத்திரனை அனுப்பித் தட்சனை அழித்ததாகக் கூறப்பட்டுள்ளது. தட்சனை அழித்த திருத்தலமான திருப்பறியலூரில் சிவபெருமான் அகோர வீரபத்திர மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இது அட்ட வீரட்டானத் தலங்களுள் ஒன்றாகும்.

தமிழ் வேதமான தேவாரம் சிவபெருமான் தட்சனை அழித்ததையும், பின்பு அவர்களுக்கு அருள் புரிந்ததையும் பல இடங்களில் குறிக்கின்றது.

தட்சன் தனது யாகத்திற்கு வந்த மலைமகளைத் தனது மகளென்றும் பாராமல் இகழ்ந்ததை

*மலைமகள் தனைஇகழ்வது செய்த*
*மதியறு சிறுமனவன்*

என்று ஞானசம்பந்தர் ( திருவீழிமிழலைப் பதிகம்) சுட்டியுள்ளார்.

வீரபத்திரர் தட்சன் வேள்வியில் கலந்து கொண்ட இந்திரன், சந்திரன், சூரியன், அக்னி ஆகியோரையும் தண்டித்ததை.

*தக்கனது பெருவேள்வி சந்திரன் இந்திரன்*
*எச்சன், அருக்கன் அங்கி*
*மிக்(க) விதாதா வினொடும் விதிவழியே*
*தண்டித்த விமலர்*

என்று குறித்துள்ளார் சம்பந்தர் (திருமுது குன்றப் பதிகம்)

சிவபெருமான் தட்சன் தலை வெட்டியது, பகன் என்னும் சூரியன் கண்களைப் பிடுங்கியது, பூஷண் என்னும் சூரியனின் பற்களை உடைத்தது, அவிசைப் பெற முயன்ற அக்னியின் நாவையும் கரங்களையும் வெட்டியது, வேள்வியைக் காத்து நின்ற யமனின் கால்களை வெட்டியது, சந்திரனைத் தேய்த்தது, தேவர்கள் மனம் திருந்தி அழுத போது அருள் செய்தது ஆகிய அனைத்தையும், திருநாவுக்கரசர் தனித்திருத் தாண்டகத்தில்,

*எச்சன் நிணைத்தலை கொண்டார்*
*பகன் கண்கொண்டார்*
*இரவிகளில் ஒருவன்பல்*
*விறுத்திக் கொண்டார்*
*மெச்சன் வியத்திரன் தலையும்*
*வேறாக் கொண்டார்*
*விறலங்கி கரங்கொண்டார்*
*வேள்வி காத்த உச்ச*
*நமன்தாள் அறுத்தார்*
*சந்திரனை உதைத்தார்*



வீரபத்திரர், மாதவ பெருமாள் கோயில் மயிலாப்பூர்

*உணர்வில்லாத் தக்கன்தன்,*
*வேள்வி யெல்லாம்*
*அச்சமெழ அழித்துக் கொண்டு*
*அருளும் செய்தார்*
*அடியேனை ஆட்கொண்ட*
*அமலர் தாமே*

என்று நாவாரப் போற்றுகின்றார்.

தட்சன் என்பது ஆணவத்தின் குறியீடு. "பணியுமாம் என்றும் பெருமை" என்பார் வள்ளுவர். அனைத்து நற்பண்புகளையும் ஆணவம் அழித்துவிடும். அகோரத்தில் தோன்றிய வீரபத்திரரை வழிபட்டால் ஆணவம் நீங்கும்.

திருவெண்காட்டில் உறையும் அகோர வீரபத்திரரை வழிபட்டால் பொறாமை மறையும்.

*சுருதியான் தலையும் நாமகள் மூக்குஞ்*
*சுடரவன் கரமும் முன்னியங்கிப்*
*பரிதியான் பல்லும் இறுத்தவர்க் கருளும்*
*பரமனார் பயின்றினி திருக்கை*
*விருதினான் மறையும் அங்கமோ ராறும்*
*வேள்வியும் வேட்டவர் ஞானம்*
*கருதினா ருலகிற் கருத்துடை யார்சேர்*
*கழுமல நகரென லாமே*

என்று ஞானசம்பந்தர் பரவுகின்றார்.

*வேகமுண்டா கியுமை சாற்றும் அளவினில்*
*மாமகந் கூடுமது தீர்க்க வடிவுடை*
*வீரனென் பான ஒருபராக்ரன் எனவர*
*- அன்று சோமன்*
*மேனியுந் தேயகதிர் தோற்ற எயிறுக*
*ஆன்உகும் திகையுற சேட்ட விதி*
*தலை வீழநன் பாரதியும் மூக்கு நழுவிட*
*- வந்த மாயன்*
*ஏக நின்றாகிய மன்தோற்று வதறிட வேகவுங்*
*காரமொடு ஆர்க்க அலகைகள்*

என்று அருணகிரிநாதரின் திருப்புகழில் தட்சனை, வீரபத்திரன் அழித்த வரலாறு விளக்கப்படுகிறது.

## வேதங்களும், இலக்கியங்களும் போற்றும் வீரபத்திரர்

சிவபெருமான் தட்சனை அழித்துத் தேவர்களைக் காத்தது மிகப் பழைமை யானது. ஆதலால் வேதம், புராணங்கள், மகாபாரதம் தொடங்கி இன்று வரை அது பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

மகா ஸ்காந்தம், சிவமகாபுராணம், பாகவதம், காசிக் காண்டம் முதலிய நூல்களில் இக்கதை விரிவாகக் கூறப்படுகிறது. தமிழில் கந்தபுராணம், தக்கயாகப்பரணி, திருக்குற்றாலப் புராணம், காஞ்சிப் புராணம், பறியலூர்ப் புராணம் போன்றவை விரிவாக இக்கதையைக் கூறுகின்றன.

அங்காளபரமேஸ்வரியின் பெருமைகளைக் கூறும் கதைப்பாடல்களிலும் தட்சயாக பங்கம் கூறப்பட்டுள்ளது. சிவனைப் போற்றும் நூல்களில் அட்ட வீரட்டமும் அதில் ஒன்றாகத் தட்ச சம்ஹாரமும் கூறப்பட்டுள்ளது.

கோரம் என்ற சொல்லுக்கு எதிர்ப்பதமே அகோரம். அதாவது அழகிய மூர்த்தி என்று பொருள்படத் தனியழகுடன் விளங்குபவர் அகோர வீரபத்திரர்.

மரகத மணியின் ஒளியை உடையவர்; கிண்கிணி அணிந்தவர்; சூரியன், சந்திரன், அக்னி மூன்றையும் முக்கண்களாக உடையவர்; சூலம், தண்டம், இவற்றை ஏந்தியவரான அகோர வீரபத்திர மூர்த்தியின் அருளை, அவரை வாயாரப் பாடி, மனத்தால் துதித்தால் பெறலாம்.

*மரகத மணி நீலம் கிண்கிணி ஜாலபத்தம்*
*ப்ரகடித ஸுமுகேசம்*
*பானு சோமாக்னி நேத்ரம் சூல தண்டோக்ர*
*ஹஸ்தம் விருதல மஹி பூஷம் அகோர*
*வீரபத்ரம் தந்நமாமி.*

தீமைகளை அழிப்பதற்காக இறைவன் கொண்ட கோபமும் நியாயமானதே;

*"நமஸ்தே ருத்ர மன்யவே"*

ஹே, ருத்ரா! உன்னுடைய கோபத்திற்கு நமஸ்காரம் என்று ஸ்ரீருத்ரம் ஆரம்பிக்கின்றது.

வீரபத்திரர் தோற்றம் எப்படி இருந்தது?

*"பார்த்த திக்கினில் கொடு முடி ஆயிரம்*
*பரப்பிச் சூர்த்த திண்புய வரையிரண்டாயிரம்*
*துளக்கிப் போர்த்த தாள்களில் அண்டமும் -*
*அகண்டமும் பெயர வேர்த் தெழுந்தனன்*
*வீரரில் வீரன்"*

என்று வர்ணிக்கப்படுகிறார். (உபாஸனா தெய்வங்கள் - அகோர வீரபத்திரர் - ப.4)

வீரபத்திரர் கண்களில் வீசும் பொறி, ஊழி வெங்கனலையும் கனன்று எழுந்த காட்சியை,

*மலையதிர்ந்தன மாதிரம் அதிர்ந்தன, வான*
*நிலையதிர்ந்தன, வீரர்கள் அதிர்தலும் நெடுநீர்*
*அலையதிர்ந்தன, மகம் செயும் மயன்*
*மகன் குடுமித்*
*தலையதிர்ந்திட அதிர்ந்தன வானவர் தொகுதி*

என்று வியக்கின்றார் கவிஞர்.

நாதமுனிகள் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் வீரபத்திரரைத் துதிக்கின்றார்.

*தக்கன் அகம் கொண்ட பெரும் செருக் கொழிய*
*வீரனெனத் தணலில் தோன்றி*
*நக்கர் தமக்கிடும் அவிசு நமக்கிடு என*
*மறுத்ததனால் நமனாரூரில்*
*அக்கணமே சேர்ப்பன் என அவன் வேள்விதனை*
*அழித்தே அருளால் நேர்ந்த*
*இக்கு மொழிக் காளியுடன் வாழ்*
*வீரபத்திரன் தாள் இதயம் சேர்ப்பாம்.*

திருவெண்காட்டில் சிவபரம் பொருளின் அம்சமான அகோர வீரபத்திரர் எட்டுக்கரங் களுடனும், ஏழு ஆயுதங்களுடனும் கம்பீரத்துடன் திகழ்வதைக்

*கருநிறமும் மணிமாலை புனையழகும்*
*வளையெயிறும் கவினைச் செய்ய*
*எரிசிகையும், நுதல் விழியும் நடைக்கோல*
*இணையடியும் இலக எட்டுக்*
*கரம் நிலவ மணி, பலகை, வெண்டலை, வான்*
*கடி துடியோர் சூல மேற்று வெருவ*
*மருத்துவனை யடர் அகோர சிவன்*
*துணைப்பதச் சீர் விளம்புவாமே*
*(உபாஸனா தெய்வங்கள் ப. 25)*

என்று போற்றப்படுகின்றார்.

அகோர மூர்த்தி, மாசி மாதம் கிருஷ்ண பக்ஷம், பிரதமை திதியில், பூர நட்சத்திரத்தில், ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணிக்குத் தோன்றியதாகக் கூறப்படுகிறது. இதே காலத்தில் ஆண்டுதோறும் இத்தலத்தில் அகோர மூர்த்தி ஐந்தாம் திருவிழாவில் புறப்பட்டு மருத்துவாசுரனை அடக்கும் திருவிழா நடைபெற்று வருகிறது.

*மருத்துவன் என்னும் அரக்கனையே*
*மாய்க்கப் பரமன் திருவடிவம்*
*பொருத்தமாய்க் கொண்டார் அகோர மெனப்*
*பொங்கி எழுந்தனர் வெண்காட்டில்*
*கருத்ததோர் மேனி கரம் எட்டில்*
*கத்தி உடுக்கை கபாலமுடன்*
*இருத்தியே கேடயம் வேதாளம்*
*எடுத்தவர் சூலம் மணிகொண்டார்.*

என்று 'மதி ஒளி' சரஸ்வதி மனமாரப் போற்றுகின்றார் (உபாஸனா தெய்வங்கள் பக். 35)

**வீரபத்திரரே சரபேசர்**

இரணியன் என்ற அரக்கனைத் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்துக் கொன்று, குடலை மாலையாக்கிக் குருதி குடித்துச் சினந்து ஆரவாரித்தார். அவருடைய சினத்தைச் சிவபெருமானே தீர்க்க வேண்டும் என்று தேவர்கள் முறையிட, சிவன் வீரபத்திரரை அனுப்பினார். வீரபத்திரர் எட்டுக் கால்களும், இரண்டு பெரிய சிறகுகளும், சிங்க முகமும், நீண்டு வளைந்த மூக்கும் கொண்ட சரபப் பட்சியானார். திருமாலுடன் போரிட்டு வென்றார். மாலின் சினத்தை அடக்கினார் என்கிறது சரப புராணம்.

**வீரபத்திரர் வழிபாட்டில் இன்றும் சிறப்பிடம் பெறும் தலங்கள்:**

சென்னையில் மயிலாப்பூரில் மாதவ பெருமாள் கோயில் அருகில் வீரபத்திரருக்குத் தனி ஆலயம் உள்ளது. திருமணக் கோலத்துடன் வீரபத்திரர் அபயாம்பிகை என்ற காளிதேவியுடன் காட்சியளிக்கிறார். இது இங்குள்ள தனிச்சிறப்பு.

சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து ஏழு கி.மீ. தொலைவில் உள்ள அனுமந்த புரம் மிகச் சிறப்பான வீரபத்திரத் தலமாகும்.

தட்சனை அழித்த பின் வீரபத்திரரும், பத்ர காளியும் சிவனை வணங்கினர். உங்கள் சினம் தணிந்து தென்னகம் சென்று குடியேறுக என்று சிவன் பணிக்க வெற்றிலைத் தோட்டத்தின் நடுவில் அமைந்துள்ள இவ்வூர் மனத்திற்குப் பிடிக்க வீரபத்திரர், இங்கேயே தங்கியதாகக் கூறப்படுகிறது.

அரன் மைந்தனாகிய வீரபத்திரர் வீற்றிருப்பதால் இத்தலம் அரன்மைந்தபுரம் என்றழைக்கப்பட்டு அனுமந்தபுரம் என மருவிற்றென்பர். மன நலம் குன்றியவர் களும் பேய், பிசாசு, பில்லி , சூனியம் இவற்றால் துன்புற்றவர்களும் இங்கு வந்து வழிபாடு செய்து நலம் பெறுகின்றனர்.

இங்கு வெண்ணெய்க் காப்பும், வெற்றிலைப் படல் சாற்றுவதும் சிறந்த பிரார்த்தனைகளாகும். வெற்றிலைப் படல் என்பது சுவாமியைச் சுற்றி அதற்கென உள்ள பிரபையில் வெற்றிலைகளைப் பொருத்துதலாகும் அரை வெற்றிலைப்படலுக்கு 6400 வெற்றிலைகளும், முழுப்படலுக்கு 12800 வெற்றிலைகளும் பயன்படுத்து கின்றனர்.

மேல் மருவத்தூருக்கருகில் பெரும்பேர் கண்டிகை உள்ளது. இவ்வூரின் மையத்தில் வீரபத்திரர் ஆலயம் உள்ளது. குடந்தைக் கருகில் உள்ள தாராசுரத்தில் ஐராவதேஸ்வரர் ஆலயத்தின் வடமேற்கு முனையில் வீரபத்திரர் ஆலயத்தில் தான் ஒட்டக் கூத்தர் தக்கயாகப் பரணியைப் பாடினார் என்பர்.

பெரிய சிவாலயங்களில் பரிவார தேவதையாக வீரபத்திரர் அருள் பாலித்து வருகிறார். இவர் அக்னி மயமானவர். ஆதலால் அக்னி மூலையான தென் கிழக்கில் வடக்கு (அ) மேற்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளார்.

ஆஞ்ச நேயர் வீரபத்திரரை வணங்கி ஞானமும் வீரமும் பெற்றதாகக் கன்னட நாட்டில் வழங்கும் பல புராணங்கள் கூறுகின்றன. தமிழ் நாட்டிலும் பல வீரபத்திர ஆலயங்களில் வீர ஆஞ்சநேயர் காணப்படுகிறார்.

**வழிபடும் நெறிமுறைகள்:**

அதிரப் பொருதல் தும்பை என்ற துறை. போருக்குரிய வீரபத்திரருக்கும் பிடித்தமானது தும்பை மாலை. தும்பை மாலை அணிவித்து வழிபட்டால் எதிரிகளால் வரும் தொல்லை நீங்கும். வெள்ளை நிறம் வைராக்யத்தின் அடையாளம். போருக்குச் சென்ற வீரபத்திரர் வெள்ளை யாடை அணிந்ததால், கரையில்லாத வெள்ளை யாடைகளே அவருக்கு உகந்தவை.

வெண்ணெய்க் காப்பு, வெற்றிலை போன்றவை குளிர்ச்சி தருபவை யாதலால், வீரபத்திரரின் சினத்தைத் தணிக்க உகந்தவைகள். செவ்வாய்க்கிழமை தோறும் கடைப்பிடிக்கப்படும் விரதம் வீரபத்திர விரதமாகும். சிவந்த பூக்களாலும், செஞ் சந்தனத்தாலும் வீரபத்திரரை வழிபடல் சிறப்பு.

ஐப்பசி மாதம் வரும் வளர்பிறை அஷ்டமியில் நோற்கப்படும் விரதம் மகா அஷ்டமி விரதம் என்றழைக்கப்படுகிறது. இந்நாளில் தும்பை, வலம்புரி (நந்தியா வர்த்தம்) முதலிய வெண்மலர்களாலும், வெண்பட்டாலும் வீரபத்திரரையும், பத்ரகாளி யையும் அலங்கரித்து வழிபடுகின்றனர்.

வீரபத்திரரும், பைரவரும் தீர்த்தங்களுக்குக் காவல் தெய்வங்களாக உள்ளனர்.

வீரபத்திரர் உக்கிர மூர்த்தியாதலால் அவர் பார்வைக்கு நேராகக் குளம், கிணறு ஆகியவற்றை அமைப்பது வழக்கம். வீரபத்திரர் வழிபாட்டால் ஆணவம் நீங்கும், பகை ஒடுங்கும்; அமைதி பெருகும் என்பதையே மேற்கண்ட வரலாறுகளும் புராணங்களும் உணர்த்துகின்றன. ❑

# கச்சியப்பர் கண்ட வீரபத்திரர்

பேரா. புரிசை. ச. நடராசன், திருப்பத்தூர்

திருமாலும் நான்முகனும் தன்பக்கத்திலிருக்க, தக்கன் இருக்கு வேதத்தில் வல்ல பெரியவர்களைக் கொண்டு மிகப் பெரிய யாகம் ஒன்றைச் செய்யத் தலைப் பட்டான். ஆன்மாக்களிலும் மனத்திலும் வியாபித்து அந்தர்யாமியாயிருக்கும் சிவபெருமானை விலக்கிவிட்டு, இமையோர்க்கு அவிகளை வழங்கித் திருப்தியடைந்தான் தக்கன். சிவ அபராதமான இந்த யாகத்தைத் தக்கன் இயற்றுவதையறிந்த நாரத மாமுனிவர், கைலாய மலைக்குச் சென்று, செல்வச் செருக்கால் மதியை இழந்தவனாகத் தக்கன், திருமாலையும் நான்முகனையும் பாதுகாப்பாளர் களாகக் கொண்டு தேவர்களுடன் செய்யும் விநோதமான யாகத்தைப் பற்றிச் சிவ பெருமானுக்கு எடுத்துரைத்தார். தந்தையெனப்படும் தக்கன் செய்யும் அந்த யாகத்தை அவன்பால் கொண்ட அன்பினாலே சென்று, கண்டு, விரைவில் திரும்பி வருவதாகக் கூறி, அதற்கான ஒப்புதலை வழங்குமாறு அன்னை தாட்சாயணி, பிரானிடம் வேண்டினாள். பிரானார், திண்ணிய செல்வச் செருக்குற்று, தேவர்களுடன் மயங்கித் தக்கன் செய்கின்ற யாகசாலைக்குப் பிராட்டி செல்ல வேண்டாம் என்றார். தாயோ, அறிவிலியான தனது தந்தை செய்யும் பிழைக்காகப் பொறுத்தருள வேண்டியதோடு, அந்த யாக சாலையைக் கண்ட உடனே திரும்புவதற்கு விடை தர வேண்டுமென வேண்டினாள். பெருமான், விநோதமான அந்த யாகத்தைக் காண வேண்டும் என்று விரும்பினால் சென்று கண்டு விரைவில் மீள வருகவென்று அனுமதியளித்தார்.

வேள்விச்சாலைக்குள் சென்ற உலக அன்னையாகிய உமாதேவியைக் கண்ட தக்கன் மிகக் கோபம் கொண்டான். தந்தை, தாயின்றித் தான் நினைத்தபடி நடக்கின்ற பித்தனின் மனைவியாகிய உமை, தான் பெற்ற புதல்வியைப் போல வந்தது ஏன்? எனக் கனன்று கூறினான். தான் பெற்ற மகளாக அவள் இருந்தாலும், அந்த உறவைத் துண்டித்து, பித்தனாகிய பெருமானின் மனைவி அவள் என்ற நோக்கோடு பேசும் அளவுக்கு அவன் ஆணவம் உற்றிருந்தான். தான் அவளை அழைக்கவில்லையென்றும், எனவே, பித்தனிடம் அவள் திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் கூறினான். மற்ற மருமகப் பிள்ளைகள் தன்னிடம் அன்பு கொண்டு, நடக்கின்ற காரணத்தால், அவர்களையும், தம் பெண்பிள்ளைகளையும் அழைத்து உரிய மரியாதை வழங்குவதாகச் சொன்னான். பூமியை முன்னர் உண்ட திருமால், அவருடைய புதல்வனான பிரம்மா ஆகிய யாவரும் தன்னை வந்து துதிக்கின்றார்கள். சங்காரத் தொழிலைச் செய்கின்ற தாமத குணவானாகிய சிவனும், அவன் மனைவியாகிய உமாதேவியும் தன்னை மதிப்பதில்லையென்ற காரணத்தால் அவர்களிடத்தில் தனக்கு வெறுப்பு உண்டு என்றான். மேலும், தான் இயற்றும் இந்த யாகத்திலே சிவனுக்கு அவிப்பாகத்தைக் கொடுக்கப் போவதில்லையெனவும், சிவபரத்துவம் பேசுகின்ற வேதவாக்கு களையும் மாற்றியமைக்கப் போவதாகவும் வஞ்சினம் கூறினான். இவற்றைக் கேட்ட உமையம்மை, வேதமனைத்தும் ''சிவனே முழுமுதல்" என்று அச்சத்துடன் புகழ்ந்து போற்றும் பெருமானுக்கு உரிய முதன்மை தராமல் செய்யப்பெறும் இந்த யாகத்தில்

கலந்து கொண்டுள்ள சிவத்துரோகிகளுக்கெல்லாம் தப்பாது தண்டனை கிடைக்கும்; யாகாதிபதியாகிய தக்கனுக்கும் உரிய தண்டனை கிடைப்பது உறுதியென்று சபித்தருளினாள். மீண்டும் கயிலாய தொன்மலைக்குச் சென்று பரம்பொருளாகிய சிவபெருமானைப் பணிந்து, தங்களைப் புறக்கணித்து ஒதுக்கி நிந்தனையாகத் தக்கன் செய்யும் பெருவேள்வியை அழித்தருள வேண்டும் எனத் தேவி இறைஞ்சி நின்றாள். பெருமான் தனக்கே உரிய பெருந்தன்மையோடு, யாகத்தை அழிக்க வேண்டும் என்று முறையிட்ட உமையின் வார்த்தைகளைக் கேளாதவர் போல இருந்தார். இதனையறிந்து கொண்ட தேவியார், தன்னை அவமதித்ததோடும் அமையாது உலக நாயகனாகிய பெருமானையும் இழிவுபடுத்தும் நோக்கத் தோடு அவன் இயற்றுகின்ற வேள்வியைச் சிதைத்தருளுதல் தக்கதேயென்று கூறி நின்றாள்.

"*மேயின காதலும் வெறுப்பு நீற்கிலை*
*ஆயினும் அன்பினேற் காக அன்னவன்*
*தீயதோர் மகத்தினைச் சிதைத்தல் வேண்டுமென்*
*நாயகனே யென நவின்று போற்றினாள்*"
(உமைவருபடலம் - பா - 61)

வேதநெறிக்குப் புறம்பாகச் செய்யப் பெறும் தக்கனது வேள்வி தகர்க்கப்பட வேண்டும் என்ற அன்னையின் வேண்டுகோளைச் செவியேற்றார் ஐயன். வேள்வியைச் சிதைப்பதற்காக வீரன் ஒருவனைத் தோற்றுவிக்க வேண்டும் என்று விரும்பினார் பெருந்தகை.

பாலசந்திரனைச் சூடிய மௌலிகளையுடைய ஆயிரம் தலைகளும், அண்டமுகட்டிற் சென்று பிரகாசிக்க, ஒளிவிடுகின்ற அரவ அரதன குண்டலங்கள் இணைந்த இரண்டாயிரம் காதுகளிலும் பொருந்தியிருந்து சுடர் விட்டசைய, ஆயிரம் முகங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கண்கள் பொருந்தி, கோபத்தினால் அக்கண்கள் வெளியிட்ட அக்கினிகளால் அண்ட முழுவதும் கரிந்து போக, மூக்கினிடத்து மிக்கெழுகின்ற மூச்சோடு ஒன்று பட்டு எழுந்த அக்கினியும் முகிலினிடத்துத் தோன்றுகின்றதொரு மின்னனலைப் போலப் பிரகாசிக்க, பிரம்மா, விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களுடைய கீர்த்திகள் முழுவதையும் ஒருங்கு உண்டபோது, அக்கீர்த்திகளில் சில, வாய் இதழ்களின் கடைகளில் ஓர் ஒழுங்கில் ஒழுகினாற் போல, பிறைபோன்ற வச்சிர தந்தங்கள் ஒரே தன்மையவாய் நின்று ஒளிவீச, நாசிகளினிடத்துத் தோன்றிய அக்கினியோ, கண்கள் உமிழ்ந்த அக்கினியோ, மனத்தின்கண் தோன்றிய கோபமாகிய கொடிய அக்கினியோ எட்டுத் திக்குகளையும் அழிக்கின்ற அக்கினிதான், அவ்வக்கினிகளில் எவ்வக்கினியாமோ என்று சிந்திக்க, உயிரினங்கள் அஞ்சி நிலை தளர, அண்ட கூடங்கள் பிளவுபட, அலைவீசும் கடல்கள் கலங்க, சங்கார மூர்த்தியைப்போல மேற்கொண்ட ஆரவாரம் திக்கு அனைத்தும் பரவி மேலோங்க, பாம்புக் கூட்டங்களை அழகிய கடகாபரணங்களாகவும் வாகுவலயங்களாகவும் அணிந்து வானளாவ நிமிர்ந்து இரண்டாயிரம் என்னும் தொகையைக் கொண்ட புயங்கள் எட்டுத் திக்குகளையும் நெருங்க, பிரம தேவர் முதலியோரின் சிரமாலையாகிய அடுக்கும்,அவர்களுடைய எலும்புகள் செறிந்த ஆபரணமும், பெரிய பன்றியின் கொம்பும், ஆமையோடும் பிறவும் மார்பில் பொருந்திய முப்புரி நூலொடு அசைந்து ஒளி செய்ய, ஈட்டி, பரிசை, இருப்புலக்கை, வளைதடி, வச்சிராயுதம், கத்தி, கழுமுள், சூலம், பெரும் சவளம், வில், அம்பு, தண்டாயுதம், சக்கரம், வாள், மழு, முதலாகிய அளவற்ற படைகள் கைகள்தொறும் விளங்க, பொன்னாலும், சிறந்த மணிகளாலுமாகி, கம்மியரால் செய்யப்பட்டனவாகாமல்,

இயற்கையாகப் பொருந்தும் பெரிய அணிகளோடு மணிச்சுடரினையுடைய சர்ப்பங்களாகிய ஆபரணங்களும் கலந்து திருமேனி முழுவதும், அணிய வேண்டும் இடந்தோறும் செறிந்து விளங்க, பிறவி தோறும் நீளுகின்ற வினைகளினால் உண்டாகின்ற சஞ்சலம் எனப்படும் துன்பமானது நீங்கப்பெற்ற தமது அடியார் கூட்டத்தை "அஞ்சற்க, அஞ்சற்க" என்று கூறும் சொற்களைப் போல அருள் மிகுகின்ற பாதங்களில் பூண்ட செஞ்சிலம்புகளும், பொன்னங்கழல்களும் மிக்கொலிப்ப அந்திக் காலத்து வானம் போன்ற சிவந்த திருமேனியை உடையவராகிய திரு நீலகண்டப் பெருமானின் வடிவமாய் வீரபத்திர உருத்திரர் என்கின்ற திறல் படைத்த முதல்வர் அப்பெருமானது நெற்றிக் கண்ணினின்றும் அவதரித்து அப்பொருமானின் திருமுன்பு நின்றார்

*"அந்திவான் பெருமேனியன் கறைமிட றணிந்த*
*எந்தை தன்வடிவாய் அவனுதல் விழியிடையே*
*வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ*
*முந்து வீரபத்திரன் எனும் திறலுடை முதல்வன்"*
(வீரபத்திரப்படலம் -பா - 14)

அப்பொழுது உமாதேவியார் தமது கோபாக்கினியினால், இரண்டாயிரம் செங்கை களையும், ஆயிரம் திருமுகங்களையும் உடையவராய், வீரபத்திரருக்குத் துணைவி யாய் பத்திரகாளியைத் தோற்றுவித்தருளினார். படைக்கலங்களுக்கு அதி தெய்வமாகிய அஸ்திர தேவரையும், அவருடைய துணைவியாகிய அஸ்திர சத்தியையும் போல, வீரபத்திர உருத்திரரும், பத்திரகாளி தேவியும், வந்து தோன்றியதைச் சிவபெருமானும் உமா தேவியாரும் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். கொடியோரை அழிக்கத் தோன்றிய வள்ளலாகிய வீரபத்திரக் கடவுள், பத்திரகாளியோடு, வீரக்கழல்கள் ஒலிக்க, உலகத் தந்தையையும், உலகத் தாயையும் வலம் வந்து வணங்கித் தொழுது நின்றனர். தாம் செய்ய வேண்டிய காரியம் இதுவென உரைக்குமாறு வீரபத்திரர் வேண்டினார். தக்கன் என்னும் தகாதவன் இயற்றுகின்ற யாக சாலைக்குச் சென்று தமக்குரிய அவிப்பாகத்தைக் கேட்க வேண்டுமெனவும் அவன் மதித்துக் கொடுத்தால், தம்மிடம் திரும்பி வருக எனவும், அவியைத் தர மறுத்தால், அவனுடைய தலையைச் சேதித்து அவனுக்குச் சார்பாக இருப்போரையும் வதைத்து, அந்த யாகத்தையும் அழித்திடுக என்றும் கட்டளையிட்டருளினார்.

*"தருதலின் றெனின் அவன் தலையினைத் தடிந்து*
*பரிவினால் அவன் பாலுறு வோரையும் படுத்துப்*
*புரியும் எச்சமும் கலக்குதி அங்கது பொழுதின்*
*வருதும் ஆயிடை ஏகுதி என்றனன் வள்ளல்"*
(வீரபத்திரப்படலம் -21)

வீரபத்திரக் கடவுள், பத்திர காளியுடன், மாதாவையும், பிதாவையும் முறையாகப் பணிந்து, தக்கனுடைய யாகத்தை அழிக்கத் திருவுளம் கொண்டு, விடைபெற்றுப் புறப்பட்டார். பெருஞ்சினம் கொண்ட வீரபத்திரர் ஆயிரக்கணக்கான பூத கணங்களை உண்டாக்கியருளினார். வீரபத்திரகாளியும் காளிகளின் கூட்டத்தைத் தோற்றுவித்தாள். முப்புரம் எரித்த முழுமுதல் தலைவனை விலக்கி விட்டுத் தீயோன், தீயோம்பும் சாலையின் வாயில்களையும், சுற்றுப் புறங்களையும் சோர்வின்றிக் காக்குமாறு தம்மோடு வந்த பூதகணங்களுக்கு ஆணையிட்டருளினார் வீரபத்திரக் கடவுள். அவ்வாறே அவர்கள் யாக சாலையைச் சுற்றிலும் நின்று காவல் மேற்கொண்டனர். தம்மை எதிர்த்த தக்கனது சேனைகளைக் கொன்று தின்றனர்.

வீரபத்திரக் கடவுளையும், தேவியையும் கண்ட பிரமா முதலான தேவர்களும் மற்றவர்களும், சிங்க ஏற்றின் வரவு கண்ட மான் கூட்டம் போலவும், இடியேறுண்ட

பாம்புகள் போலவும் நடுக்கமுற்றனர். வீரபத்திர தேவர் இடி இடித்தாற் போல் சிரித்து, அக்கினி தோன்ற விழித்து, பகைத்து, வெற்றிக் கொம்பை எடுத்து ஊதியருளினார். அண்டங்கள் யாவும் வெடித்தன. உயிர்கள் முற்றும் துடித்தன. ஓசை கேட்ட முனிவர்களும், அந்தணர்களும், தேவர்களும் உள்ளம் நடுங்கி உயிர்ப்பு ஒடுங்கினர். இதனைக் கண்ட யாகத் தலைவனாகிய தக்கன், பெருந்துன்பத்தில் மூழ்கினான். அஞ்சி நடுங்கினான் என்றாலும், அஞ்சாத வீரனைப்போல எழுந்து பத்திரரை நோக்கி, அவன் யார் என்றும், எதற்காக அங்கே வந்து ஆரவாரம் செய்கின்றான் என்றும் வினவினான். தான் சிவகுமாரன் என்றும், தன் தந்தைக்குரிய அவிப்பாகத்தைப் பெற்றுச் செல்வதற்காக அவரால் அனுப்பப் பெற்றுள்ளதாகவும் அவர் மறுமொழி புகன்றார். மதியற்றவனாகிய தக்கன் சிவபெருமானுக்கு வேள்விக்கண் அவிப்பாகத்தை உலகம் இனிக் கொடுக்காது என்று கூறினான். இதைக் கேட்ட நான்கு வேதங்களும், குடிலை என்றழைக்கப் பெறும் பிரணவமும், ஒப்பற்ற தனி முதல்வராகிய சிவபெருமானே யாகத்து அதிபதியாவார் - வேறு ஒருவர்க்கும் அத்தகுதியில்லை. ஆகவே, அப்பெருமானுக்கு வேள்வியிற் கொடுக்கும் பாகத்தைத் தக்கன் அளிக்க வேண்டும் எனச் செவியறிவுறுத்தின. அவன் அவ்வார்த்தைகளைச் செவிமடுக்காமல் புறக்கணித்த காரணத்தால், வேதங்களும், பிரணவமும், அவ்விடத்தை விட்டு எழுந்து அகன்றன. "சுடுகாட்டிற் பேதையாகிய பித்தி ஒருத்தியுடன் கூத்தாடுகின்ற பித்தனுக்கு அவிப்பாகத்தை வழங்க மாட்டேன்" என்று வன்மையாக மறுத்துரைத்தான் தக்கன். பிரமா முதலிய தேவர்கள் சிவபரத்துவத்தை உணர்ந்தவர்களாக இருந்தும், முழுமுதல் தலைவனுக்கு உரிய மரியாதையை, அவியை வழங்காது செய்யப்பெறுகின்ற யாகத்திற்கு உறுதுணையாக இருக்கின்றார்களா என வீரபத்திரர் வினவிய போது, தேவர்கள் ஒன்றும் கேளாதவர்கள் போல மௌனமாக இருந்தனர். இதனால் கோபமுற்ற வீரர், பாவம் செய்கின்றவர்களினும் பாவஞ்செய்கின்றவர் களை மதிக்கின்றவர்கள் மாபாவிகள் என்று கருதி ஏளனச் சிரிப்பு சிரித்தார்.

தனது கையிலிருந்த கதாயுதத்தினால் வீரபத்திரர், தக்கன் உள்ளத்தில் அச்சம் குடிகொள்ள, முதற்கண் விஷ்ணு மூர்த்தியினது அகன்ற மார்பில் அடித்தார். அவர் அதிர்ச்சியுற்று வீழ்ந்தார். அதன்பின், பிரம தேவனை நெருங்கி அவருடைய தலையில் இடிவிழுந்தாற் போல, இனி திருவவதாரஞ் செய்யப் போகும் குமரக் கடவுள் குட்டுவது போல ஒப்பற்ற தமது திருக்கரத்தால் குட்டியருளினார். பிரம தேவருடைய வாக்கிலிருந்த சரஸ்வதி தேவியின் மூக்கையும் தனத்தையும் தமது வாட்படையாற் கொய்தார் வீரபத்திரர். இவற்றையெல்லாம் கண்ட தேவர்கள் அஞ்சி நடுநடுங்கி ஒளிந்து கொள்வதற்கு இடம் தேடி மூலைக்கொருவராய் யாக சாலையில் சிதறியோடினர். இவ்வாறாகிய சமயத்தில் கலைகள் நிறையப் பெற்ற பூரண சந்திரனை வீரர் கண்டு, தமது திருவடியினால் உதைத்து, உடல் சின்னம் உறும்படி தேய்த்தார். அடுத்து, பயந்தோடும் சூரியனைத் தடுத்து நிறுத்தி அவன் பற்கள் உதிரக் கன்னத்தில் இடிஇடித்தாற் போன்று அடித்தார். அஞ்சுகின்ற பகன் என்ற மற்றொரு சூரியனின் கண்களைப் பறித்தார். உயிர்களை அடுகின்ற யமன் ஓடுதலும் அவனுடைய தலையை வெட்டினார். இதைக் கண்ட இந்திரன் மனம் வெறுத்துக் குயில் உருக் கொண்டு வானத்தில் பறந்தான். வீரர் அதனைக் கண்டு வாளினால் வெட்டிக் கொன்றார். சுழன்றோடிய அக்கினியைப் பிடித்துக் கையையும், ஏழு திறத்தனவாகிய நாக்குகளையும் அறுத்தார். அக்கினியின் மனைவியாகிய சுவாகாதேவியின் மூக்கைக் கூரிய நகத்தினாற் கிள்ளினார். வானிற்

செல்ல எழுந்த நிருதியைத் தண்டத்தால் அடித்தார். தம்மைப் பணிந்த உருத்திர கணத்தவரை மன்னித்து அனுப்பினார். வருணனை மழுவாயுதத்தால் தாக்கினார். வாயுதேவனை அம்மழுவாயுதத்தால் சிதைத்தார். குபேரனைத் திரிசூலத்தால் குத்திக் கொன்றார். ஈசானனை, உருத்திரரைப் போலவே மன்னித்து அனுப்பினார். சோனிதபுரத்து அரசனாகிய அசுரேந்திரனை வாளினால் வெட்டிக் கொன்றார். யாகத்தின் அதிதேவதை, பெண்மானின் உருவம் கொண்டு பெயர்ந்தோடியபோது, வீரர் வில்லை வளைத்து, ஓரம்பு தொடுத்து அதன் தலையை, அக்களத்தில் அழித்தருளினார்.

இவ்வழிவுகளைக் கண்டான் தக்கன். "என் பிதாவாகிய பிரமதேவரின் உபதேசத்தை யேற்றுத் தவம் செய்து சிவபெருமானுடைய காட்சியைக் கண்டு, அழிதல் இல்லாத வரங்களைப் பெற்றேன்; செல்வத்தில் மயங்கினேன்; உமையை மணஞ்செய்து கொடுத்துச் சிவபெருமானை மருமகனாகக் கொண்டேன்; வேதவிதிப்படி சிவ பெருமானுக்கு முதற்கண் கொடுக்க வேண்டிய அவியைக் கொடுக்காது நின்றேன்; 'இது தவறு' என்று ததீசி என்ற மாமுனிவர் உரைத்த வாய்மொழியையும் நிந்தித்தேன்; யாக சாலைக்கு வந்த என் மகளையும் இழிவாகப் பேசினேன்; வீரபத்திரர் வந்து அறிவுறுத்தி யதையும் பொருட்படுத்த வில்லை; வேத மொழிகளையும் புறந்தள்ளினேன்; எனவே, பிரமன் முதலாய தேவர் கூட்டத்திற்கும், முனிவர்களுக்கும், வேத பிராமணர்களுக்கும் ஏனையோர்க்கும் மீள முடியாத அழிவைச் சம்பாதித்துக் கொடுத்து விட்டேன்" என்று மனத்திற்குள்ளே நினைந்து வருந்தினான். என்றாலும், உயிர்போகும் தருணத்தில் தாம் முன் செய்து கொண்ட அறியாமையை நினைத்து வருந்துவதால் விளையும் பயன் ஒன்றும் இல்லை என்று கருதி, வீரபத்திரர் முன்பு வந்து நின்றான் தக்கன். சிவ பெருமானை இகழ்ந்துவிட்ட குற்றத்திற்காக, வாள் கொண்டு அவன் தலையை வெட்டியருளினார் அவர். தலை கீழே விழுவதற்கு முன்பாக, யாக குண்டத்தில் சுழலும் அக்கினியை நோக்கி, அத்தலையே அதற்கேற்ற ஆகுதியாகும் என்று உரைத்துக் கொடுத்தார் வீரர். அக்கினியும் ஒருநொடிப் பொழுதில் அத்தலையை உண்டு முடித்தது.

வேதவல்லி முதலிய தக்கன் மனைவியரும், அவனுடைய புதல்வியரும் அங்கு வர, பத்திரகாளியம்மை அவர்தம் தலைகளை வெட்டிப் பந்தாடினாள். பின்னர், காளியும், வீரரும், தண்டிக்கப்படாதிருந்த தேவர்களையும், முனிவர்களையும், கால்களினாலும், படைக்கலங்களினாலும், கொன்றார்கள். தக்கன் நூதன திருத்தம் செய்து நடத்திய யாகத்தை யழித்தார்கள். உடன் வந்த பூத கணங்களாகிய பெருவீரர்கள், யாக குண்டங்களில் எரிந்து கொண்டிருந்த மூவகை அக்கினிகளையும், சிவத் துரோகம் செய்து இழிவுபட்டவை என்று கூறி அவ்வக்கினி மீது சல விசர்ச்சனம் செய்து அதை அழித்தார்கள்.

தம்மால் பாதுகாக்கப் பெற்ற தக்கனது யாகம் இவ்வாறு எல்லாம் அழிக்கப்பட்டதை உணர்ந்து எழுந்தார் திருமால், வீரபத்திரரோடு போர்புரியக் கருதினார். தனது கோபாக்கினியால் தோன்றிய கருடனை வாகனமாகக் கொண்டு எதிர்த்தார். ஐம்பெரும் படைகளையும் ஏந்தினார். இத்தருணத்தில் ஆதிநாயகனாகிய சிவபெருமான் பெரிய தேர் ஒன்றை அனுப்பினார். வேதமாகிய குதிரைகளையும், அளவற்ற படைக்கலங்களையும் கொண்ட அத்தேர் வான் வழியே வருவதைப் பார்த்த, பிரம தேவர், சாரதியாக அமர்ந்து வீரபத்திரர்க்குத் தேர் செலுத்தி உய்வு பெற வேண்டும் என்று உள்ளத்தே

கருதினார். அவ்வண்ணமே தேர் மீது ஏறி, வீரபத்திரர் முன்னே சென்று தேரை நிறுத்தி, அதில் ஏறியமருமாறு வேண்டினார். திரிபுரம் எரித்த காலத்தில் சிவபெருமான் சென்றதைப் போல வீரர் அத்தேரேறித் திருமால் முன்பு சென்றார். திருமாலானவர், சிவபெருமானை நிந்தித்த தக்கனை அழிப்பதன்றி, அவன் சார்பாய் இருந்த மற்றவர்களையும் அழித்தது எந்த வகையில் நியாயம் என்று வீரரைப் பார்த்து வினவினார். பரம பதியை இகழ்ந்து தக்கன் செய்த யாகத்தில் அவியை உண்டவர்களுக் கெல்லாம், வேதம் முன்னமே கூறிய தண்டனையைத் தாம் தந்ததாக வீரர் உரைத்தார். திருமால், வீரர் ஆகியோர் இடையே போர் மூண்டது. தேவரின் ஆற்றலினால், திருமால் சார்ங்கம் என்ற வில்லையிழந்தார்; சக்கரத்தைப் பறி கொடுத்தார்; கதையைத் தொலைத்தார்; வாள் இழந்தார்; அனைத்தையும் இழந்து செய்வதறியாது திகைத்து நின்றார்.

வீரபத்திர தேவர் கேட்குமாறு, "கோபம் கொள்ள வேண்டா" என்று அசரீரி வாக்கொன்று ஆகாயத்திலே அப்பொழுது எழுந்தது. பெருமானுடைய உத்தரவு அது என்று கருதி வீரர் சாந்தம் உற்றார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார் போலப் பிரம தேவர், தக்கனது யாகத்தில் பங்கு கொண்டு, பெறத்தகுவது போன்று தோன்றிய அவிப்பாகத்தைப் பெற்று நுகர்ந்ததற்காகத் தம்மை பொறுத்தருள வேண்டும் என்று குறையிரந்தார். திருமாலும், ஆதியாகிய சிவபெருமானைப் பகைத்தவர் அடையத் தக்க தண்டனையென்று வேதங்கள் விதித்தவற்றையே வீரபத்திர தேவர் அருளினார் என்று கூறித் தம்மையொத்த தேவர்கள் செய்தது தவறே என்றும், வீரர் வழங்கியது நீதியேயென்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

இத்தருணத்தில் கங்கையும், கொன்றையும் சூடிய கண்ணுதற் பெருங்கடவுளும், தக்கன் மகள் எனத் தோன்றிய தாட்சாயணியாகிய உமையம்மையும் அங்கே வந்து தோன்றினர். பிரம்மாவும், திருமாலும், வீரபத்திரரும், வீரபத்திர காளியும் அவர்களைத் தொழுது வணங்கினர்.

பொன்னார் சடைமுடிப் புனிதனை நோக்கி, உமாதேவியார், தக்கனுக்கும், இமையோர்க்கும், ஏனையோர்க்கும், தன்னால் முடிவு உண்டாயிற்று என்று இந்த உலகம் உரைக்கும். எனவே, இப்பொழுது, இங்கே வீழ்ந்து கிடப்போர் உடற்குற்றங்கள் நீங்கி உயிர்பெற்றெழும் வண்ணம் அருள் செய்ய வேண்டும் என்று இறைஞ்சி நின்றார். "அவ்வண்ணமேயாகுக" என்று அருளிச் செய்த பெருந்தகை, வீரபத்திரரையனுப்பி, "உடல் சிதைவுற்றிருந் தவர்களுக்கு உயிரை மீண்டும் கொடுத்து எழுப்புக" என்று உத்தரவு இட்டார். களத்திற்குச் சென்று நின்ற வீரபத்திரர் அருளால் அனைவரும் உறங்கிக் கிடந்தவர், துயில் நீங்கி எழுவது போல, உயிர் பெற்று எழுந்தனர். "முன்னொரு காலத்தில் கங்கையைச் சடையில் தரித்துக் கொண்டதும், காய்கின்ற அக்கினியைத் தாங்கியதும், ஆலகாலத்தை அருந்தியதும், உமை நங்கை காண நடித்தலும் எங்கள் மீது கொண்ட பெருங்கருணையால் அன்றோ? மேலும் தக்கன் யாகத்தில் கலந்து கொண்ட சிவ நிந்தனை செய்தமைக்காகவும் எங்களைப் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டினர்.

பிரமதேவர் தமது மகனாகிய தக்கனுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று வேண்டினார். தலை வெட்டுண்டு எரிந்து போக, எஞ்சிக் கிடந்த குறையாகிய உடலைப் பானுகம்பர் என்னும் பூதத்தலைவர் கொண்டு வந்து கொடுக்க, வெட்டுண்டிறந்த ஆட்டின் தலையொன்றைக் கண்டெடுத்து, அந்தக் குறையுடலின் கண் பொருத்தினார் வீரபத்திரக் கடவுள். "வேதங்களாலே துதிக்கப்

படும் பரம பதியாகிய சிவபெருமானை நிந்திக்கும் இயல்பினராபாவிகள் இழிவாகிய இவ்வியல்பினர் ஆவர்” என்பதை யாவர்க்கும் புலப்படுத்துவாராய்த் தக்கனை எழுப்பியருளினார் வீரர். அசமுகனாகித் தக்கன் உயிர்பெற்று எழுந்தான். தையலோர் பாகனாய் வீற்றிருக்கும் சிவபெருமான் திருமுன்பு சென்று, தாம் இழைத்த பெரும்பிழையை மன்னித்து, அருள வேண்டும் என்று இறைஞ்சினான். தேவரையும், முனிவரையும் மன்னித்தது போலவே, தக்கனையும் மன்னித்து, அருள் சுரந்தான் கருணைக் கடலாகிய பெருமான். மேலும், வீரபத்திரை யோடு தம்மைத் துதித்து நிற்கும் வீரபத்திரரை வருக என்று அழைத்து, முருகனையும்; அவன் தேவியையும் ஒப்ப அந்த இருவரையும் மதித்து முதுகைத் தடவி, அவ்விருவருக்கும். நல்ல வரங்களைத் தந்தருளினாள் உமாதேவியார். வெற்றிமிக்க வீரபத்திரக் கடவுளுக்கு, மேலுலகத்தின் கண்ணதாகப் பொருந்துகின்றதொரு புவனத்தைக் கொடுத்தருள, யாகசங்காரத்தின் பொருட்டுப் பெருமானால் வழங்கப்பெற்ற தேரைப் பானுகம்பர் சாரதியாயிருந்து செலுத்த, அப்புவனத்துட் சென்று, பெரிய கோயிலையடைந்து, பூத கணங்கள் சூழ்ந்து வர, உளம் ஒத்த துணைவியாகிய வீரபத்திரையம்மையாருடன், வெற்றி பொருந்திய சிங்காதனத்தின் மீது வீரபத்திரக் கடவுள் இனிது விற்றிருந் தருளினார். ❑

*(கவிக்கொண்டல் கச்சியப்பர் பாடிய கந்தபுராணத்தில், தட்ச காண்டத்தில், வேள்விப்படலம், உமைவருபடலம், வீரபத்திரப் படலம், யாக சங்காரப் படலம் ஆகியவற்றில் மகாவீரபத்திரரின் தோற்றமும், சிறப்பும் சொல்லப் பெற்றுள்ளன.)*

## திருவெண்காட்டு வீரபத்திரர்

*“கருநிறமும் மணிமாலை புனையழகும்*
*வளையெயிறும் கவினைச் செய்ய*
*எரிசிகையும், நுதல் விழியும் நடைக்கோல*
*இணையடியும் இலக எட்டுக்*
*கரநிலவ மணிபலகை வெண்டலை, வாள்*
*கடிதுடியேர் சூலமேற்று வெருவ*
*மருத்துவனை யடர் அகோர சிவன்*
*துணைப்பதச் சீர்விளம்புவாமே”*

*மருத்துவன் என்னும் அரக்கனையே*
*மாய்க்கப் பரமன் திருவடிவம்*
*பொருத்தமாய்க் கொண்டார் அகோரமெனப்*
*பொங்கி எழுந்தனர் வெண்காட்டில்*
*கருத்ததோர் மேனி கரம்எட்டில்*
*கத்தி உடுக்கை கபாலமுடன்*
*இருத்தியே கேடயம் வேதாளம்*
*எடுத்தவர் சூலம் மணிகொண்டார்*

*-மதி ஒளி (சரஸ்வதி)*

# கச்சியப்பர் காட்டும் வீரபத்திரர்

பருத்தியூர் டாக்டர் மு. சந்தானராமன், எம்.ஏ., டி.லிட்.,பிஎச்டி.

**கச்சியப்ப** சிவாசாரிய சுவாமிகளின் கந்தபுராணத்திலுள்ள தட்ச காண்டம், சிவபரமான பல செய்திகளை உள்ளடக்கியுள்ளது. முருகன் தோற்றத்திற்கு முன்னால் நடந்த நிகழ்வுகளை விரிவாக உரைக்கிறது.

தட்ச காண்டம், உபதேசப் படலத்தில் தொடங்கி, வள்ளியம்மை திருமணப் படலத்துடன் நிறைவு பெறுகிறது. வீரபத்திரப் படலம், யாகசங்காரப் படலம் ஆகிய இரண்டு படலங்களில் வீரபத்திரரைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

## தோற்றத்தின் பின்னணி

தட்சன் சிவபெருமானை விலக்கி வேள்வி செய்தான். அறிவுரை கூற வந்த ததீசி முனிவரையும் தாட்சாயணியையும் அவமதித்தான் தட்சன். சிவபெருமானை இகழ்ந்தும் பேசினான். சிவநிந்தையைக் கேட்டு மனம் நொந்து திருக்கயிலை திரும்பினாள் தாட்சாயணி. தட்சன் ஆணவத்துடனும் தீய எண்ணத்துடனும் இயற்றிய வேள்வியை அழித்திடவேண்டுமென இறைவனிடம் முறையிட்டாள்.

*"மேயின காதலும் வெறுப்பும் நிற்கிலை*
*ஆயினும் அன்பினேற் காக அன்னவன்*
*தீயதோர் மகத்தினை சிதைத்தல் வேண்டும்என்*
*நாயகனே என நவின்று போற்றினாள்."*

## வீரபத்திரர் தோற்றம்

தேவியின் முறையீட்டைக் கேட்ட சிவபெருமானும் தட்சனுக்குத் தகுந்த பாடம் புகட்டத் திருவுள்ளம் கொண்டான். வெகுண்டவன் போல் தாண்டவமாடினான்.

*அந்தி வான்பெரு மேனியன் கறைமிடறணிந்த*
*எந்தைதன் வடிவாயவன் நுதல்விழி யிடையே*
*வந்த தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ*
*முந்து வீரபத்திர எனும் திறலுடை முதல்வன்*

அதாவது, அந்திவானம் போன்ற செம்மேனியுடைய சிவபெருமானைப் போன்ற வடிவத்துடன், அப்பெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரர் தோன்றினார் என்று கச்சியப்பர் உரைக்கிறார். முருகனுக்கு முன்பே ஈசனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர் வீரபத்திரர் என்பது தெளிவாகிறது. அத்துடன் அவர், ஈசனைப் போன்ற செம்மேனி உடையவர் என்றும் குறிப்பிடுகிறார், கச்சியப்பர்.

அதே நேரத்தில் அம்பிகையின் சினத்திலிருந்து பத்திரகாளி தோன்றினாள். அவள் இரண்டாயிரம் திருக்கரங்களுடன் தோன்றி வீரபத்திரருக்குத் துணையாகச் சென்று நின்றாள்.

வீரபத்திரரும், பத்திரகாளியும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கிப் போற்றினர். "எனக்குத் தாங்கள் அளிக்கும் பணிதான் என்ன?" என்றார் வீரபத்திரர்.

## இறைவன் இட்ட பணி

தட்சனின் வேள்விச் சாலைக்குச் சென்று தனக்குரிய அவிர்பாகத்தைக் கேட்கும்படியும், தட்சன் அதனைத் தர மறுத்தால், அவன் வேள்வியைச் சிதைத்து, அவன் தலையையும் அறுத்து, அவ்வேள்வியில் பங்குபெற்றவர்களைத் தண்டிக்கும்படியும் ஆணையிட்டான் ஈசன். உரிய நேரத்தில், தான் அங்கு வருவதாகவும் கூறினான்.

**வீரபத்திரர் புறப்பாடு - பூதகண வெளிப்பாடு**

தட்சனின் வேள்விச் சாலைக்குப் புறப்பட்டார் வீரபத்திரர். தமது மூச்சில் பல கணங்களைப் படைத்தார். அதுபோல்,

*மொழியினிற் பல பூதரை அளித்தனன், முளரி*
*விழியினிற் பல பூதரை அளித்தனன், வேணி*
*யுழியினிற் பல பூதரை அளித்தனன், உந்திச்*
*சுழியினிற் பல பூதரை அளித்தனன் தூயோன்.*

வீரபத்திரர் பல பூதரை வெளிப் படுத்தியது போல, பத்திரகாளியும் தனது சினத்திலிருந்து ஆயிரக்கணக்கான வீராங் கனைகளை வெளிப்படுத்தனாள். யாக சாலையில் நுழைந்த வீரபத்திரரையும், பத்திரகாளியையும் கண்டவர்கள் அஞ்சி நடுங்கினர்.

*ஈசனும் உமையுமே வந்து எய்தினர்*
*என்பார், அன்னார்*
*காய்சினம் உதவவந்த காட்சியர்*
*போலும் என்பார்,*
*பேசரிது அந்தோ! அந்தோ! பெரிதிவர்*
*சீற்றம் என்பார்,*
*நாசம் வந்திட்டது இன்றே*
*நம்முயிர்க்கெல்லாம் என்பார்.*
*தக்கனுக்கு ஈறும் இன்றே சார்ந்தது*
*போலும் என்பார்,*
*மிக்கதோர் விதியை யாரே விலக்க*
*வல்லார்கள் என்பார்,*
*முக்கண் எம்பெருமான் தன்னை*
*முனிந்து இகழ்கின்ற நீரார்*
*அக்கணம் முடிவர் என்றற்கு ஐயமும்*
*உண்டோ? என்பார்.*

*விமலனை இகழுகின்றான் வேள்வி*
*ஏன் புரிந்தான்? என்பார்,*
*நமையெலாம் பொருளென்று உன்னி*
*நடத்தினன் காணும்! என்பார்,*
*இமையவர் குழுவுக்கெல்லாம் இறுதி*
*இன்று ஆமோ? என்பார்,*
*உமையவள் பொருட்டால் அன்றோ*
*உற்றது ஈங்கு இதுஎலாம்! என்பார்,*

*ஈடுறு பூதர் யாரும் எங்கணும்*
*வளைந்தார் என்பார்,*
*ஓடவும் அரிது இங்கு என்பார்,*
*ஒளிந்திடற்கு இடம்எது? என்பார்,*
*வீடினம் காணும் என்பார், மேலினிச்*
*செயல்என்? என்பார்,*
*பாடுசூழ் அங்கி நாப்பண் பட்டபல்*
*களிறு போன்றார்.*

வேள்விச் சாலையில் வீற்றிருந்த வேதியர்கள், அமரர்கள், முனிவர்கள் அனைவரும் அடைந்த அச்சவுணர்வையும், அவர்கள் பதற்றத்தில் பேசிய சொற்களையும் கச்சியப்பர் மேற்கண்ட பாடல்களில் அழகுபட வருணிக்கிறார்.

"தட்சனே! இறைவனுக்குரிய அவியை அளித்திடு." என்றார் வீரபத்திரர், ஆனால், ஆணவத்தின் உச்சத்தில் இருந்த தட்சன், "கானில் பேயோடு ஆடல் செய்யும் பித்தனுக்கு ஈயேன்" என்று மறுத்து விட்டான். "இறைவனை மதியாது நடத்தும் வேள்வி உங்களுக்கும் உடன்பாடுதானா?" என்று பிரமன் முதலானவர்களைக் கேட்டார் வீரபத்திரர். அவர்கள் அனைவரும் தட்சனுக்குப் பயந்து வாளாவிருந்தனர். அதனைக் கண்ட வீரபத்திரர் கொதித்தார். தமது கதையால் திருமாலை ஓங்கியடித்தார். தட்சன் திடுக்கிட, திருமால் தரையில் வீழ்ந்தார்.

**கந்தனுக்கும் முன்னால் கமலாலயனைக் குட்டியவர்!**

*விட்டுமுன் வீழ்தலோடும் வீரருள்*
*வீரத்தண்ணல்*
*மட்டுறு கமலப்போதில் வான்பெருந்*
*தவிசில் வைகும்*

*சிட்டனை நோக்கி அன்னான்*
*சிரத்திடை உரும் உற்றுஎன்ன*
*குட்டினன் ஒருதன் கையால் மேல்வரும்*
*குமரனே போல்!*

இங்குக் கச்சியப்பர், வீரபத்திரரை "வீரருள் வீரத்து அண்ணல்" என்று புகழ்கிறார். பெருவீரர்களும் தட்சனுக்குப் பயந்து வாளாவிருந்த வேளையில் சிறிதும் அஞ்சாது அறங்காத்திட வீரப்போர் புரிந்ததால் கச்சியப்பர் வீரபத்திரரை இவ்வாறு புகழ்கிறார்.

அக்கினி, நிருதி முதலான அனைத்துத் தேவர்களையும் வீழ்த்திடச் செய்த வீரபத்திரர் முன் தட்சன் நின்றான்.

*கண்டு மற்றது வீரபத்திரனெனும் கடவுள்*
*கொண்ட சீற்றமொடு ஏகியே தக்கனைக் குறுகி*
*அண்டரொடு நீ ஈசனை இகழ்ந்தனை அதனால்*
*தண்டம் ஈதுஎன வாள்கொடே அவன்தலை தடிந்தான்.*

ஈசனை இகழ்பவர்க்கு உரிய தண்டனையாக வீரபத்திரர் தட்சனின் தலையை வாளால் அறுத்து வீழ்த்தினார். தண்டனை கொடுப்பதற்கு வீரபத்திரர் யார்? என்று வினவலாம். அதற்குப் பதிலளிக்கும் வகையில் கச்சியப்பர், " வீரபத்திரனெனும் கடவுள்" என்று குறிப்பிடுகிறார்.

வீரபத்திரரும் அவரது படைகளும் நிகழ்த்திய வீரப்போரில் அனைவரும் தண்டனை பெற்றனர். அதனால்,

*கையற்றனர், செவியற்றனர்,*
*காலற்றனர், காமர்*
*மெய்யற்றனர், நாவற்றனர்,*
*விழியற்றனர், மிகவும்*
*மையுற்றிடு களமற்றனர் அல்லால்*
*மலர்அயன்சேய்*
*செய்யுற்றிடு மகத்தோர்களில்*
*சிதைவற்றவர் இலையே.*

பிறகு, இறைவன் அங்குத் தோன்றித் தட்சனுக்கு உயிரும் ஞானமும் அருளினான். வீரபத்திரருக்கும், வீரமாகாளிக்கும் தேவரினும் மேலான பதத்தைக் கொடுத்தான்.

### நிறைவுரை

அம்பிகையின் வேண்டுகோளின்படி, தட்சனுக்கு மறக்கருணை புரிய ஈசனது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர் வீரபத்திரர். சிவனைப் போன்ற தோற்ற முடைய வீரபத்திரர், முருகனுக்கு மூத்தவர் என்ற நிலையில் இருப்பவர். பல திருவிளையாடல்களில் முருகனுக்கும் முன்னோடியாகத் திகழ்பவர். இவை கச்சியப்பர் தரும் தகவல்கள் ஆகும். ❑

### வீரபத்திரர்

*"பார்த்த திக்கினில் கொடுமுடி ஆயிரம் பரப்பி*
*சூர்த்த திண்புய வரையிரண்டாயிரம் துளக்கி*
*போர்த்த தாள்களில் அண்டமும் - அகண்டமும் பெயர*
*வேர்த் தெழுந்தனன் வீரரில் வீரன்"*

என்று மரகத மணியின் சோபையையுடையவராகவும், மணிவரிசைகள் ஓசையுடன் கூடியவராகவும், பூவுலகில் போற்றப்படுகிறவரும், கையிலே சூலம் தண்டம் இவற்றைத் தரித்தவரான அகோர வீரபத்திர மூர்த்தியை நமஸ்கரிக்கிறேன் என்று தியான ஸ்லோகம் இவரை வர்ணிக்கிறது.

'நமஸ்தேருத்ர மன்யவே' என்று ஹே, ருத்ரா உனது கோபத்திற்கு நமஸ்காரம் என்று ஸ்ரீருத்ரம் ஆரம்பிக்கிறது. எல்லா தெய்வத்திலும் மேலானவராகவும் வலியவருள் வலியவராகவும் ருத்ரரை ரிக்வேதம் வர்ணிக்கிறது.

*With Best Compliments from:*

# KUMAR ENGINEERING

CIVIL, ELECTRICAL ENGINEERS & CONTRACTOR

No. 12, 5th Street, Achuthan Nagar,
Ekkattuthangal,
Chennai - 600 097.
☎ : 231 7535
Fax : 044-2317535

**EXPERT EXECUTION OF YOUR EXPECTATIONS**

*With Best Compliments From:-*

# GOPURAM

Turmeric Powder & Kumkum

*For all Pooja and Religious Functions*

M/s Y.V. Seshachalam & Co.,
"GOPURAM MALLIGAI"
138, Audiappa Street,
Chennai - 600 001.

Call: 529 39 42 / 529 30 41.

GRAMS: SILKROSE

# கோட்டை வீரபத்திரர்

பேரா. டாக்டர் விஜயலட்சுமி இராமசாமி எம்.ஏ., பிச்.எடி.,

**சிவனின் அம்சம்**

தக்கன், சிவபெருமான் தன்னை மாமன் என்றும் மதியாது இருந்ததைப் பற்றிச் செருக்கடைந்து, சிவபெருமானை நீக்கி, ஒரு வேள்வி செய்யத் தொடங்கினன். அவ்வேள்வியை நாரதரால் அறிந்த தாட்சாயணி, சிவபெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு வேள்விச்சாலையை அடைந்தனள். தக்கன், தாட்சாயணியை அன்புடன் வரவேற்க வில்லை. எனவே சினம் கொண்ட தாட்சாயணி வேள்வியைச் சுடலையாகும்படி, சபித்தாள். அவ்வேள்வியில் பாய்ந்து உயிர் விட்டாள். சிவபெருமானை அவமதித்ததையும், தாட்சாயணி வேள்வியில் விழுந்து உயிர் விட்டதையும் அறிந்த சிவபெருமான், தனது திருச்சடையில் ஒன்றினை எடுத்து பூமியில் வீசினார். அதினின்று வீரபத்திரர் அவதரித்தார் என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது. சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதிலிருந்து வீரபத்திரர் தோன்றினார் என்று கந்தபுராணம் கூறுகிறது. சிவபெருமானின் வியர்வையி லிருந்து வீரபத்திரர் தோன்றியதாக வீரையன் அம்மானை கூறுகிறது. சிவபெருமானுக்கு விநாயகர், முருகர், பைரவர், வீரபத்திரர் என்ற நான்கு மகன்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர்தான் இந்த வீரபத்திரர் என்றும் கூறுவர். பார்வதி தேவியின் கால் கொலுசிலிருந்து தெரித்து விழுந்த ஒன்பது நவ மணிகளில் வீரபத்திரரும் ஒருவர் என்றும் கூறுவர். எப்படிக் கூறிய போதிலும், வீரபத்திரர் சிவபெருமானின் அம்சம் என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

வீரபத்திரர் இறைவனுடைய கட்டளையைப் பெற்று, தன்னுடன் தோன்றிய பூதகணங் களுடனும் தாட்சாயணி அனுப்பிய காளியுடனும் சென்று தக்கனது வேள்வியை அழித்தார். சிவபெருமானை மதிக்காமல் யாகத்திற்கு வந்த காரணத்தாலே, இந்திரன் குயிலாகப் பறந்தோடினான். அக்னி நா அறுப்புண்டான். பூசா என்னும் சூரியன் பல் இழந்தான். வீரபத்திரன் காலால் சந்திரன் தேய்ப்புண்டான். அவருடைய காலால் தக்கன் தலை அறுப்புண்டான். இதுமட்டுமல்லாமல் காளி ஒருபுறத்தில் இருந்து சரஸ்வதி, லட்சுமி, இந்திராணி முதலியவர்களை உறுப்பழித்தனள். இதனால் வேள்வித்தலைவனான யக்ஞபுருஷன் பயந்து மான் உருக்கொண்டு ஓட, ஒரு பூதம் மானின் தலையைத் திருகியது. இவ்வகையில் வெற்றி பெற்று வீரபத்திரர் என்னும் திருநாமம் அடைந்து, வீரமாகாளியுடன் அமர்ந்த சிவபெருமானின் அம்சம்தான் வீரபத்திரர். வீரபத்திரர் அசுகரன், பஞ்சமேட்டிரன், அக்னி முகன், சற்பாசுரன், வியாக்கிரன்; வீரமார்த்தாண்டன் முதலியவர்களைக் கொன்றவர்.

**கோயில்களில் வீரபத்திரர்**

வீரபத்திரர் சில கோயில்களில் மூலவராக இருந்தும், சில கோயில்களில் தனிச்சன்னதி பெற்றும், பரிவாரத்தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். சில இடங்களில் தூண்களில் மிகப்பெரிய சிலைவடிவிலும் காணப்படுகிறார். கருடஸ் தம்பங்களிலும் வீரபத்திரருடைய சிலை அழகோடு, சிற்பத்திறனோடு செதுக்கப் பட்டுள்ளது.

**வீரபத்திரர் கரங்களின் மகிமை**

வீரபத்திரர், நிருத்த ரூபமாக நான்கு கரங்களைப் பெற்றும், தச்சிண ரூபமாக ஆறு கரங்களைப் பெற்றும், அகோர வீரபத்திரராகப் பத்துக் கரங்களைப் பெற்றும், அஷ்டகாச ரூபமாகப் பன்னிரண்டு கரங்களைப் பெற்றும், மகாவீரிய ரூபமாகப் பதினான்கு கரங்களைப்

பெற்றும், தட்ச யக்ஞ ரூபராகப் பதினாறு கரங்களைப் பெற்றும், அகோர அஷ்ட ரூபமாகப் பதினெட்டுக் கரங்களைப் பெற்றும், பிரளய கால ரூபராக முப்பத்திரண்டு கரங்களைப் பெற்றும் ரூப தரிசனம் கொடுக்கிறார் என்று ரூப தரிசனம் என்ற நூல் கூறுகிறது.

### வீரபத்திரர் காட்சிச்சிறப்பு

சாந்த வீரபத்திரர், கல்யாண வீரபத்திரர், அகோர வீரபத்திரர், அக்னி வீரபத்திரர், திருமேனி தரிசன வீரபத்திரர், போர்க்கோல வீரபத்திரர், நடன வீரபத்திரர், அமர்ந்த கோல வீரபத்திரர் என்று பலவாகக் காட்சி தந்து, அவர் மக்களுக்கு அருள் வழங்கி வருகிறார். சிவபெருமானுடைய அட்ட வீரட்டங்களில் ஒன்றாக வீரபத்திரர் கருதப்படுகிறார். மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திருப்பறியலூர், வீரட்டத்தலமாகும். இங்கு வீரபத்திரர் மூன்று கண்கள், நான்கு கரங்கள், அக்னி ஜடை, கோரப்பற்கள், மணிக் கபாலம், தேள்மாலை, குறுகிய காற்சட்டை, பாதுகை அணிந்த கால்கள், கட்கம், கேடயம், தனுசு, பாணம் என்ற கருவிகளைக் கரங்களில் ஏந்திய வண்ணம் மிகுந்த சினத்தோடு காட்சி தருகிறார். பெரும்பான்மையாக எல்லாக் கோயில்களிலும் தாமரைப்பீடம் அமைந்துள்ளது. சிரசில் லிங்கம் அமைந்தும் காணப்படுகிறது. சில இடங்களில் கபால மாலை அணிந்து தோற்றமளிக்கிறது. வீரபத்திரர் சிலைக்குப் பக்கத்தில் தக்கன் ஆட்டுத் தலையுடன் சிறிய வடிவத்தில் நிற்பதாகவும் காணப்படுகிறார். குறிப்பாக அக்கினி வீரபத்திரர் கையில் வாளும், அகோர வீரபத்திரர் கையில் சூலமும், சில இடங்களில் இடையில் செருகப்பட்ட வாளும் கேடயமும் கொண்டு வீரபத்திரர் காணப்படுகிறார்.

### பவானிசாகர் வீரபத்திரர்

கொங்கு நாட்டைச் சேர்ந்த தற்போது ஈரோடு மாவட்டத்துச் சத்திய மங்கல வட்டத்திலுள்ள ஊர் தான் பவானிசாகர். சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தான் டணாயகன் கோட்டை. இக் கோட்டையில் இருக்கும் கோயிலின் பெயர் அருள்மிக வீரபத்திர சோமேஸ்வர ஆலயம். இத்தல இறைவனைத் தூர்வாச முனிவர், ஜனமேஜய அரக்கன் ஆகியோர் வணங்கினர் என்று கூறுகிறார்கள்.

### டணாயகன் கோட்டை

திருமலை நாயக்கர் காலத்தில், தண்டல் நாயகன், பவானிசாகரில் இக்கோட்டையை அமைத்தான். தண்டல் நாயகன் என்ற பெயர், காலப்போக்கில் தனநாயகர் கோட்டை என்றும் பின் அதுவும் மருவி டணாயகன் கோட்டை என வழக்கில் மாறியது என்கிறார்கள். இப்பொழுது உள்ள பவானிசாகர் அணைக்கட்டு, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் டணாயகன் கோட்டையாக இருந்தது. அக்கோட்டைக்குள் கோயில்கள் இருந்தன. அக்கோட்டைக்குள் இருந்த ஈஸ்வரன் கோவிலில் சுயம்பாக மிகப்பெரிய லிங்கம் ஒன்று இருந்ததாகச் சொல்லப் படுகிறது. டணாயகன் கோட்டைக்குக் கீழ்ப்பாகத்தில் சுமார் நான்காவது கல் தொலைவில் பவானி ஆறும், மோயாறும் கூடும் இடத்தில் கூடுவாய் என்னும் கிராமம் இருந்திருக்கிறது. அந்தக் கிராமம் அடிக்கடி இயற்கைச் சீற்றத்தால் அழிவுற்றது. எனவே அங்கு நாடு போற்றும் பவானி சாகர் அணை கட்டும் திட்டம் அரசால் தீட்டப்பட்டது. அந்தப் புதிய அணையின் நீர்த்தேக்கத்தால் டணாயகன் கோட்டைக் கோயில்கள் மூழ்கிவிடும் என்று அறிந்த அரசு, கோயிலில் உள்ள சுவாமி சிலைகளை அப்புறப்படுத்தி நூதன கோவில் ஒன்றைக் கட்ட உதவியது. இதற்கான பட்டயச்செய்தி கோயிலில் இருக்கிறது.

### பட்டயச் செய்தி

ஸ்ரீ விநாயக வீரபத்திர ஸ்ரீ லட்சுமி மாதவராயப் பெருமாள் மங்களாம்பிக ஸ்பேத

ஸ்ரீ சோமேஸ்வரர் ஆலயங்கள் பவானி அணைக்கட்டு நீர்த்தேக்கத்தில் முழுகப்பட்ட டணாயகன் கோட்டையில் இருந்த கோவில்கள் பக்த கோடிகளின் நன் கொடையினாலும் சர்க்கார் மனமுவந்து ஈந்த நஷ்ட ஈட்டுத் தொகையினாலும் இந்தத் திருப்பணிக்கென நியமனம் செய்யப்பட்ட கமிட்டியினால் கோவில் புதுப்பிக்கப்பட்டு, மகா கும்பாபிஷேகம் விஜயவருடம் ஆவணி மாதம் 11 ஆம் தேதியில் (27.08.1953) சிறப்புடன் நடைபெற்றறது.

## சாமிநாத சிவாச்சாரியார் முயற்சி

இந்தப் பவானி அணைக்கட்டு நீர்த்தேக்கத்தில், டணாயகன் கோட்டை மூழ்கிய போது, அக்காலத்தில் வளமாக வாழ்ந்து வந்த திருவாளர் சி.எஸ். சாமிநாத சிவாச்சாரியார் அவர்கள் தன்னுடைய அரும் பெரும் முயற்சியாலும், பக்தி நெஞ்சத்தாலும் பல விக்கிரகங்களை எடுத்து வந்தார். திருவாளர் சி. எஸ். சாமிநாத சிவாச்சாரியாருக்கு, டணாயகன் கோட்டை, பவானி அணைக் கட்டில் மூழ்கும் நிலையில், எப்படியாவது, என்ன பாடுபட்டாவது, கோட்டைக்குள் இருந்த கோயில் விக்கிரகங்களை எடுத்து வர வேண்டும் என்ற எண்ணம் அடிமனத்தில் ஆழமாகப் படிந்திருந்தது. அன்றைய காலத்தில் யாரும் கோயிலுக்குள் செல்ல முன் வரவில்லை. ஏனென்றால் கோட்டைக்குள் இருந்த, வீரபத்திரர் கோயிலுக்குள் பாம்புகள் மிகுதியாக இருந்தன. மனித நடமாட்டமே இல்லாது இருந்ததால் அங்கு மக்கள் செல்வதற்கே அச்சப்பட்டனர். அந்த நேரத்தில் சாமிநாத சிவாச்சாரியார் தன்னுடன் பத்துப் பேர்களை அழைத்துக் கொண்டு 5 பெரிய கூடைகளில் மணல் எடுத்துக் கொண்டு தீவட்டிகளையும் (தீப்பந்தம்) எடுத்துக் கொண்டு, வீரபத்திரரை மனத்தால் வணங்கிக் கொண்டு மிகத் தைரியமாகச் சென்றார். அக்கோயிலுக்குள் சென்று சாமி சன்னதி முதற்படிக்கட்டு வரை மணலைக் கொட்டிப் பரப்பிவிட்டுவிட்டு வந்தார். பாம்பு இருக்கும் இடத்தில் மணலைக் கொட்டினால் பாம்பு போன்றவை, அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்றுவிடும். மணல் உள்ள இடத்தில் பாம்பு வாழவும் இயலாது, புற்றுக் கட்டவும் இயலாது என்பதாலும், சிவாச்சாரியார் அந்த இடத்தில் மணலைக் கொட்டினாராம். இரண்டு மாதம் கடந்ததும் இரண்டு லாரியுடன் 100 பேர்களை அழைத்துக் கொண்டு அங்குச் சென்று நீருக்குள் முழ்க இருந்த விக்கிரங்களை எடுத்து வந்தாராம். அவருடைய அயராத முயற்சியால்தான் இப்போது உள்ள கோட்டைக் கோயில் என்று அழைக்கப்படும் அருள்மிகு வீரபத்திர சோமேஸ்வர ஆலயம் இருக்கிறது என்பர். சாமிநாத சிவாச்சாரியாரே 27.08.1953 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்தார் என்ற செய்தியையும் அங்குள்ள பட்டயச் செய்தி கூறுகிறது. இவர் இன்றும் கோயிலைப் பராமரித்து வருகிறார். இப்போது இவருக்கு 82 வயது ஆகிறது. அருகில் ஒரு சிறு குடில் அமைத்து மகிழ்வுடன் குடும்பத்தோடு மிக எளிமையாக வாழ்ந்து வருகிறார். இது கோயில் மிகப்பெரிய கோயில். கோயிலைச் சுற்றியுள்ள 16 ஏக்கர் நிலமும், உக்காரத்தில் 28 ஏக்கர் நிலமும் கோயிலுக்குச் சொந்தமாக உள்ளன என்று கூறுகிறார்கள்.

கோயிலிலுள்ள சிலைகள் மிகப்பழங் காலத்தவை. நீலகிரி மலைப்பக்கம் சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் மலை அடி வாரத்தில் பழமையான மாதேஸ்வரசாமி கோயிலும் வீரபத்திரசாமி கோயிலும் பழங்காலத்தில் இருந்தன என்றும் அவைகள் பாழடைந்து விட்டன என்றும் சொல்கிறார்கள்.

## கருவறைக் கல்வெட்டு

கொங்கு நாட்டை ஆண்ட மூன்றாம் நரசிம்மன் என்பவன் தனது தந்தையின் நினைவாக நிர்மாணித்த சோமேஸ்வர மங்களாம்பிகை கோயிலின் கருவறையின்

மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டில், இக்கோயிலின் முற்காலப் பெயர் தோண்றீஸ்வர முடையார் கோயில் என்றும், இவ்வூர் துரவலூர்என்றும், இங்குள்ள முற்காலக் கோட்டை நீலகிரி சாதாரணன் கோட்டை என அழைக்கப்பட்டது என்றும் பல செய்திகள் கிடைத்துள்ளன.

குலதெய்வம் பவானிசாகர் கோட்டைக் கோயிலில் வீரபத்திரருக்கு, தனிக்கட்டடத்தில், தனியான சன்னிதியே உள்ளது. 6 அடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்தில் வீரபத்திரர் மிக அழகாகக் காட்சி கொடுக்கிறார். ஊட்டி, குன்னூரில் வாழும் லிங்காயத்தார்கள், ஒக்கிலியர்கள் ஆகிய இவர்களுக்கு வீரபத்திரரே குல தெய்வம். தவிர படுகால் இருளர், தெலுங்குச் செட்டியார், வீரஜங்கமர்கள். நாயக்கர் ஆகிய பலருக்கும் அவரே குல தெய்வம். இதனால் இவர்கள் வீரபத்திரருக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கோபுரம் எழுப்பி உள்ளார்கள். இவர்கள் இக்கோயிலுக்கு வந்து செல்கிறார்கள். மொட்டை அடிப்பது, காது குத்துவது, பொங்கல் வைப்பது ஆகிய எல்லாமே இங்குச் சிறப்பாக நடை பெறுகிறது. புரட்டாசி, மார்கழி மாதங்களில் திங்கட்கிழமை அன்று பொங்கல் வைக்கிறார்கள். நாள்தோறும் இரு காலப் பூஜைகள் நடை பெறுகின்றன. அனைத்துச் சைவ, வைணவக் கடவுள்களும் இக்கோயிலில் இருப்பதால் சிவராத்திரி, பிரதோசம், அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை, வைகுண்ட ஏகாதசி, தைப்பூசம், சதுர்த்தி, பங்குனி உத்திரம் முதலிய நாட்களில் சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றன.

## கோயில் அமைப்பு

இக்கோயிலின் மூலவர் சோமேஸ்வரர். அம்மன் மங்களாம்பிகை. உட்பிரகாரத்தில் விநாயகர், முருகன், மாதவப்பெருமாள், நவநீதகிருஷ்ணன், ஆஞ்சநேயர், நீலகண்ட நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், காலபைரவர், துர்க்கை, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. வீரபத்திரர் சன்னிதி தனியாக உள்ளது. அவர், 6 அடி உயரத்தில் மிகக் கம்பீரமான தோற்றத்தில் காட்சி தருகிறார்.

## மக்கள் நம்பிக்கை

வீரபத்திரரைக் குல தெய்வமாகக் கொண்ட மக்கள் மட்டுமல்லாமல், பவானி சாகர் ஊரிலுள்ள மக்களும், அவ்வூரைச் சுற்றி உள்ள மக்களும், கோவை, பெரியார், நீலகிரி மாவட்டத்தில் உள்ள மக்களும் பெரும் பான்மையாக இக்கோயிலுக்கு வந்து செல்கிறார்கள். வீரபத்திரர் கோயிலுக்குச் சென்று வந்தால் தீமைகள் எல்லாம் அகன்று நன்மைகள் வீட்டில் நடக்கின்றன. மனமுவந்து வேண்டிக் கொண்ட பக்தர்களுக்கு வாழ்க்கையில் துன்பம் நீக்கி இன்பம் நல்குபவர் வீரபத்திரர் என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. அதர்மம் எங்கெங்கெல்லாம் தலையெடுக்கிறதோ அங்கெங்கெல்லாம் தர்மம் நிலைக்க வேண்டும். இதைத்தான் எல்லாச் சமயங்களும், சமய இலக்கியங்களும், புராணங்களும் கூறுகின்றன. தீயகுணங்களை அழித்து, ஆட்கொள்வதே இறைவனுடைய பணியாகும். வீரபத்திரரும் இதைத்தான் செய்தார். தக்கனுடைய ஆணவத்தை அழித்து ஆட்டுத்தலை கொடுத்து ஆட்கொண்டு அருள் பாலித்தார். எனவே நாள்தோறும் வீரபத்திரரை வணங்குவோம். வாழ்வில் நலம்பல பெறுவோம். ❑

## துணை நூல்கள்


1. அபிதான சிந்தாமணி
2. கந்தபுராணம்
3. வீரையன் அம்மானை
4. ரூபதரிசனம்
5. சிவ தலங்கள்
6. பவானிசாகர் கோவில் தக்கார் (நேரில் கேட்டவை)
7. கோவில் குருக்கள் (நேரில் கேட்டவை)
8. கே.ஆர். அண்ணாமலை, திருப்பூர் (செய்திகளைச் சேகரித்துக் கொடுத்தவர்.)

# THE VEERABHADRA TEMPLE AT PILLAYARKUPPAM

PROF. S.N. CHOKKALINGAM

The shrine is located at Pillayarkuppam, a snug village which is 16 kms from Sriperumbudur. This is an ancient temple in the region of Thondaimandalam.

The history of the temple dates back 600 years, the later Chola period, when religious revivalism held sway. We are not able to ascertain the person who was responsible for the construction of this temple.

The 24-feet high main gopuram is made up of five segmentary stages. Looking at the five segments, a student of philosophy will recall the five coverings over the human beings

1) Annamaya Kosam - the body maintained by food.
2) Pranamaya Kosam - vital external organs.
3) Manomaya Kosam - mental organs with the faculty of thought.
4) Vigynanamaya Kosam - Organs of intellectual perception.
5) Anandamaya Kosam - The organ of supreme felicity in which the soul is essentially united with the Supreme.

The gopuram symbolises the striving of the human soul in its upward evolution, towards higher consciousness. Another interpretation of the five stages of the gopuram is that they correspond to the five sense organs' of the humans. Knowledge of himself and of the world is gained by man, only through his five sensory organs. By sublimating the senses man can ascend to higher level of consciousness.



Veerabhadran Pillayarkuppam

There is a vivid description of Daksha's yagnam on the northern side of the lowest segment of the gopuram. Lord Veerbhadra decapitated Daksha and threw his head into the Homa-Kundam. In this sculpture we see the crimson flames blazing and Daksha's swarthy head, with broad nose, large ears, bullish eyes, lying at the base of the sacrificial pit (Agni-Kundam). Moved by the earnest entreaties of Daksha's wife, Lord Shiva restored him to life, replacing his head with that of a goat. The penitent, humiliated, Goatheaded Daksha

with folded hands can also be seen next to the Agni-Kundam. On his left, stands Lord Shiva with a satirical smile, along with his consort Parvathi. On Daksha's right, are Vinayaka, Muruga and Veerabhadra, proclaiming that Good will triumph over evil.

High above, the three - headed Brahma seated in his couch at Brahmaloka, looks-down on the whole scene.

Sauntering to the southern side of the gopuram, we can see idols of Shiva, Parvathi, Ganapathi, Muruga, Naradar and Nandidevar. Nandidevar, chief of Lord Shiva's attendants is depicted with the staff of office in his left hand. In this delineation Naradar is seen in the standing position with a veenai in one of his hands. Dakshinamurthi is found seated on the southern section of the gopuram.

In the western periphery of the gopuram, the idols of Vishnu, Sridevi, Bhoodevi, Saraswathi and Lakshmi can be seen.

Unconnected to these main sculptures there are subsidiary statues of eight bulky, husky, rotund men - (Gundhodharas), propping up the structure. There are also fourteen bulls erected at various points in the gopuram. All these carvings are characterized by fine attention to detail, such as folds of garments, finger and toe-nails etc.

While crossing the portal of the temple we see Lord Shiva and His spouse, nestling in a niche of the entrance wall. There is an impressive 10 feet wide praharam, inside the temple compound. We enter the mandapam through its north-facing entrance. There is an idol of Veerabhadra atop the entrance, on the gopuram, facing eastwards. On entering the mandapam there is a Vinayaka idol. Passing this, we approach the sanctum sanctorum and have a dharshan of Lord Veerabhadra. To the left of the Moolavar, are the Panchaloha idols of Veerabhadra and Bhadrakali (Utsavars).

At the entrance to the sanctum sanctorium rows of brass oil lamps are seen, mounted on a metal frame. These lamps are lighted during the particular ritual known as "Sara Villaku". "Sara Villaku" is performed on Tuesdays, Fridays and Sundays in fulfillment of devotees' vows.

The Veerabhadra idol, in the sanctum sanctorum is sculptured out of a black granite block, to a height of four feet, possessing four arms, and is mounted on a pedestal. On the forehead of the Moolavar, a Shivalingam is engraved, implying that He is an emanation of Lord Shiva, and all His powers are derived from Him. The broad chest, narrow waist, muscular sturdy legs and the sword held in one hand give the deity a martial, daunting appearance. The eyes bestow a benign grace on the worshippers. One of the two right hands is in the "Abhaya Hastha" posture, blessing the devotees. The other right hand holds a sword.

An ornamental arch is found above the deity and is indicative, of the frame work of man's destiny. We are inspired by the solemn ambience when the priest lights the camphor in offering to the deity. We fold our hands in worship and devotion to the Lord.

At the Pillayarkuppam temple, an exceptional puja called the Betal-leaf Canopy ( Vetrilaikappu) is performed. If one wants to undergo a thrilling spiritual experience, one has to participate in this ceremonial puja. It is performed in fulfillment of the vows of the devotees. This puja is performed in the following way. An eight feet-high rectangular wooden portable compartment with a conical top having pouches for inserting betel leaves on its surface, is used for the puja. The devotees insert betel leaves in these pouches and the portable compartment is then placed in the sanctum-sanctorum. Thus, is presented an awe-inspiring sight of the deity surrounded by betel leaves. To have such a dharshan of the Lord is an exhilarating, soul-stirring experience which is unique and not felt in other shrines. The purpose of Vetrilaikappu is reportedly, to soothe the fury of Lord Veerabhadra. The panchaloha idols of Veerabhadra and Bhadrakali are taken out in the praharam on Vetrilaikappu days.

There is a strong belief among the residents of Pillayarkuppam that there is no need to go on pilgrimage to Kasi or Rameswaram. They feel that, through offering sincere prayers to Lord Veerabhadra, His bountiful grace can be obtained and all their ills will vanish.

Lord Tennyson had said "More things are wrought by prayer than the world dreams of". Likewise, by ardent worship of Lord Veerabhadra, one will gain mental solace and spiritual strength. ❑

## வீரபத்திரவிரதம்

**கேள்வி: விரதம் அநுட்டிப்பவர் அவ்விரத தினத்தில் எவ்வெவைகளைச் செய்தல் வேண்டும்?**

*பதில்: காமம், கோபம் முதலிய குற்றங்கள் எல்லாவற்றையும் பற்றறக் களைதல் வேண்டும். தவறாது வைகறையிலே நித்திரை விட்டெழுந்து விடல் வேண்டும். புண்ணிய தீர்த்தத்தை அடைந்து, வீபூதி, வில்வத்தடி மண், தருப்பை, கோமயம், திலம் என்பவைகளைச் சிரசிலே வைத்துக் கையிலே பவித்திரம் சேர்த்துச் சங்கற்பம் சொல்லி, ஸ்நானம் செய்தல் வேண்டும். தியானம், ஜெபம், பூஜை, ஆலய தரிசனம், பிரதக்ஷிணம், புராண சிரவணம் முதலியன விசேஷமாக்கி செய்தல் வேண்டும்; திருக்கோயிலிலே இயன்ற மட்டும் நெய் விளக்கேற்றல் வேண்டும்; அபிஷேகத் திரவிய, நைவேத்தியத் திரவியங்களைக் கொடுத்தல் வேண்டும்; போசனம் பண்ணு மிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும்; நித்திரை செய்யுமிடத்து, இரவிலே, கோமயத்தினாலே மெழுகப்பட்ட தரையிலே, தருப்பையின் மேலே, கடவுளைச் சிந்தித்துக் கொண்டு, அதிசுந்தரராய் நித்திரை செய்து, வைகறையிலே எழுந்து விடல் வேண்டும்; உபவாச விரத தினத்துக்கு முதற்றினத்திலே ஒரு பொழுது அபாரணத்திலே போசனம் செய்தல் வேண்டும். உபவாச விரத தினத்துக்கு மற்றை நாட் காலையிலே நித்திய கருமம் இரண்டும் முடித்துக் கொண்டு மாகேசுர பூசை செய்த ஆறு நாழிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங்களைக் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். நித்திரை செய்தவர் சற்பிதாவாணவர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை அடைவர் (பாரணம் = உபவாசத்திற்குப் பின் செய்யும் போசனம்)*

*திருச்சிற்றம்பலம்*

*நன்றி: யாழ்ப்பாணத்து நல்லூர்*
*தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்களின் சைவ வினா - விடை*

# வியர்வையில் விளைந்த வீரபத்திரன்

பேரா. டாக்டர் கிருஷ்ணவேணி அருணாசலம் எம்.எஸ்.சி., பி.எச்.டி.

நெற்றிக் கண்கொண்ட நிமலனின் வியர்வையில்
வெற்றி மைந்தனாய் உருவானவன்!
பற்றி எரிகின்ற யாகத்தை நடத்திடும்
தட்சனை அழித்திடக் கருவானவன்!

தும்பிக்கையுடைய விநாயகப் பெருமானின்
தம்பியாய் உலகில் அவதரித்தவன்!
நம்பிக்கையோடு தொழுபவர் வாழ்வினை
நலியாது என்றும் அலங்கரித்தவன்!

தந்தைக்கு உபதேசம் செய்கின்ற
தகுதியை உற்றவன் அந்த ஆறுமுகன்!
தந்தையின் உயிரினைக் காத்திடும்
பேற்றினைப் பெற்றவன் இந்த வீரமகன்!

குறும்பர்கள் கொடுத்திட்ட ஆட்டுத்தலைக்காக
அவர்குலத்தினை என்றும் வாழ வைப்பான்!
இரும்பென வருகிற இன்னல்களை யெல்லாம்
துரும்பென அவனும் வீழ வைப்பான்!

இடிமின்னல் தாக்காமல் இடையூறு நேராமல்
எப்போதும் அவன் காத்திடுவான்!
கொடியினைத் தாங்கிடும் கொம்பு போல்
நாளும் வரும் கொடுமையை நீக்கிடுவான்!

ஆலமரத்தின் நிழல்போல் இருப்பான் - அவன்
அன்பு பொழிவதில் மழைபோல் இனிப்பான்!
காலதேவனே அவன் கைகளுள் அடக்கம்
கருணையும் வீரமும் அவன்கண்களில் தொடக்கம்!

ரோஷமாய் தட்சனின் உயிரைப் பறித்தது
அவன் வீரத்தின் விளையாட்டு!
பாசமாய் பாட்டனின் உயிரை மீட்டது
நெஞ்ச ஈரத்தின் இசைப்பாட்டு!

ஞானத்தின் வடிவாய்த் திகழ்பவன் - அவன்
ஞாலத்தின் விதையாய் இருப்பவன் !
மானத்தின் குரலாய் ஒலிப்பவன் - அவன்
மக்களின் குறைகளை ஒழிப்பவன்!

முரட்டுத்தனமான பக்தியினாலே
முடியிலே தேங்காயை உடைத்து
முழு வெள்ளை மனத்தோடு
பத்திரனைத் தொழுதால்
பாவங்கள் பறக்கும்! - உயர்
பண்புகள் பிறக்கும்!

ஆட்டுப் பாலிலே வெல்லம் சேர்த்து
அதனோடு கொஞ்சம் மஞ்சளைச் சேர்த்து
ஐந்து நாட்கள் விரதமிருந்தால்
அத்தனைத் துன்பமும் தீரும்!
அழியாத அருளின்பம் சேரும்!

வீரபத்திரனை வேண்டி நின்றால்
ஏழையின் இல்லத்தில் அலைமகள் வருவாள்!
கோழையின் உள்ளத்தில் மலைமகள் புகுவாள்!
கல்லாதார் இதயத்தில் கலைமகள் அமர்வாள்!

வீரபத்திரனை வணங்கிடுவோம்!
வினைகள் அனைத்தையும் களைந்திடுவோம்!

# குலதெய்வ வழிபாடு

முனைவர் த. பெரியாண்டவன் எம்.ஏ. பி.எச்.டி.

தென்னகத்தில் தொன்றுதொட்டே குலதெய்வ வழிபாடு நடைமுறையில் இருந்து வந்தது என்பதை மிகப் பழம் பெருமை வாய்ந்த தமிழ் இலக்கணமாகிய தொல் காப்பியம் கூறுகிறது. தமிழகத்தின் நிலப் பரப்பை முதற்பொருள் என்றும் நானிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்றும் பாகுபாடு செய்த தொல்காப்பியர்,

*"மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்"*

*(தொல்.பொருள் நூ-5)*

என்று கூறுகிறார். கண்ணன், முருகன், இந்திரன், வருணன், ஆகிய தெய்வங்கள் பொருந்தி வாழும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனத் தெய்வங்களைக் கொண்டே நிலப்பாகுபாடு செய்துள்ளனர். கருப்பொருளிலும் தெய்வத்தை முதலாக வைத்துத் தெய்வம் உணாவே - என்று தொடங்குகிறார். எனவே தமிழர்கள் அவரவர் வாழ்ந்த நிலங்களுக்குரிய கடவுளர்களைக் குலதெய்வங்களாகக் கொண்டு வழிபட்டு வந்தனர் என்பதும், "எந்நில மருங்கின் பூவும் புள்ளும்.." (தொல்பொருள் நூ-21) என்பதனால் ஒவ்வொரு நில மக்களும் தங்களுக்குரிய நிலத் தெய்வங்களை மட்டும் வணங்குவது அன்றிப் பிற தெய்வங்களையும் வணங்கினர் என்பதும் தெரிய வருகிறது.

சங்ககாலத்திலும் கண்ணன், முருகன், இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்கள் நானில மக்களுக்கும் குல தெய்வங்களாக இருந்தனர். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங் கோவடிகள், மங்கல வாழ்த்துப் பாடலில் இயற்கையாகிய திங்களையும் சூரியனையும் மழையையும் புகார் நகரையும் போற்றித் தொடங்குகிறார். ஆனால் இந்திர விழவூர் எடுத்த காதையில் குலதெய்வமாகிய இந்திரனுக்கு விழா எடுக்கப்பட்டுள்ள செய்தி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. என்றாலும் பிற தெய்வங்களாகிய சிவபெருமான், முருகன், பலதேவன் முதலியோர்களுக்கும் தனித்தனியே கோயில்கள் இருந்தன என்றும் அங்கெல்லாம் விழாக்கள் எடுக்கப்பட்டன என்றும் அறிகிறோம். இதே பூம்புகாரில் வாழ்ந்த கண்ணகியின் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தி, சாத்தன் கோயிலை நாள்தோறும் வழிபட்டாள் என்பதிலிருந்து அவள் சாத்தனைக் குலதெய்வமாகக் கொண்டாள் எனவும் அறிகிறோம். பாண்டிய நாட்டு வேடுவர்கள் கொற்றவையைக் குலதெய்வமாகக் கொண்டிருந்தனர் என்பது மதுரைக் காண்டம் வேட்டுவவரியிலிருந்து விளங்குகிறது. மதுரை மாநகரின் புறப்பகுதியாகிய ஆயர்சேரியில்வாழ்ந்த ஆயர்குலப் பெண்ணாகிய மாதரி அங்கு நிகழும் உற்பாதங்கள் நீங்க, ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் ஆடிய குரவையை ஆடித் துயர்களைவோம் என்று கூறினாள். தம் குலதெய்வமாகிய மாயோனை,

*"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்*
*இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்*
*கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி"*

என்பன போன்ற பாடல்களை அவர்கள் பாடி வழிபட்டனர் என்று இளங்கோவடிகள் கூறுகிறார். சிலம்பு:மதுரை-ஆய்ச்சியர் குரவை) பாண்டியன் அவையில் தன் கணவனாகிய கோவலன் கள்வன் அல்லன் என்பதை நிலைநாட்டிய கண்ணகி,

சினத்தீயால் பாண்டிய நாட்டை எரியூட்டிய பின், சேர நாடு அடைந்து, முருகனது குன்றம் ஏறிச் சென்று அங்கிருந்த வேங்கை மரத்தின் கீழே நின்றபோது மலர் மாரிப் பொழிந்து தேவர்கள் துதிக்கக் கோவலனுடன் தேவ விமானம் ஏறித் துறக்கம் புகுந்தாள். இந்த அழகிய காட்சியைக் கண்ட மலைவாழ் மக்களாகிய வேடுவர்கள் மிகுந்த வியப்புற்று, கண்ணகியைத் தம் குலதெய்வமாகக் கருதி அவள்பொருட்டுக் குரவைக்கூத்து நிகழ்த்தினர் என்பதை "இவள் போலும் நம் குலக்கோர் இருந்தெய்வம் இல்லையாதலின் சிறு குடியீரே சிறுகுடியீரே தெய்வம் கொள்ளுமின் சிறுகுடியீரே" என்னும் அடிகளால் விளக்குகிறார் இளங்கோவடிகளார். சேரன் செங்குட்டுவன் மனைவியாகிய இருங்கோ வேண்மாள், "நம் அகல்நாடடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என்று பத்தினித் தெய்வ வழிபாட்டிற்குக் கால்கோள் செய்வதாகச் சிலம்பு செப்புகிறது. சேரன் செங்குட்டுவன் சிவபெருமானைக் குல தெய்வமாகக் கொண்டிருந்தான் என்பதை

*"நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி*
*உலகுபொதி உருவத் துயர்ந்தோன் சேவடி*
*மறம் சேர் வஞ்சி மாலையோடு புனைந்து*
*இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு"*

என்னும் அடிகளால் அறிகிறோம். இவ்வாறு தம் குலதெய்வாகிய சிவபெருமான் திருவடியைத் தலையில் தாங்கி வடதிசை நோக்கிக் கல்கொணரப் புறப்படும்போது திருவனந்தபுரத்தில் யோகநித்திரையில் அமர்ந்த திருமாலின் மாலைகளைக் கொண்டுவந்து அவனிடம் கொடுக்கின்றனர். தன் தலையில் தன் குலதெய்வமாகிய சிவபெருமானின்திருவடிகளைத் தாங்கியுள்ளதால் திருமாலின் மாலைகளைத் தன் தோள்மேல் வைத்துக் கொண்டான் என்பதை "ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன் சேடங்கொண்டு சிலர் நின்றேத்த தெண்ணீர் கரந்த செஞ்சடைக்கடவுள் வண்ணச் சேவடி மணிமுடி தரித்ததால் ஆங்கது வாங்கி அணிமணி புயத்தில் தாங்கினன்" என்னும் அடிகளால் கூறுகிறார். இவற்றிலிருந்து சேரன் செங்குட்டுவன் சிவபெருமானைக் குலதெய்வமாகக் கொண்டிருந்தாலும் பிறதெய்வங்களை வெறுக்காமல் இருந்தான் என்பது புலனாகிறது. சங்க இலக்கியங்கள் அனைத்திற்குமே கடவுள் வாழ்த்தாக அமைந்ததாகக் கருதப்படும் திருமுருகாற்றுப் படை பாடிய நக்கீரன் "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என்று முருகனை வழிபட்டுத் தொடங்குவதால் நக்கீரர் முருகனையே குலதெய்வமாகக் கொண்டிருந்தார் என்று கொள்ளலாம். குலதெய்வ வழிபாட்டிற்கு இப்படி எண்ணிறந்த சான்றுகளை எடுத்துக் காட்ட முடியும்.

தென்னாட்டில் வாழும் நகரத்தார் எனப்படும் செட்டிநாட்டைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பெரிய நகரங்களிலும், நாடுகளிலும் வாழ்ந்தாலும் தம் இல்லங்களில் நிகழும் நிகழ்ச்சிகளைத் தம் சொந்த ஊர்களுக்குச் சென்று நடத்துவதை மரபாகக் கொண்டுள்ளனர். அதைப் போலத் தமிழக மக்களும் தாம் எந்த நகரிலோ நாட்டிலோ வாழ்ந்தாலும் தம் குல தெய்வங்கள் உள்ள ஊர்களைத் தேடிச் சென்று வழிபாடு நடத்தி வருவதை மரபாகக் கொண்டுள்ளனர். தென்னாட்டில் வாழும் கோடிக்கணக்கான குடும்பங்கள் வீரபத்திரனைக் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். உலகில் தர்மங்கள் அழிந்து அதர்மங்கள் அரசாளுகின்ற நேரங்களில், நியாயங்கள் அழிந்து அநியாயங்கள் தலை எடுக்கின்ற காலங்களில், அவதாரங்கள் நிகழ்கின்றன. சூரர்களை அழிக்க முக்கண்ணனின் அம்சமாக முருகன் அவதாரம் செய்ததைப்போன்றே சிவனின் அம்சமாக வீரபத்திரர் அவதாரம் செய்தார் என்று கூறுவர். அன்னை ஆதிபராசக்தியைக் "கறை

கண்டற்கு மூத்தவளே" என்று அபிராமி அந்தாதி கூறுவதிலிருந்தும் மூர்த்திகள் மூன்று, பொருள் ஒன்று, அந்த மூலப்பொருள் ஒளியின் குன்று, சீர்த்தித் திகழும் அந்த ஒளியை எந்த நாளும் போற்று சக்தி சக்தி என்று" பாரதியார் பாடலில் இருந்தும் லலிதா சகஸ்ர நாமம் போன்ற நூலில் இருந்தும் அன்னை ஆதிபராசக்தியே மும்மூர்த்தி களுக்கும் முதன்மையானவள் என்றறியப் படுவதால் வீரபத்திரரை அன்னை ஆதிபராசக்தியின் கூறு என்று கொள்வதற்கும் இடமுண்டு. செல்வத்திற்கு அலைமகளையும் கல்விக்குக் கலைமகளையும் வீரத்திற்குத் துர்க்கையையும் அடையாளத் தெய்வங்களாகக் கருதுவர். வீரத்தின் விளைநிலமாக அவதரித்தவர்தான் திருவீரபத்திரர். வீரத்திற்கு அடையாளமாகத்தான் திருக்கரங்களில் ஆயுதம் தாங்கியவாறு சிலைகளில் வடிவம் பெற்றுள்ளார். கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் நம் மக்கள் அவருக்குப் பல்வேறு வடிவங்களைத் தந்தனர். ஆனால் அவரோ அன்பே கடவுள் என்பதற்கேற்ப அன்பர்க்கு அன்பராகி அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாகவும் அருள் வடிவாகி உலகோர் அனைவருக்கும் அருள் வழங்கி வருகிறார். உலக மக்கள் சில பலசாலிகளைக் குறிப்பிடும்போது பத்தாள் பலம் பொருந்தியவர் என்று கூறுவதைப் போன்றே வீரபத்திரர் மிகப்பெரிய வீரர் என்பதைக் குறிக்கும் வகையிலே அவரின் சில திருவுருவச் சிலைகளில் இருபது கைகளும் உள்ளன.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர். தெய்வங்களில் முக்கியமாக அவரவர் குல தெய்வங்கள் முதலில் வழிபட வேண்டும் என்பதுதான் மேல்மருவத்தூரில் ஆதி பராசக்தியின் அவதாரம் ஆகிய அம்மாவின் அருள் வாக்கு. குல தெய்வத்தை வழிபடும் போது பிறதெய்வங்களைத் தாழ்வாக எண்ணி விடவும் கூடாது. பாலில் நீக்கமற நிறைந்துள்ள நெய்போல உலக மக்களின் ஆன்மாக்களில் கலந்துள்ள வீரபத்திர மூர்த்தியைக் குலதெய்வமாகக் கொண்டு தண்ணளி உடையவர்களாகவும் வீரம் மிக்கவர்களாகவும் விளங்கி, உள்ள ஒருமைப்பாட்டுடன் வழிபட்டு, உலக ஆன்ம நேயத்தை ஒன்றுபட்டு வளர்ப்போம். ❑

ஓம் சக்தி

## வீரபத்திரரும் ஆஞ்சநேயரும்

*உருத்திரமூர்த்தியின் அம்சம்பெற்று விளங்கும் வீரமூர்த்திகளில் வீரபத்திரரும் ஆஞ்சநேயரும் சிறப்பானவர்கள். வீரபத்திரர் சிவபரம்பொருளாகவே இருப்பவர்.*

*ஆஞ்சநேயர் உருத்திர சக்தியின் ஒரு அம்சமாகத் தோன்றியவர். மிகுந்த சிவபக்தியுடையவர். அவர் வீரபத்திரரை உபாசித்து ஞான உபதேசமும் வீரபராக்கிரமும் பெற்றவர் என்பர்.*

*தமிழ்நாட்டில் உள்ள பல வீரபத்திரர் ஆலயங்கள் அனுமனோடு தொடர்பு கொண்டுள்ளன. தொண்டை நாட்டில் புகழ் பெற்று விளங்கும் வீரபத்திரத் தலம் அனுமந்தபுரம் என்றழைக்கப்படுகிறது. இங்கு ஆஞ்சநேயரின் ஆலயம் சிறப்பாக உள்ளது.*

*–சிவமஞ்சரி*

# தேவாரங்களிலும் திருவாசகங்களிலும் வீரபத்திரர்

வ.த.இராமசுப்பிரமணியம், காஞ்சிபுரம்

உலகில் மன்னுயிர்களை இனிய நிலையில் விளங்கச்செய்வது சைவ நெறியே. இதற்கு ஒளி விளக்காகவும், கண்களாகவும் விளங்குவன தேவாரமும் திருவாசகமும் ஆம்.

**நல் வேள்வி காக்கும் நலம்:**

வேதநெறி தழைத்தோங்கத் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இதன் பாங்கானது வேள்வி புரிதலாகும். இத்தகைய வேள்வியால் நாட்டில் மழை வளம் பெருகி வரும். அதனால் அதனைச் செய்பவர்களாகிய அந்தணர்களும், தேவர்களும், ஆனினங்களும் வாழ வேண்டும் என ஆளுடைய பிள்ளையார் வாழ்த்துகின்றார். எனவே வேள்வியானது புனிதம் மிக்கது. அப்புனிதமாகிய புண்ணியத்தை மக்கள் ஆற்ற வேண்டும் என்பது கருத்து.

இத்தகைய புனிதமிகு வேள்வியைக் கனிந்த உள்ளத்தோடு புரியாது முழு முதற் பொருளாகிய சிவபிரானைப் பகைத்து ஆற்றும் செயலாகத் தேவர்குலத்தில் சிறப்புற்று விளங்கிய தக்கன் என்பவன் புரியத் தொடங்கினான். சிவபிரான் திருவுள்ளக் குறிப்பின் வழியே உலகம் இயங்குகின்றது என்கிற ஞானத்தை அறியாதவனாகிய தக்கன், தனக்கு வரம் நல்கிய ஈசனையே பகை கொள்ளலானான். பராசக்தி தனக்குப் புதல்வியாக வாய்க்க வேண்டும் என்று வரம் பெற்ற நிலையையும் மறந்து, ஆணவம் என்கிற தன்முனைப்பு பெரிதோங்க அவன் வேள்வி செய்யத் தொடங்கினான். இச்செயலில் பிரமன், திருமால், உருத்திரர், இந்திரன் முதலான தேவர்களும் முனிவர்களும் பங்கேற்கலானார்கள்.

அடிப்படையில் பரமேட்டியாக விளங்கும் சிவபெருமானைப் புறக்கணித்துச் செய்யப்படும் வேள்வியாக அது அமைந்தது. இவ்வேள்வியால் நலம் விளைவதற்கு மாறாகத் தீமையே விளையும் என்னும் திருவருட் குறிப்பானது இவண் தொக்கி நின்றது எனலாம்.

வேள்வியால் தீமையும் விளையும் என்பதற்குச் சான்றாகத் தாருகாவனத்து முனிவர்கள் வேள்விசெய்து பாம்புகள், மான், மழு, நெருப்பு, யானை, புலி முதலியவற்றைத் தோற்றுவித்தமையும், நாரத முனிவர் செய்த வேள்வியால் அரக்கத் தன்மையுடைய ஆடு தோன்றியமையும் அறியலாம். இத்தகைய வேள்வியானது புனித வேள்வியோ புண்ணிய வேள்வியோ ஆகாது. இங்குத் தக்கன் செய்த வேள்வி, சாடிய வேள்வியாக அமைந்ததை மாணிக்கவாசகர்,

> *"சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்*
> *ஓடிய வாபாடி உந்தீ பற!*
> *உருத்திர நாதனுக்கு உந்தீ பற!"*

என அருளிச் செய்கின்றார். இந்த வேள்வியானது நிறைவேறி இருந்தால் என்கிற ஐய வினா எழுதற்கே இடம் இல்லை, அங்கே சிவபெருமானின் பெருங் கருணையானது போற்றப்படுகின்றது. தக்கனைப் பற்றிக் கருத வேண்டாம்; உலகில் மேவும் மன்னுயிர்களைக் காண வேண்டும் என்னும் வகையில்,

*"பார்ப் பதியைப் பகை சாற்றிய தக்கனைப்*
*பார்ப்பது என்னே! ஏடி உந்தீபற!*
*பணை முலை பாகனுக்கு உந்தீ பற!"*

என்று மாணிக்க வாசகர் மேலும் சாற்று கின்றார்.

புண்ணியத்தை மாற்றும் வகையில் தேவர்களே செயற்பட்டாலும் சிவபெருமான் பேராற்றலோடு அவர்களைத் தண்டித்துப் புனித ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை அருள வல்லவர் என்பதனை வாதவூர் அடிகள்,

*"உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே*
*கண்ணைப் பறித்தவாறு உந்தீ பற!*
*கருக்கெட நாம் எலாம் உந்தீ பற!"*

என்று அருளிச் செய்கின்றார்.

இத்தன்மையில் புனிதத்தை அகற்றும் வேள்வியையும், அதனைப் புரியும் தக்கனையும் செருத்து அடக்கிய சிவபிரான் அருள் திறத்தினைத் திருஞான சம்பந்தர் முதல் திருமுறை: (மொழி மாற்று) திருப்பிரமபுரத் திருப்பதிகத்தில்,

*"உரித்தது பாம்பை உடன்மிசை இட்டதோர்*
*ஒண்களிற்றை*
*எரித்ததொர் ஆமையை இன்புறப் பூண்டது*
*முப்புரத்தைச்*
*செருத்தது சூலத்தை ஏந்திற்றுத் தக்கனை*
*வேள்வி பன்னூல்*
*விரித்தவர் வாழ்திரு வெங்குரு*
*வில்வீற்றிருந்தவரே!"*

என்று அருளிச் செய்யலானார்.

இத்தகைய வேள்வி, தலையான தேவர்களால் பெரு வேள்வியாகச் செய்யப் பட்டதாயினும் ஈசனால் தகர்க்கப்பட்டது, என்பதனைத் திருநாவுக்கரசர் 6-ஆம் திருமுறை திருவாரூர்த் திருத்தாண்டகத்தில்,

*"ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ*
*ஓர்யுகம் போல் ஏழ்யுகமாய் நின்ற நாளோ*
*தாங்கிய சீர்த் தலையான வானோர் செய்த*
*தக்கன்றன் பெருவேள்வி தகர்த்த நாளோ*
*நீங்கிய நீர்த் தாமரையான் நெடுமா லோடு*
*நில்லாய் எம் பெருமானே என்றுஅங்கு ஏத்தி*
*வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ*
*திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!"*

என்று அருளிச் செய்கின்றார். மற்றும் ஆளுடைய அரசர் திருவாரூர்த் திருத் தாண்டகத்தில்,

*"பகலவன்றன் பல்லு குத்த படிறன் றன்னை"*

எனவும், 4-ஆம் திருமுறை, திருப்பூந் துருத்தித் திருவிருத்தத்தில்,

*"தக்கன்றன் வேள்வி தகர்த்தவன்"*

எனவும் அருளிச் செய்கின்றார்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மேலும் விரிவாகத் திரு அரிசிற் கரைப்புத்தூர்த் திருப்பதிகத்தில்,

*"பழிக்கும் பெருந்தக்கன் எச்சம் அழியப்*
*பகலோன் முதலாப் பலதே வரையும்*
*தெழித்திட்டு அவர்அங்கம் சிதைத் தருளும்*
*செய்கை என்னை கொலோமைகொள் செம்மிடற்றீர்,*
*விழிக்கும் தழைப் பீலியொடு ஏலம் உந்தி*
*விளங்கும் மணிமுத்தொடு பொன் வரன்றி*
*அழிக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை*
*அழகார் திருப்புத்தூர் அழக னீரே!*

என அருளிச் செய்கின்றார்.

**வீரபத்திரர் திரு எழுச்சி:**

மன்னுயிர்களின் நலன் புரக்கும் கடப்பாடுடைய தேவர்களின் சிந்தை வரன்முறையின்றித் தீதுற்று, அதன் விளைவாக நேரவுள்ள தீய நிகழ்வுகள் யாவற்றையும் களையும் வண்ணம் வீரபத்திரர் அற்புதத் திருக்கோலத்தில் சிவபிரானால் தோற்றுவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வானது புனிதமிகு செயல்களைக் குலைக்கும் வகையில் முனைந்த தேவர் மூவர்களைத் திருத்தும் வண்ணம் நிகழலாயிற்று எனலாம். இது மிகவும் தொன்மைக் கால நிகழ்ச்சி. முருகப் பெருமான் திரு அவதாரத்திற்கு முன்னமே நிகழ்ந்து ஒன்று.

தக்கன் மகளாக விளங்கிய தாட்சாயணி திருக்கயிலையிலிருந்து அகன்று ஏகிய பின்னர்த் தனித்த நிலையில் வீரபத்திரர் தோன்றினார். அவர்தம் திருமேனி எழிலை நோக்கி அகோர வீரபத்திரர் (அகோரம்-அழகு) என்பர். இவர் ஓராயிரம் முகங்களும் ஈராயிரம் கைகளும் உடைய காளியைத் தோற்றுவித்தார். இவர் தம் ஆற்றலுக்கு அனைவரும் அடிபணியும் நிலையில் இருந்தமையை நோக்குமிடத்து, ஈசனே வீரபத்திரர் திருவுருக்கொண்டு எழுச்சி பெற்றார் என்பது தெளிதற்கு உரியது.

**வீரபத்திரர் வழிபாடு:**

முருகப் பெருமானைச் சிவகுமாரராகத் தெரிவிக்கும் சைவத் திருமுறைகள் வீரபத்திரரை அவ்வாறு நோக்காது, ஈசனாகவே தெரிவித்தலைக் காணலாம். இவர் தம் வரலாறு கந்தபுராணம், தக்கயாகப் பரணி முதலிய நூல்களில் சாற்றப் படுவதாகும். இவர் தம் தோற்றத்தின் வாயிலாக ஒரு பெரிய உண்மையும் அறிதற்கு வாய்ப்பாகிறது.

அரக்கர்கள், அசுரர்கள், முதலானோரால் மட்டும் அல்லாது யாவராலும் ஏத்தப்படுகின்ற தேவர்களும் சிந்தை திரிந்து புன்மை செய்தாலும் சிவபெருமான் முன்னின்று யாவற்றையும் காத்தருள்பவர் என்பதாம். இந்நிலையில் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில்,

"*வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும்*
*மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா*
*எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்*".

என நவின்றவாறு நோக்குதல் உண்மை நிலையை எடுத்தோதும். இதன் வழி திருஞான சம்பந்தர்,

"*வித்தக நீறணிவார் வினைப் பகைக்கு*
*அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே!*"
எனவும், மாணிக்கவாசகர்,

*நானேயோ தவம் செய்தேன்,*
*சிவாய நமஎனப் பெற்றேன்*"

எனவும் உபதேசித்தவாறும் காண்க.

வீரபத்திரர்க்குத் தனிக் கோயில் நிலவுதலைக் காணலாம். அவர்க்கு எனத் தனித் திருக்கோலமும் உள்ளது. இது 25 சிவ மூர்த்தங்களுள் ஒன்றாகும். வீரபத்திரர் வழிபாடு புன்மைச் சத்திகளை மாய்க்கும் திறம் உடைய நிலையில், அத்திரு மூர்த்தத்தைக் குல தெய்வமாகக் கொண்டு வழிபடுபவர்கள் உள்ளனர்.

சைவ நெறியின் புனிதம் காக்கும் மூர்த்தியாக வீரபத்திரர் நிலவி, அன்பர்களை வாழ்விக்கும் பேராற்றலுடைய சிவ பரம்பொருளாக விளங்க, நாமும் அவர் தம் திருப்பாத மலரைப் பணிந்து நலம் பெறுவோமாக!

*தென்னாடுடைய சிவனே போற்றி!*
*எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!* ❑

**மந்திர, யந்திர நூல்களில் வீரபத்திரர்...**

மந்திரசாத்திர நூல்களில் வீரபத்திரர் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறார். இவை மகாவீரபத்திரரை யந்திர வடிவில் வழிபடும் முறையை விளக்கிக் கூறுகின்றன. அவர் ஆயிரம் திருமுகங்கள் கொண்டவராக இருப்பதுபோலவே அவருடைய யந்திரத்திலும் ஆயிரம் எழுத்துக்கள் இடம் பெறுகின்றன.

*–சிவமஞ்சரி*

*With Best Compliments from:*

**KWALITY COIL PRODUCTS PVT. LTD.**

Door No.: 1/101, Spring Road,
(Behind Seventh Day School)
Sirudhur Village,
MADURAI - 625 014.

*Best Compliments From:*

**SHUNMUGA FRIED GRAM MILLS**
**MAHARAJA DHALL & FLOUR MILLS**
**VIJAYALAXMI TRADERS**

(High quality friedgram manufactures)
77, Acharappan Street, Chennai - 600 001
Phones: 25222211, 25222212, 25222213, 25222551

**RAMASAMY EXPORTS & IMPORTS Pvt. Ltd.**
**S.R. INDUSTRIES**

(Exporters & Importers)
45, ARMENIAN STREET, CHENNAI - 600 001.
Phones: 25231311, 25231312, Fax: 25231313

# சிற்பக் கலையில் வீரபத்திரர்

திருமதி லலிதாசுந்தரம் எம்.ஏ., எம்.எம். டிப் (புவியியல்)

கண்ணும், மனமும் ஒன்றியநிலையில் உணர்ச்சிப் பெருக்கெடுக்க, நேரிலே பார்ப்பது போன்று வடிப்பதே சிற்பக் கலையாகும்.

**கலைகள் இருவகைப்படும்**

**1. கவின்கலைகள்**

இவை சிற்பம், ஓவியம், இசை, நடனம் என்பன.

**2. பயன்கலைகள்**

இவை இரும்பாலாவை மரத்தாலானவை, நெசவு உழவு என்பன.

கவின்கலைகளுள் சிற்பக் கலை மிகவும் பழமையானது. சிற்பமும், கட்டடமும் ஒன்றுக் கொன்று பின்னிப் பிணைந்தவை. கட்டடக் கலையுள் தன்னிகரில்லாச் சிறப்புப் பெற்றது சிற்பக்கலை.

**சிற்பக் கலை**

சிற்பக் கலை என்பது, தான் உணர்த்த விரும்பும் பொருள்களின் வடிவத்தை மரத்திலோ, கல்லிலோ, உலோகத்திலோ, பிறவற்றிலோ அமைத்தல் ஆகும்.

*"மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரினும்*
*கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க*
- என்று வரும் அடிகளாலும்.

*கல்லும், உலோகமும் செங்கலும் மரமும்*
*மண்ணும் சுதையும் தந்தமுன் வண்ணமும்*
*கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை*
*பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"*
என்று வரும் அடிகளாலும் சிற்பக் கலையினைப் பற்றி நன்கு அறியலாம்.

**கலைஞர்கள்**

கோயில் கட்டடக் கலைஞரை 'நூலறி புலவர்' என்பர். மண்ணால் சிற்பம் செய்பவரை 'மண்ணீட்டாளர்' என்பர்.

**சிற்பங்களின் வகைகள் இரண்டாகும்**

அவை முழுச்சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என்பன.

சிற்பக்கலை பற்றிய சிறந்த முன்னுரையைப் படித்தால்தான் வீரபத்திர சுவாமியைப் பற்றி நன்கு அறிய முடியும். ஏனெனில் நான் எழுதுகிற அனைத்தும் சென்று, பார்த்து, உணர்ந்து, எழுதுபவை. "உண்மையைத்தவிர வேறொன்று மில்லை".



*வீரபத்திரர் அவினாசி*

### முழுச்சிற்பங்கள்

தனிக்கல்லில் முழுவதும் வடிப்பது முழுச்சிற்பம். உதாரணம் அவினாசி வீரபத்திரர் தூண்சிற்பம்.

### செதுக்காத பொற்சிலை

கிருஷ்ணாபுரம், திருநெல்வேலி மாவட்டத்தில் (15.கி.மீ. தொலைவில்) உள்ளது. இங்குப் பத்மநாபசுவாமி கோயிலிலுள்ள வீரபத்திர சுவாமியின் சிலை அமைப்பைக் கண்டு வியப்புற்றேன்.

"சிற்பி செதுக்காத பொற்சிலையோ" என்ற பாடல் வரிகள் என் மனத்தில் ஊஞ்சல் ஆடின. இங்குள்ள தூணில் மூலிகைச் சாற்றை ஊற்றியவுடன் அந்தக் கல்தூண் கரையுமாம். கல்லும் கரைந்த அற்புதத்தைக் கண்டேன். அந்தக் காலத்தில் சிற்பி ஒரு சிறிய இரும்புக் கம்பியினை வைத்து வீரபத்திரசுவாமி சிலையினை ஆக்கி இருக்கின்றார். இது 6 1/2 அடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் அனல் கக்கும் விழிகளுடன், உயிருடன் நடனமாடுவதைப் போன்று உள்ளது. இதன் வலக்கையில் வாளும், இடக்கையில் கேடயமும் உள்ளன.

வீரபத்திரர் இடக்காலை ஊன்றி, வலக்காலைத் தூக்கி ஆடுகின்றார். வலப்பக்கப் பாதத்தைத் தட்டினால் வெண்கல ஓசை, துள்ளல் ஓசையினைப் போலிருப்பதைக் கேட்கலாம். காரணம் என்னவெனில், உடலின் முழுப்பலத்தையும் ஒரு கால் தாங்குவதனால், வலக்கால் வெற்றிடமாக உள்ளது. இடக்கை மேலே தூக்கியநிலையில் உள்ளது. உள்ளங்கையில் உள்ள கேடயத்தில் துவாரம் உள்ளது. தலையில் உள்ள கிரீடத்தில் பல துளைகள் உள்ளன. கால் நகங்களும் கை நகங்களும் உண்மையான நகங்கள் போன்று உள்ளன.

கைகளிலே சங்குகள் உள்ள கடகங்கள் உள்ளன. காலிலே, கெண்டை, தண்டை, கழல் ஆகியவற்றை அவர், அணிந்துள்ளார். கெண்டைக் காலிலே முகத்துடன் கூடிய கழல் அணிந்துள்ளார், கபால மாலை அணிந்துள்ளார். இவருக்கு நீண்ட மீசைகளும் வீரப்பற்களும் உள்ளன. கழுத்திலும், மார்பிலும், கைகளிலும் அழகிய பூவேலைப்பாடுகள் உள்ளன. வலது கால் பெருவிரல் நகத்தைச் சிதைத்துப் பின்னப் படுத்தியுள்ளனர். அத்தூணின் இடப் புறத்தில் அவரை ஒட்டி மற்றொரு வீரபத்திரர் தன் முதுகு விலாஎலும்பு புடைக்க நின்றுள்ளார். அதைத் தொட்டுப் பார்த்தால் உண்மையான விலா எலும்பு போன்றே உள்ளது. அது பளபளவென்ற கருமை நிறத்தில் உள்ளது.

இவருக்கு எதிரே வீரபத்திரரின் ஏவலர் சிற்பம் வீராவேசத்துடன் போருக்குரிய கோலத்துடன் உள்ளது. அனைத்துமே உயிரோவியங்கள். இவை முழுச் சிற்பங்கள் வகையைச் சேர்ந்தவை.

### புடைப்புச் சிற்பங்கள்

தூண்களில் சிலையின் முன்புறம் புலப்படுமாறு படைப்பது புடைப்புச் சிற்பம். பாறைகளில் அமையும் சிற்பம் இவ்வகையைச் சேர்ந்தவைகளாகும்.

சிற்ப நூல் அறிஞர்கள் கயிறு கொண்டு திசைகளைக் குறித்தனர். திசைகளுக்குரிய தெய்வங்களை வணங்கினர். அந்த முறையில் வீரபத்திர சுவாமியை நிறுவியுள்ளனர். தூண்கள் கருமையும், திரட்சியும், பளபளப்பும் கொண்டுள்ளன.

தென்காசி திருஆவுடையார் கோயில், திருவண்ணாமலை, தாரமங்கலம் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களிலும் கைலாசநாதர் கோயிலிலும் பிரளயக் கால வீரபத்திரசாமி கோயிலிலும் (பெங்களூர்) உள்ள சிற்பங் களைப் புடைப்புச் சிற்பங்களாக எடுத்துக் கொள்கின்றேன்.



வீரபத்திரர், தாரமங்கலம்

**தாரமங்கலம்**

மன்னர் வணங்கியும் மன்னன் வணங்காகெட்டி முதலி என்பவன் கைலாசநாதர், கோயிலைக் கட்டினான். இங்கு அகோர வீரபத்திரர், சிலையும் அக்னி வீரபத்திரர் சிலையும் தூண்களில் காணப்படுகின்றன. இவை ஆண்டுகள் பலவாகியும் புத்தம்புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன. அக்னி வீரபத்திரர் - எட்டுக் கைகளை உடையவர். அகோர வீரபத்திரர் - எட்டுக் கைகளை உடையவர்.

வீரபத்திரர் சிலையில் உள்ள சூலத்தை ஆங்கிலேயர் துப்பாக்கியினால் சுட்டிருக்கின்றனர். சுட்ட துளை மட்டும் அழகாக உள்ளது. சிலை ஒன்றும் பழுதாக வில்லை. இதிலிருந்து இச் சிற்பத்தின் சிறப்பினை அறியலாம். "சித்திரம் பேசுதடி" என்ற பாடலுக்கேற்ப இது வரலாற்றினைப் பேசுகின்றது.

**பிரளய கால வீரபத்திரசாமி**

இது உலக அதிசயமாகும். இது பெங்களூர் கவிப்புரம் குட்டஹள்ளியில் உள்ளது) கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டும். இது திரேதாயுகத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். ஒரே கல்லில் 6 அடி உயரத்துடன் 4 அடி அகலத்தில் 32 கைகளுடன் நடனக் கோலத்தில் காணப் படுகின்றார் வீரபத்திரர். இதைக் காணக் கண் கோடி போதாதது.

*"கல்லிலே கலை வண்ணம் கண்டான்*
*இருகண் பார்வை மறைந்தாலும் காணும் வகை செய்தான்"*

என்ற சீர்காழி கோவிந்த ராஜனின் பாடல் என் நினைவில் வந்தது.

32 கைகளிலும் 32 வகையான ஆயுதங்களுடன் காணப்படுகின்றார் வீரபத்திரர்: இவர் மூலவராக உள்ளார்.

கல்லில் மட்டுமல்லாது ஐம்பொன்னில் உற்சவர் சிலையும் இங்கு அழகாகச் செய்யப்பட்டுள்ளது.

**தென்காசி**

காசி விசுவநாதர் கோயில் முன்முகப்பு மண்டபத்தில் 8 தூண்களிலும் பல சிற்பங்கள் உள்ளன. இவற்றில் அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர் சிலைகளை மட்டும் படம் எடுத்துக் கொண்டுள்ளேன். எட்டுக் கைகளுடனும் பத்துக் கைகளுடனும் தக்கனை வதம் செய்யும் காட்சி 10 அடி உயரமும் 1 1/2 அடி அகலமும் கொண்ட அமைப்பில் காணப்படுகின்றது. பராக்கிரம பாண்டியன் இக்கோயிலைக் கட்டியுள்ளான். பாண்டியர்கள் சிற்பக் கலையில் சிறந்திருந்ததை இதன் மூலம் அறியலாம். இங்குள்ள சிலைகள் கருமையும், பளபளப்பும் மிகுந்து காணப் படுகின்றன. "கல்லை மறைத்தது

மாமத யானை" என்ற சொற்றொடர் நினைவில் ஆடுகின்றது. அங்கே சிற்பங்களைக் காணவில்லை. யான் உண்மையிலேயே அக்னி வீரபத்திரையும் அகோர வீரபத்திரரையும் கண்டேன்.



*வீரபத்திரர், ஆவுடையார் கோவில்*

## திருஆவுடையார் கோயில்

இது மாணிக்கவாசகர் கட்டிய கோயிலாகும். வெளியே வாயிலில் நுழைந்தவுடன் 8 அடி உயரத்துடனும், 2 அடி அகலத்துடனும், சுவாமியை நோக்கி அக்னி வீரபத்திரர், அகோரவீரபத்திரர் சிலைகள் உள்ளன. இவை நம்மை நோக்கி வருவது போன்று மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் காணப் படுகின்றன. எட்டுக் கைகளையும் பத்துக் கைகளையும் உடையவர், தக்கனை வதம் செய்கிறார். ஆண்டுகள் பலவாயினும் உயரிய நாகரிகத்தினை உணர்த்தி நிற்கின்றது.

## திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில்

இங்குள்ள தனிக்கோயிலில் வீரபத்திரர் எட்டுக் கைகளுடன் தோற்றமளிக்கிறார். இவர் 6 அடி உயரத்துடன் 3 அடி அகலத்துடன் நடனக் கோலத்துடன் காணப்படுகிறார்.

கற்கோயில்கள் : கி.பி. 7ஆம் நூற்றாண்டில் அழியாத நிலையில் மகேந்திரவர்மன் கடவுள்க்குக் கற்கோயில்களை அமைத்தான் என மண்டகப்பட்டு கல்வெட்டு கூறுகின்றது. காஞ்சி கைலாசநாதர் கோயில் சுற்றுப் பிரகாரத்தில் 4 அல்லது 5 தூண்கள் கொண்ட மண்டபச் சுவரிலும் 3 அல்லது 5 புரைகள் வெட்டப்பட்டுள்ளன. அதில் ஒவ்வொரு புரையிலும் கடவுள் சிலை இருக்கிறது. அதிலுள்ள வீரபத்திரசாமியின் இடக்கையில் பிரமனின் ஒரு தலை உள்ளது. வீரபத்திரசுவாமியின் காலடியில் பிரமன் உள்ளார். இந்த அமைப்பு எங்குமே இல்லை. இது மணல் கலந்து கட்டிய கலவையாகும். இதுவரை இச்சிற்பம் எந்த வித அழிவும் இல்லாமல் இருப்பது மிகவும் சிறப்பாகும்.

சூரிய ஒளிபிரதிபலித்தல் : சிற்பக் கலையின் சிறப்பினைக் கூறும்பொழுது இதனைக் கூறாமல் இருக்க முடியாது. கவிப்புரம் குட்டஹள்ளி குகைக் கோயிலில் வீரபத்திரசுவாமி சன்னிதிக்கு அருகில் உள்ள சாளரத்தின் வழியே சூரிய ஒளிபாய்ந்து நந்திகேசுவரர் கொம்புகளில் விழுந்து ஈசுவரனின் மேல் பிறை போல் பொங்கலன்று 3 மணித்துளிகள் இருக்கின்றது. இது கண்ணிற்கு இனிய விழுமிய காட்சியாகும்.

சேலம் தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலில் சூரிய ஒளி நந்திகேசுவரர் கொம்புகளில் படிந்து ஈசுவரன் மேல் மார்ச்சு 6,7,8 தேதிகளில் படிகிறது. இஃது நடப்பியல் உண்மையாகும். இந்த அமைப்பில்

கட்டியிருப்பது சிற்பக்கலைக்கு உண்டான பெருமையாகும்.

ஜலகண்டேசுவரர்கோயில்: இக்கோயிலை ஹொய்சளர்கள் கட்டியுள்ளார்கள். இங்குள்ள மண்டபத்தில் பற்பல தூண்களில் 1 அடி, 1.5 அடி உயரத்தில் வீரபத்திரர் பற்பல கைகளுடன் காணப்படுகிறார். இங்குச் சரபேசுவரர் வடிவிலும் வீரபத்திரர் காணப் படுகிறார்.

**உலோகச்சிற்பம்**

சேலம் செவ்வாய்ப்பேட்டை, சௌடேஸ்வரி அம்மன் ஆலயம், கோடி ஹள்ளி வீரபத்திரர், வீபுதிபுரம் வீரபத்திரர், பிரளயகால வீரபத்திரர், மாநெல்லூர் வீரபத்திரர், மயிலாப்பூர் மாதவப் பெருமாள் தெரு வீரபத்திரர் ஆலயம் போன்ற பல இடங்களில் ஐம்பொன்னால் ஆன வீரபத்திரர், பத்ரகாளி, தக்கன் உருவச் சிலைகள் உள்ளன. இவை மிகவும் நுணுக்கமான கலை அமைப்பை உடையவை.

இவ்வாறு பற்பல இடங்களில் வீரபத்திரர். சிற்பங்களைக் கண்டேன். இவற்றை வியந்து போற்றுகிறேன். பாராட்டி எண்ணி, எண்ணி மகிழ்கின்றேன். ❑

## தக்கன்

*தக்கன் பிரமன் மானச புத்திரர்களில் ஒருவன். பிரமனது கட்டை விரலில் பிறந்தவன் என்றுங் கூறுவர். இவன் தரணியைக் கூடி 1000 குமரர்களைப் பெற்றனன். இவர்கள் நாரதர் உபதேசத்தால் மகா ஞானிகளாய்த் துறவடைந்தனர். இதனால் பிரசாவிருத்தி இல்லாது போனதால் தக்கன் நாரதனிடத்துக் கோபித்து நிலையிலாது திரியவும் கலகப் பிரியனா யிருக்கவும் சாபந் தந்தனன். பின் இவன் அசக்னியிடம் 50 பெண்களைப் பெற்றுத் தரும பிரசாபதிக்குப் பத்துப் பெண்களையும் காசிபர்க்குப் பதின் மூவரையும் சந்திரனுக்கு இருபத்தெழுவரையும்; பூதர், ஆங்கிரச, கிரிசுவா என்பவர்களுக்கு இவ்விரண்டு பெண்களையும், தாட்சயபருக்கு நான்கு பெண்களையும் கொடுத்தான். இவர்களுள் சந்திரன், கிருத்திகை, ரோகிணிகள் ஒழிந்த மற்றவரிடம் அன்பிலாதிருந்ததால் சந்திரனைக் கலைகள் தேயச் சபித்தனன். அச் சந்திரன் சிவமூர்த்தியை வேண்டிச் சாபம் போக்கிக் கொண்டனன். இவன் சிவமூர்த்தியை யெண்ணித்தவம் செய்து அம்மூர்த்தி பிரத்தியக்ஷமாகத் தான் உமையைக் குமரியாகப் பெறவும் சிவமூர்த்தி மருமகனாகவும் வரம் வேண்டிப் பெற்று உமா தேவியைப் புத்திரியாகப் பெற்றுத் தாக்ஷாயினி யெனப் பெயரிட்டு வளர்த்துச் சிவமூர்த்திக்குத் திருமணம் செய்வித்தனன். ஒருநாள் தன் குமரியைக் காண வேண்டித் திருக்கைலைக்குச் செல்லப் பூதகணங்களால் தடைபட்டுத் திரும்பிக் கோபாவேசனாய் விஷ்ணுவாதி தேவர்களை யாகத் தலைவராக்கி ஒரு வேள்வி செய்யத் தேவர் இருடியர் முதலியோர்க்குத் திருமுகம் அனுப்பினான். யாகத்திற்கு வந்த இருடிகளில் ததீசி முனிவர் சிவமூர்த்திக்கு அவி கொடுக்கும்படி பலவிதத்திற் கூறியும் கேளாது யாகம் தொடங்கினன். இந்த யாகக் காட்சியைக் காணத் தாக்ஷாயினி வந்தனள். தக்கன் உபசரிக்காது இருக்க உமாதேவியார் இது சுடுகாடாகுக எனச் சபித்து நீங்கிச் சிவமூர்த்தியை அடைந்து நடந்தவை கூறி யாகம் அழிய வேண்டினள். சிவமூர்த்தி, வீரபத்திரரைச் சிருட்டிக்க உமாதேவியார் மகா காளியைச் சிருட்டித்து யாகத்தை அழித்து வர அனுப்பினர். அக்கட்டளை ஏற்ற தேவ தேவிகள் இருவரும் பூத கணங்களோடு தக்கன் யாக சாலை புகுந்து தேவர்களை வருத்தித் தக்கன் தலையையும் அறுத்தனர். அத்தக்கனது தலையை ஒரு பூதம் விழுங்கிற்று, மீண்டும் பிரமன் தன் குமரனை எழுப்பச் சிவமூர்த்தியை வேண்டிய காலத்துத் தக்கனது தலையைக் காணாது அத்தலைக்குப் பதிலாக ஆட்டுத் தலையை வைத்து எழுப்பினர். தக்கன் ஆட்டுத் தலை பெற்றுப் பிரமன் சொற்படி கங்காதீரத்தில் சிவப் பிரதிஷ்டைச் செய்து பூசித்துச் சிவ கணத் தலைமை பெற்றனன். இவன் பெண்கள் புருஷன் வேண்டிப் புருஷாயதம் என்னும் தவம் செய்ததால் புருஷனையும் நட்சத்திர பதத்தையும் பெற்றனர். இவன் உமாதேவியார் யாகங் காண வந்தபோது மதியாதிருந்ததால் சூரிய குலத்து மாரிஷையிடம் மனிதனாய்ப் பிறந்தான்.*

*-நன்றி: அபிதான சிந்தாமணி*

# வீரபத்திரர் வழிபாடு

ப.சுகுமாரன்

**கோ**யில்களில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதத்தில் வழிபாடு நடக்கும். சிவனுக்கு வில்வம், துர்க்கைக்கு அரளி, விநாயகருக்கு அறுகம்புல், பெருமாளுக்குத் துளசி என வழிபாட்டுக்குரிய பொருள்கள் உள்ளன.

மாலை : வீரபத்திரருக்கு வெற்றிலை மாலையும், எலுமிச்சைப்பழ மாலையும் சார்த்துகின்றனர். வெற்றிலை மாலை சார்த்தித் தமது குறிக்கோளை முன் வைக்கின்றனர். காரியம் வெற்றி அடைந்தவுடன் வடை மாலை சார்த்துகின்றனர்.

சிறப்பான நாட்கள்: அமாவாசை, பௌர்ணமி, செவ்வாய் முதலிய நாட்களில் வீரபத்திரருக்குச் சிறப்பான பூசை உண்டு.



*அகோர கல்யாண வீரபத்திரர்*

பிரசாதம் : புளிச்சாதம், எலுமிச்சைச் சாதம், பொங்கல், சுண்டல், பால், பழம் வைத்து அவருக்குப் பூசை செய்கின்றனர். இவை பிரசாதமாக அமைகின்றன.

விழாக்கள் : சிவராத்திரி, நவராத்திரி, ஆருத்ராதரிசனம், சங்கராந்தி, தமிழ் வருடப் பிறப்பு, தெலுங்கு வருடப்பிறப்பு ஆகிய நாட்களில் பற்பல ஊர்களில் அவருக்கு விழாக்கள் பலவிதமாக நடக்கின்றன. அன்னதானம், கடவுள் ஊர்வலம், ரதோற்சவம், யாகம், சிறப்புப் பூசை முதலியனவும் நடக்கின்றன.

தட்சயக்ஞம்: (வதம்) ஆடி அமாவாசையை அடுத்து நாராயண வனம் என்னும் ஊரிலே பத்து நாட்கள் பிரம்மோற்சவம் சிறப்பாக நடக்கின்றது. தட்சனை அழித்தபின் வீரபத்திர சாமிக்குப் பத்ரகாளியுடன் திருமணம் நடக்கின்றது. இவ்விழா இங்கு மட்டும் தான் சிறப்பாக நடைபெறுகிறது.

சிறப்பு விழா : பெங்களூரில், பிரளய கால வீரபத்திரசாமி கோயில், ஆந்திரா ராய்சோட்டியில் வீரபத்திரர் கோயில் ஆகிய இரு கோயில்களிலும் மார்ச்சு மாதம் விழாவின் போது தீ மிதி எனப்படும் பூ மிதி விழா நடக்கின்றது. அவ்வமயம் குருக்களும், முக்கியமானவர்களும் அக்கினிக் குண்டத்தில் நடந்து தீயினை எடுத்துச் சுவாமிக்குப் பூசை செய்கிறார்கள். இது அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கும் காட்சி ஆகும்.

நோய்தீர்க்கும்மருத்துவர்: அரண்மைந்தபுரம், பகத்தூர் முதலிய இடங்களில் உள்ள வீரபத்திரர் கோயில்களில் மக்கள் இரவு தங்கித் தம் மனம் விட்டுக் கடவுளுடன் பேசுகின்றனர். நோய் தீர்ந்தவுடன் வீடு செல்கின்றனர். மன இறுக்கம் குறைந்தால் தானே நோய் தீர வழி உண்டு.

*"நோய்நாடி நோய்முதல் நாடிஅது தணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"* - *குறள் (948)*
என்பதற்கேற்ப வீரபத்திரரே சிறந்த மருத்துவர் என எண்ணுகின்றனர்.

விழாக்கள்: வீரபத்திரரைக் குல தெய்வமாக உடையவர்கள் வீரபத்திரசாமி கோயிலில் முடி எடுத்துக் காது குத்துகின்றனர். திருமணம் செய்கின்றனர். முதல் குழந்தைக்கு 'வீ' என்ற எழுத்தில் தொடங்கும் பெயர் வைக்கின்றனர்.

சேலத்தில் பகத்தூர் வீரபத்திரசாமி கோயிலில் விழாவன்று மற்றையோரை வரவேற்பது பெண் மக்களின் கடமையாகும். வீரபத்திரசுவாமியின் ஆண்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்கும் வீட்டுப் பெண்மக்களுக்குப் பெற்றோர் சிறப்பு சீர்வரிசை செய்கின்றனர்.

சிறப்பான நிகழ்வு : பற்பல இடங்களில் வீரபத்திரசாமி கோயில் வருமானத்தில் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக சேலம், குகை வீரபத்திரசாமி கோயில், பெங்களூர், வீபுதிபுரம் கோயில் முதலிய இடங்களில் சிறப்பாக நடைபெறுகின்றன.

நாட்டியநாடகம்: நாராயணவனம், பிரளய கால வீரபத்திரசாமி கோயில், கும்பகோணம் வீர சைவ மடம், தாரமங்கலம் கைலாசநாதர் கோயில், சிறுமுகை வீரபத்திரர் கோயில் போன்ற இடங்களில், ஆண்டுவிழா, முதலிய நாட்களில் வீரபத்திரரைப் பற்றிய பல கலை நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

தீமிதி எனப்படும் பூமிதி: கும்பகோணம் வீரசைவமடம் வீரபத்திரர், ராய்சுட்டி வீரபத்திரர், பிரளயகால வீரபத்திரர் போன்ற கோயில்களில் விழாவன்று தீமிதி மிகவும் சிற்ப்பாக நடத்துகிறார்கள்.

வேண்டுகோள் : செம்மிய மங்கலம், திருவண்ணாமலை, வீராவடி, குடிமல்லம் (ஆந்திரா) போன்ற ஊர்களிலுள்ள அறநிலையத் துறையும் தொல் பொருள் ஆய்வுத் துறையும் பொறுப்பு எடுத்து வழிபாடு நடக்க வசதி செய்தால் நலமாக இருக்கும்.

அனுமந்தபுரத்திலுள்ள வீரபத்திரர் கோயிலில் பலரும் வந்து தங்கி வழிபடுவதால் அவர்கள் தங்குவதற்கு, கோயில் நிர்வாகம் தக்க வசதி செய்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும்.

இன்று வீரபத்திரர் வழிபாடு சிறந்து விளங்குகின்றது. பலரும் வீரபத்திரரை வழிபட்டுப் பயன்பெற வேண்டும். ❑

### வீரபத்திரரும் தீர்த்தங்களும்

*வீரபத்திரரும் – பைரவரும் தீர்த்தங்களுக்குக் காவல் தெய்வங்களாக இருக்கின்றனர். குடந்தையின் மகாமகத் தீர்த்தத்தில் கலக்கும் கங்கை முதலான புண்ணியநதிகளுக்குக் காவலாக கங்கை வீரபத்திரர் உள்ளார்.*

*வீரபத்திரர் அதியுக்ர வீரமூர்த்தியாக இருப்பதால் அவர் பார்வைக்கு நேராக குளம். கிணறு ஆகியவற்றை அமைப்பது வழக்கமாகும். அனுமந்தபுரத்தில் சந்நிதிக்கு எதிரில் பெரியகுளம் அமைந்துள்ளதைக் காண்கிறோம். செம்பியமங்கலம் வீரபத்திரர் ஆலயத்தில் மகாமண்டபத்தின் மையத்தில் பெரிய கிணறு உள்ளதைக் காண்கிறோம். பெரும்பேற்றில் காளிதேவிக்கு முன்பாக கிணறு அமைந்துள்ளது. இப்படி அனேக தலங்களில் வீரபத்திர மூர்த்தி அல்லது பத்ரகாளிக்கு நேராகத் தீர்த்தம் அமைந்திருப்பதைக் காணலாம்.*

*–சிவமஞ்சரி*

# வீரபத்திரரும் குறுமன்ஸுகளும்

சிவ. பரமசிவம்

"ஓம்" என்ற ஒலியின் நாதத்தில் தோன்றியது இந்த உலகம் என்று சான்றோர்கள் கூறுவர். ஓம் நமச்சிவாயா என்பது சிவனைக் குறிக்கும். சிவபெருமானுக்கு நான்கு புதல்வர்கள் உள்ளனர். அவர்களில் வீரபத்திரரும் ஒருவர். அந்த வீரபத்திரன் சிவபெருமானுடைய வியர்வையில் பிறந்தவர். தக்கனை அழிப்பதற்காகச் சிவபெருமான் வீரபத்திரனை உருவாக்கினார்.

குறுமன்ஸ் பழங்குடியினர் ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார்கள். முதன் முதலில் குடியப்பன், சம்புரிலியப்பன் தோராளியப்பன், கரிபீரப்பன் என்ற சகோதரர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தனர். அப்படி ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது வீரபத்திரசாமி அவர்களுடைய ஆட்டு மந்தைக்குள் புகுந்து ஓர் ஆட்டின் தலையை வெட்டினார். தக்கன் தலை இல்லாமல் இருப்பதால் தக்கன் உடலில் அந்த ஆட்டின் தலையை வைத்தார். வீரபத்திரனின் இச்செயலைக் கண்டு ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சகோதரர்கள் பயந்து விட்டார்கள்.

அப்போது அவர்கள் முன்பாக வீரபத்திரன் தோன்றி அவர்களுக்குக் காட்சி அளித்து ''நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். நான் உங்கள் ஆட்டின் தலையை எடுத்துக் கொண்டேன். உங்களை நான் காப்பாற்றிக் கரையேற்றுவேன். நீங்கள் என்னை நினைக்கும்போது, நான் உங்கள் முன் தோன்றுவேன். நீங்கள் நான் குறிப்பிடும் முறையில் என்னை வழிபட வேண்டும். நான் உங்களுக்குத் தெய்வசக்தி தந்து உங்களையும் உங்கள் சந்ததியினரையும் காப்பாற்றுவேன்." என்றார். அவ்வாறு கூறியபடி, குடியப்பன், சம்புரிலியப்பன், தோரளியப்பன், கரிபீரப்பன் ஆகியோர் வீரபத்திரசாமியை வணங்கி வந்தனர். அவர்கள் இறந்த பிறகு அவர்களுடைய சந்ததியினர் அவர்களுக்குக் கோயில் கட்டி அவர்களை வழிபடுகின்றனர்.

அவர்களை வழிபடும்போது வீரபத்திர சாமி அவர்கள் மூலமாக வந்து எல்லா உதவிகளையும் செய்து காப்பாற்றுகின்றார். அவர்களுக்குக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவர்கள் நினைவாகக் கற்களை வைத்து அந்தக் கற்களுக்குப் பூசை செய்யப்படுகிறது.

குறுமன்ஸ் வீரபத்திரசுவாமிக்குப் பூசை செய்யும் முறை: (தமரான் உற்சவங்கள்)

சாதாரணமாக ஒருவர் தமரான் செய்ய வேண்டுமானால் பங்காளிகளையும், சம்பந்திகளையும் சேர்த்துக் கொண்டு தமரானுக்கு நாள் நிர்ணயம் செய்வார்கள். அன்று சுவாமிக்குச் சாதாரண பூசை நடக்கும், சாமிச் செலவிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைத் தர்மகர்த்தாவிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட நாளில் தமரான் எந்த இடத்தில் செய்கிறார்களோ அந்த இடத்திற்குத் தமரானை எடுத்துச் செல்வர். அங்குச் சுவாமிக்கு அலங்காரம் செய்து பூசை செய்ய ஆரம்பிப்பார்கள்.

தீப்பந்தம் கொளுத்தித் திருஷ்டி கழிப்பார்கள். அது முடிந்த பின்பு சுவாமிக்குச் சந்தனம், பண்டாரம் இடுவார்கள். வெற்றிலை, பாக்கு, பழம் வைப்பார்கள், பூமாலை போடுவார்கள். முதலில் ஊதுவத்தி தீபாராதனை காட்டுவார்கள். பின்பு சாம்பிராணி தீபாராதனை

செய்வார்கள். கற்பூரத் தீபாராதனை செய்யும்போது எல்லோர் மீதும் தீர்த்தம் தெளிப்பார்கள், அப்போது தாரை, தப்பட்டை முழங்கக் கொம்பு ஊதுவார்கள். குலோலோ சொல்லிக் கூக்குரலிட்டு இறைவனை அழைப்பார்கள். இறைவன் வந்து மனிதனின் உடலில் புகுவார். அதன் முன்பு முட்டிபோட்டு உட்கார்ந்து கையை நீட்டுவார்கள். உடனே அங்கு அவனது தலையில் தேங்காய் உடைப்பார்கள். ஒருவர் மீதே ஐந்து (அ) ஆறு தேங்காய்கள் தொடர்ச்சியாக உடைத்துக் கொண்டே இருப்பார்கள்.

சுவாமி அருள் வந்து தேங்காயைத் தன் தலையில் போட்டுக் கொண்டவர்கள், அந்தத் தேங்காயை வேறு யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் மட்டுமே சாப்பிடுவர். இது தொன்றுதொட்டு நடந்து வரும் பழக்கமாகும்.

## இறந்தவர்களை வீரபத்திரசுவாமி கோயிலில் நிறுத்தித் தெய்வமாக்கி வழிபடுதல்

குருமன்ஸ் பழங்குடியின மக்களிடையே இறந்தவர்களை, வீரபத்திர சுவாமி கோயிலில் நிறுத்தித் தெய்வமாக்கி வழிபடும் முறையை இன்றளவும் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

குருமன்ஸ் பழங்குடியின மக்கள் இறந்துபோன தங்கள் மூதாதையர்களைக் கோயிலில் நிறுத்துவதற்காக, தலைமுடி தமரான் செய்யும் முன்பு கோவிலுக்கு வெளியில் பொங்கல் வைத்து, ஒரு கருங்கல் (கருங்கல்லை இறந்தவராகக் கருதி) முன்பு வைத்து படையல் படைத்து, வேட்டி, புடைவை போன்றவற்றை வைத்துப் படைப்பார்கள். அதன் பின்பே கோயிலுக்குள் கருங்கல் எடுத்துக் கொண்டு தாரை, தப்பட்டை, கொம்பு சத்தம் முழங்கக் குலோலோ என்ற வண்ணம் கோவிலுக்குள் வந்து அங்கு அதனை வைப்பார்கள். அப்படி வைத்தால் அந்தக் கல்லுடனே மூதாதையர்கள் கோயிலுக்குள் வந்ததாக நம்புகின்றனர். அவர்கள் தம் மூதாதையர்களே இந்தக் கோயிலில் தெய்வமாக வந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இறந்தவர்களைக் கோயிலில் நிறுத்தித் தெய்வமாக வழிபடுகின்றனர்.

இந்த வழிபாடு முடிந்த பின்பே குழந்தைகளுக்குத் தலைமுடி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. ❑

### சிற்பங்களில் வீரபத்திரர்

*சிற்பநூல்கள் வீரபத்திர மூர்த்தியின் வடிவைத் தனிச் சிறப்புடன் போற்றுகின்றன. "காரணாகமம்" வீரபத்திரரை, மூன்றுகண்கள் கொண்டவர். அக்னி ஜடையுடன், கோரைப்பற்கள் கடைவாயில் மின்ன, கபாலமாலை, மணிமாலை, தோளாலானமாலை ஆகியவற்றை அணிந்தவர். பாம்பைப் பூணூலாகத் தரித்தவர். இடுப்பில் குட்டையான காற் சட்டை அணிந்து பாதுகைகளைத் தரித்தவர். கத்தி கேடயம், வில், அம்பு ஆகியவற்றைத் தமது நான்கு கரங்களிலும் ஏந்தியவர் என்று கூறுகிறது.*
*"ஸ்ரீதத்துவநிதி" என்னும் நூல் உக்ரமயமான கோரமுகம் கொண்ட வீரபத்திரர் கத்தி, பாணம், கதை, வில் ஏந்தி பாதுகைகள் அணிந்து கபாலமாலை அணிந்துள்ளாரென்றும்; அவருக்கு இ'டப்பக்கம் அவரைப் போலவே ஆயுதங்கள் ஏந்தி நிற்கும் காளியையும், வலப்புறம் ஆட்டுத்தலையுடன் கூப்பிய கரம் கொண்டவனாக தட்சப்பிரஜாபதியையும் அமைக்கவேண்டுமென்றும் கூறுகின்றது.*
*- சிவமஞ்சரி*

# அகர வரிசையில் வீரபத்திரர் புகழ்மாலை

திருமதி ராஜலக்ஷ்மி, சிங்கப்பூர் பி.எஸ்.சி., பி.ஜி.டி.எம்

அன்பே வடிவான வீரபத்திரர் !
அருளே உருவான வீரபத்திரர்!
ஆறுதல் அளிக்கும் வீரபத்திரர்!
ஆட்கொள்ளும் அண்ணலே வீரபத்திரர்!
இனிதுவந்து காக்கும் வீரபத்திரர்
இன்பத்தைத் தந்தருளும் வீரபத்திரர்
ஈந்துவப்பதில் மகிழும் வீரபத்திரர்
ஈரநெஞ்சும் முகிழ்த்த வீரபத்திரர்
உதவுவதில் உவகைகொள்ளும் வீரபத்திரர்
உரம்கொண்ட உளம்நல்கும் வீரபத்திரர்
ஊக்கத்தின் உறைவிடம் வீரபத்திரர்
ஊறுகளைந்து நீதிகாக்கும் வீரபத்திரர்
எங்கும் நிறைதெய்வம் வீரபத்திரர்
எவர்க்கும் அஞ்சா நெஞ்சர் வீரபத்திரர்
ஏற்றம் வாழ்வில் தரும் வீரபத்திரர்
ஏகாந்த வாழ்வு தரும் வீரபத்திரர்
ஐம்பூதங்கள் ஒருங்கிணைந்த வீரபத்திரர்
ஐயமில்லை, வாழவைக்கும் தெய்வம் வீரபத்திரர்
ஒல்லும் வகையால் உயர்ந்த வீரபத்திரர்
ஒப்பில்லா மாணிக்கமே வீரபத்திரர்
ஓங்குபுகழ் கொண்ட வீரபத்திரர்
ஓங்கார நாதம் கொண்ட வீரபத்திரர்
ஔவியம் களையும் வீரபத்திரர்
ஔடதமே உன்நாமம் வீரபத்திரர்
அஃதன்றோ எங்கள் தெய்வம் வீரபத்திரர்
அஃதவரைத் தொழுதுய்வோம் வீரபத்திரா
தொழுதிடுவோம் வாழ்த்திடுவோம்

# ஓவியக்கலையில் வீரபத்திரர்

திருமதி ஜெகதீசுவரி ராஜு எம்.எஸ்.சி., எம்.ஃபில்.

கலை, மனிதனது உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகளை வெளிப் படுத்தும். கைத்திறனால் உருவாக்கப் பட்டவைகளில் முக்கியமான ஒன்று ஓவியக்கலை ஆகும்.

கவின் கலைகளில் ஒன்றான ஓவியக்கலை பற்றி ஈண்டு வரைவான் புகுகின்றேன். மிகப் பழமையான கலைகளில் ஓவியமும் ஒன்றாகும். ஒலி எழுத்துகள் தோன்றுவதற்கு முன் ஓவிய எழுத்துகள் இருந்துள்ளன. பேச, எழுதப், படிக்கத் தெரியாதவர்கள் கூட தம் கருத்துகளைத் தெள்ளத் தெளிவாக ஓவியத்தின் மூலம் உணர்த்தினார்கள். தொல்காப்பியர் காலத் திலிருந்தே தமிழரின் ஓவியக்கலைச் சிறப்பை அறியலாம்.

"ஓவியன் கைவினைமேல் எழுதப் படுவது உருவெழுத்தானும்" - என்று யாப்பருங்கல விருத்தி கூறுகின்றது.

## பொருள்

ஓவியர் என்றால் வித்தகர், சித்திரக்காரர், ஓவியமாக்கள் எனலாம். ஓவம், ஓவு என ஓவியம் வழங்கப்பெறும்.

"நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்" ஓவியர் என்று நச்சினாக்கினியர் கூறுகிறார். திருவாரூர் தியாகராசப் பெருமான் சன்னிதியின் மண்டபத்தின் பின்னே ஒரு புறத்தில் உள்ள வீரபத்திர சுவாமியின் ஓவியத்தைக் கண்ட பின்னர், இக்கூற்று உண்மை என எனக்கு விளங்கிற்று.

## ஓவியம் காணும் இடம்

மண்டபம், சித்திரக் கூடம், சித்திர மாடம், கோயில் மண்டப மேற்கூரை, முன் மண்டபம் மேற்கூரை எனப் பல இடங்களில் ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன.

## ஓவியம் கற்றவர்கள்

மன்னர், மகளிர், பெருங்குடிப் பெண்டிர், ஆடல் அணங்குகள் ஆகியோர் முன்பு ஓவியக்கலையில் சிறந்திருந்தனர்.

## ஓவியம் வரைவதற்கான பொருள்கள்

குழைத்து வைக்கும் பலகையினை வட்டிகை, வட்டிகைச் செய்தி என்கிறோம். வரைவதற்குத் துகிலினைப் பயன் படுத்து கிறோம். சுவர்கள், துணிகள், சுடுமண்சுவர் ஆகியவற்றில் ஓவியங்களைக் கலைஞர்கள் வரைந்தனர். வெண் சுதை பூசி அதில் வண்ணம் தீட்டினர்.

## ஓவிய வகைகள்

இவை புனையா ஓவியம், புனைந்த ஓவியம், புனையா ஓவியம் வரைந்து வண்ணந்தீட்டி புனைந்த ஓவியமாக்குதல் என்பவை.

## ஓவியம்

இவை வரைகோட்டு ஓவியம், மென்கோட்டு ஓவியம் (கரித்துண்டினால் வரையப்பட்டது)

வீரபத்திர சுவாமி ஓவியங்கள் அனைத்தும் புனைந்த ஓவியங்களாகும். முகப்பு வாயில்களில் காணப்படும் சுதை உருவங்கள் சில புனையா ஓவிய வகையிலும்

பல புனைந்த ஓவிய வகையிலும் காணப் படுகின்றன.

### புனையா ஓவியம்

வில்லிவாக்கம் வீரபத்திரசுவாமி கோவில் முகப்பு, மாநெல்லூர் வீரபத்திரர் முகப்பு, ராய்சுட்டி வீரபத்திரர் முகப்பு முதலியவற்றை இவ்வகையில் எடுத்துக் கொள்ளலாம்.

### புனைந்த ஓவியம்

காளிகாம்பாள் வீரபத்திரர் முகப்பு, அங்காளப் பரமேஸ்வரி முகப்பு, அரண்மைந்தபுரம் வீரபத்திரர் முகப்பு, பிரளயக் கால வீரபத்திரசாமி முகப்பு, பகத்தூர் வீரபத்திரர் சுவாமி முகப்பு, சேலம் குகை வீரபத்திரர் முகப்பு, திருநாகேசுவரம் வீரபத்திரர் முகப்பு, கோட்டைக்கோவில் வீரபத்திரர் முகப்பு, அமரகுந்தி வீரபத்திரர் முகப்பு, அம்மாப் பேட்டை வீரபத்திரர் முகப்பு ஆகிய பல கோயில்களிலும் உள்ளவை புனைந்த ஓவியம் ஆகும்.



*வீரபத்திரர் ஓவியம்,*
*தியாகராசப் பெருமாள்கோயில் திருவாரூர்*

### திருவாரூர் தியாகராசப் பெருமான் சன்னிதி ஓவியம் (நடனமாடும் ஓவியம்)

இங்கு வீரபத்திரர் எட்டுக் கைகளுடன், அக்னி கிரீடத்துடன் காணப்படுகிறார். அக்னி கிரீடத்தில் சந்திரப்பிறை காணப் படுகின்றது. கிரீடத்தின் அடியில் மிகுந்த வேலைப்பாடுகளுடன் காதில் குண்டலங்கள் காணப்படுகின்றன. நெற்றியில் வெண்ணீறு, வெண்ணீற்றின் மேல் குங்குமத் திலகம், வீரப்பல், அளவான நறுக்கு மீசை ஆகியவை காணப்படுகின்றன. அவர் மார்பினில் வெள்ளை நிற அங்கி, இடையினில் சிவப்பு நிற ஆடை அணிந்திருக்கின்றார்.

இவர் எட்டுக் கைகளை உடையவர். இவருடைய வலக்கைகளில் உடுக்கை, கட்டாரி, கிளி, சூலத்தின் அடி ஆகியவை காணப்படுகின்றன. மணி முதலியன காணப் படுகின்றன. சூலத்தின் தண்டில் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. கழுத்தில் மணி மாலையுடன் நடனமாடும் கோலத்தில் அவர் காணப்படுகிறார். கழுத்தில் ஆபரண மாலைகளும் காணப்படுகின்றன. எட்டுக் கைகளிலும் கடகங்கள் அணிந்து உள்ளார். இடக் கைவிரலில் மோதிரம் அணிந்து உள்ளார். கழல், தண்டை, மணியுடன் கூடிய கழல் ஆகியவற்றை வலக்காலில் அணிந்துள்ளார். இடக்காலில் கழல், தண்டை அணிந்துள்ளார். இரு கால்களிலும் மரத்தாலான கால் கட்டை அணிந்துள்ளார்.

வலப்பக்கக் காலடியில் ரிஷபக் கன்று ஒன்று வீரபத்திரரை உற்று நோக்குகின்றது. இடப்பக்கக் காலடியில் ஒரு போர்வீரன், இடக் கையில் கேடயமும், வலக்கையில் வாளும் வைத்துக் கொண்டுள்ள நிலையில்

குனிந்து காணப்படுகிறான். தலையில் கிரீடம் உள்ளது. வலப்புறம் அகோர வீரபத்திரர் என எழுதப்பட்டுள்ளது.

**கலை நயம்**

அழகு மிக்கப்பொருட்களையும், வீரம் விளைந்த செயல்களின் நிகழ்வினையும் ஓவியக் கலைஞன் ஞானக்கண் கொண்டு நோக்குகிறான். புற அழகோடு அக அழகையும், உண்மைத் தன்மையினையும் உணர்கிறான். அகக் கண்ணிற்கு வேலை தருபவர்களே நல்ல ஓவியக் கலைஞர்கள் ஆகிறார்கள். கலைஞன் தான் உருவாக்கிய ஓவியத்தினால் தான் இன்புற்றதை-அகமகிழ்ந்ததைப் - பிறரும் பலகாலம் உணர்ந்து அறிய வேண்டும், மகிழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திலே ஓவியக் கலையைப் படைக்கின்றான்.




*வீரபத்திரர் ஓவியம், பேரூர்*

வீரபத்திர சுவாமியின் ஓவியம் இத்தனை நயங்களையும் ஈடேற்றுகின்றது.

**கோவை, பேரூர்பட்டீசுவரம் ஓவியம் (தீயனவற்றை அழிக்கும் ஓவியம்)**

கொங்கு நாட்டுத் தலங்களில் கோவை சிறப்பான இடமாகும். கோவையினின்று 15 கி.மீ. தொலைவில் உள்ள பட்டீசுவரத்தில் உள்ள அங்காளப் பரமேஸ்வரி கோயிலில் உள்ள அகோர வீரபத்திரர் ஓவியத்தைப் பற்றி இங்குக் குறிப்பிடுகின்றேன். வீரபத்திரர் தலையில் இராச கிரீடம் உள்ளது. கிரீடத்தில் லிங்கம் உள்ளது. காதுகளில் குண்டலம், நெற்றியில் வெண்ணீறு, குங்குமத் திலகம், வீரப்பல், முறுக்கு மீசை ஆகியவை காணப் படுகின்றன. கழுத்திலே மண்டையோட்டு மாலை காணப்படுகின்றது. அவர் எட்டுக் கைகளை உடையவர். வலக் கைகளில் அம்பு, கத்தி, கட்டாரி, உள்ளன. மற்றொரு கையில் வாளின் பிடி உள்ளது. வாளின் நுனி அரக்கனின் மார்பில் உள்ளது. இடக் கைகளில் வில், மழு, மான், கேடயம் ஆகியவை உள்ளன. கழுத்தில் சிரா மாலை உள்ளது. கைகளில் 8 கடகங்கள் அணிந்துள்ளார். கால்களில் கழல்கள் அணிந்துள்ளார். உடலின் வலப்பாகங்களில் விபூதிப் பட்டை அணிந்துள்ளார். அரக்கனின் வலது காலில் வீரபத்திரரின் வலப்பக்கப் பாதமும், இடப் பக்கக்கால் முகத்தின் மேலும் உள்ளது. பின்னால் பிரபா வளையம் உள்ளது.

ஓவியத்தை வரைந்த காலம் தெரிய வில்லை. ஆனால் இது அன்றலர்ந்த பூப்போல் காணப்படுகின்றது.

**சங்கரன் கோவில் (போர்க்காலத் தளபதி ஓவியம்)**

திருநெல்வேலி சங்கரன் கோயிலிலும் சங்கர நாயானார் கோயிலிலும் வெளி



*வீரபத்திரர் ஓவியம், சங்கரன் கோவில்*

முகப்பு மண்டபத்தின் மேல் கூரையில் ஓவியங்கள் காணப்படுகின்றன.

தலையில் அக்னி கிரீடத்துடனும் எட்டுக் கைகளுடனும் வீரபத்திரர் காணப் படுகிறார். வலக்கைகளில் கத்தி, கட்டாரி, இடக் கைகளில் வில், கேடயம் ஆகியவை காணப்படுகின்றன. இரு கைகளிலும் சூலத்தைப் பிடித்து அவர் அகோர தாண்டவம் ஆடுகின்றார். வலக் காலடியில் ஓர் அரக்கன் அவரைப் பார்க்கும், காட்சி உள்ளது. இடக்கையில் கேடயத்துடனும் வலது கையில் வாளுடனும் வீரபத்திரர் நிற்கின்றார். அவர் இராச உடையில் காணப்படுகின்றார். இது பாண்டியர் காலத்து ஓவியமாகும்.

**பயன்**

ஓவியர்கள் புராணக் கதைகளை நன்கு அறிந்து ஓவியங்கள் தீட்டியுள்ளனர். கலைப்படைப்பு, எந்த நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டது என்பதைப் பலரும் அறியும் பயன் நிறைவேறுகின்றது. நிலை பேறு உடையவனவாக ஆகின்றது. கடவுள் அதர்மத்தை அதாவது தீயனவற்றை அழித்துத் தர்மத்தை, நல்லனவற்றை நிலை நிறுத்துவார் என மக்களுக்கு இந்த ஓவியங்கள் உணர்த்துகின்றன. வீரபத்திர சாமியைப்பற்றிய அறிவு, விரிவு அடைகின்றது. மனநிலை உயர்த்தப் படுகின்றது. நாடு, மொழி, இனம், பற்றிய வெறுப்பு நீங்குகின்றது. கலையும், பண்பாடும் வளர்கின்றன. ஓவியக் கலைஞரின் திறமையால் வீரபத்திர சுவாமி படைக்கப் பட்டதின் நோக்கம், உடைகள், கருவிகள் ஆகிய அனைத்தும் வெள்ளிடை மலையென விளங்கின்றன. அனைவரும் இந்த ஓவியங்களைக் கண்டு இன்புறுவோமாக! ❑

**அருள்மிகு வீரபத்திரர் போற்றி!**

*திருவானைக்கா உறையும் வீரபத்ரா போற்றி!*
*திருவருள் தந்திடும் வீரபத்ரா போற்றி!*
*தீவினை தீர்த்திடும் வீரபத்ரா போற்றி!*
*தீமைகள் தகர்த்திடும் வீரபத்ரா போற்றி!*

*-திருமதி வாசுகி கண்ணப்பன்*

# ஸ்ரீ வீரபத்திரர் வழிபாடும் வரலாறும்

கவிஞர், குமரிச் செழியன்

ஞானக் களஞ்சியமாக விளங்குபவை வேதங்கள் என்பர். அவ்வேத ஞானத்தைப் பகுத்தும் வகுத்தும் வழங்குபவை ஆகமங்கள். ஆகமக் கருத்துக்களைப் பாமரரும் புரிந்துகொள்ளும் வண்ணம் கதைகளைப் பின்னிக் கற்பனையோடு விளக்குபவை புராணங்கள். அப்புராணங்கள் வழியே அரிய, பெரிய ஞானக் கருத்துகளும், அறக்கருத்துகளும், ஒழுக்க நெறிகளும் வெளிச்சம் பெறுகின்றன. அற்புதங்கள் நிகழ்த்தும் வண்ணம் பின்னுகின்ற கதைகளிலே தெய்வங்கள் பாத்திரமாக்கப் படுகின்றன. திகழும் புனிதத்தை அடையும் வழிக்கு, நம்பிக்கை என்னும் நதியின் வழியே பயணம் செய்யும் பண்பாடுகள் உரைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட தெய்வீகப் பாத்திரங்களில் ஒன்றுதான் வீரபத்திரர் என்னும் வெற்றிமுத்திரை.

வீரபத்திரர் "பிறவா யாக்கை பெரியோன்" என்றும் சிவனுடைய மகன் என்றும், சிவனுடைய அம்சமாக வந்த அவதாரம் என்றும் பல்வேறு நிலைகளில் அழைக்கப்படுகிறார்.

சிவன் - சக்திக்கு நான்கு பிள்ளைகள் என்றும் அவர்கள் முறையே பிள்ளையார், அய்யனார், வீரபத்திரர், முருகன் என்றும், இவர்கள் நால்வரும் சிவ அம்சத்தின் நான்கு கூறுகள் என்றும் கூறுவர்.

மேற்படி நால்வருள்ளும் மூன்றாவது கூறாக விளங்குபவர் வீரபத்திரர். அவரைப் பற்றிய சில விவரங்களைத் தொகுத்துக் காணலாம்.

### சூடாமணி நிகண்டில் வீரபத்திரர்

சூடாமணி நிகண்டு, வீரபத்திரருக்கு 12 வெவ்வேறு பெயர்களைக் கூறுகின்றது. அவை உக்கிரன் முதலாகப் பத்திரைக்குக் கேள்வன் ஈறாக வருவன.

### வீரபத்திரர் - மகாகாளி

சிவ அம்சமாகத் தோன்றியவர் வீரபத்திரர். சக்தியின் அம்சமாகத் தோன்றியவர் மகாகாளி. இருவரும் சேர்ந்தே தக்கனது வேள்வியைச் சிதைத்துத் தக்கனின் படைகளையும் அவர்களுக்குத் துணையாக வந்த தேவரின் படைகளையும், தேவர்களையும் வதைத்து வெற்றி பெற்றனர். பின்னர் வீரபத்திரரும் மாகாளியும் சேர்ந்து அருளாட்சி செய்தனர். இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான் என்றும், அவன் பெயர் மகாகாளன் என்றும் அவனே ஹரிஹர புத்ர சாஸ்தாவின் படைத்தளபதியாக இருந்தான் எனப்படுகின்றது.

### வெற்றி தரும் வீரபத்திரர்

ஆணவம் தலைக்கேறியிருந்த தக்கனது கர்வத்தை அழித்து அவனுக்குச் சிவனின் அருள் கிடைக்கச் செய்தார் வீரபத்திரர். அது மட்டுமன்று, ஆணவத்துக்குத் துணை நிற்பவர் அனைவரும் அழிக்கப் படுவர் என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகவும் உள்ளது. ஆணவத்தை, தீமையை, அக்கிரமத்தை, அட்டூழியத்தை அழித்து நன்மையைச் செய்து நல்லவர்களைக் காப்பவர் என்று அவர் போற்றப்படுகிறார்.

தக்கன் வேள்வியைச் சிதைத்து அழித்தது மட்டுமன்று, அவனுக்குச் சார்பாக வந்த அனைத்தையும் அழித்துச் சிவநாமம் செழிக்க, சிவனின் செம்பண்பு ஒளிர வீரபத்திரருடைய அவதாரம் நிகழ்ந்துள்ளது. இறைவனாயினும், ஆணவம் கூடாது என்றும், எத்தகைய ஆணவமாயினும்

அநீதியாயினும் அதை அழிப்பதற்கு மற்றொருவர் தோன்றுவார்; தோன்றி மக்களைக் காப்பார் என்பதற்கு வீரபத்திரர் வரலாறு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### மக்கள் வழிபாட்டில் வீரபத்திரர்

வீரபத்திரர் பெரும்பாலும் காவல் தெய்வம் போன்று மதிக்கப்படுகிறார். கோயில் முகப்புகளில் அவருடைய உருவச் சிலைகள் அமைக்கப்பெற்றுள்ளன. பரிவாரத் தெய்வத்துக்கான பூஜைகளே பெரும்பாலும் நடைபெறுகின்றன.

சிவகங்கை, தெற்கு இலந்தைக்குளம் (திருநெல்வேலி) போன்ற சில இடங்களில் அவருக்குத் தனியாகக் கோயில் எடுக்கப் பட்டுள்ளன. அங்குத் தனித் தெய்வமாகப் போற்றி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சிவகங்கையில் அருள்பவரை ஸ்ரீ அக்கினி வீரபத்திரர் என்றும், தெற்கிலந்தைக் குளத்தில் அருள்பவரை ஸ்ரீ அகோர வீரபத்திரர் என்றும், சென்னை மண்ணடியில் அருள்மிகு காளிகாம்பாள் ஆலய வளாகத்தில் வீரபத்திர மாகாளி என்றும், இன்னும் சில இடங்களில் கல்யாண வீரபத்திரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இவருக்குச் சுக்கிவார பூஜை, சோமவார பூஜை, பரிவேட்டை அல்லது பாரிவேட்டை பூஜை ஆகியன சிறப்பாகச் செய்யப் படுகின்றன.

இன்னும் சிலர் பஞ்ச பூஜை என்று 5 வகையாகவும் கூறுவர். அவை.

*லம்-ப்ருதியாத்மனே-கந்தாம் தாரயாமி*
*அம்-ஆகாசத்மனே - புஷ்பாணி பூஜயாமி*
*யம்- வாயுவாத்மனே - தூபமாக்ராபயாமி*
*ரம்-அக்கியாத்மனே - தீபம் தர்சயாமி*
*வம் - அம்ருதாத்மனே - அம்ருதம்*
*மகாநெய்வேத்யம் நிவேதயாமி*

என்று ஐம்பூதங்களின் அடிப்படையில் அழைக்கப்படுகின்றன.

### சிவகங்கை ஸ்ரீ அக்னி வீரபத்திரர்

சிவகங்கையில் வேலுநாச்சியார் அரண்மனைக்கு அருகில், காமாட்சியம்மன் கோயில் தெருவில் ஸ்ரீ அக்னி வீரபத்திரர் தனிக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்றார். இக்கோயிலில் வீரபத்திரர் வழிபாட்டின் போது பின்வரும் மூலமந்திரம் ஒலிக்கப் படுகிறது. "ஓம் ரீம் ஸ்ரீம் க்ளிம்; சர்வ ஜனனே வசன மாய; ஸ்ரீ அக்னி வீரபத்ராய நம:"

இந்த அக்னி வீரபத்திரர் நான்கு திருக்கரங்களுடன் கிழக்குத் திசையை நோக்கி, சுமார் நான்கு அடி உயரத்தில் நின்ற கோலத்தில் அருளாட்சி புரிகின்றார். இவருக்குச் சிவராத்திரியன்று பால்குடம் ஏந்திச் சுற்றிவந்து சிலையைப் பாலில் முழுக்காட்டிப் பூஜைகள் செய்கின்றனர். சர்க்கரைப் பொங்கலிட்டுக் கற்பூர தீபாராதனையுடன் முழுநாள் திருவிழா நடத்துகின்றனர்.

தனியார் பாதுகாப்பில் உள்ள இந்தக் கோயிலில் மார்கழி மாதம் 30 நாள்களும் பங்காளிகளால் தினம் ஒருவர் வீதம் தினசரி சிறப்பு வழிபாடுகள் நடத்தப் பெறுகின்றன. தினமும் காலையில் மட்டும் ஒரு வேளை பூஜை தொடர்ந்து நடைபெறுகிறது. பூஜையின்போது நவதானியங்களைச் சமைத்து நெய்வேத்தியமாகப் படைக்கின்றனர். இதற்கெனத் தனியாக ஓர் ஐயரைப் பூசாரியாக நியமித்துள்ளனர். இந்தக் கோயில், எட்டு வீட்டுப் பங்காளிகள் என்பவர்களுடைய பராமரிப்பில் உள்ளது.

தஞ்சை நீடாமங்கலம் அருகில் உள்ள ஆதனூர் என்கிற கிராமத்தில் அருள் பாலித்த ஸ்ரீ வீரபத்திரர் கோயிலிலிருந்து குப்பத்துத் தேவர் என்பவர் வழியில் வந்த முத்து வீரப்பன் சேர்வை, திரு. முருகப்பன் சேர்வை, ஆறுமுகம் சேர்வை ஆகியோரால் பல நூற்றாண்டுகளுக்குமுன் பிடிமண்

எடுத்துவரப் பெற்று இக்கோயில் நிறுவப் பெற்றதாக முருகப்ப சேர்வை வழிவந்த ஆர். பாலசுப்பிரமணியன் என்பவர் உரைத்தார்.

மேற்படி எட்டு வீட்டுப் பங்காளிகள் பரம்பரையைச் சார்ந்தவர்கள் இல்லங்களில் எப்பொழுதும் தைப்பொங்கல் பண்டிகை கிடையாது. ஸ்ரீ வீரபத்திர ஆலயத்தில் மட்டுமே பொங்கலிட்டுப் படையல் செய்து மகிழ்கின்றனர். தீபாவளியன்று ஆலயத்தில் முதற் பூஜை செய்த பின்னரே வீடுகளில் கொண்டாடுகின்றனர். விநாயக சதுர்த்தி அன்று சிறப்பு வழிபாடும் செய்யப்படுகிறது.

பக்தர்களுக்கு விபூதி மட்டுமே பிரசாதமாக வழங்கப்படுகிறது. "மந்திரமாவது நீறு" என்று சொன்ன ஞானசம்பந்தர் வாக்கிற்கிணங்க அனைத்துக்கும் திரு நீற்றையே பயன்படுத்துகின்றனர்.

பழனி, திருப்பதி ஆகிய புண்ணியத் தலங்களுக்குச் சென்று பக்தர்கள் நேர்த்திக் கடன் செய்வதைப் போன்று இக்கோயிலில் பலதரப்பட்ட மக்களும் வந்து முடியிறக்கி மொட்டை போட்டுக் கொள்கிறார்கள். காது குத்திக் கொள்கிறார்கள். எத்துன்பம் ஆயினும் அதனை நிவர்த்திக்க இங்கு வந்து வேண்டுதல்கள் செய்து கொள்கின்றனர். அதற்குரிய பலன்கள் கிடைப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் என்று வருபவர்கள் முகத்தில் திருநீறு தெளிக்கப் படுவதுடன் அவர்களுக்கு அதுவே பிரசாதமாகவும் வழங்கப்படுகிறது. இதனால் அவர்களுடைய குறைகள் நிவர்த்தியாவதாகக் கூறுகின்றனர்.

எந்தத் துன்பமாக இருந்தாலும் இக்கோயிலுக்கு வந்து தம் குறைகளைச் சொல்லிப் பொறுப்பை வீரபத்திரரிடம் விட்டு விபூதி பெற்றுவிட்டால் அத்துன்பங்களை அவர் நீக்கிவிடுவார் என்று மக்கள் நம்புகிறார்கள்.

### கட்டுப்பாடுகள்

ஸ்ரீ வீரபத்திரருக்குப் பூஜை, படையல் என்று முடிவு செய்து விட்டால், பின்னர், சம்பந்தப்பட்ட பங்காளிகள் அனைவரும் கையில் காப்பு கட்டிக் கொள்கின்றனர். நாள் குறிக்கப்பட்ட பின்னர் உறவினர் திருமணங்கள் நடைபெற்றால் அத்திருமணத்துக்குச் சென்று விசாரித்து விட்டுச் சாப்பிடாமல் திரும்புதல், துக்க நிகழ்ச்சிகளுக்குச் செல்லாதிருத்தல், காப்பு கட்டிய நாள்முதல் அவர்தம் இல்லங்களில் அறுகீரை, மொச்சைப்பயிறு, தட்டைப் பயிறு, அகத்திக்கீரை, இறைச்சி, மீன், கருவாடு, முட்டை போன்ற உணவு வகைகளை ஒதுக்கிவிடுதல், வீடு வாசல்களைத் தினமும் பெருக்கித் தூய்மையாக வைத்திருத்தல், ஆண், பெண் இருபாலரும் தரையிலேயே பாய் இல்லாமல் படுத்தல், பூஜை செய்பவர் தனியாகச் சமையல் செய்து சாப்பிடுதல் போன்ற கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்று கின்றனர்.

ஸ்ரீ வீரபத்திரருக்குப் பால், தயிர், நெய், சர்க்கரை, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு வைத்துப் பூஜை செய்கின்றனர்.

இவ்வாறு பூஜைகள் நிறைவு பெற்றதும் தெய்வ அருள்பெற்று ஆடுபவர்க்குச் சந்தனம் பூசி, கழுத்தில் ஆரம் போட்டு, கையில் வெள்ளிப்பிடியரிவாள் கொடுக்கின்றனர். அவர் மூன்று முறை கோயிலின் உட்பிரகாரத்தைச் சுற்றிவந்து "பூ" வில் (தீயில்) இறங்கி நின்றவாறு அருள்வாக்குச் சொல்வார். பின்னர் நிறைவாகக் "கடா" வெட்டிப் பொங்கலிட்டு நிறைவு செய்கின்றனர்.

### தெற்கு இலந்தைக் குளம் (திருநெல்வேலி மாவட்டம்) ஸ்ரீ அகோர வீரபத்திரர்

ஸ்ரீ அகோர வீரபத்திரரை வணங்கும்போது பின்வரும் மூலமந்திரம் உரைக்கப்படுகின்றது.

''ஓம் ஹ்ரீம் ஹ்ரௌம் வீரபத்ராய அதிக்ரூராய; ருத்ர கோப ஸம்பவாய; சர்வ துஷ்ட நிவர்ஹணாய; க்ஷீம்பட் ஸ்வாஹா''

பின்வரும் மந்திரத்தை உச்சரித்தவாறு சிலர் ஸ்ரீ வீரபத்திரர் தியானத்தில் ஈடுபடுகின்றனர்.

*மரகத மணி நீலம் கிண்கிணீ ஜாலபாதம்*
*ப்ரகடி தஸூமுகேசம் பானு சோமாக்னி நேத்ரம்*
*சூல தண்டோக்ர ஹஸ்தம் விருதல மஹிஷம்*
*அகோர வீரபத்ரம் தம் நமாமி.*

## ஸ்ரீ வீரபத்திரர் போற்றிகள்

ஸ்ரீ வீரபத்திர ஸ்ப்த விம்சதி நாமாவளி என்று 27 நட்சத்திரங்களுக்குரிய 27 நாமாவளிகளை ஸ்ரீ வீரபத்திரர் போற்றிகளாக உரைத்து மகிழ்கின்றனர்.

1. ஓம் வீரபத்ரேச் வராய நம: 2. ஓம் வீர நாதாய நம: 3. ஓம் வீரப்ரபாவகாய நம: 4. ஓம் உக்ராய் நம: 5. ஓம் ரதவாஹனாய நம: 6. ஓம் த்ரி நேத்ராய நம: 7. ஓம் த்ரைலோக்ய வாஸகாய நம: 8. ஓம் தேவ தேவாய நம: 9. ஓம் தேவ ரக்ஷ்ஷதே நம: 10. ஓம் யோக பத்ராய நம: 11. ஓம் பார்வதீப்ரிய புத்ராய நம: 12. ஓம் பங்கஜ ப்ரியாய நம: 13. ஓம் ரௌத்ர ரூபாய நம: 14. ஓம் பக்த ரக்ஷகாய நம: 15. ஓம் சரபாய நம: 16. ஓம் சங்க சக்ரதாய நம: 17. ஓம் தனுர் ப்ருதே நம: 18. ஓம் கட்க ஹஸ்தாய நம: 19. ஓம் சர்வேச்வராய நம: 20. ஓம் ஸர்ப்பாரணாய நம: 21. ஓம் ரக்த கேசாய நம: 22. ஓம் யாக ஹந்த்ரே நம: 23. ஓம் வீணா நாதாய நம: 24. ஓம் ஸிம்ஹாஸனாய நம: 25. ஓம் நந்திகணாய நம: 26. ஓம் நரஸிம்ஹ ஸம்ஹராய நம: 27. ஓம் வீரபத்ராய நம:

-(தெற்கிலந்தைக் குளம் ஸ்ரீ அகோர வீரபத்ர ஸ்வாமி வரலாறும் வழிபாடும்)

சாதி புஷ்பம், வில்வ பத்திரம் ஆகியவற்றால் நாமாவளி அர்ச்சனைகள் செய்து நற்பலன் பெறுகின்றனர்.

ஸ்ரீ அகோர வீரபத்திரர் கம்பீரமான தோற்றம் உடையவர் என்பதை அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும் தென்காசி காசி விசுவநாதர் ஆலயத்திலும் காணலாம். சென்னை காளிகாம்பாள் திருக்கோயிலில் ஸ்ரீ வீரபத்திரர், மகாகாளி சமேதராய்த் தரிசனம் தருகிறார். மற்றும் பல இடங்களில் வீரபத்திரர் சிலைகள் உள்ளன.

## ஆயுதங்கள்

ஸ்ரீ வீரபத்திரர் திருக்கரங்களில் பல்வேறு வகையான ஆயுதங்கள் காட்சி யளிக்கின்றன. பொதுவாகத் தீமைகளை அழிப்பதற்குப் பயன்படும் ஆயுதங்களாகவே அவை இருப்பதைக் காணலாம். "கடிதோச்சி மெல்ல எறிக" என்ற வள்ளுவரின் வாக்குப்படி அச்சந் தரத் தக்க தோற்றத்துடன் அவர் அமைந்திருக்கிறார். ஆயுதங்களைப் பார்த்துத் தீமை செய்பவர்கள் அச்சப்பட வேண்டும் என்றும், திருந்த வேண்டும் என்னும் நோக்கில் அவருடைய தோற்றங் களை அமைத்துள்ளனர்.

வீரபத்திரருடைய திருக்கரங்களில் குந்தம், பலகை, தோமரம், பாலம், சூலிசம், சுரம், வாள், வேல், பிண்டி, எழு, வில், தண்டி, வச்சிரம் போன்ற ஆயுதங்கள் காட்சியளிக்கின்றன.

இவ்வாயுதங்களைப் பயன்படுத்திப் படை நடத்தித் தீமைகளை அழித்ததனால், அவ்வாயுதங்களோடு அவர் காட்சியளிப் பதாகத் திருவுருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. குற்றங்களுக்கேற்ப, தீமை களுக்கேற்ப, தேவையான ஆயுதங்களைப் பயன்படுத்துவதோடு, திருந்தியவர்களை அருள்பாலித்து ஆட்கொள்ளவும் ஏற்ற வண்ணம் ஸ்ரீ வீரபத்திரர் காட்சியளிக்கின்றார்.

## ஸ்ரீ அகோர வீரபத்திரர் வரலாறு

தக்கன் யாகத்தை அழித்து நல்வழிப் படுத்த வீரபத்திரர் தோன்றினார் என்பது

புராணச் செய்தி. ஒட்டக் கூத்தரின் தக்கயாகப் பரணியும் இதனை உரைக்கின்றது.

தக்கன் வதம் முடித்து திருக் கயிலையில் தந்தை சிவனுடன் வீரபத்திரர் உடனுறைந்தார்.

சிவருத்திரர் கலிவெண்பா வசனச் சுருக்கம்" என்னும் நூலில் பின்வருமாறு உரைக்கப்படுகின்றது.

ஸ்ரீ மகாவிஷ்ணு நரசிங்க அவதாரம் எடுத்து இரணியனை வதம் செய்தார். இரணியனை வதம் செய்துவிட்ட ஆணவத்தால் ஆதிமூலப் பொருளான முழுமுதலை மதிக்காமல் இறுமாந்து அலைந்தது நரசிங்கம். தான் வந்த வேலை முடிந்ததும் அமைதி கொள்ளாமல் சிம்மத்தின் குணமான இரத்த வெறியால் உலகமே கதிகலங்கும்படி ஆதாளி கொண்டு திரிந்தது. நரசிங்கத்தின் அடாப்பிடி அசுரர்களையும் நடுங்க வைத்தது. நரசிங்கத்தின் செயலால் உயிர்க்கணங்கள் உயிர்கலங்கி எல்லாம் வல்ல இறைவனை நோக்கி அபயக் குரலிட்டன.

தன் உடம்பிலுள்ள ஓர் உறுப்பாக இருந்தாலும் அது அழுகிப் புரையோடக் கூடுமானால் அதனால் பிற உறுப்புகளுக்குக் கேடுவிளையக் கூடாது என்பதற்காக அவ்வழுகிய உறுப்பைத் துண்டித்து நீக்கிப் பிறவுறுப்புகளைக் காப்பதுதான் அறிவுடைமையாகும். அதுபோல நரசிங்கத்தின் வெறிச் செயலை அடக்க ஈசன் எண்ணங் கொண்டார். இரும்பை இரும்பாலும், போர்வீரரைப் போர்வீரராலும், முள்ளை முள்ளாலும் ஒழித்துக்கட்டுவது போல வீர நரசிம்மத்தை வீரனால் கட்டுப்படுத்த நினைத்தார். உடனே தன் மகன் வீரபத்திரரை அழைத்தார். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்றுணர்ந்த வீரபத்திரர் தந்தையின் திருமுன்பு தோன்றி வணங்கினார்.

தக்கனின் மாயாஜாலங்களுக்கு மசியாமல் அவனையும் அவன் பாகத்தையும் சிதைத்துத் தேவாதி தேவர்கட்குப் புத்திப் புகட்டி மீண்ட வீரபத்திரனே என அழைத்து "ஒரு நரசிங்கத்தினால் உலகமே அழிவதைப் பார்க்கிலும் ஒரு நரசிங்கம் அழிவது பெரிதல்ல. உன்னையன்றிக் கோர நரசிம்மத்தை ஒருவராலும் ஒடுக்க முடியாது. ஆதலால் நீ விரைந்து சென்று அந்த நரசிங்கத்தைச் சங்கரித்து ஜீவராசிகளைக் காப்பாற்றி ஆறுதலளித்து உலக அமைதியை உண்டாக்குவாயாக" என்று கட்டளையிட்டருளினார்.

அன்பருக்கு அன்பரும், வம்பருக்கு வம்பரும், ஏழைப் பங்காளரும், தந்தை சொல்லுக்குச் சகலமும் அர்ப்பணம் செய்யும் சமர்த்தரும் ஆன வீரபத்திரர், நரசிங்கத்தின் கெடுபிடியைக் கண்டு ஆக்ரோசம் பொங்கி இரு தோள்களும் பூரிக்க வெகுண்டெழுந்தார். மீசை துடிக்க, சரயுச்சியின் சக்தியைப் பெற்று சக்தி வாளோங்கி அகோர வீரபத்திரராய் நட்சத்திரங்கள் உதிரும்படியான சண்டமாருத வேகத்தில் கிளம்பி, ஊங்கார சத்தத்தோடு நரசிம்மத்தின் மீது பாய்ந்து அதன் காலைப் பற்றி வான்முகடுதைக்க வீசி எறிந்தார். மீண்டும் கீழே விழுந்ததும் நரசிங்கத்தின் நெஞ்சின் மீது மிதித்து, "அடாது செய்பவர் படாது படுவர். உன் காலம் இதோடு தொலையட்டும்" என்று சக்திவாளால் அதன் சிரத்தை அறுத்து அகோரத் தாண்டவ மாடினார். பின்னர் கோபம் தணிந்து கோர நரசிங்கத்தைக் கொன்ற வெற்றியால் ஆனந்தத் திரு நடனமாடி மன்மதனும் வெட்கும் ரூப லாவண்யத்துடன் சாந்தம் பொலிந்த தயாளுவாகத் திகழ்ந்தார் வீரபத்திரர். ஜீவ கோடிகள் உய்ந்தோம் என மகிழ்ந்தன. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். இந்தத் தத்துவமுடைய அகோர வீரபத்திரர்

சிலை மதுரை மீனாட்சி சுந்தரேசர் சன்னிதியில் உள்ளது என்பர்.

நரசிம்மத்தை வதைத்த இரத்த பந்தத்தினால் வீரபத்திரருக்கு உலகியல் வாழ்வுக்கான காம லகிரி ஏற்பட்டது. அவருடைய திவ்ய ரூபத்தால் தேவமாதரும் ஈர்க்கப்பட்டனர். இதனை உணர்ந்த ஈசன் வீரபத்திரருக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார். தேவர்களை அனுப்பி ஈழநாட்டு அரசர் இராமராசர் குமாரி இளவரசி கயல்மணி என்ற பேரழகியை மணமுடித்தனர். இருவரும் மனமொத்த தம்பதியராய் மகிழ்வோடு வாழ்ந்தனர். இடையீடு இல்லாத இன்ப வாழ்க்கையில் சிவருத்திர என்ற திவ்ய மைந்தன் பிறந்தான். பின்னர் மனைவி கயல்மணிக்கு உண்மையை உணர்த்தி, தன்னுடைய தெய்வீக உருவங்காட்டி மறைந்தார் என்னும் செய்திகளை "சிவருத்திர கலிவெண்பா வசனச் சுருக்கம்" என்ற நூல் உரைக்கிறது.

### ஸ்ரீ வீரபத்திரர் வழிபாடு உரைக்கும் உண்மைகள்

திருக்கரங்களில் ஆயுதங்கள் ஏந்திய கம்பீரமான தோற்றம் தீயவர்களைப் பயமுறுத்தித் திருந்தச் செய்கிறது. ஆயுதங்கள் தீமைகளுக்கு ஏற்பத் தண்டனை வழங்கும் சட்ட நுணுக்கங்களை உணர்த்துவதாகக் கருதலாம்.

தீமை செய்தால் தீமையே விளையும் என்ற அறக்கருத்தின் விளக்கத்தை உணரலாம். தக்கனாயினும், நரசிங்கமாயினும் செய்த தவற்றுக்குத் தண்டனை உண்டு என்பதை வலியுறுத்துகின்றது.

வீரபத்திரர் வழிபாட்டில் கட்டுப்பாடுகள் மிகுதியாக இருப்பதால் மனத்தைக் கட்டுப்படுத்தி வாழ்க்கையில் கட்டுப்பாடுகளை வளர்த்துக்கொண்டு அமைதியாக வாழும் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது. சுற்றுப் புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் சூழ்நிலை மாசுக்கட்டுப்பாட்டு உணர்வை வளர்க்கிறது. எந்த உயிர்களுக்கும் தீங்கு செய்யக்கூடாது என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

தேவதேவராயிருந்தாலும் திருமண்ணை மிதித்து விட்டால் லௌகிக பந்தங்களில் சிக்கிவிடுகின்றனர் என்ற நீதியை உணர்த்துகிறது. யார் யார்க்கும் பிறப்புண்டேல் இறுதியில் முடிவும் உண்டு. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்ற அனுபவ நெறியை உணர்த்துகிறது.

சிவனின் குணங்களுடைய சிவ அம்சமாக வீரபத்திரர் தோன்றினார் என்னும் வழக்காறு இன்றைய அறிவியலின் உச்சக் கட்டமான "குளோனிங்" முறைக்கு வித்திட்டிருப்பதாக நினைத்துப் பார்க்கலாம்.

ஸ்ரீ வீரபத்திரர் வழிபாட்டில் மிகுதியான கட்டுப்பாடுகள் இருப்பதனால் அது மக்கள் வழிபாடாகப் பாமர மக்களிடம் அதிகமாகப் பரவவில்லை எனத் தெரிகிறது. எனினும் கடவுள் வழிபாட்டில் வீரபத்திரரும் இணைந்திருப்பதை எண்ணிப் பார்த்து பெருமை கொள்ளலாம். ❑

**அருள்மிகு வீரபத்திரர் போற்றி!**

*எங்கும் மங்களம் எங்கும் தங்கிட நீயும் அருள் புரிவாய்*
*வானம் பொழிந்திட பூமிவிளைந்திட நீயும் கருணை செய்வாய்*
*நின்னை நாங்கள் என்றும் மறவாதிருக்க அருள்புரிவாய்*
*நிந்தன் கருணை எங்கள் வாழ்வு என்பதனை மறவாய்*
*வீரபத்ரா! வீரபத்ரா! வீரபத்ரா! எங்கள் குலதெய்வமே*

*-திருமதி வாசுகி கண்ணப்பன்*

With Best Compliments from:

**KRAFTWERK ENGINEERS**

Chennai 600 068
Tel: 5941141
Fax: 5941144

**Highly Specialised Consultant for TG - Sets upto 500 MW and other Rotating Equipments in Termal power plant**

*With Best Compliments from:*

**HEALTHCARE AGENCIES**

250, Big Bazaar Street, Coimbatore - 641 001.
Phone: 397170 /394751

**SOLE DISTRIBUTORS FOR**

* Kodak Medical X-Ray Films / Chemicals
* C.T. Scan Film, MRI Films & Dental Films
* X-Ray Screens & Cassettes
* Trazograf Contrast Media
* 3M Medical & Surgical Products
* B. Braun Medical Products
* Becton Dickinson (B-D Range of Products)
* Top Corporation, Japan (Medical Disposables)

*Best Wishes from a well wisher*

# தக்கயாகத்தின் வெற்றியே சிவராத்திரி !!

திரு ஆ. திருவாசகன் எம்.ஏ., (ஆசிரியர், வீரசைவமுரசு)

சிவராத்திரி விழா ஏன் கொண்டாடப் படுகிறது என்பதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், இரண்டு காரணங்கள் பெரும்பாலும் வழக்கமாகச் சொல்லப்பட்டு வருகின்றன.

1. பிரளய காலத்தில், சிவபெரு மானோடு ஒன்றியிருந்த உமையம்மை வெளிப்பட்டு வந்து, ஒடுங்கிக்கிடக்கும் உயிர்களை மீண்டும் தோற்றம் பெறச் செய்து அவற்றை வாழ்விக்க வேண்டும் என்ற அருள் நோக்கத்துடன் பெருமானை நோக்கிப் பூசனை செய்தாள். அவள் அவ்வாறு பூசித்த நாளே சிவராத்திரி.

2. திருமாலும், நான்முகனும் தம்முள் யார் பெரியவர் என்று சண்டையிட அவர்கள் ஆணவத்தை அழிக்கும் பொருட்டு, சிவபெருமான் இலிங்கோத்பவராகத் தோற்றம் பெற்ற நாளே சிவராத்திரி.

இவ்விரண்டு செய்திகளும் சிவராத்திரியின் பெருமையைக் கூறவந்த புராணச் செய்திகள் என்ற அளவில் நமக்கொன்றும் கருத்து வேற்றுமை கிடையாது. எனினும் இன்றளவும் நடை முறையில் உள்ள ஒரு பெரிய விழா, அருள்மிகு அங்காள பரமேஸ்வரியை அடிப்படையாக வைத்து அப்பெருமாட்டி கோயில் கொண்டுள்ள தலங்களில் தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது என்பது நாம் கூர்ந்து நோக்க வேண்டிய செய்தி.

அங்காள பரமேஸ்வரி கோயில் கொண்டுள்ள தலங்களிளெல்லாம் மிகுதியும் வீரபத்திரக் கடவுள் ஒரு தனிச் சன்னிதியில் வீற்று அருள்பாலிப்பதை நாம் காணலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்திலும் சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களிலும் மாசித்திங்கள் தேய்பிறைச் சதுர்த்தசியில் "கப்பரை" எடுப்பு விழா அல்லது சிவராத்திரி விழா என்பதாக மூன்று அல்லது நான்கு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சிவராத்திரிக்கு முதல் நாள் இரவு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில்களில் ஒரு பெரிய சுளகில் (முறத்தில்) வேப்பிலைக் கொத்துகள் அடர்த்தியாகப் (சுற்றிலும்) பின்னப்படுகின்றன. அதன் நடுவே தக்கனின் உருவப் பொம்மை, அரிசி முதலிய பல பொருள்களினால் ஆன மாவினால் செய்யப்பட்டு அமைக்கப் படுகின்றது. முறத்தின் முன் பகுதியில் தீப்பந்தம் எரியவைக்கப்படுகின்றது.

நள்ளிரவு 12 மணி அளவில் வீரபத்திரர் அல்லது அங்காள பரமேஸ்வரியைத் தம்மீது வரவழைத்து (ஆவேசித்து) கொண்டதாகக் கூறப்படும் கோவில் பூசாரி ஒருவர் அக்கப்பரையைத் தலை மீது தாங்கி ஆவேசத்துடன் ஊர்வலம் வருவார். அக்காட்சி திகைப்பும் அச்சமும் ஊட்டுவதாக இருக்கும். இன்றும் புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியத்தில் (இராசசிங்கமங்கலம்) பல்லாயிரம் நாட்டுக் கோட்டை நகரத்தார் வழிபடும் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஹங்காப்புளிக் கருப்பர் கோயிலில் இந்த விழா மிகச் சிறப்பாக நடை பெற்று வருகின்றது. ஊர்வலத்தின் இறுதியில் மயானக் கருப்பர் கோயில் என்ற இடத்தில் தக்கன் பொம்மை அமைந்த அக்கப்பரை

எரித்து அழிக்கப்படுகின்றது. ஊர்வலம் முழுதும் பாடப்படும் அருள் முழக்கப் பாடல்களில் ஒட்டக் கூத்தரின் தக்கயாகப் பரணிப் பாடல்களும் உண்டு.

வடமாவட்டங்களில் மசானக் கொள்ளை விழா நடப்பது எல்லாருக்கும் தெரிந்ததே. அதற்கு அங்காள பரமேஸ்வரி அம்மன் மயானச் சூறை விழா என்பதே சரியான பெயராகும். இந்த விழாதான் தென்மாவட்டங்களில் கப்பரைத் திருவிழாவாக நடத்தப் பெறுகின்றது.

சிவபெருமானை மதிக்காமல் அவமதித்து நடத்தப்பட்ட தட்சயக்ஞத்தை அழிப்பதற்காகச் சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்த தனிப் பெருந்தெய்வமே வீரபத்திரர். சிவபெருமான் தலைமுடியிலிருந்து தோன்றியதாகவும், அவரது வியர்வையிலிருந்து தோன்றியதாகவும் சில வரலாறுகள் உண்டு. அவருக்குத் துணையாகப் பராசக்தியால் தோற்றுவிக்கப்பட்டவளே பத்திரகாளி, வீரமாகாளி, மாகாளி, பெரியநாயகி, பெரியாச்சி, பெரியாயி என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் அங்காள பரமேஸ்வரி ஆவாள்.

வீரபத்திரரோடு இணையாக நின்று இவள் தட்சயாகத்தை அழித்தவள் ஆதலால் வீரமாகாளி என்று சிறப்பாக அழைக்கப்படுகிறாள். பர்மா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலுள்ள தமிழர்களின் இந்துக் கோயில்களில் வீரமாகாளி கோயில்களே அதிகம் என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

தக்கயாகப்பரணியில் இந்த அங்காளம்மனே காளியாகக் கூறப்பட்டு அவள் அமர்ந்த கோயிலின் சிறப்பும், அவளைச் சூழ்ந்துள்ள பேய்களின் இயல்பும் மிகவும் சிறப்பாகப் பேசப்பெறுகின்றன.

குடந்தையில் மகாமகக் குளக்கரையில் அக்குளத்திற்கு நவகன்னிகைகளாக வருகை தரும் புண்ணிய நதிகளின் காவல் தெய்வமாகவும் விளங்குபவர் அருள்மிகு வீரபத்திரரே ஆவார். வீரபத்திரர் கோயிலை ஒட்டியுள்ள வீரசைவப் பெரியமடத்தின் முதல் குருவாக, சிவபெருமானால் தீட்சையளிக்கப்பட்டுப் பீடமேறியவர் என்ற வரலாறு பெரியமடத்தில் உண்டு. தமிழகத்தில் பதிவாளராகப் பணியாற்றிய அமரர் நந்திகேஸ்வரர் என்பவர், தாம் இந்தியா முழுவதுமுள்ள வீரசைவத் திருமடங்களுக்குச் சென்றிருப்பதாகவும் ஆனால் குடந்தை வீரசைவப் பெரியமடத்தைப் போன்ற பழைமையான மடம் வேறெங்கும் இல்லை என்பதோடு வீரசைவர்களின் வழிகாட்டியான வீரபத்திரரின் ஆலயங்களிலே குடந்தை ஆலயந்தான் முதன்மையானது என்பதாகவும் குறிப்பிட்டு எமது வீரசைவமுரசு இதழிலே எழுதியுள்ளார்.

சிவபெருமான் எட்டு வீரச் செயல்களைச் செய்தான் என்பதும் அச்செயல்கள் நடைபெற்ற இடங்கள் இன்று வீரட்டத் தலங்கள் என்று அழைக்கப்படுவதும் சைவ சமயத்திலே சிறப்பாகப் பேசப்படும் செய்திகள். அவற்றில் ஒரு வீரச்செயல்தான் தக்கயாகத்தை அழித்தது. அது நடைபெற்ற இடம் பழைய தஞ்சை மாவட்டம் திருப்பறியலூர். தக்கயாகத்தைச் சிவபெருமானே சென்று அழித்தான் என்று தேவாரம் பாடினாலும் வீரபத்திரனே அழித்தான் என்று திருவாசகம் குறிப்பிடுகிறது. தக்கயாக அழிப்பினைப் பற்றித் திருவுந்தியார் என்ற பகுதியிலே திருவாசகம் அருமையாகச் சொல்லிச் செல்கிறது. மணிவாசகரால் கட்டப் பெற்ற திருப்பெருந்துறை ஆலயத்தின் பல்வேறு இடங்களில் வீரபத்திர மூர்த்தம் காணப்படுகிறது. சில மிகப்பெரியவை. கலை நுணுக்கம் மிகுந்தவை.

"இராவணனைக் கொன்ற பாவம் நீங்க நீ மட்டும் சிவபிரானை வழிபட்டுப் பாவ நிவர்த்தி செய்து கொண்டாயே, அதில் எனக்கும் பங்குண்டல்லவா? எனது பாவம்

எப்படி நீங்கும்?'' என்று இராமனைப் பார்த்து அனுமன் கேட்டதாகவும் அதற்கு "வீரபத்திரரிடம் சென்று கேள், அவர் உனக்கு வழி சொல்லுவார்'' என்று இராமன் சொன்னதாகவும் ஒரு புராணக் கதை உண்டு. கன்னட நாட்டில் அனுமனோடு இணைந்த வீரபத்திரர் ஆலயங்கள் நிறைந்துள்ளன.

வீரபத்திரர் வழிபாடு பரவலாகச் செய்யப்பட்டாலும் சிறப்பாக வீரசைவர்களால் அவர் போற்றப்படுகிறார். அவர்களுக்குக் குலதெய்வமாகவும் விளங்குகின்றார். வீரசைவர்களுக்கு இட்டலிங்கம் தவிர வேறு தெய்வம் இல்லையென்றாலும் சைவசமயத்தைக் காப்பாற்றியதில்-சிவ வழிபாட்டை அழியாது நிலை நிறுத்தியதில்-வீரபத்திரருக்கு இணையாக வேறு சக்தி இருக்க முடியாது என்ற வகையில் வீரசைவர்களின் வழிகாட்டி யாகவும், முதல் குருவாகவும் அவரே விளங்குகிறார். "குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்பது இங்கு நினைத்தற்குரியது.

வீரபத்திரருக்கு வீரேசுவரன், உறங்கா வில்லி என்ற பெயர்களும் உண்டு. மேலே சொல்லப்பட்ட இராங்கியம் அங்காள பரமேஸ்வரி கோயிலில் உள்ள வீரபத்திரருக்கு உறங்காவில்லி என்றே பெயர். பின்னர் அது மருவி உறங்காப்புளிக்கருப்பன் என்றாகியது. தக்கனை வென்ற கோலம், பொதுவாக அகோரவீரபத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

அதாவது கடுங்கோபங்கொண்ட நிலை என்பதாக உணரப்படுகின்றது. இது பார்ப்பதற்குப் பயம் உண்டாக்குகின்ற வடிவம் என்பதாகக் கற்பிக்கப்பட்டுவிட்டது. உண்மையில் கோரம் என்றால்தான் பயங்கரமானது. அகோரம் அதற்கு நேர்மாறானது. அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

தென் மாவட்டங்களில், அங்காள பரமேஸ்வரி ஆலயங்கள் அதிகம். அவ்வாலயங்களில்தான் சிவன் கோயில்களை விட, சிவராத்திரிவிழா "கப்பரை எடுப்பு" என்ற பெயரில் சிறப்பாக இன்றும் கொண்டாடப்படுகிறது. தக்கனை மயானத்திற்கு எடுத்துச் சென்று அழித்த அடுத்த நாளில் மகாசிவராத்திரி விழா இரவு நான்கு கால பூசையுடன் சிறப்பாக நடைபெறுகிறது. எனவே வீரபத்திரர் தக்கனை வென்ற நிகழ்வே மகிழ்ச்சி விழாவாக அதாவது சிவராத்திரி விழாவாகக் கொண்டாடப் படுகின்றது என்பது நமது கருத்து. ❑

## தட்சசங்காரக் கதைகள்

*சிவபெருமான் தட்சனுடைய யாகத்தை அழித்து தேவர்களைத் தண்டித்து பின்னர் அவர்களுக்கு அருள்புரிந்த நிகழ்ச்சி மிகமிகத் தொன்மையான காலத்தில் நடந்ததாகும். ஆதலால் வேதம், புராணங்கள், மகாபாரதம் முதலிய தொன்மை நூல்கள் தொடங்கி இன்றுவரை அது பற்றிய குறிப்புக்களைக் காண்கிறோம். மகா ஸ்காந்தம், சிவமகாபுராணம் பாகவதம், காசிக்கண்டம் முதலான நூல்களில் இக்கதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.*

*தமிழில் கந்தபுராணம் தட்சயாகப்பரணி திருக்குற்றாலப் புராணம், காஞ்சிப்புராணம், பறியலூர்ப் புராணம் முதலியவற்றில் வீரபத்திரர் தட்சனின் யாகத்தை விரிவாகக் காணலாம்.*

*அங்காள பரமேசுவரியின் பெருமைகளைக் கூறும் கதைப் பாடல்களிலும் தட்சயாக பங்கம் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானைப் போற்றும் நூல்களில் அட்ட வீரட்டமும் அதிலொன்றாக தட்ச சம்ஹாரமும் பேசப்பட்டுள்ளது.* -சிவமஞ்சரி

# புறுடர் காட்டா வீரவாள்

திருமதி அ. பானுமதி நரசிம்மலு எம்.ஏ, எம்,எட்

சுமார் ஆறு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே மராட்டிய மண்ணில் மனித இனம் வாழ்ந்ததற்கான சான்று தற்சமயம் கிடைத்துள்ளது. இந்தியரின் வாழ்க்கை பல யுகங்களுக்கும் முன்னரே தோன்றியது. அதில் வீர பரம்பரையைத் தோற்றுவித்த வீரபத்திரரின் வழிவந்தோர் வீரமுட்டிகள் என்று கூறப்படுகின்றனர். அப்படிப்பட்ட வீருஷ்டிகள் அல்லது வீரமுட்டிகள் என்ற இனத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் மூலம் பெற்ற செய்திகளைக் கொண்டும், பல புத்தகங்களிலிருந்து திரட்டப்பட்ட ஆதாரங்களைக் கொண்டும், இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**வீரபத்திரர் - உலகம் முழுமைக்கும் தொன்மையான கடவுள்**

இந்தியக் கண்டம் ஆசியாவில் பிற்காலத்தில் இணைந்த தனிப்பகுதி என்றும், இது லெமூரியாக் கண்டத்தின் ஒரு பகுதி என்றும், தற்கால இமாலய மலைப்பகுதி கடல் பகுதியாக இருந்தது என்றும், புவியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். மத்தியில் உயர்ந்துள்ள மகாராஷ்டிர பீடபூமியில் வாழ்ந்த தொன்மையான குடிகளின் பூர்வீகத் தெய்வம், சுப்பிலி மற்றும் விர், வீர் (vir,veer) எனப்படும் தெய்வங்கள் ஆகும்.

குதிரை என்ற வாகனம் இந்தியாவிற்கு மற்ற தேசங்களிலிருந்து அறிமுகப் படுத்துவதற்கு முன்னால் வீர் என்கிற வீரதெய்வம் இந்நாட்டில் வணங்கப்பட்டது. சுப்பிலி தெய்வத்திற்கு வாகனமாகக் குதிரை உள்ளது. ஆனால் இது வீர் தெய்வத்திற்கு வாகனமாக இல்லை.

**வீர் தெய்வமே - வீரபத்திரர்**

வீரபத்திரர் மகாராஷ்டிர வீர் தெய்வத்தின் முழு உருவ அமைப்பைக் காட்டுவதாக எண்ணப்படுவதற்குக் காரணங்கள் பல உள்ளன. வீர் இனங்கள் மிகவும் மூர்க்கமான மக்கள் 'Ferocious People' என்ற குறிப்பு காணப்படுகின்றது. வீரபத்திரரின் 18 கைகள், போரில் அந்நாளில் பயன்படுத்தப்பட்ட கருவிகளை ஏந்தி நிற்பதாலும், காளி 18 கைகளில் ஏந்தும் கருவிகள் போலவே அவை தோற்றமளிப்பதாலும் முழுச் சக்தியின் வடிவமாகவே வீரபத்திரர் திகழ்கிறார். சிவனின் அம்சமாகவே வீரபத்திரர் இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக வீரபத்திரன் கோயிலின் அருகிலேயே காளியின் கோயில்களும் இருந்திருக்கின்றன. உதாரணமாக மயிலையில் வீரபத்திரர் கோயிலின் அருகில்-அன்றைய கடற்கரையில்-இன்றைய கோலவிழி அம்மையாகக் காட்சிதரும் காளி கோயில் உள்ளது. சிங்கப் பெருமாள் கோயில் அருகிலுள்ள அனுமந்தபுரத்தில் இரு காளி கோயில்களும், சென்னையிலுள்ள கல்மண்டபத்தில், வீரபத்திரர் கோயிலின் அருகில் காளி கோயிலும் உள்ளன.

**வீரபத்திரர் - உலக முழுமைக்கும் உகந்தவர்**

வீரபத்திரர் இந்த உலகத்திற்கே சொந்தமான கடவுளாக எண்ணப்படுவதால் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கோ மாநிலத்திற்கோ நாட்டிற்கோ அவரை உரிமைப்படுத்தி விட இயலாது. வீரபத்திரரின் புதல்வர் தமிழ்நாட்டில், வீரமுட்டியாகவும் ஆந்திராவில் வீரமுஷ்டியாகவும் கர்நாடகாவில் வீரமாஸ்டி யாகவும் போற்றப் படுகிறார். மகாராஷ்டிராவின் தொன்மைக்

Besant Nagar Chennai-90

குடிக்குத் தெய்வம் வீர் ஆகும். மும்பையிலுள்ள எலிபெண்டா கேட்டின் யானை வாயிற்புறத்தில் அமைந்துள்ள பிரம்மாவின் சிலைக்கு நேர் எதிரே வீரபத்திரரின், பிரம்மாண்டமான உருவத்தைப் பாம்பே கேட்டிலிருந்து 3/4 மணி நேரப் பயணத்திற்குப் பின் பார்க்கலாம்.

சென்னிமலையிலுள்ள வீரமுட்டியின் உடையும் அணிகலன்களும் நேபாள நாட்டு தேசிய உடை ஒன்றுடன் ஒத்துள்ளது. கம்போடியாவில் உள்ள சிதைந்த கோவில் சிவன் அல்லது வீரபத்திரரின் கோவில் எனக் கொண்டால், வீரபத்திரர் உலகம் முழுமைக்கும் பொதுவான கடவுள் எனக் கூறலாம்.

திருத்தணியிலுள்ள முருகனின் ஆலயத்தில் வீரபத்திரர் மற்றும் வீரபாகு முதலிய ஒன்பது வீரர்களின் சிலைகள் நவ வீரர்கள் என்பதாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு சிவன் கோயிலிலும் லிங்க உருவத்தின் பின்புறமாக வீரபத்திரரின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதும் மதுரை போன்ற புராதன நகர்களிலேயே அகோர வீரபத்திரருக்குத் தனிக் கோயில்கள் எழுப்பப்பட்டிருப்பதும் சிவனின் மறு அவதாரமாகவே வீரபத்திர சுவாமியைக் கருத இடமளிக்கிறது.

### வீரபத்திரரும் அன்றைய பாரதத்தின் வீரகுலத்தோரும்

வீர குலத்தைச் சேர்ந்தவர்களே நாட்டை ஆளும் சத்திரியராய் இருந்திருக்கின்றனர். நாட்டின் பாதுகாப்பு, கலை, கோட்பாடு ஆகியவற்றை வளர்த்தவர்களும் இவர்களே. இம்மண்ணில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பல கோட்பாடுகள் வளரக் காரணமாக இருந்த கௌதம புத்தர், மஹாவீரர், அசோகர் முதலிய அனைவரும் வீர பரம்பரையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும். எனவே வீரபத்திரரின் வரலாறு தமிழ்நாட்டுக்கு மட்டும் சொந்தமெனக் கொள்ளக் கூடாது. அது பண்டைய பாரத நாட்டிற்கும் அன்றைய உலகிற்கும் சொந்தமானதாகக் கொள்ள வேண்டும்.

### வீரமுட்டி வீரபத்திரரின் வம்சத்தவரா?

வீரமுட்டி இனத்தவர் வீர பரம்பரையைச் சார்ந்தவர்கள். வீரசைவக் கோட்பாட்டை ஏற்றவர்கள். இவர்கள் வீரக்கல் நடுபவர்கள் என்பது செய்தி. வீரர்கள் போரில் இறந்தபின் அவர்களுடைய உடம்பு புதைக்கப் பட்டவுடன் நடுகல் நடப்படும். பின்னர், அவர்தம் குடும்பத்தினர் அன்னாரது நினைவாகப் பூசைகள் செய்து போற்றி வந்தனர். அது இன்றைய லிங்க வடிவப் பூசைகளுடன் ஒத்துள்ளதாகச் சிலர் கூறுகின்றனர். திருக்கச்சூர் எனும் ஊரிலுள்ள வீரமுட்டி இறந்தபின் உட்கார்ந்த நிலையில் புதைக்கப்பட்டார். பின்னர் ஒரு குறிப்பிட்ட நாளில் அவருடைய சமாதி, தலை வரைக்கும் தோண்டப்பட்டு லிங்கத்திற்குரிய அனைத்துப் பூசைகளும் செய்யப்பட்டது. இது வியப்பூட்டும் செய்தியாகும்.

### வீரமுட்டி மக்கள்

வீரமுட்டி இனத்தவர் - கண்டங்கத்திரி கல்யாணி, குமாரத்தி, குண்டி, கோபுரம், வீரபத்திரர், சிவன், உத்தண்டி முதலிய 100 பிரிவுகளை உள்ளடக்கித் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு திருவிழா சமயத்தில் தங்களின் வருகையை உணர்த்தும் வகையில் பெரியவர் முன்னிலையில் அவர்களால் ஒரு பாக்கு வைக்கப்படும் என்பது செய்தி. இவ்வினத்தவர் வீரர்களானதால் இந்நாட்டில் நிலவிய உட்பூசல்களில் இவர்கள் அதிகமாக மடிந்தனர். அன்னியர் படையெடுப்பிலும் இந்து கோட்பாடுகளுக்காக நடந்த

சண்டையிலும் பாதிக்கப்பட்டனர். அயல் நாடுகளுக்கும் போர் வீரர்களாகச் சென்ற பல ஆண்களின் தொடர்பும் பராமரிப்பும் அறுந்ததாலும் இப்பிரிவினர் கணிசமான எண்ணிக்கையில் குறைந்துள்ளனர். மொத்தத்தில் வீரபத்திரரின் கோயில்கள் அழிவடைந்தவுடன் இந்த இனமும் அழிந்து விட்டது எனலாம்.

## வீரபத்திரரின் தோற்றம்

எல்லாக் கோயில்களிலும் வீரபத்திரரின் தோற்றம் ஒரே மாதிரியாக இருப்பதாகக் கூறப்பட்டாலும் சென்னையின் அருகிலுள்ள ஞாயிறு மற்றும் அகரம் கிராமத்தைச் சேர்ந்த வீரமுட்டிகள் வைத்துள்ள கேடயத்திலுள்ள வீரபத்திரன் தோற்றம் (புகைப்படமாக தரப்பட்ட வீரபத்திரர்) சற்று மாறுபட்டுள்ளது. வலப்புறம் வாளும் இடப்புறம் கேடயமும் பிடித்துக் கொண்டு இந்த வீரபத்திரரின் சிலை உள்ளது. அந்நாளைய வீரமுஷ்டியின் பெரியவர்கள் இதன் மீது பதிகம் பாடியதாகப் புகைப்பட உரிமையாளரும் அந்தச் சிலையின் உரிமையாளருமாகிய முதியவர் கூறுகிறார்.

## வீரமுஷ்டியின் அணிகலன்

'தார்ஸ்டன்' என்ற ஆங்கில அறிஞர் எழுதிய தென்னிந்தியப் பழங்குடிகள் என்ற புத்தகங்களின் தொகுதியில்'வி' என்ற பிரிவில் வரும் வீரமுட்டியின் அணிகலன் களும் சென்னிமலை, பழனி, திருத்தணி ஆகிய கோயில்களில் உள்ள வீரமுட்டிகளின் அணிகலன்களும் ஒன்றே. வலது கையில் வாள், மார்பில் வீரபத்திரரின் கேடயம், தலையில் பாகை, இடுப்பில் வீரத்தின் சின்னமாகிய பந்து கிண்ண வடிவத்துடன் இரு மண்டை ஓடுகள் ஆகிய இந்த அமைப்புகளுடன் அணிகலன் அணிந்தவர்



*வீரமுட்டிக் கேடயத்தில் வீரபத்திரர்*



*வீரமுட்டியின் அணிகலன்*

வீரமுட்டி புறம் காட்டி வீரவாள் என்பவர் ஆவர்.

### வீரபத்திரரைத் தேடி

வீரபத்திரரின் குழந்தைகளாகிய வீரமுட்டி இனம் சிதைந்து போனதன் சில காரணங்களைக் கட்டுரைகள் வாயிலாக வெளியிடத் தமிழ்ப்பண்பாளர்கள் இசைவு தந்தால் பல உண்மைகள் வெளிவரும், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் அவர்கள் குடியேறியிருந்தால் இதுபற்றி அறியவும் வாய்ப்பு கிடைக்கும்.

### வீரமுட்டி இனத்தைப் பற்றிய மக்கள் தொகைக் குறிப்பு

கன்னிமாரா நூலகத்தில் காணப்பட்ட ரிப்போர்ட் ஆஃப் த சென்சஸ் ஆஃப் பிரிட்டிஷ் இந்தியா, தொகுதி ஒன்று என்ற 1881 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் நாளன்று வெளிவந்த புத்தகத்தின் பக்கம் 309இல் சாத்தானி என்ற பூர்விகக் குடிகளின் தொகுப்பில் ஆண்டி, அம்பலக்காரன், பைராகி, தாசி, தாசரி, லிங்கதாரி, குர்மாபு, குட்டாடி, கொங்கன், நாகவாசுலு, நட்டுவன், நந்திகுலம், ஒச்சன், பண்டாரம், சாத்தானி, தம்பாலா, வீரமுஷ்டி என்கிற 17 பிரிவுகளும் கொடுக்கப் பட்டுள்ளன. 1871 ஆம் ஆண்டில் (அன்றைய கர்நாடக, ஆந்திர, தமிழ்நாடு மாநிலங்களின் தொகுப்பாகிய சென்னை ராஜதானியில் 6584 ஆக இருந்த வீரமுட்டிகளின் எண்ணிக்கை 1881இல் 1300ஆகக் குறைந்ததாகக் கணக்கு காணப்படுகின்றது. இந்தப் புத்தகம் எயர், ஸ்பாடிஷ் உட் என்பவர்களால் 1883இல் பார் கெர் மெஜஸ்டி ஸ்டேஷனரி ஆபிஸ் என்பதற்காக லண்டனில் அச்சிடப்பட்டது.

### சாத்தானி வகுப்பினரின் இருப்பிடம்

ரெவ. எம். எ. ஷெரிங்கும் மால்பிலண்டும் எழுதிய இந்து டிரைப்ஸ் மற்றும் காஸ்ட்ஸ் என்ற புத்தகத்தின் தொகுதி மூன்றில் சாத்தானி வகுப்பினரின் கூட்டம் அன்றைய பர்மா, கூர்க், மெட்ராஸ், மைசூர், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் இருந்ததாகவும் இவர்கள் மைனர் மற்றும் அன் பெசி பைட் தலைப்பின் கீழ் வருவதாகவும் எழுதப் பட்டுள்ளது.

சென்னிமலையில் வாழும் வீரமுட்டி இனத்தவர்; தவறுதலாகக் கன்னடியர் எனப்பட்டனர்.

### வீரமுட்டி இனத்தவர்

இவரது அணிகலன் பற்றிய புகைப்படம் இத்துடன் உள்ளது. பழனி, சென்னிமலை, திருத்தணி கோயில்களிலுள்ள வீரமுட்டியின் உடை தர்ஸ்டன் எழுதிய இந்தியப் பழங் குடிகளின் வி பிரிவில் வரும் வீரமுட்டியின் உடையே என்பதும் புலனாகும்.

### வீரமுட்டியும் வீரசைவமும்

வீரமுட்டிகள் வீரசைவப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் லிங்காயத்தவர்கள் ‘கஜானா’ சொத்து இவர்கள் பொறுப்பில் இருந்தபோது கர்நாடகத்து அரசரால் பணத்திற்காக இவர்கள் கொலை செய்யப் பட்டதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது. லிங்காயத்தவர் அவமானப் படுத்தப்பட்ட நிலையில் லிங்கத்தை விழுங்கி உயிர்விட எத்தனித்தனர். அப்போது வீரமுட்டியின் கர்ப்பிணிப் பெண் சத்தியப் பிரமாணம் எடுக்கையில், அந்த லிங்கம் காற்றில் பறந்து லிங்காயத்தவரது உயிரைக் காப்பாற்றியது. அந்த அளவிற்குக் கற்புக்கரசியராய் வீரமுட்டி மகளிர் இருந்ததாகவும் செய்தி கூறுகிறது. தேர் நகராத சமயங்களில் சிவலிங்கத்திற்குப் பாதுகாப்பாக வரும் வீரமுட்டி, தன் வாளால் தன் உடலைக் கீறி ரத்தம் சொட்டச் செய்வதற்கு முயற்சி செய்வார். அப்போது அவர் உடம்பில் காயம் ஏற்படாதபடி தேர் நகரும்.

வீரமுட்டி பற்றிச் செய்தி சேகரிப்போர் தென்னிந்தியப் பழங்குடிகள் பற்றித் தர்ஸ்டன் எழுதிய தொகுப்புகளையும் சிவப்பிரகாச முதலியார் எழுதிய தமிழ்க் களஞ்சியம் என்ற அகராதியையும் பார்க்கலாம். சில ஆங்கிலப் புத்தகங்களில் இவர்களை வீரமுட்டிப் பண்டாரம் எனவும் குறிப்பிட்டு உள்ளனர். இவர்கள் ஜைனர் பிரிவிலிருந்து வந்தவர்கள் என்பதும் ஒரு செய்தியாக உள்ளது.

## வீரமுட்டியும் ஜைனக் கோட்பாடும்

இந்துக் கோட்பாடுகளில் ஊறிய சைவர் பலர் ஜைன கோட்பாடுகளை ஏற்றனர் என்பதும் அதில் வீரமுட்டியும் கலந்ததாகவும் ஒரு செய்தி கூறுகிறது. முற்காலத்து 'ராஜ புத்திரர்கள்' ஜைனக் கோட்பாட்டை ஏற்ற செய்தியையும் இத்துடன் ஒப்பிடலாம். வீரமுட்டியின் வாள், சைவ உணவு, வாய்மூடிக் கொண்டு அவர்கள் வீரபத்திரருக்குப் பூசை செய்வது ஆகியவை ஜைனர், ராஜபுத்திரர் கோட்பாடுடன் ஒத்துள்ளது.

## வீரமுஷ்டியின் விளக்கம்

முஷ்டி என்றால் தானம் பெறுபவர், உதவி பெறுபவர் அல்லது பிச்சை பெறுபவர் என்று பொருள் தருவதாகக் கொள்வோம். வீரர்கள் வீர மரணம் அடைந்திட நேர்ந்தால் அவரது குடும்பத்தை அந்தச் சமுதாயத்தைச் (Community) சார்ந்த பல பிரிவினரும் மிகவும் தானம் அளித்துக் காப்பாற்றினர்.தமிழ்நாட்டில் இந்த வீரமுட்டி இனம், பட்டியலிலிருந்து விடுபட்டு விட்டது. தேவாங்கர், கோமுட்டி இனப் பெண்களின் மானத்தைக் காப்பாற்றப் பலியான வீரமுட்டிக்கு, அவர்கள் உதவி செய்ததன் காரணத்தை ஒரு கதை விளக்குகிறது.

## வீரமுட்டி கூத்தியர்

பிறப்பால் வீரகுலத்தில் தோன்றிய இவர்கள் பின்னாளில் வீரபத்திரரைப் பூசை செய்யும் பொறுப்பை ஏற்றனர். அச்சம் கொண்ட அந்தணர் சிலரால் இப்பொறுப்பு தரப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இவர்களின் வழிவந்த தோன்றல்கள் மிகவும் அழகானவர்கள். பல கலைகளிலும் சிறந்தவர்கள். எல்லாச் சிவன் கோயில்களிலும் வீரமுட்டிக்கு மானியம் இருந்ததாகவும் செய்தி உள்ளது. போர் இல்லாக் காலங்களில் பிற வேலைகளில் ஈடுபட்டதால் நடுகல் நடுதல், கல்தூண்கள் செய்தல், பூந்தோட்டம் பராமரித்தல், பூசையில் ஈடுபடுதல், தேவாரம் திருவாசகம் ஆகியவற்றைச் சிறு வயதிலேயே குழந்தைகளுக்குக் கட்டாயமாக மனப்பாடம் செய்ய வைத்தல் ஆகியவற்றை இவர்கள் மேற்கொண்டனர். ஒவ்வொரு வீட்டையும் கோயிலாக்கி, உத்திராட்சம் ஏற்று மிகப் புனிதாக வாழ்ந்தனர். வீரர்களாக இருந்ததால் இவர்களுக்கு இயற்கை வைத்தியமும் தெரிந்திருந்தது.

## வீரமுட்டியின் இன்றைய நிலைமை

தமிழ்நாட்டின் சாதிப் பட்டியலிலிருந்து விடுபட்டு விட்டதால், சம்பந்தப்பட்ட இனத்தவர்க்கு வெவ்வேறு இனச் சான்றிதழ்கள் தரப்பட்டதன் எதிரொலியாக சென்னிமலையைச் சேர்ந்த வீரமுட்டிகள் கன்னடியர் என்று தவறுதலாகக் குறிக்கப் பட்டனர். இதைப் பற்றிப் பல மனுக்கள் அரசாங்கத்திற்குத் தரப்பட்டன. சென்னை உயர்நீதி மன்றத்தில் போடப்பட்ட வழக்கு துரதிஷ்டவசமாக நீதிபதி அப்துல் ஹாதி அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

## பதில் இல்லாத கேள்வி

இப்படிப்பட்ட வீரமுட்டி இனம், சிவன் கோயில்கள் அழிந்து கொண்டிருக்கும் இந்தியாவில் அழிந்து வருவதில் ஆச்சரியம் இல்லை. மற்றவர் நலனுக்காக இரத்தம் சிந்திய இந்த இனம், அழிந்து வருகிறது. சாகரத்தில் சங்கமித்துவிட்ட நதி இனி திரும்ப ஊர் வந்து சேராது. ❑

# திருவானைக்கா அருள்மிகு வீரபத்திரசுவாமிக்குப் புகழ் மாலை

கவிச்சக்ரவர்த்தி, ஞானஒளி டாக்டர் வி.ஜி. சந்தோசம்

வீரபத்திரனே! வீரத்தின் திலகமே!
காவியத்தில்இடம் பிடித்த
கருணை யுள்ளம் கொண்டோனே!
கந்தனின் தந்தையிடம் அருள்பெற்ற
காவியத் தின்நற் திலகமே!
சிவசக்தியையும் சிந்தையில் கொண்டவனே!
உன்நாமம் என்றும்வாழ்க வாழ்கவே!

அசுரனை அழித்திடும் அருள்நிறைந்தவனே!
அன்னைத் தந்தையாகிய ஆதிசிவனின்
அருளின் கொடையினில் அகிலத்தை
உய்விக்கவந்த ஆன்மீக வள்ளலே!
தலைக்கனம் கொண்ட தட்சனின்
தவத்தைச் சீர்குலைத்த சிறப்புடையோனே!
சிந்தையில் வந்துகுடி கொண்டவனே!

வீரத்தின் வரலாறே! வெற்றியின்சிகரமே!
வாழ்வினில் ஒளிகொடுத்தே வரம்தருவாய்!
அருள்மிகு திருவானைக் காவலனே!
விந்தைகள் பலசெய்யும் சக்தியின்வடிவே!
அவதாரப்புருஷனாக அவனியில் உதித்தவனே!
ஆதியின்தூதுராக வந்தவனே
அன்னைசக்தியின் அருள்பெற்றவனே!

குவலயத்தில் வாழும்உனைக் கும்பிடவந்தோம்!
எங்களைக் குறைவின்றிக் காத்தருள்வாய்!
கள்ளம்கபடமின்றிக் கேட்கின்றோம்
கனிவுடன் உன்னைக் கேட்கின்றோம்!
காவியத்தலைவனே! காக்கும் தெய்வமாக
நினைநினைத்தே நாளும் உறவாடுகின்றோம்!
உமை என்றும் போற்றியே வணங்குகின்றோம்!

புவியினிலே புதுமைமிகு மனத்துடனே!
பொங்கும் மங்களம் எங்குமே
தங்கிட அருள் புரிவாயே!
அருட்கடலே! அன்பின் அவதாரமே!
எங்கள் குலதெய்வமே! வீரபத்திரனே!
விவேகம்தந்தே அருள்வாய் நீயே!

ஞானஒளியோடு அமைதியும் மகிழ்வும்
எல்லோர்க்கும் தந்தே காத்திடுவாய்!
எங்கள்குல வீரபத்திர சுவாமியே!

## பரமனுக்கு சொரியப்படும் பூமழைக்கு ஒரு பாமாலை

திருவானைக்கா உறையும் வீரபத்ரா உன்
திருவடி தாரும் வீரபத்ரா நின்
திருமன திரங்கி வீரபத்ரா என்றும்
திருவருள் புரிவாய் வீரபத்ரா
மலர்களைத் தூவி உம்மை வீரபத்ரா
மலர் மாலைகள் சூட்டி உம்மை வீரபத்ரா
மனதார போற்றுகின்றோம் வீரபத்ரா-எம்மை
மனதார வாழ்த்திடுவாய் வீரபத்ரா

*-திருவானைக்கா*

# அருள்மிகு அகோர வீரபத்திரரும் குறும்பர் (அ) குறுமன்ஸ் பழங்குடியினர் சமுதாயமும்

ச. சரவணன், இரெட்டிவலசை

பரம்பொருளாகிய ஈசுவரனின் பிள்ளைகளுள் ஒருவரான அருள்மிகு அகோர வீரபத்திரரைத் தங்கள் குலதெய்வமாகவும், காக்கும் தெய்வமாகவும் வணங்கி இன்றளவும் வழிபட்டு வரும் சனாதன தர்மத்தின் வழிநிற்கும் இந்திய மக்களுள் வட ஆர்க்காடு, திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி மாவட்டங்களில் வசிக்கும் கன்னடம் சார்ந்த, லிபி இல்லாத, தமிழ் மொழி பேசும் குறும்பர் (அ) குறுபா (அ) குறுமன்ஸ் பழங்குடியினரின் சமுதாயமும் ஒன்று.

குறும்பர் எனப்படும் இவ்வினமக்கள் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பல்லவர்களின் வழித்தோன்றல்கள் என வரலாறு தெரிவிக்கிறது. அவர்களின் லிங்க வழிபாடும் நந்தி வழிபாடும் அவர்கள் பல்லவர்களின் வழித்தோன்றல்கள் என அறிய ஏதுவாகிறது.

ஏழாவது நூற்றாண்டில் உச்சக் கட்டத்தில் இருந்த பல்லவ சாம்ராஜ்யம் 8ஆம் நூற்றாண்டில் சோழர்களால் வீழ்த்தப் பட்டது. அதன்பிறகு பல்லவ சாம்ராஜ்யம் சிதறுண்டது. அவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையிலும் மலை சார்ந்த பகுதிகளிலும் வாழ முற்பட்டனர்.

இதைப் பற்றிய விவரங்கள் திரு.ஆர்தர். எப். காக்ஸ் கி.பி.1881

(Arther.F.Cox.Asst. Collector and Magistrate N.A.Dist) திரு.ஏரால்டு ஸ்டுவர்ட் (H.Stuvart, I.C.S. Member of Royal Statistical Society) Manual of North Arcot District Volume 1 கி.பி.1895) டாக்டர் A. அய்யப்பன் (Vice Chanceller, Kerala University) ஆகியோரின் குறிப்புகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்றது.

அதன்பிறகு அவர்களின் தொழில் ஆடு, மாடு மேய்த்தலும், கம்பளி நெய்வதும் ஆகும். குறும்பர் எனப்படும் இவ்வினமக்களால் வளர்க்கப்படும் ஆடு 'குறும்பாடு' என அழைக்கப்படுகிறது. சிலர் விவசாயமும் செய்கின்றனர்.

பல்லவ மரபில் வந்த குறும்பர் இனச் சமுதாயத்தின் குலதெய்வமாகவும், காக்கும் தெய்வமாகவும் வழிபடப்படுபவர், அருள்மிகு அகோர வீரபத்திரர்.

### வடஆர்க்காடு, திருவண்ணாமலை, தருமபுரி மாவட்ட மக்களின் நம்பிக்கையில் அருள்மிகு அகோர வீரபத்திரர்.

மேற்கண்ட மாவட்டங்களில் வாழும் குறும்பர் சமுதாய மக்கள், அருள்மிகு அகோர வீரபத்திரரை ஒரு காவல் தெய்வமாகவே நம்பிக்கையுடன் வழிபடுகின்றனர்.

வீரபத்திரர் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பவர், குழந்தைப்பேறு இல்லாதவர்க்கு குழந்தை வரம் அளிப்பவர் என்பது குறும்பர் சமுதாய மக்களின் நம்பிக்கை. அதுமட்டு மல்லாமல் மனம் சிதைவுற்றவர்களைக் காப்பாற்றி மீண்டும் அத்தகையவர்களை இயல்பானவர்களாக மாற்றும் சக்தி உடையவராகவும், பேய், பிசாசு முதலான பில்லி, சூனியங்களை அழிக்கும் வல்லமை உடையவராகவும் அவர் போற்றப்படுகிறார்.

## காவல்தெய்வம்-அருள்மிகு அகோர வீரபத்திரர்

குறும்பர் சமுதாய மக்களின் முக்கியத் தொழில் ஆடு மேய்த்தல் என்பதால் இரவில் ஆட்டுப்பட்டிகளில் ஆண்கள் காவலிருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அப்பொழுது அம்மக்களின் பெண்டிர்களையும், குழந்தைகளையும் காப்பவராகவும், இரவிலும் மழைக்காலங்களிலும் ஆடு, மாடுகளை விஷஜந்துகளிடமிருந்தும் மற்றும் துஷ்டசக்திகளிடமிருந்தும் காப்பவராகவும் அருள்மிகு அகோர வீரபத்திரர் (காவல் தெய்வமாக) விளங்குகிறார்.



அகோர வீரபத்திரர்

## இன்றைய வழிபாட்டில் வீரபத்திரர்

அருள்மிகு அகோர வீரபத்திரர் 32 ஆயுதங்களைத் தரித்தவராகக் கருதப்படுகிறார். வழிபாட்டின்போது அவர் நான்கு கரங்களை உடையவராய், நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். வலப்பக்க மேற்புறக் கையில் அம்பும், இடப்பக்க மேற்புறக்கையில் வில்லும், வலக்கீழ்க் கையில் கத்தியும் கொண்டு, இடக்கீழ்ப் புறக்கை அபயம் அளிக்கும் நிலையில் காட்சி தருகிறார்.

இவரின் வாகனமாய் நந்தி பகவான் விளங்குகிறார். சிவன் கோயில்களில் நந்திபகவான் எப்படி வீற்றிருப்பாரோ அதே போல் இங்கும் வீற்றிருக்கிறார்.

கருவறையில் மூலவர்க்கு அபிடேக ஆராதனைகள் செய்யப்படுகிறது. உற்சவ மூர்த்தியானவர் கரகம் வடிவில் வெற்றிலை, வில்வ மாலைகள், பூக்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டவராய் லிங்கம்மாள் எனும் தன் துணைவியுடனும் தன் பரிவாரங்களுடனும் போர் புரியும் கோலத்தில் காட்சிதருகிறார். பரிவார மூர்த்திகள் பலகையில் (அ) மணையில் அமர்ந்தவர்களாய் காட்சி தருகிறார்கள். வீரபத்திர அலிக என்னும் சிறிய வடிவிலும் அவர் உடன் வருகிறார்.

'கூளியெத்து' என இம்மக்களால் வழங்கப்படும் நந்திபகவான் (காளைமாடு) முன்னே செல்ல, அவர் பின்னே அலிக,



வீரபத்திரரும் லிங்கம்மாளும்

திம்ம என்றழைக்கப்படும் தப்பட்டை முழங்கக் கொம்பு ஊத, புல்லாங்குழல் இசைக்க, சாமகலம் அடிக்க, ஜெகதாம் சத்திய எனப்படும் பூசக்ரகுடை பிடித்துவர அருள்மிகு அகோர வீரபத்திரரும், அவரது பரிவாரங்களும் உற்சவ மூர்த்திகளாய், முறையே கரகம் மற்றும் மணை வடிவங்களில் ஆண்களின் தலைமேல் அமர்ந்தவராய், 32 ஆயுதங்களைத் தரித்தவராய் நடனமிட்டுக்கொண்டு கோயிலை விட்டுச் சேவை சாதிக்கப் புறப்படுவார்.



*களத்தில் வீரபத்திரர்*

அவர் செல்லும் வழியில், தண்ணீர் குடம் குடமாக ஊற்றிக்கொண்டே இருப்பார்கள். வேண்டுதல் உள்ளவர்கள் அவரையும், நந்தியையும், அவரது பரிவாரங்களின் கால்களையும் நீரால் கழுவி, மஞ்சள் பூசி நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்க, அவர் அவர்களை ஆசிர்வதித்துத் தாண்டிச் செல்வார். பக்தர்களுக்குத் திருநீறும், சந்தனமும், பண்டாரம் எனப்படும் மஞ்சளும் பிரசாதமாக வழங்கப்படும்.

பிறகு தமரான் செய்தல் என்ற வழிபாடு செய்வதாக வேண்டிக் கொண்டவரின் நிலத்திலோ கோயிலின் அருகிலோ சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் அகோரவீரபத்திரரையும் அவரது பரிவாரங்களையும் அமரவைப்பர். பிறகு 'குனாது' என்று வழங்கப்படும் சேவாட்டம் (நடனம்) நடைபெறும். சேவாட்டத்தின் இடை இடையில் கக்க (Kagga) எனப்படும் மந்திரங்கள் அல்லது நாமாவளி சொல்வார்கள். இந்த கக்கத்தின் (Kagga) மூலம் அருள்மிகு அகோர வீரபத்திரரின் வரலாற்றையும், வீரத்தையும் கூறுவார்கள்.

சேவை ஆட்டம் முழுமையாக முடிந்ததும் பூஜைகள் முடிந்த பிறகு தலைமீது தேங்காய் உடைக்கப்படும். தேங்காய் உடைப்பதற்கு முன்னர் அவர்களது கழுத்தில் மாலை அணிவித்து, தலைமீது பண்டாரம் எனப்படும் மஞ்சளை உச்சியில் பொட்டு போல் வைப்பர். பிறகு தப்பட்டைகளும், கொம்பும் துரிதக்கதியில் இசையை முழக்க, தேங்காய் போட்டுக் கொள்பவர்களுக்கு அருள்வர, அவர்கள் தலைமீது தப்பட்டை அடிப்பவர்களால் தேங்காய் உடைக்கப்படும்.

பிறகு பில்லி, சூனியம், பேய் முதலான துஷ்டசக்திகளினால் பாதிக்கப்பட்டவர் களுக்குப் பண்டாரம் இட்டு, சாட்டையினால் அவர்களது கைகளில் அடிப்பர். பலர் ஐந்தாறு அடிகளில் வணங்கி எழுந்துவிடுவர். ஒரு சிலரோ 50 அடி விழுந்தாலும் ஆடிக்கொண்டேயிருப்பர். அப்போது அகோர வீரபத்ரரின் வாளை அத்தகைய துஷ்டசக்தி பீடித்தவர்களின் நடுஉச்சியில் பண்டாரம் வைத்து, இறைவனை வணங்கி சிறிது உச்சி முடியைப் பிடித்து அறுத்தெடுத்து வெகுதொலைவு சென்று மரத்தில் ஆணியடித்து வந்துவிடுவர். இதன்மூலம் நோயுற்றவர் குணமாகி விடுகின்றனர்.

பிறகு உற்சவமூர்த்தி தன் பரிவாரங் களுடன் நடனம் ஆடியவாறே அங்கிருந்து புறப்பட்டுக் கோயிலை வந்தடைவார். அங்கு அக்னி மூட்டப்பட்டு அதனை

மூன்று முறை வலம் வந்த பின்பு சன்னிதியைச் சென்றடைவார்.

## அருள்மிகு அகோர வீரபத்திரரின் ஆயுதங்களும் - கருவிகளும்

அருள்மிகு அகோர வீரபத்திரர் 32 ஆயுதங்களை உடையவராய் வருணிக்கப் படுகிறார். சிலம்பு, சிங்காணி, கைக்கத்தி, அதுருகத்தி, பிதுருகத்தி, பிதுருசாணாகத்தி, பலவிக்கேபாணா, பரங்கிசாணா, பாஸ்பதா, விட்டலா, ஜமத்தண்டே, கல்லுசேலே, பிலிச்சேளா, கெணிக்குதிரே, உக்காலத்து கெண்டே, ஒக்கேபானா, இந்துப்பா முதலானவைகள் அவரது ஆயுதங்களாகக் கூறப்படுகின்றன. எனினும், 32 ஆயுதங்களையும் பற்றி அறிய இயலவில்லை. காலவழக்கில் அவை மறைந்து விட்டதாகவே தெரிகிறது.



*நடனம் - குனாகத்தி*

## சேவையாட்டம் (நடனம்)

உற்சவமூர்த்தியின் முன் ஆடப்படும் இந்த நடனம் 'குனாது' என்றழைக்கப் படுகிறது. இந்த நடனக்குழுவில் ஆறு அல்லது எட்டு அல்லது பன்னிரண்டுபேர் இருப்பர். உற்சவர் முன்னால் இவர்கள் நடனமிடுவர். அவர்களுக்குப் பின்னால் இருந்து தப்பட்டை அடிக்கப்படும். புல்லாங்குழல் ஊதப்படும், சாமகலம் அடிக்கப்படும்.

நடனம் ஆடுபவர்கள் இரண்டு கால்களில் சலங்கை கட்டியிருப்பர். வேட்டியைக் கீழ்ப்பாசல் என்றழைக்கப்படும் முறையில் கட்டித் தலைப்பாகை கட்டி, இடதுகையில் ஒரு துண்டும், வலதுகையில் வாளும் கொண்டு ஆடுவர்.

பொதுவாக இந்த நடனம் 11 பிரிவாக உள்ளது.

1. பூஜைகத்தி
2. குனாகத்தி
3. கரகதகத்தி
4. நட்டுவதகத்தி
5. சிந்தகத்தி
6. நவிலுகத்தி
7. சாதனகத்தி
8. மயிலுகத்தி
9. புலிவாசம்
10. தும்பகராகத்தி
11. நடாகத்தி.

நடனத்தின்போது நடனமாடுபவர்கள் உற்சவரையும், தப்பட்டை அடிப்பவர்களையும் வணங்கிய பிறகு இசைக்கேற்ப ஆடுவர்.

இந்த நடனம் ஒரு மணி நேரம் நடக்கும். இசைப்பவர்களும், நடனம் ஆடுபவர்களும் மிகவும் உற்சாகமாக முழுமையாக ஆடினால் இரண்டு மணி நேரத்திற்கு மேல்கூட நடனம் நீடிக்கும்.

இந்த நடனத்தின்போது ஆடுபவர்களின் கைகளும், கால்களும் முழுமையாக இயங்குவதால் உடலுக்கு நல்ல வலிவும், நரம்புகளுக்குச் சக்தியும், புத்துணர்ச்சியும் கிடைக்கிறது.

ஆக, இந்தப்பகுதிகளில் வசிக்கும் குறுமன்ஸ் பழக்குடியின மக்கள் ஈசுவரனின் மகனாகிய அருள்மிகு அகோர வீரபத்திரரை வணங்கி, நடனமாடி அவரை மகிழ்வித்து, அவரின் ஆசியால் எல்லா வளமும் பெற்று நல்ல மனிதர்களாய் வாழ்ந்து வருகின்றனர் எனில் அது மிகையில்லை. ❑

# அருள் தரும் வீரபத்திரன்

இதயகீதம் இராமானுஜம், சென்னை

கல் தோன்றி, மண் தோன்றி, மாந்தன் தோன்றிய அன்று முதல் இன்று வரை, தமிழக வரலாற்றுப் பெருமையை நிலை நிறுத்தும் வகையில், மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது இறைவழிபாடும், நம்பிக்கையும் ஆகும். இன்று, மக்கள் வாழ்க்கையில் மின்னிச் சுடர்விடுகின்ற நாகரிகம், பண்பாடு, கலாசாரம், சடங்குகள் ஆகியவை, இவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன.

பண்டைய காலத்தில் வழிபாடு, நிலங்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தது.

*'மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்'*

என வரும் தொல்காப்பிய நூற்பா இதைச் சுட்டிக் காட்டுகிறது.

இயற்கையே அவர்கள் வழிபாட்டின் அடிப்படையாக இருந்தது. காடு, மலை, நிலம், கடல், ஆகியவற்றைத் தெய்வம் வாழும் இடமாகக் கருதி, வழிபட்டு அவற்றைக் காத்து வந்தனர்.

கல்வி வளர்ச்சியும், நாகரிக வளர்ச்சியும், மக்கள் தொடர்பு சாதனமும் வளர, வளர அவரவர் தேவைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, இறைவழிபாடு மாறி வந்திருக்கிறது.

நம்முடைய வரலாற்றுக் களங்களைப் பார்க்கும் போது, விழிகளை விரிய வைக்கும் பாரம்பரிய அடிப்படை நமக்கு இருப்பதை உணரலாம்.

ஐந்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை, தமிழ்மொழி சமயச் சார்புடையதாகவும், அறிவியல் சிந்தனை மிக்கதாகவும் வளர்ந்தது என்பதைப் பக்தி இலக்கிய வரலாறு நமக்குப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்ற உண்மையாகும்.

சைவ சமயத்தைச் சார்ந்த நாயன்மார்கள் பாடிய பதிகங்கள் தொகுக்கப்பட்டுத் திருமுறைகளாக அமைக்கப்பட்டன. அதைப் போலவே, ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என அழைக்கப்பட்டது.

மேகங்கள் திரண்டு, குளிர்மையைச் சேர்த்து மழை பொழிவதைப் போல நாயன்மார்களும், ஆழ்வார்களும் இசைத்த பாடல்கள், மக்கள் நெஞ்சில் மையல் கொண்டது. அதனால்தான் தமிழ்நிலத்தில் தமிழிசையும் இலக்கியமும் சிறந்து விளங்கின. பக்திப் பயிர் செழுமையாய்த் தழைத்தது, வளர்ந்தது.

எனவேதான் இன்றும் கூட மக்கள் வேறுபட்டு நின்றாலும், மாறுபட்டு வாழ்ந்தாலும் இவர்களை இணைக்கின்ற சாதனமாக இருப்பது பக்தி என்னும் அறிவியல் பாலம் ஆகும்.

திராவிடர்கள் மத்தியில் பழைமையும், சக்தியும் வாய்ந்த தெய்வம் வீரபத்திரன் ஆகும். உலக அரங்கிற்கு உன்னதமான வரலாற்றைச் சொல்ல வேண்டுமானால், வீரபத்திரர் பற்றிய ஆய்வு மிகவும் தேவை என்பதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது...

## வீரபத்திரன் வரலாறு

தட்சன் மிகப் பெரிய யாகம் வளர்க்கின்றான். இந்த யாகத்திற்குச் சிவன் மீது கொண்ட கோபம் காரணமாகச் சிவனை யாகத்திற்கு அழைக்கவில்லை. எனவே பார்வதி சிவனை அழைக்கும்படி, தட்சனிடம் வேண்ட, தட்சன் மறுக்கின்றான். கோபம் கொண்ட பார்வதி, யாக குண்டத்தில் வீழ்கின்றாள்.

இதைத் தன்னுடைய ஞானக் கண் கொண்டு அறிந்த சிவன் கோபம் கொண்டு ருத்ரதாண்டவம் ஆட, அவருடைய உடலி லிருந்து கொட்டும் வியர்வை நதியாக ஓடுகிறது. அதிலிருந்து நூற்றியெட்டு போர்க் கருவிகளோடு வீரபத்திரர் தோன்று கின்றார்.

தட்சனின் செயலுக்குத் தண்டனையாக அவனைக் கொன்று விடுகின்றார். எனவே இதன் அடையாளமாக அன்றிலிருந்து தோன்றியதே வீரகாசே எனப்படும் ஆட்டம்.

**கொடுமையைக் கொல்லும் வீரபத்திரன்**

தட்சனின் ஆணவம்போக்க, இறைவனையே அவதூறு பேசிய கொடுமையைக் கொல்ல வீரபத்திரன் தோன்றியதால், கொடுமைகள் மண்ணில் மறையவும், பூமியில் அமைதி பூக்கவும் வீரபத்திர வழிபாடு செய்து, மக்கள் விழா கொண்டாடி வருகின்றனர்.

இவ்வகையான விழாக்களில் வீரபத்திரனின் கதையைச் சொல்லக் கேட்டால், மக்களுக்கும், கால்நடைகளுக்கும் இடையூறு நேராது என்பது, கிராமத்தாரின் நம்பிக்கை.

**வீரபத்திரன் திருவிழா நடனம்**

இந்த நடனத்தில் வீரபத்திரனின் கதையை உரையாடல்களோடு வர்ணிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து சமளா, காடே, டிரம், தோளு, ஷெனாய், தாளக்கருவி போன்ற பழைமையான இசைக் கருவிகள் இசைக்கப் படுகின்றன.

காவி வேட்டி, வெள்ளைச் சட்டை, மஞ்சள் வண்ணத் தலைப்பாகை, கழுத்தில் உத்திராட்ச மாலை, இடுப்புப் பட்டியினூடே பித்தளைத் தகட்டினாலான தட்சனின் தலை, முழங்கையின் மேலே வீரபத்திரக் கடவுளின் உருவம் தாங்கிய தகடு, ஆகியன ஆட்டக்காரர்களின் ஒப்பனைகள்.

ஆனால் இத்தகைய பக்திப் பரவசம் நிறைந்த ஆடலும் பாடலும் விழாக் காலங்களில் மட்டுமே ஆடப்படும். மற்றப் பொது நிகழ்ச்சிகளில் இது நடத்தப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**வீரமும், விவேகமும்**

வீரம் நம்முடைய மக்களின் உணர்வு களில் கலந்திருக்கிறது. ஆனால் அது தர்மத்தின் அடிப்படையில் அமைந் திருந்தது என்பதை நாம் உற்று நோக்க வேண்டும். நியாயங்கள் காயப்படக்கூடாது என்பதற்காகத்தான் வீரபத்திரனும் ஆயுதங் களுடன் காட்சியளிக்கிறார்.

எனவேதான் நம்முடைய மக்கள் வீரபத்திரன் நம்மைக் காப்பாற்றுவார் - இல்லை காப்பாற்றி கொண்டு இருக்கிறார் என்பதை எண்ணி, வணங்கி வருகின்றனர்.

**வீரபத்திரனின் சகோதரர்கள்**

விநாயகர், முருகன், பைரவன் ஆகியோர் வீரபத்திரனின் சகோதரர்கள், ஐயப்பன் இவருடைய இன்னொரு சகோதரர் என்பதை இன்னும் பலர் அறிந்து கொள்ளாமல் இருக்கின்றனர்.

எனவே வீரபத்திர சாமியின் வரலாற்றை, அருள்தரும் பெருமையை, இனி உலகம் உணர்ந்து உய்ய வேண்டும் என்பதற்காக, இந்த அற்புதமான வேள்வியை இந்திய அறிவியல் விஞ்ஞானி டாக்டர் கண்ணப்பன் அவர்கள் தலைமையேற்று நடத்துவது மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

அறிவியல் பூர்வமான சிந்தனையோடு வீரபத்திரனை வணங்கி இந்த ஞாலம் முழுவதும் நிறைவு பெற வேண்டும்.

புலர் விடியல் மலர் தூவி புதுப்பாட்டு குயில் இசைக்க, வீரபத்திரன் புகழ்பாட இனி அவனி அணி வகுக்க வேண்டும்.

எல்லாம் நல்லதாய் ஏற்றமுடைய தாய், வல்லமை மானுடம் பெற அவருடைய திருவருள் பூரணமாய் நம்மிடம் இனி நிலைத்து நிற்கும்.

வாழ்க! வளமுடன்! ❑

*With Best Compliments from:*

**M/s Arumugam Annamalai Components (P) Ltd.,**

31, Second Main Road,
Jaihindpuram,
Madurai 625 011.

*With Best Compliments from:*

**M/s Bisanlal Sitaram & Sons**

13, Valluvar Kottam High Road,
Nungambakkam High Road,
Chennai 600 034.

# வீரபத்திரர் என்ற சரபேஸ்வரர்

மீனாட்சி வசந்தகுமார், மதுரை

அருள்மிகு வீரபத்திரரைச் சிவபெருமானின் அம்சமாகச் சொல்லுவார்கள். இன்னும் சிலர் சிவபெருமானுக்கு உதித்த விநாயகர், முருகர், பைரவர், வீர்பத்திரர் என்ற நான்கு பேரில் இவரும் ஒரு புத்திரர் என்பர். தட்சனின் யாகத்தில் சிவபெருமானை அவமதித்ததால் தட்சனை அழிக்கச் சிவனால் இவர் உருவாக்கப்பட்டவரென்று சொல்லப்படுகிறது. கர்நாடகாவிலுள்ள கொல்லூர் மூகாம்பிகை ஸ்தலத்தில் மூகாசுரன் என்ற அரக்கனை வதம் செய்ய மூகாம்பிகையின் படைத்தலைவனாகச் சென்றவர் இவர் என்று சொல்கிறார்கள். இன்னும் சில இடங்களில் இவர் காளிதேவியின் கணவன் என்றும் கூறுகிறார்கள்.

அருள்மிகு வீரபத்திர சுவாமியின் தெய்வச்சிலைகளைத் தமிழ்நாட்டில் எல்லாச் சிவன் கோயில்களிலும் காணலாம். மதுரையில் அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில், அருள்மிகு சுந்தரேஸ்வரர் சன்னிதி முன்னால், துவஜஸ்தம்பத்தருகே கிழக்கில் மிகவும் அழகாகப் பீடத்தின்மேல் சுமார் 12 அடிக்கும் மேலாகத் தெளிவான கலை நயமுடன் அமைந்த அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர் எனக் கல்லால் ஆன இரண்டு விக்கிரகங்களைக் காணலாம். அதேபோல் வலப்புறத்தில் அதே அளவில் சிவபெருமானின் ஊர்த்துவத் தாண்டவமும் அருகே பத்திரகாளி சிலையையும் காணலாம்.

இதேபோல் கர்நாடகத்தில் புலிகேசி மன்னர்கள் காலத்திலும், கிருஷ்ணதேவராயர் காலத்திலும், சிறியதும், பெரியதுமான சிலைகள் அமைக்கப்பட்டு, வழிபடப் பட்டன. அவற்றில் சில ஹம்பி, படவேடு, சிக்கோடி, கொல்லூர், சௌந்தத்தி, மட்டமாரி ஆகிய இடங்களில் வழிபடப் படுவதை இன்றும் காணலாம். கர்நாடகத்தில் லிங்காயத்தினர் என்ற பிரிவினரில் ஆண், பெண், குழந்தை யாவரும்-பூணூல் போன்ற நூலில் வெள்ளி சிமிழின் உள்ளே சிவலிங்கம் வைத்து அணிபவர்கள்-தினமும் அதற்குப் பூஜை செய்வார்கள். அங்கு அருள்மிகு வீரபத்திரரை வழிபடுபவர்கள் அதிகம். அங்கு "வீரபத்ரேஸ்வர பிரசன்னா" என்ற தொடர் வழங்கப்படுகிறது. வீரபத்திரப்பா, வீரபத்திரய்யா, வீரண்ணா, வீரப்பா (மொய்லி), வீரய்யா, வீரேஷ், வீரா, வீரேஷ்குமார், வீரேந்திரகுமார் என்றெல்லாம் வீரபத்திரரின் பெயரை இணைத்து மக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

அதேபோல ஆந்திராவிலும் பல இடங்களிலுள்ள சிவன் கோயில்களில் வீரபத்திரசுவாமியை வழிபடுவதைக் காணலாம். ஸ்ரீசைலம், ரெய்ச்சூர் ஆகிய இடங்களிலும் இவ்வழிபாட்டைக் காணலாம். இவ்வழிபாடு ஆந்திரமும், கர்நாடகமும் இணையும் இடத்தில், இரு மாநிலங்களுக்கும், எல்லையாகயுள்ள கிருஷ்ணாநதியின் அருகேயுள்ளது. ரெய்ச்சூர் சக்திநகர் அருகில், ஸ்ரீ சுகுரேஸ்வரர் என்ற பெயரிலேயே உள்ள ஊரில் ஸ்ரீ சுகுரேஸ்வரின் ஆலயம் இருக்கிறது. மிகவும் சிறப்பாகவும், மடியாகவும் மாலை 6 மணிக்கு ஆரம்பித்து ஒரு மணி நேரம் வரை இங்கு அபிடேகம் ஆராதனைகள் நடைபெறுகின்றன. இந்தச் சுவாமி சுகுரேஸ்வரருக்கு வீரபத்திரர் என்று வேறு பெயர் உண்டு. வருடத்திற்கு ஒருமுறை இங்கே தேர்த்திருவிழாவும் நடைபெறுகிறது.

இதற்கும் மேலாக ஸ்ரீமகாவிஷ்ணு நரசிம்மவாதாரம் எடுத்து, ஹிரண்யகசிபுவைக் கொன்று அவனின் இரத்தத்தைக் குடிக்கவே, மிகவும் உக்கிரமாகிப் போனார்.

பிரகலாதனோ லட்சுமி தாயாரோ யாரும் அருகே சென்று அவரைச் சாந்தப் படுத்த முடியவில்லை. அப்போது தேவர்கள் சிவனை வேண்ட, அவர் திருவீரபத்திரரை அழைத்து நரசிம்மரைச் சாந்தப்படுத்தப் பணித்தார். வீரபத்திரரும் மனித உருவில் சென்று முயற்சி செய்தார். அவரால் முடியவில்லை. உடனே சிம்மமும், மனிதனும் இணைந்த நரசிம்மனை அடக்கிச் சாந்தப்படுத்தத் தானும் பட்சி, யாளி, மனிதன் ஆகிய மூன்றும் கலந்த சரப பட்சி உருவெடுத்து ஸ்ரீ சரபேஸ்வரராகி நரசிம்மனைச் சாந்தப் படுத்தினார்.

சரப உருவெடுத்த திரு வீரபத்திரருக்கு மிகவும் விஷேச யாகங்கள் செய்தும், பகை, நாசம், பில்லி, ஏவல் போன்றவை தங்களை விட்டு நீங்கவும், மோட்ச பலம், புத்தி, முக்தி இவை ஏற்படவும் வியாதி வராமல் தடுக்கவும், தலைவிதியை மாற்றவும் பூஜைகள் செய்தும் பயன் பெறுகிறார்கள். கும்பகோணம்-மயிலாடுதுறை பாதையில் திருப்புவனம் என்ற இடத்தில், நடுக்கம் தீர்த்த பெருமான், கம்பகேசுவரர் ஆலயம் உள்ளது. இங்குச் சரபேஸ்வரர் என்ற வீரபத்திரரைப் பலரும் சிறப்பு யாகம் செய்து வழிபட்டுப் பலன் பெறுவதுண்டு. நரசிம்மரின் அட்டகாசத்தால் ஏற்பட்ட நடுக்கம், மக்களுக்குத் தீர்ந்தாலும், மதுரை வரகுண பாண்டியனைப் பிடித்த பிரம்மஹத்திதோஷம் நீங்கி, நடுக்கம் மட்டும் தீராமலிருக்கவே அவன் இத்தலத்தில் பூஜித்து,நிவர்த்தி பெற்றான். இதனால் இப்பெருமானைக் கம்பகேஸ்வரர் என்றும், நடுக்கம் தீர்த்த பெருமாள் என்றும் கூறுவர். கங்கை கொண்ட சோழபுரத்திலும், தாராபுரத்திலும் காரைக்குடி சிவன் கோயிலிலும் சரபேஸ்வரருக்குத் தனிச் சன்னிதி உண்டு. திருவண்ணாமலை, சிதம்பரம், தாம்பரம் ஆகிய கோயில்களிலுள்ள தூண்களிலும் அருகிலுள்ள தேனுபுரீஸ்வரர் ஆலயத் தூண்களிலும், மீனம்பாக்கம் திரிசூலம் ஆலயத்தூணிலும் கோயம்பேடு குசலபுரீஸ்வரர் மண்டபத் தூணிலும், மதுரை மீனாட்சி கோவில் திருக்கல்யாண மண்டபம் முன் உள்ள தூணிலும் சரபரரை வழிபடலாம்.

ஸ்ரீசரபரின் தியான சுலோகம்

*ஹூம்காரி சரபேஸ்வர: அஷ்டசரண*
*பக்ஷ சதுர் பாஹூக*
*பாதா கிருஷ்ட நிருஸிம்ஹ விக்ர ஹதர:*
*காலாக்னி கோடித்யுதி:*
*விச்வ க்ஷோப நிருஸிம்ஹ தர்ப்பசமன*
*பிரும்மேந்திர முக்யை ஸ்துத*
*கங்கா சந்தர தர: புரஸ்தாப*
*ஸத்யோரிபுக் னோஸ்து ந:*

சரப காயத்ரி

*ஸாலுவேசாய வித்மஹே பக்ஷிராஜாய தீமஹி*
*தந்நோ சரப: ப்ரசோதயாத்!!*

சரபரின் மூல மந்திரம்

*ஓம் கேம் காம் பட் ப்ராணக்ர*
*ஹாஸி, ப்ராணக்ர ஹாஸி*
*ஹூம்பட் ஸர்வ சத்ரு சம்ஹாராணய*
*சரப ஸாலுவாய பக்ஷிராஜாய ஹூம் பட்*
*ஸ்வாஹா*

விதியை மாற்றும் சக்தி சரபேஸ்வரருக்கு மட்டுமே உண்டு. நமக்கு வெற்றியளித்து, தீராத இன்னல்களை நீக்கி, கோடி சத்ருக்களை அழித்துத் தன்னிடம் சரணடைந்தவர்களுக்கு அபயமளிக்கும் தெய்வம் இவரே தான் வீரபத்திரர்.

திருச்சி திருவானைக்கோயிலில் அருள்மிகு திரு அகிலாண்டேஸ்வரியின் வெளிப்பிரகாரத்தில் - விபூதிப் பிரகாரத்தில் அருள்மிகு வீரபத்திரரின் தனி ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் வீரபத்திரரின் பக்தர்கள் வருடம் ஒரு முறை ஒன்று கூடி ஆண்டுப் பூஜையை மிக விமரிசையாகச் செய்து வருகிறார்கள். ♦

# தாத்தா தந்த தெய்வம்

செல்வி ராஜன், எம்.எஸ்.சி.

**எ**ங்கள் தாத்தா, ஜனவிகுலம் கேப்டன். டாக்டர். ஜே. எஸ். கங்காதரம் பிள்ளை அவர்களின் கண்கண்ட குலதெய்வம் அருள்மிகு வீரபத்திர சுவாமி. தாத்தாவும் ஆயாவும் வீரபத்திரரைப் போற்றி வணங்கி வழிபாடு செய்து வந்தார்கள். அவர் கூற்றின்படி அவர்களை, அவர்கள் குடும்பத்தாரை, வழிவழிச் சந்ததியார்களை அருள்மிகு வீரபத்திரர் சுவாமி தொடர்ந்து காத்து, வழிநடத்தி வருகின்றார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

### தாத்தா என்ற எங்கள் தெய்வம்

மனிதருள் மாணிக்கமான என் தந்தை பேராசிரியர் டாக்டர் ஜே. ஜி. கண்ணப்பன் அவர்களின் பெற்றோர்கள், உயர்திரு. கங்காதரம் பிள்ளை, திருமதி செண்பகவல்லி அம்மாள் ஆவார்கள். இருவரும் ஒருவருக்காக ஒருவர் என்று பிறந்து கணவன், மனைவி என்ற சொந்தம் கொண்டனர். தாத்தா ஜே. எஸ். கங்காதரம் பிள்ளை என்ற மாமனிதரை ஈன்ற பெரும்பாக்கியம் பெற்ற பெற்றோர்கள் உயர்திரு சபாபதி பிள்ளை, முத்தம்மாள் ஆவார்கள். அவர்களைப் புகைப்படமாக அறிவேன். எங்கள் தாத்தா இராணுவத்தில் கேப்டனாகப் பணிபுரிந்தவர். இரண்டாம் உலக மகாயுத்தத்தில் போர் வீரர்களோடு கப்பலில் சென்று, நாட்டைக் காக்கும் வீரர்களின் உடல் நலத்தைக் காத்தவர், அடிபட்டவர்களுக்கு அன்புச் சேவை செய்தவர். மாபெரும் மருத்துவர். இவர் கப்பலில் சென்றபோது இவருக்கு முன்னும், பின்னும் சென்ற கப்பல்கள் குண்டுகளுக்கு இரையாயின. ஆனால் இவர் பயணம் செய்த கப்பல் மட்டும் தப்பித்தது. இது குலதெய்வம் வீரபத்திரர் அருளால்தான் நடந்தது.

படித்த காலத்தில் இவர் இராமாராவ் தங்கப்பதக்கம் வாங்கியவர். அதே பரிசை இன்று அவர் பேரன் டாக்டர் எஸ். இராஜசபாபதியும் வாங்கியுள்ளார் என்பதுதான் இப்பரம்பரையின் பெருமை. பணி முடிந்து ஓய்வு பெற்றபின் இவர் தன் குலதெய்வத்தைக் காக்கும் குல மனிதரானார்.

### குலதெய்வத்தைப் பற்றி, தாத்தா கூறிய செய்தி

திருவானைக்கா கோயிலின் வெளிப்பிர காரத்தில் இருக்கும் அருள்மிகு வீரபத்திரர் கோயிலில், காட்டுச் செடிகள் மண்டிக் கிடக்க, புதரால் மூடப்பட்ட நிலையில் முன்பு தெய்வம் இருந்தது. "உங்கள் குலதெய்வமாகிய நான் இங்கு இருக்கிறேன். என்னை உணர வருவாயாக" என்பது போன்று, தெய்வீக உணர்வைப் பெற்றதாகவும் அதன் பின் செடி, கொடிகளை அப்புறப்படுத்தியதாகவும் அங்கே 6 அடி உயரமுடைய கம்பீரமான சிலையைக் கண்டு பிரமித்துப் போனதாகவும் அதன்பின் அம்மாபெரும் தெய்வத்திற்குக் கோயிலை எழுப்பியதாகவும் முறைப்படி கும்பாபிஷேகம் செய்ததால் குலமும் தழைத்தோங்கியதாகவும் தாத்தா கூறினார்.

### எங்கள் தாத்தா தெய்வ மனிதர்

இராணுவத்திலிருந்ததால், அவர் எதிலும் கட்டுப்பாடு மிக்கவர். காலையில் எழுந்து, பல் துலக்கி, மாடிக்குச் சென்று அங்கிருந்து மலைக்கோட்டை திக்கை நோக்கியும், திருவானைக்காகோயில் திக்கை நோக்கியும் கைக்கூப்பிய வண்ணம் தேவாரம், திருவாசகம் போன்ற பல பாடல்களை 1/2 மணி நேரம் பாடுவார். பின் கீழ் இறங்கி வந்து அன்றாடக் கடமைகளைச் செய்வார் தாத்தா. அவர் ஐயர் ஒருவரைக் கொண்டு வீரபத்திரருக்கு

அன்றாடப் பூஜை செய்துவந்தார். அவர் பாடிய பாடல்களைத் தொகுத்து அவரது மணி விழாவில் மலராகவும் வெளியிட்டனர். மருத்துவச்சேவையின் போதும் வாரக் கடைசியில் ஞாயிற்றுக் கிழமைகளில் கோயிலுக்குச் சென்று வருவார். விழாக் காலங்களில் சிறப்புப் பூஜை செய்து வழிபடுவார்.

அனைத்துப் பரம்பரைக் குலமக்களும் இறைபக்தர்களும் கூடும் வகையில் விடுமுறை நாளான அக்டோபர் இரண்டாம் சனிக் கிழமையை வீரபத்திரசுவாமி ஆண்டு விழாவாகத் தேர்ந்தெடுத்தார் அவர். தன் பிள்ளைகள், உற்றார் உறவினரிடம் நீங்கள் என்ன சம்பாதிக்கின்றீர்களோ? என்ன சாப்பிடுகின்றீர்களோ? தெரியாது. ஆனால் வருடாவருடம் குறிப்பிட்ட தொகையை இறைவனுக்குக் கொடுத்தே தீர வேண்டும், ஆண்டு பூஜைக்கு வந்தே தீர வேண்டும். உங்களின் இப்பங்கு உங்கள் வம்சத்தையே வாழவைக்கும் என்றார். அவருடைய வாக்கை, வீட்டுத் தலைவர் என்ற முறையில், வீரபத்திரர் வாக்காகக் கொண்டு கட்டுப்பாட்டுடன் அனைத்து உறவினர்களும் ஒன்று கூடுவோம். எல்லோரும் இணைந்து, இறைவனை வேண்டுவதில் கிடைக்கும் பெருமகிழ்ச்சி, பேரமைதி, வேறெதிலும் கிடைப்பதில்லை. மேலும் ஒருமைப்பாட்டையும், இறைவன் முன் பாகுபாடின்றி அனைவரும் அவரின் பிள்ளைகளாக, வேறுபாடற்ற, ஒரே குடும்பமாகத் திகழும் ஓர் உயர்ந்த எண்ணத்தையும் அனைவருக்கும் வளர்த்தது. ஒரு குடும்பத்து உறவினரையே யாரென்று அறியா நிலையை இன்று பார்க்கின்றோம்.

எனக்கு 38 வயதாகின்றது. இன்றும் அவர் காட்டிய பாதையில், தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற முறையில் நடக்கிறோம். மூத்த தாத்தா வழியில் பிள்ளைகள் நடப்பதால், ஒவ்வொரு ஆண்டும் பூஜைக்குத் தொடர்ந்து செல்வதால், எங்கள் அனைவரது உறவின் முறைகளை அறியும் வாய்ப்பையும் அன்பினைப் பகிர்ந்து கொள்ளும் நிலையையும் பெற்றிருக் கின்றோம். எல்லாம் வல்ல அருள்மிகு வீரபத்திரர் அருளும் எங்கள் தாத்தா இறைவன்மேல் கொண்ட உண்மையான ஈடுபாடும் எங்களை இன்றும், என்றும் வாழவைக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையில் வாழ்கின்றோம்.

நான் சிறுமியாக இருந்தபோது அவர் எனக்குச் சொன்ன வாசகம், என் மனத்தில் என்றும் அழியாமல் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. "நீ வீரபத்திரரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், உனக்குச் சோதனைகள் பல வந்தாலும், அவர் உன்னைப் பாதுகாப்பார்" என்று ஆணித்தரமாகச் சொல்லுவார். நான் சிறு வயதிலிருந்தே காதில் தோடு, கையில் ஒரு வளையல், கழுத்தில் ஒரு சங்கிலி போட்டிருப்பேன். பள்ளிக்குச் செல்லும்போது, என் தாய் "எப்பொழுதும் கவனமாக இருக்க வேண்டும். புது மனிதர்களுடன் பேசக்கூடாது, பழகக்கூடாது, போகக் கூடாது. இங்கிருந்து பள்ளி, பள்ளிவிட்டால் வீடு எனக் காலக் கணக்கோடு இருக்க வேண்டும்" என்பார்கள். நான் சொல்வேன் "ஏம்மா பயப்படுகின்றீர்கள்? வீரபத்திர சுவாமி என்கூட, எப்பொழுதும் துணையாக நடந்துவருகிறாரே, யார் என்ன செய்ய முடியும்" என்பேன். என் தாய் மிகவும் வியந்து என் நம்பிக்கையைப் பாராட்டினார். அதற்குப் பின் இதுவரை எனக்கு அறிவுரை கூறியதே இல்லை.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக எங்கள் கோயிலில் தான் மொட்டை அடிப்பது, காது குத்துவது திருமணம் செய்வது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். அக்கோயிலுக்குக் கும்பாபிஷேகமும் நடந்தது.

இத்தெய்வத்தின் அருளை உணர்ந்த இசைமாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் கும்பாபிஷேகத்தில் பாடி, தானும்

பரவசமடைந்து, எங்களைப் பக்தி மழையில் மூழ்கடித்தார். எண்ணற்ற சொற்பொழிவுகளில் இதைப்பற்றிப் பேசியுள்ளார். முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஒருமுறை எங்கள் தெய்வத்தின் பெருமையைக் கூறி, எங்கள் குடும்பக் கட்டுப்பாட்டையும் பெரிதும் பாராட்டிப் பேசினார். குறிஞ்சிக் கம்பன் குறிஞ்சிப்பாடி வைத்தியநாதன், அழைப்பிதழ் வந்தாலும் வராவிட்டாலும், அக்டோபர் இரண்டாம் சனிக்கிழமை வந்துவிடுவார். இவர் மட்டுமல்ல. இறை அருளை உணர்ந்த எண்ணிலடங்கா இறை அன்பர்கள் தாமே வருகின்றார்கள் என்றால், இதற்குக் காரணம் எல்லாம் வல்ல அருள்மிகு வீரபத்திர சுவாமியின் உண்மையான கருணை உள்ளம் தான். ஏன்? என் தந்தைக்கு ஏற்பட்ட கடுமையான சோதனையிலிருந்தும் எங்கள் குடும்பத்தையே காப்பாற்றியவர் வீரபத்திரர் தான்.

### ஆண்டுவிழா

இப்பொழுது எங்கள் அருள்மிகு வீரபத்திர சுவாமி ஆண்டு விழாவை இரண்டு நாட்களாகக் கொண்டாடுகிறோம். முதல் நாள் சனிக்கிழமை பூச்சொரிதல் என்ற நிகழ்ச்சி மதியத்திலிருந்து ஆரம்பித்துவிடும். ஆன்மீக அன்பர்கள் தம் கைகளால் பூக்களை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து மகிழ்வார்கள். எல்லோரும் பூச்சொரியச் சொரிய இறைவன் பூக்குள் நிலைத்து நிற்பது போன்ற காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகும்.

மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவோம். யார் வேண்டுமானாலும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் கலை விருந்தளிக்கலாம். அதுபோது தான் எப்படிப் பட்ட திறமை ஒவ்வொருவரிடமும் ஒளிந்து கிடக்கின்றது என்பது தெரியவந்தது. எங்கள் பெரியப்பா டாக்டர். ஜே.ஜி. சண்முகநாதன் அப்பர், வ.உ.சி., ஔவையார், நந்தனார் போன்ற பலப்பல வேடங்களைப் புனைந்து அனைவரையும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடித்து வருகிறார். அதேபோல் என் தந்தை பேராசிரியர் டாக்டர்.ஜே.ஜி. கண்ணப்பன் அவர்களும் திருநாவுக்கரசராக, வள்ளலாராக நடித்துத் திரை வைத்தார். இவர்களைப் பார்த்து சிறு குழந்தை களிலிருந்து, பெரியவர்கள் வரை எல்லோரும் ஈடுபாட்டுடன் பாடுவார்கள், நடிப்பார்கள் இதன் மூலம் அவர்கள் திறமைகள் வளர்வதுடன், நீதி நெறிகள், வாழ்க்கைத் தத்துவங்கள், வாழ வேண்டிய நெறி முறைகள் முதலியவை குழந்தைகள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிய ஏதுவாகின்றது. அன்று இரவு இணைந்து சமபந்தி உணவு உண்டு அனைவரும் உறங்கச் செல்வோம்.

அடுத்த நாள் காலை எல்லா அபிஷேகங்களும் சிறப்பாக நடைபெறும், பால், பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், திரு மஞ்சனம், சந்தனம், விபூதி என்ற அபிஷேகங் களும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும், கருத்துக்கு விருந்தாகவும் நடைபெறும். அதற்குப்பின் வெள்ளிக்கவசம் அணிவித்து ரோஜா, மருவு, மருக்கொழுந்து, செவ்வந்தி, வாடாமல்லி போன்ற எல்லா மலர்களையும் கொண்டு மிகச்சிறப்பான வண்ண அலங்காரத்துடன், தீபாராதனை நடைபெறும். இக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட விடத்து நம் மன இருள் அகன்று பரிபூரணத்துவ ஜோதி நிலையை உணர்ந்து மனம் மிக லேசாக ஆவதை உணரலாம். அதற்குப் பின் வயிற்றுக்கு வடை பாயாசத்துடன் அனைவருக்கும் சமபந்தி உணவு நடக்கும். அதன்பின் அவரவர் இல்லம் திரும்புவர்.

உலகில் மக்கள் பிறக்கின்றார்கள், வளர்கின்றார்கள், வாழ்கின்றார்கள், மறை கின்றார்கள். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்க்கை அல்ல. இப்படித்தான் வாழவேண்டும் என்ற

கட்டுப்பாட்டை நமக்கு வரையறுத்துத் தந்தவர்தான் இறைவன். இந்த இறைவனை நமக்குப் புரியவைப்பவர்கள் பெற்றோர்கள், பெரியோர்கள். அந்த வழியில் எங்கள் தாத்தா கேப்டன். டாக்டர். ஜே. எஸ். கங்காதரம் பிள்ளை காட்டிய, அருள்மிக வீரபத்திரசுவாமி அருள் வழியில், அறிவு வழியில் வாழ்ந்து, கா்ம வினையால் ஏற்படும் துன்பங்களை, இன்பங்களாக்கி வாழ்கின்றோம். பேட்டரியைச் சார்ஜ் செய்வது போல எந்நாளும் வீரபத்திரா் மேல் அபிமானம் கொண்டு பூஜை செய்வதன் மூலம் எங்களைச் சார்ஜ் செய்து சிறப்பான, உயர்வான வாழ்வு வாழ்கின்றோம் என்பதுதான் சத்தியமான உண்மையாகும். அது என்றென்றும், வாழையடி வாழையாகத் தொடர எல்லாம் வல்ல அருள்மிகு வீரபத்திரரை வேண்டி வணங்குகின்றேன். ❑

*உலகம் உய்ய வீரபத்திரா் அருள் புரிவாராக!*

## பல்வகை வீரபத்திரர்கள்

வீரபத்திர வழிபாடு தனிச்சிறப்புப் பெற்றபோது அனேகா் வீரபத்திர மூர்த்தியை முதன்மை வழிபடு தெய்வமாகக் கொண்டார்கள். அவர்களின் பரிபக்குவத்திற்கேற்ப வீரபத்திரமூர்த்தியும் பலவகையான உருவங்களில் அவர்களுக்கு அருள்பாலித்திருக்கின்றார்.

வீரபத்திரர் தோன்றி அருள்புரிந்த கோலங்கள் அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஜலவீரபத்திரர், பவன வீரபத்திரர், ரண வீரபத்திரர், உக்ர வீரபத்திரர், உத்தண்ட வீரபத்திரர் என்று பலவாறாக அழைக்கப்பட்டன.

இவ்வடிவங்களில் தலையில் சுடர்ப் பிழம்புகள் ஒளிவீச விழித்து கனல் பறக்கும் பார்வையுடன் விரைந்து செயல்படும் நிலையில் அனேக கரங்களைக் கொண்டவைகளாகவும் மூர்த்தங்கள் அமைகின்றன. மதுரை, தென்காசி, திருநெல்வேலி முதலிய ஆலயங்களில் பெரிய தூண்சிற்பங்களாக இத்தகைய வீரபத்திரர்களைக் காணலாம்.

இவர்களுக்கு இணையாகக் காளிதேவியும் அக்னிகாளி, அகோர காளி, ஜலகாளி, பவன காளி, ரண காளி, உக்ர காளி, உத்தண்ட காளி என்ற பெயர்களில் விளங்குகின்றாள். மதுரை சோமசுந்தரர் - மீனாட்சி ஆலய கம்பத்தடி மண்டபத்தில் பெரிய திருவுருவங்களாக அக்னிவீரபத்திரர், அக்னிகாளி, அகோர வீரபத்திரர் அகோர காளி ஆகியோரின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்கள் சிறு வெண்ணை உருண்டைகளை இந்தத் திருவுருவங்களின் மீது வீசுகின்றனர். இது சிறந்த பிரார்த்தனையாக அமைந்துள்ளது.

**-சிவமஞ்சரி**

# வீரபத்திரசாமி - வரலாறுகளும் குடிகொண்ட தலங்களும்

புலவர் பொன். தெய்வநாயகி சோதி

உலகில் பரவியுள்ள மாபெரும் சத்திகள் ஒன்று திரண்டு, ஒரு வடிவில் இயங்கி மக்களுக்கு நன்மை செய்து வருகின்றது. அது அருவம், உருவம், அருவுருவம் என மூன்றுவகைளில் வணங்கப்படுகிறது. பேரொளிப் பிழம்பாகவும், லிங்கமாகவும், நடனக் கோலத்தில் நடராசராகவும் விளங்கும் அப்பரம்பொருள், தீமைகளைத் தீய்க்க எடுத்த கோலம், வீரபுத்திரரின் உருவமாகும்.

நாட்டின் பிரதமர் தன் ஆளுகைக்கீழ் பலரைப் பணியாற்ற வைத்து, மேற்பார்வையிடு வதைப் போல, சிவபரம்பொருளும் அறுபத்து நான்கு மூர்த்தங்களாகப் பிரிந்து செயற் படுகிறது.

'சிவபராக்ரம்' எனும் நூலில் அஷ்டாங்க மூர்த்தி துதி என்பது ஒன்று. அது "லிங்கம் லிங்கோத்பவம் சைவ முகலிங்கம் சதா சிவம்" எனத்தொடங்கி "வீரபத்ரம் அகோ ராஸ்த்ரம் தக்ஷயக்ஞ நரந்ததா" என முடிகின்றது.

பாம்பன் சுவாமிகள் "அஷ்டாங்க விக்கிரக லீலை" என்ற தலைப்பில் சந்திர சேகர மர்த்த நாரீசுரஞ்சக்கரப் பிரதானம்" எனத் தொடங்கி

*"வீரபத்திரந்திரி மூர்த்தி முப்பாத மகாவேதானி*
*நடம் வெருவேறு மேக பதந்திரியுருவாய்*
*விளம்பறுபது நான்கும் "*

- என வீரபத்தர சுவாமியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**வரலாறுகள்**

தக்கன் வேள்வி செய்த போது, சிவபெருமானை அவமானம் செய்தமையால், அவனைத் தண்டிப்பதற்காக, நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரனைத் தோற்று வித்தார். இதனைக் கந்தபுராணச் செய்யுளால் அறியலாம்.

*"சிறுவிதி வேள்வி நண்ணித் தீயவி*
*நுகர்ந்த பாவம்*
*முறைதனில் வீரன் செற்று முற்றஎ*
*முடிந்ததில்லைக்*
*குறைசில விருந்த வாற்றாற் கூடிய*
*துமக்கித் துன்பம்*
*அறுமுகப் பெருமா னன்றி யாரிது*
*தீர்க்கற் பாலார்" வீர-சய-தே.33*

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் எப்போதும் போர் நடக்கும், ஒருமுறை தேவர்களால் அசுரர்கள் அடக்கப்பட்டனர். அசுரர் அனைவரும் சுக்கிராச்சாரியாரிடம் முறையிட, அவர் வீரமார்த்தாண்டன் என்ற அசுரனை அனுப்பினார். அவன் தேவர்களைத் துன்புறுத்தினான். தேவர்கள் அஞ்சி எம்பெருமானிடம் முறையிட்டனர். அவர் தன்னையொத்த வீரபத்திரரை அனுப்பி வீரமார்த்தாண்டனை அழித்தார். அவரே வீரபத்திர மூர்த்தமாகும்.

சுத்ததத்து என்பவன் சிவனை நோக்கித் தவம் செய்து அவரின் அருளால் எல்லாப் பேறுகளையும் பெற்றான். சுகபோக வாழ்க்கை வாழ்ந்தான். தன்னையே உயர்வாக எண்ணினான். ஆணவம் கொண்டு சிவனை மதிக்காமல் யாகம் செய்தான். பலர் கூறிய அறவுரைகளையும் அவன் செவிமடுக்க வில்லை. நாரதர் போன்ற முனிபுங்கவர்

பலரும் சிவனை அணுகி வேண்ட, அவர் வீரபத்திரரை உண்டாக்கினார். எட்டுக்கரமும், கோர வடிவமும் கொண்ட அவர், யாகத்தையும், சுத்த தத்துவையும் தொலைத்தார்.

"*ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்*
*எண்ணின் தவத்தான் வரும்*"
- எனத் தமிழ்மறை கூறும்.

ஈங்கு சுத்ததத்து செய்த தவம், அவன் வாழ, பிறரை அழிக்கப் பயன்பட்டது. அதனால் அவன் துன்புற்றான்.

அகோர உருவத்தால் 'அகோராஸ்த் திரம்' என்னும் படைக்கலனால் அசுரனை அழித்தமையால் 'அகோர வீரபத்திரர்' என அவர் அழைக்கப்பட்டார்.

**வீரபத்திரர் கோயில் தலங்கள்**

பெருந்துறை: கும்பகோணம் - காரைக்கால் வழியில் நாச்சியார் கோயிலை யடுத்த இரவாஞ்சேரியிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் வீரபத்திரசாமி கோயில் உள்ளது. செவ்வாய் தோசத்தைப் போக்கவல்லவர் என்றும், நேர்மையான வழியில் வாழ்பவரைத் துணையாகயிருந்து காப்பவர் என்றும் அந்த இறைவன் போற்றப்படுகின்றார்.

நோன்பு - சித்திரைத் திங்கள், செவ்வாய் தோறும் நோன்பு இருப்பர்.

சிவப்பு மலராலும் வில்வத்தாலும் அர்ச்சனைச் செய்வர். காரமான புளிசாதம் படையலாகப் படைப்பர். திங்களும் வியாழனும் இவருக்கு உகந்த நாளாகும்.

பலன் : சத்துரு பயம் தீரும் நினை வாற்றல் பெருகும். உடன் பிறந்தோர் பயனடைவர்.

கும்பகோணத்தில் மகாமக குளத்திற்குப் பக்கத்தில் ஏழு பெண்களின் சிலைகள் உள்ளன. இவர்களைச் சப்த நதிகள் என்பர். இவர்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்டவர் வீரபத்திரர் என்பர். இங்கே வீரபத்திரரின் சிலையும் உண்டு.

மதுரை : மீனாட்சியம்மன் கோயிலிலும் அகோர வீரபத்திரர் சன்னிதியுண்டு. தக்கன் யாகத்தைச் சிதைக்க சிலரால் தோற்று விக்கப்பட்டவர் என்ற வரலாறு உண்டு. அகோரமூர்த்தியின் கோலம் பார்க்க பரவசமூட்டும். இடக்காலை முன் வைத்து, வலக்கால் கட்டை விரலையும் அடுத்த விரலையும் ஊன்றி நடக்கின்ற கோலம் அருமையுடையது. தலபுராணப் பாடல் அவரின் தோற்றத்தை வருணிக்கிறது.

"*கருனிறமு மணிமாலை புனையழகும்*
*வளையெயிறும் கவினைச் செய்ய*
*எரிசிகையும் நுதல்விழியும் நடைக்கோல*
*இணையடியும் இலக எட்டுக்*
*கர நிலவ மணிபலகை கொண்டலைவான்*
*கடிதுடியேர் சூலமேற்று*
*வெருவமருத் துவனையடர் அகோரசிவம்*
*துணைப்பதம் சீர் விளம்புவாமே*

- என மருத்துவாசுரனை அடக்குவதற்குச் சிவனின் அகோரமுகத்தினின்று தோன்றியவர் எனக் கூறப்பட்டுள்ளது.

அகோரமூர்த்தியின் காலடியில் சரணடைந்த மருத்துவனைக் காணலாம். இவர் தோன்றிய காலம் மாசிமாதம், கிருஷ்ணபட்சம், பிரதமை திதி, பூரநட்சத்திரம், ஞாயிற்றுக்கிழமை, இரவு 12.00 மணி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆண்டுதோறும் விழா (அதாவது அகோரபூஜை) நடக்கிறது.

வில்லிவாக்கம்: வீரபத்திரசுவாமியையே பெரியாண்டவர் என்று இங்கும் வணங்கு கின்றனர். குலதெய்வமாகப் பலர் கொண்டாடு கின்றனர்.

செங்கல்பட்டு : அனுமந்தபுரம் எனும் இடத்தில் வீரபத்திரசாமிக்குத் தனிக் கோயிலுண்டு. வெற்றிலைப்பட்டி கட்டி

மாலையாக அணிவித்து வேண்டுகோள் செய்யும் வழக்கம் உண்டு. இதனால் குறைகள் யாவும் தீருவதாக மக்கள் நம்புகின்றனா்.

திருவெண்காடு: சீர்காழிக்குத் தென்கிழக்கில் 1.கி.மீ.தொலைவில் அகோர மூர்த்தி கோயில் உண்டு. சிவனின் கோபத்தில் உதித்தவர் என்பதால் 'நமஸ்தே ருத்ர மன்யவே' என வணங்கவேண்டும் என்பா். சிவனின் கோபத்திற்கு வணக்கம்' என்று இதற்குப் பொருள். ருத்ரம் - சிவன்; ருத்ரம் என்ற வேதமந்திரத்தில் வீரபத்திரரைத் துதிக்கும் முறைகள் சொல்லப்பட்டுள்ளன. சூலம், கபாலம், தமருகம், கட்கம், வேதாளம் இவைகளைக் கையில் வைத்துக் கொண்டு வீரபத்திரா் நின்ற கோலத்தில் உள்ளாா். 'அகோர அஸ்திரம் மந்திரம்' சொல்லப்படும்.

அமாவாசை, சதுர்த்தசி, பௌர்ணமி, ஞாயிற்றுக் கிழமை ஆகிய இந்த நாட்களில் வீரபத்திரனை வழிபடுகின்றார். எள் கலந்த சர்க்கரைப் பொங்கலைப் படையலாகப் போடுகின்றனர். இதற்குக் கிருன்ரான்னம் என்பா். ருத்ர திரிசதி என்ற மந்திரத்தால் அா்ச்சனை செய்கின்றனா்.

*'மருத்துவன் என்னும் அரக்கனையே*
*மாய்க்கப் பரமன் திருவடியும்*
*பொருத்தமாய்க்கொண்டார்*
*அகோரமெனப்*
*பொங்கி எழுந்தனர் வெண்காட்டில்'*
எனப் பாடலுண்டு.

பிரம்மோற்சவம் கழிந்த ஐந்தாம் நாள் சுவாமி புறப்பாடு நடக்கும். வெட்டி வேரினால் திரித்துவிடப்பட்ட ஜடாமுடியுடன் அவா் அழகாகக் காட்சியளிப்பாா். சன்னதி சேர்வதற்குள் பலருக்கு ஆவேசம் வந்துவிடும். அர்ச்சனை செய்யும் அர்ச்சகருக்கே சில சமயம் ஆவேசம் வந்து விடும். அப்போது அருகிலுள்ள மற்ற அா்ச்சகா் வழிபாட்டை முடிப்பா்.

எட்டுக்கரம், கத்தி, வேதாளம், உடுக்கை, கபாலம், மணிகேடயம், மணி, திரிசூலம் என ஏழு ஆயுதங்களை ஏந்தியுள்ளாா் வீரபத்திரா். அவா் எழுந்த கோலத்தை ஒரு கவிஞா் வருணிக்கின்றாா்.

*"பார்த்த திக்கினில் கொடிமுடி ஆயிரம் பரப்பி*
*சூர்த்த திண்டிய வரையிரண்டாயிரம் துணக்கி*
*போர்த்த தாள்களில் அண்டமும் -*
*அகண்டமும் பெயர*
*வேர்த் தெழுந்தனன் வீரரில் வீரன்"*

1961இல் அகோரமூர்த்தி உற்சவருக்குக் கோயில் கட்டப்பட்டது. ஞாயிறு தோறும் இரவில் அகோராபிடேகம் சிறப்பாக நடக்கும். நால்வா்களும் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளனா்.

திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகையில்

*"பட்டம் இண்டை அவைகொடு பத்தர்கள்*
*சிட்ட ருனாதியென்று சிந்தை செய்யவே*
*நட்டமூர்த்திஞா னச்சுட ராய்நின்ற*
*அட்டமூர்த்திதன் வெண்காடடை நெஞ்சே"*
எனப் பாடினாா்.

ஸ்ரீ அகோரநந்தி என்ற நூல்
*"கடற்பொங்கிமிழை வெல்லும் மறையொலி*
*வெண்காட்டகோர நல்வித்தகனே"*
*பெரிது நைந்தே, னின்பே யகோர விரங்கா*
*யினியுனை, யெண்ணிடாவே"*
*"வாக்கின்றுரையுள் சொனும், பாணிக் கழலி*
*லகோரா வணியென் பருங்கவியே"*
*"நண்ணா ரகோரரின் னல்லடி யார்க்கன*
*நல்கிமிச்சி ஞுண்ணா ருடற்பொதி காப்பா*
*ரவர்க்கென்னுரைப்பதுவே"*
*"தாயகனே யென் னகோரனி னம்பொற்சரண்*
*சர ண்"*
என அகோரமூர்த்தியைச் சிறப்பித்துள்ளது.

சென்னை இராயபுரம்: இங்கு மிகப் பழைமையான கோயில் உள்ளது. இதை அருள்மிகு பத்திரகாளி வீரபத்திரசுவாமி கோயில் என அழைக்கின்றனர். கோயில் வடதிசை பார்த்திருந்தாலும், வீரபத்திர சுவாமி சன்னிதி கிழக்குத்திசை பார்த்துள்ளது. மிகப் பெரிய சிலை எட்டு அடி உயரம் உள்ளது. இரங்கூனிலிருந்து வந்த திருசங்கு நாடார் கனவில் "நான் பூமியில் இருக்கின்றேன். என் சத்தியை எழுப்ப இந்த இடத்தில் கோயில் கட்டு" எனக் கூற, கனவில் காட்டிய இடத்தில் வீரபத்திர சுவாமிக்குக் கோயில் எழுப்பிக் குடமுழுக்கும் செய்தார். இங்குள்ள காளியின் உருவமும் மிகப் பெரியது. இப்பகுதி மக்கள் இதைக் காளிகோயில் என்றே அழைக்கின்றனர்.

இவர் வியர்வையில் உதித்தவர், அதனால் வியர்வை பத்திரர் என்பது பின்னர் வீரபத்திரர் என மருவியது என்கின்றனர். இங்குள்ள குருக்களுக்கு இந்த வரலாறு தெரியவில்லை. வீரபத்திரரும் காளியும் அண்ணன் தங்கை எனும்போது வருத்தம் ஏற்படுகிறது. சிவனின் பாகமாக வீரபத்திரரும், உமையின் பாகமாகக் காளியும் எனும்போது உடன்பிறந்தோர் என்பது தவறல்லவா?

தீமைகள் அகல, நல்லோர் நலம் பெற வீரபத்திரசுவாமியை வணங்கி உய்வு பெறுவோமாக!

**துணை நூல்கள்**


1. கந்தபுராணக் கதைகளும், அவைகளுணர்த்தும் உண்மை நூற்கருத்தும் - திரு.க.சோமசுந்தர புலவர்
2. சிவபராக்கிரமம் மிஸ்டிக் செல்வம், சென்னைப் பல்கலைக் கழகம்
3. திருவெண் காட்டுத்தலவரலாறு - டாக்டர் த. அகரமுதல்வன்
4. உபாசனா தெய்வங்கள் - தொகுப்பாசிரியர் - செந்தில் துறவி
5. திருநாவுக்கரசு சுவாமிகள் - திருக்குறுந்தொகை


## வெற்றிலைப்படல் விழா

வீரபத்திரருக்கு உரிய அலங்காரங்களுள் ஒன்று "வெற்றிலைப் படல்" சாற்றுவதாகும். வெற்றிலையை அடுக்கடுக்காக தைத்து மாலை போல சூட்டுவதுடன் பிரபையிலும் அடுக்கடுக்காக அமைப்பர். இதற்கு வெற்றிலைப் படல் என்பது பெயராகும். இந்நாளில் வெற்றிலையில் பாக்குவைத்து சுருட்டி அந்தச் சுருளை மாலையாகக் கட்டி அணிவிக்கின்றனர்.

அந்நாளில் போருக்குச் செல்லும் வீரர்களுக்கு மனைவியும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் வெற்றிலைபாக்கு கொடுத்து வெற்றியுடன் மீண்டு வருக என்று வாழ்த்தி அனுப்புவது மரபாகும். வெற்றிலை வெற்றிக்குரிய அடையாளப் பொருளாகும். வெற்றியைத் தரும் "இலையே" வெற்றிலையானதென்பர். வெற்றியைத் தரும் முருகனின் கைவேலின் பரந்தபாகம் வெற்றிலையைப் போன்று இருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

பல தெய்வங்கள் வீராவேசம் கொண்ட போர்த் தெய்வங்களாகவும் வெற்றிக் கடவுளராகவும் இருப்பினும் வீரபத்திரருக்கு மட்டுமே வெற்றிலைப்படல் உற்சவமும், வெற்றிலைப் படலும் உரியனவாக உள்ளன.

வீரபத்திர மூர்த்திக்கு அனைத்து நாட்களிலுமே வெற்றிலைப்படல் சார்த்தலாம் என்றாலும் அதற்குரிய சிறப்பானநாள் "திருஆடிப்பூரம்" ஆகும். ஆடிப் பூரத்தில் அனேக ஆலயங்களில் வெற்றிலைப்படல் சார்த்தப்படுகின்றது.

அனுமந்தபுரத்தில் அமைந்துள்ள வீரபத்திரருக்கு 12800 வெற்றிலைகளைக் கொண்டு வெற்றிலைப் படல் சார்த்துகின்றனர்.

-சிவமஞ்சரி

# வீரபத்திர சுவாமி வருகை

சி.பி. சிவப்பா, கோயமுத்தூர்

**தோற்றுவாய்**

நான்முகனின் மைந்தன் தக்கன். இவனது மகள் தாட்சாயணி. நீண்ட தவத்தின் பயனாகத் தாட்சாயணி மகேஸ்வரரைக் கணவனாக அடையப் பெற்றாள்.

ஐந்து தலையுடன் இருந்து ஆணவத்துடன் நடந்து கொண்டதால் மகேஸ்வரன் பைரவரை அனுப்பிப் பிரமனின் ஒரு தலையைக் கிள்ளி எடுத்துவிட்டார். இதை மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

*"நல்ல மலரின்மேல் நான்முகனார் தலை*
*ஒல்லை அரிந்தது என்று உந்தீபற*
*உகிரால் (நகத்தால்) அரிந்தது என்று உந்தீபற"*

என்று பாடியுள்ளார். பரமனை ஆணவத்தால் எதிர்த்த பிரமனின் தலை நகத்தால் கிள்ளி எடுக்கப்பட்டது. அவன் மகன் தக்கனும் ஆணவத்தால் தான் யார், தன் நிலை என்ன, என்பதை மறந்து ஈசனுக்கே பெண்கொடுத்த கர்வத்தால் ஈசனைத் தவிர்த்து ஏனைய தேவர்களையும் முனிவர்களையும் நான்முகனையும் நாராயணனையும் இந்திரனையும் சந்திரனையும் சூரியர்களையும் அழைத்து மிகப்பெரிய வேள்வியை இயமானனாக இருந்து ஆரம்பித்தான்.

ஆணவம் தலைக்கு ஏறிய தக்கன் துவக்கியது வேள்வியல்ல. தனது இறுதி முடிவு. இதை ஒட்டக்கூத்தர், தனது "தக்கயாகப் பரணியில்" தக்கன் தனது ஊத்தை தலை அறுபடத் துவக்கிய யாகம் என்று குறிப்பிடுகின்றார்.

தாட்சாயணி தன்னுடைய தந்தை, தன் கணவரான மகாதேவரை அழையாது வேள்வி செய்வதை அறிந்து அச்செயல் சரியல்ல என நேரில் சென்று எடுத்துரைத்தாள். ஆனால் ஆணவத்தால் தக்கன், தன்மகள் என்றும் பாராது அவ்வை அவமானப்படுத்தினான். மகாதேவரையும் மற்றத் தேவர்கள் எதிரில் அவமதித்துப் பேசினான்.

இது கண்டு தாட்சாயணி தன் உடலை எரித்துக் கொண்டார். இதை அறிந்து மகாதேவர் அடங்காக் கோபத்துடன் சடையை அவிழ்த்து உருத்திர நடனம் ஆடி முடிவில் வீரபத்திரனைத் தன் சடையில் இருந்து தோற்றுவித்தார்.

மகாதேவர் மனம் குளிர, ஆயிரம் தலையுடனும் இரண்டாயிரம் கரத்துடனும் பல ஆயுதங்கள் தாங்கிப் பத்திரகாளியுடன் ஆணவத்தலை உடைய தக்கனை அழிக்க அவன் இருக்கும் இடம் நோக்கிப் புறப்பட்டார் வீரபத்திரர்.

அங்கு வேள்வியில் கலந்து கொண்டவர்களுக்கு வீரபத்திரன் தந்த தண்டனைகளை மாணிக்கவாசகர் அழகாகச் சொல்லுவார்.

*"சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்*
*ஓடியவா பாடி உந்தீபற*
*உருத்திர நாதனுக்கு உந்தீபற*
*ஆ ஆ திருமால் அவிப்பாகம் கொண்டு அன்று*
*சாவாது இருந்தான் என்று உந்தீபற*
*சதுர்முகன் தாதை என்று உந்தீபற"*

(சாவாது என்பது அடிபட்டதால் ஏற்பட்ட மயக்கம்)

*"வெய்யன் அங்கி விழுங்கத் திரட்டிய*
*கையைத் தறித்தான் என்று உந்தீபற*
*கலங்கிற்று வேள்வி என்று உந்தீபற"*

(அக்கினித் தேவனின் கை துண்டித்தான் வீரபத்திரன்)

*"புரந்தரனார் (இந்திரன்) ஒரு பூங்குயில் ஆகி*
*மரந்தனில் ஏறினார் உந்தீபற"*
(வீரபத்திரனுக்கு அஞ்சி இந்திரன் குயிலாக உருமாறினான்)

*"உண்ணப்புகுந்த பகன் ஒளித்து ஓடாமே*
*கண்ணைப்பறித்தவாறு உந்தீபற"*

*"நாமகள் நாசி சிரம் பிரமன் பட*
*சோமன் முகம் நெரித்து உந்தீபற"*
(நாமகள் - சரஸ்வதி; பிரமன் - "நான்முகன்; சோமன் - சந்திரன்)

*நான் மறையோனும் மகத்து இயமான்பட*
*போம் வழிதேடும் ஆறு உந்தீபற*
*புரந்திரன் வேள்வியில் உந்தீபற"*

குயிலாக ஒளிந்திருந்த இந்திரன், பிரமனும் வேள்வியின் எஜமான் தக்கனும் படும் பாட்டைக் கண்டு தப்பிப்போம் என்று வழிதேட ஆரம்பித்தான்.

*"சூரியனார் தொண்டை வாயினில் பற்களை*
*வாரிநெரித்த ஆறு உந்தீபற*
*மயங்கிற்று வேள்வி என்று உந்தீபற"*
(பூடன் என்ற சூரியனின் பற்கள் வீரபத்திரரால் உதிர்க்கப்பட்டன)

வேள்வி கலங்கிற்று (கலைந்தது)

*"தக்கனார் அன்றே தலைஇழந்தார் தக்கன்*
*மக்களைச் சூழநின்று உந்தீபற*
*மடிந்தது வேள்வி என்று உந்தீபற"*

*"தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்*
*தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தது தான்என்னேடி*

*தொக்கன வந்தவர் தம்மைத் தொலைதருளி அருள் கொடுத்தங்கு*
*எச்சனுக்கு மிகைத்தலை மற்று அருளினன் காண் சாழலோ"*

வீரபத்திரர் அங்கு இருந்த அனைவரையும் தண்டித்து விட்டார். ஆணவம் தலைக்கு ஏறினால் சுயசிந்தனை இழந்து, எதுமெய் எதுபொய், நாம் யார் என்பது மறந்து, அனைத்தும் தவறான வழியில் செல்லும்.

அதனால் தக்கன் தலையறுத்துத் தனக்கெனச் சிந்தனையில்லாத ஆட்டின் தலையை அவனுக்கு வைத்தார் வீரபத்திரர். அதைத்தான்,

*'எச்சனுக்கு மிகைத்தலை மற்று அருளினன்காண்'*

என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

## தமிழகத்தில் வீரபத்திரர் வரலாறு - ஓர் ஆய்வு

கர்நாடக மாநிலம் நஞ்சன்கூடு அருகில் உள்ள சுத்தூர் சிவராத்திரி சுவாமிகள் மடத்தில் வீரபத்திர சுவாமி கோயில் ஒன்று உள்ளது. மிகப் பெரிய பாறையில், சிலாசாசனம் செய்து சோழ மன்னன் இராஜராஜ சோழன் சுமார் 150 ஏக்கர் நஞ்சைப் பூமியை இம்மடத்திற்குக் கொடுத்துள்ளான். இது ஒரு வீரசைவர் மடம். (இராஜராஜ சோழன் காலம் 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.)

இக்காலக்கட்டத்தில் குடந்தை என்னும் கும்பகோணத்தில் பெரிய மடம் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. இம்மடத்திலும் வீரபத்திர சுவாமி எழுந்தருளியுள்ளார். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தன் தக்கயாகப்பரணி என்ற நூலை (வீரபத்திரர் வரலாறு) இந்த மடத்தில் வைத்து அரங்கேற்றியுள்ளார். இவருடைய காலம் 10ஆம் நூற்றாண்டு. அது குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலம். இக்கோயிலில் உள்ள வீரபத்திர சுவாமிதான் தமிழகத்தில் முதலில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

பிற்காலத்தில்-நாயக்க மன்னர்கள் காலத்தில்-வீரபத்திரர், மதுரையம்பதியில்

பிரகார தேவதையாக வைக்கப்பட்டுள்ளார். தென்காசி, திருபரங்குன்றம், திருநெல்வேலி, பேரூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னிதி, நெல்லைக்கு அருகில் கிருஷ்ணன் கோயில் ஆகியவற்றிலும் வீரபத்திரர் பிரகார தேவதையாக உள்ளார்.

தமிழகத்தில் பல ஊர்களிலும் வீரசைவர்களால் வீரபத்திர சுவாமி கோயில் பிரதான கோயிலாக நிர்மாணம் செய்யப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றது. மதுரைபேரையூரில் உள்ள வீரபத்திர சுவாமி கோயில் வீரசைவர்களால் பூசனை செய்யப்படுகிறது. திருக்கோயில் தேவாங்க சமூகத்தால் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. சென்னையில் ஒரு வீரபத்திரசுவாமி கோயில் ஆரிய வைசிய சமூகத்தால் பராமரிக்கப்படுகின்றது.

கர்நாடக கோயில்களில் வீரபத்திர சுவாமிக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றார்கள். ஹம்பி என்ற ஊரில் சுமார் 10 அடி உயர வீரபத்திர சுவாமி உள்ளது.

தமிழகத்தில் வீரசைவர்கள், தேவாங்கர், விஸ்வகர்மா இனத்தவர், ஆரியவைசியர் ஒக்கிலக கவுடர் ஆகிய சமூகத்தவர்கள் வீரபத்திரரைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டு வழிபாடு நடத்துகின்றனர்.

கோயமுத்தூர் பேரூர் அ/மி வீரபத்திர சுவாமி திருக்கோயில் வீரசைவ லிங்காயத்தாரின் சமூக நிர்வாகத்தில் சிறப்பாக உள்ளது.

### பார்க்க வேண்டிய வீரபத்திரர் திருக்கோயில்கள்

பெங்களூர் பசவன்குடியில் பிரளயகால வீரபத்திரர் கோயில் உள்ளது. அதில் சுமார் 10 அடி உயரமுள்ள விக்கிரகம் அநேக ஆயுதங்களுடன் உள்ளது.

பெங்களூருக்கு அருகில் மாகடி (மாஹடி) சாவண துர்கா மலையின் மேல் வீரபத்திரர் சிலை சுமார் 7 அடி உயரமாக உள்ளது. இங்குப் பத்திரகாளி திருக்கோயிலும் உண்டு.

தும்கூர் அருகில் சிவகங்கை மலையில் மேகன் குகை வீரபத்திரர் கோயில் உள்ளது. தேவரஹெஉஹள்ளி என்ற ஊரில் வீரபத்திரனும் பத்திரகாளியும் கோயில் கொண்டுள்ளனர்.

தர்மபுரி பென்னாகரம் அருகில், கொடேனஹள்ளி மடத்தில் மிகச் சிறந்த வீரபத்திர சுவாமி கோயில் உள்ளது. அங்கு அழகிய உற்சவரும் உண்டு. வேறு எந்தக் கோயிலிலும் வீரபத்திரருக்கு உற்சவர் இல்லை.

மாயவரம் செம்பொன்னூர் கோயிலின் அருகில் உள்ள திருப்பறியல் (திருப் பறியலூர்) எட்டு வீரட்டான தலங்களில் தக்கனை வதம் செய்த தலம். இத்திருக் கோயிலின். உற்சவ மூர்த்தி, வீரபத்திரரும் பத்திரகாளியும் சேர்ந்த வடிவு கொண்டது. தக்கன் வேள்வி செய்த இடம் தற்பொழுது திருக்குளமாக உள்ளது.

சாம்ராஜ் நகரம் அருகிலுள்ள சென்னப்பன்புரம் மலையில் மைசூர் மன்னர் ஜெயசாம்ராஜ் உடையார் காலத்தில் கட்டப் பட்ட கோயில் உள்ளது.

பிரகலாதன் வேண்டுகோளுக்கு இணங்கித் தூணில் இருந்து வெளிப்பட்ட ஸ்ரீநரசிம்மன் இரண்யாசூரனை வதம் செய்தார். பின்பு அவர் உக்கிரம் தணியாத காரணத்தால் தேவாதி தேவர்கள் சிவபெருமானை வேண்ட வீரபத்திரர் சரபமூர்த்தி என்ற விநோத வடிவெடுத்து நரசிம்மரைக் கிழித்து விட்டார். வீரபத்திரர் கையில் அகப்பட்ட நரசிம்மராகிய மகாவிஷ்ணு பிறகு "அகோரமந்திரம்" என்னும் மந்திரம் சொல்லி வீரபத்திரனை வழிபட்டு உயிர் பிழைத்ததாக ஒரு வரலாறு உண்டு.

கிரகப்பிரவேசம் செய்யும்போது கூறப்படும் வாஸ்து ரக்சோப ஓமம் என்பது ஸ்ரீவீரபத்திர மந்திரம் தான். இது துஷ்ட தேவதைகளை வெளியேற்றச் செய்வது.❑

# பக்தி இலக்கியங்களில் வீரபத்திரர்

திருமதி இளந்தென்றல் அருணாசலம்

மனிதன் விலங்கு நிலையினின்று மனித நிலையை எய்திப்பின், குழுவாகத் திரண்டான். அப்போது, மனிதன் நாடோடி வாழ்வை விட்டுவிட்டு, நிலையாக ஓரிடத்தில் வாழத் தொடங்கினான். பின்பே, சிந்திக்கத் தொடங்கினான். சிந்தித்ததின் வளர்ச்சி வெளிப்பாடே வழிபாடு. தெய்வ உருவங்களை, மக்கள் அவரவர் மனத்திற்கு ஏற்ப அமைத்துக் கொண்டு வழிபட்டார்கள்.

இத்தெய்வ வழிபாடுகளை, வீட்டுத் தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு. சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என நான்குவகைகளில் பிரித்து வழிபட்டனர். இந்நிலையில் தான், "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி தோன்றியிருக்க வேண்டும். பெருந்தெய்வங்களுள் ஒன்றான சிவனின் படைகள் சிவகணங்கள் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. இச்சிவ கணங்களுள் தலைமையானவராகக் குறிப்பிடப்படுபவர் வீரபத்திரர்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் சிவபெருமான். தென்னாடுடைய சிவன் அவன். எந்நாட்டவர்க்கும் இறைவன் அவன். சைவ சமயத்திற்கு முழுமுதற் கடவுள் சிவபெருமான். இத்தகைய மாண்புகளுடைய சிவபெருமானை மதிக்காது, அவமானப்படுத்த வேண்டும் என்ற ஆணவ எண்ணத்தோடு, அவரை அழைக்காமல் தக்கன் ஒரு வேள்வியை நடத்தினான். தக்கனுடைய ஆணவத்தை அடக்க, சிவபெருமானின் கட்டளைப்படி, அவன் வேள்வியை அழிக்கத் தோன்றியவர் தான் வீரபத்திரர். எனவே வீரபத்திரரைச் சிவனின் அம்சமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றார்கள்.

பக்தி இலக்கியங்களிலும், பிற இலக்கியங்களிலும் தக்கனுடைய வேள்வியை அழித்த செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிய பாடல் வரிகளை இக்கட்டுரையில் சுட்டிக்காட்டுகிறேன்.

### கந்தபுராணம்

*"பார்த்த திக்கினில் கொடுமுடி ஆயிரம் பரப்பிச்*
*சூர்த்த திண்புயவரை இரண்டாயிரம் துளக்கிப்*
*போர்த்த தாள்களில் அண்டமும் அகண்டமும் பெயர*
*வேர்த் தெழுந்தனன் வீரரில் வீரன்"*

இப்பாடலில் வீரபத்திரர் தக்கனுடைய யாகத்தை அழிக்க, வேர்த்து எழுந்து சென்ற போது, கண்களிலிருந்து வீசும் பொறி, ஊழி வெங்கனலையே எழுப்பியது என்பர்.

*"மலை அதிர்ந்தன, மாதிரம் அதிர்ந்தன, வான*
*நிலை அதிர்ந்தன, வீரர்கள் அதிர்தலும், நெடுநீர்*
*அலை அதிர்ந்தன, மகம் செய்யும் மயமகன் குடுமித்*
*தலை அதிர்ந்திட அதிர்ந்தன வானவர் தொகுதி'*

இப்பாடலில், தக்கனுடைய வேள்வியை அழிக்கும் பொழுது மலையும், வானமும், வீரர்களும், கடலும், வானவர் தொகுதியும் அதிர, தக்கனுடைய தலை அதிர்ந்தது என்று கூறப்பட்டுள்ளது.

### திருவாசகம்

*"காமனுடன் உயிர்காலன் பற்காய் கதிரோன்*
*நாமகள் நாசிசிரம் பிரமன் கரமெரியைச்*
*சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்*
*தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ"*

என்ற பாடல், வீரபத்திரர் தக்கனுடைய வேள்வியை அழித்தபோது, இந்திரன் குயிலாகப் பறந்தோடினான்; திருமால், பிரமன் தலையிழந்தார்கள்; அக்னி நா அறுப்புண்டான்; சூரியன் பல் இழந்தான்; சந்திரன் வீரபத்திரன் காலால் தேய்ப்புண்டான்; இயமனும் தாளிழந்தான்; தலையிழந்தான்; தக்கன் தலை அறுபட்டான்; சரஸ்வதி உறுப்பிழந்தாள் என்ற செய்திகளைச் சொல்கிறது.

மேலும்,

*"ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்*
*கூட்டிய வா பாடி உந்தீ பற"*
*"வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய*
*கையைத் தறித்தானென்று உந்தீபற"*

என்ற பாடல்களும் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன.

### வீரையன் அம்மானை

*"தக்கனுடைய வேள்விதனைத்*
*தானழிக்க வேணுமென்று*
*வேர்வையில் தான்பிறந்த வீரபத்திரன்"*

இப்பாடல் நாட்டுப்புறப்பாடலான, வீரையன் அம்மானையில் இடம்பெற்றுள்ளது.

### தேவாரம்

*"மலைமகள் தனையிகழ்வது செய்த*
*மதியுறு சிறுமன வனதுயர்*
*தலையினொரு அழல் உருவன கரமற*
*முனிவு செய்தவன்" என்ற*

இப்பாடலை ஞானசம்பந்தர் திருவீழி மிழலையில் பாடியுள்ளார்.

*"தக்கனது பெருவேள்விச் சந்திரன்*
*இந்திரன் எச்சன் அருக்கன்*
*அங்கிமிக்க விதாதாவினொடும்*
*விதிவழியே தண்டித்த விமலர்" என்ற*

இப்பாடலை, திருநாவுக்கரசர், திருக் குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் பாடியுள்ளார்.

*"நாவினான் மூக்கு அரிவித்த நம்பர்"*
*"தாமலார் போலவே திக்கனார்*



கோட்டை வீரபத்திரர் ப்வானிசாகர்

*வேள்வியை ஊமனார் தம்கனா ஆக்கினான்"*

*"சுருதியான் தலையும் நாமகள் மூக்கும்*
*சுடரவன் கரமும் முன் இயங்கு*
*பரிதியான் பல்லும் இறுத்து அவர்க்கருளும்*
*பரமனார்"*

*"தக்கன் தன் வேள்வி தகர்த்தவன்"*
*"தக்கனது பெருவேள்வி தகர்த்தானாகி"*
*"தக்கனது வேள்வி கெடச் சாடினான்"*
*"எச்சன் நிணத்தலை கொண்டார் பகன்கண்*
*கொண்டார் இரவிகளில் ஒருவன் பல் இறுத்துக்*
*கொண்டார். மெச்சன் வியாத்திரன் தலையும்*
*வேறாக் கொண்டார் விறல் அங்கி*
*கரம் கொண்டார். வேள்வி காத்து உச்ச*
*நமன்தாள் அறுத்தார் சந்திரனை உதைத்தார்*
*உணர்விலாத் தக்கன் தன் வேள்வி எல்லாம்*
*அச்சம் எழ அழித்துக் கொண்டு அருளும்*
*செய்தார்"*

*"பெற்றிமை ஒன்றறியாத தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரம்தோள் பல்கரம்கண்பீடழியச்
செற்று மதிக்கலை சிதையர்த்திருவிரலால்
தேய்வித் தருள் பெருகு சிவபெருமான்"*

*"கொண்டாடுதல் புரியாவருதக்கன் பெருவேள்விச்
செண்டாடுதல் புரிந்தான்"*

*"கருதாதவர் வேள்வி அவி உண்ணற்கு
இமயவரை
உருண்டோட உதைத்து உகந்து நண்ணற்
கரியபிரான்"*

என்ற மேற்கூறிய பாடல்களில், ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தங்களுடைய பாடல்களில் தக்கனைப்பற்றியும், தக்கன் வேள்வியை அழிப்பதைப் பற்றியும் பாடியுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. மூவரும் ஒவ்வொரு திருத்தலத்திற்கும் சென்று



*கோட்டை வீரபத்திரர் கோயில்
சுவாமிநாத சிவாச்சாரியார்*

பாடிய போதும், சிவபெருமானுடைய அற்புதங்களைச் சொல்லிய போதும், இடத்திற்கு ஏற்ப, தக்கன் வேள்வியை அழித்த நிகழ்ச்சிகளையும் திருமறைப் பாடல்களில்மிகவும் அற்புதமாகப் பாடியுள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## திருப்புகழ்

*வேத வெற்பிலேபு னத்தில் மேவி நிற்கு மகிமை;
வேடுவச்சி பாத பத்ம மீது செச்சை
முடிதோய;
ஆதரித்து வேளை புக்க ஆறிரட்டி புயநேய -
ஆதரத்தொ டாதரிக்க ஆனபுத்தி
புகல்வாயே
காதுமுக்ர வீர பத்ர காளிவெட்க மகுடாமா -
காச முட்ட வீசிவிட்ட காலர்பத்தி
யிமையோரை;
ஓதுவித்த நாதர் கற்க வோது வித்த முறிநாண -
ஓதெழுத்தி லாறிற முத்தை யோது வித்த
பெருமானே*

காஞ்சிபுரம் வீரபத்திரர் கோவில் சுவரில் ஒருபாடல்

*நேரவே பக்தி செய்வோர் நித்தமே நன்மை
கூரவே எய்திச் செல்வம் குறையிலா வாழ்வும் பெற்று
ஆரவே நீடுவாழ்ந்து அரும்பகை நீத்துவாழ
வீரபத்திரர் தாள்தம்மை விநயமாய்
வணங்குவோமே"*

இப்பாடல், நாளும் நன்மை பெற, குறைவிலாச் செல்வம் பெற, நீடுவாழ, பகை ஒழிந்து வாழ, வீரபத்திரரைத் தொழுவோம் என்பதைக் கூறுகிறது.

இன்னும் பல இலக்கியங்களிலும், புராணங்களிலும் தக்கன் வேள்வியை அழித்த செய்தி பற்றியும், சிவனின் அம்சமாகிய வீரபத்திரர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையாவும், வீரபத்திரரைப் பற்றித் தெரிந்து கொள்ள ஏதுவாக உள்ளன. ☐

*வீரபத்திரரை வணங்குவோம்!
வினைபல நீங்கி வாழ்வோம்!!*

*With Best Compliments from*

## G.K.M COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY

Alappakkam-Mappedu Road, G.K.M Nagar, Chennai-600 063

*Courses Offered:*

B.E Mechanical Engineering
B.E. Computer Science & Engineering
B.E. Electronics & Communication Engineering
B.E. Electrical & Electronics Engineering
Master of Computer Applications
Master in Information Technology

## SAKTHI ENGINEERING COLLEGE

Oragadam Village, Mathur Post
Kancheepuram District

*Courses Offered:*

B.E. Information Technology
B.E. Computer Science & Engineering
B.E. Electronics & Communication Engineering
B.E. Electrical & Electronics Engineering

***Best Wishes from:***

# THE BEST HOSPITAL PRIVATE LTD.,

9, Vellala Street,
Kodambakkam
Chennai-600 024

# திருவினையும் வழங்கி அருள்கவே

"தமிழ்மாமணி" கவிஞர் சீனி. திருநாவுக்கரசு

விதியின் மகனை வென்றோனே!
வேள்வியில் தீமைதனைக் கொன்றோனே!
பதியில் சிறந்த பெரும்பதியாய்ப்
பாரினில் ஆட்சி புரிவோனே!
அழகின் திருவை அருள்வோனே!
அழித்தாய் அந்தி வேள்விதனை;
உலகமே வியக்கும் சிவமதத்தை
உயர்வுறச் செய்யும் உத்தமனே!
பனிமலை நிலவணிப் பரமசிவன்
பெருமைதனை உயர்த்தும் பாலகனே!
கனிவும் உன்னிடம் காட்சிதரும்
கருணையும் நினது ஆட்சியாகும்.
ஓருருக் கொண்டே உலகெலாம்
ஒப்பிலாத் தேவராய் உயர்ந்தோனே!
ஓசையும் ஒலியுமாய் ஆனோனே!
உன்னதப் பொருளாய்த் திகழ்வோனே!
கல்லாரும் கற்றாரும் போற்றிடும்
காளியின் துணையினைக் கொண்டோனே!
எல்லாரும் எந்நாளும் மகிழ்ந்திடவே
வியந்திடும் வரம்பல அருள்வோனே!
வீரத்தின் உருவான வீரபத்திரனே!
வெற்றியை அளித்திடும் வேந்தனே!
தீரத்தையும் அருளிடும் தேவதேவனே!
திருவினையும் வழங்கி அருள்கவே!

# வீரபத்திரர் காட்டும் வாழும் வழி

*சித்தாந்த இரத்தினம், பேரா.* **முனைவர் கஸ்தூரி ராசா**
**எம்.ஏ., எம்.பில்., பி.எட்., பி.எச்.டி.**

**சி**வபெருமானின் திருவிளையாடல்கள் அனைத்தும் உலக உயிர்களை உய்விக்க வந்தவை எனலாம். படைக்கும் பிரம்மாவும், காக்கும் விஷ்ணுவும், அழிக்கும் சிவனுக்குள் அடக்கம் என்பது புராணங்கள் உணர்த்தும் செய்திகளாகும். பிறவா யாக்கைப் பெரியோன் சிவனே முழுமுதற் கடவுள் என்று உணர்ந்த பல்லாயிரக் கணக்கான முனிவர்கள் வட இந்தியாவில் உள்ள நைமிசாரண்ணியம் என்ற புண்ணியத் தலத்தில் சிவத்தியானம் செய்து வாழ்ந்து வந்தனர். வியாச முனிவரின் மாணவரான "சூதபுராணிகர்" நைமிசாரண்ணியம் வர, அங்குள்ள முனிவர்கள் "சூதமுனிவரிடம்" அறுபத்து நான்கு மூர்த்தமாகிய சிவப்பராக் கிரமத்தை விளக்கிக் கூறுமாறு வேண்டினர். முனிவரும் ஸ்ரீ ஸ்கந்த புராணத்தில் உள்ள ஆறு சங்கிதைகளுள் சனற்குமார சங்கிதையில் மூர்த்திமான்மியம் உரைத்த சர்க்கத்தில் திருநந்தி தேவர் சனற்குமார் முனிவருக்குச் சொன்ன செய்திகளை (அதாவது, இலிங்கமூர்த்தி முதல் சிஷ்யபாவ மூர்த்தி, வரை உள்ள அறுபத்து நான்கு மூர்த்தங்களையும் அவர்கள் தம் வீரதீரச் செயல்களையும்) தெளிவாகக் கூறலானார்.

வீரபத்திர மூர்த்தம்: ஒருமுறை தேவர்களுக்கும் அவுணர்களுக்கும் போர் நடந்த போது தேவர்கள் அவுணர்களை அடக்க, அவர்கள் சுக்ராச்சாரியாரிடம் சென்று வேண்ட, சுக்ராச்சாரியார் வீரமார்த்தாண்டன் என்ற அசுரனை, அமரர்களை அழிக்க அனுப்பினார். வீரமார்த்தாண்டன் தேவர்களைத் தாக்கி வெற்றியும் கொண்டான்.

இதனால் தேவர்கள் இறைவனிடம் முறையிட, இறைவன் தனது அம்சமான வீரபத்திரனை அனுப்பி வீரமார்த்தாண்டனை அழித்தார்.

தட்சன், சிவபெருமானையும், உமையம்மையையும் மதியாது போக, அம்மை இறைவனை வேண்ட, உமையம்மையின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றியவர் வீரபத்திரர் என்று கந்தபுராணத்துத் தட்சக் காண்டம் மொழிகிறது. (கந்தபுராணம் பா.எண்.9618) தக்கயாகப் பரணியில் காளிக்குக் கூளி கூறியது (8) என்ற பகுதியில் வீரபத்திர தேவரின் தோற்றம் விளக்கப் படுகிறது.

இதனை,

*"அன்றுவானவ ருய்யவையர் மிடற்றடக்கிய வாலமே*
*சென்று வானவ ருயிர்கொளத்திரு வுள்ளம்*
*வைத்தமைதெரியவே*
*(தக்க.பரணி.**333**)*

*"காலை நெற்றியி னகிலமுஞ்சுடு கனலிகுறைபட*
*விறைவர்தம்*
*மேலை நெற்றி விழிக்கவந்து பணிந்து நின்றனன்*
*வீரனே" (தக்க.பர ணி.**334**)*

என்ற பாடல்களின் மூலம் அறியலாம்.

கர்நாடக மாநிலத்தில் மக்கள் வீரபத்திரரை முழுமுதற்கடவுளாக எண்ணி வழிபடுகின்றனர். சென்னையில் சிவன் கோயில்களில் வீரபத்திர மூர்த்தியின் திருவுருவம் இடம்பெற்று உள்ளது. எனினும் மயிலையில் வீரபத்திர மூர்த்திக்குத் தனிக் கோயில் உள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"கந்தபுராணத்தில்" தட்சகாண்டத்தில் (வீரபத்திரப்படலம் (19); யாகசங்காரப்

படலம் (20)) வீரபத்திரரின் தோற்றம், ஆற்றல், பண்புநலன்கள் ஆகியவைகளின் வழி உலகுக்கு உணர்த்தும் செய்திகளை இனி பார்ப்போம்.

திருவள்ளுவர் 541, 561, 615, 633, 666, 684, 687, 690 ஆகிய குறட்பாக்களில் மொழிவது போலவே அனைத்துத் தலைமைப் பண்புகளும் பெற்றவர் வீரபத்திரர் எனலாம். கச்சியப்பச் சிவாச்சாரியார் வீரபத்திரரைச் சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றும் அவதரித்தார் (9618) என்றும், அவர் திரிபுரங்களை அழிப்பதற்காக எழுந்தருளிய ஒப்பற்ற சிவபெருமானான "உருத்திர மூர்த்தியைப் போன்று விளங்கினார் என்றும் (9764) குறிப்பிடுகிறார். போர் செய்யும்போது அவர் முக்கண்ணரான வீரபத்திரர் என்றும் (9778) உமை மைந்தன் என்றும் (9769) சிவபெருமானின் நெற்றிக்கண் அளித்த வீரபத்திரக் கடவுள் (9780) என்றும் கடவுளுக்கு இணையாகவே குறிப்பிடுகிறார். வீரபத்திரரின் வீரம், ஆற்றல் முதலியவற்றை (9675), (9628), (9657) (9632-9655) (9684-9703) (9720-9746) (9750-9758) போன்ற பாடல்களின் மூலம் அறியலாம்.

எடுத்துக்காட்டாக,

"*மொழியி னில்பல பூதரை அளித்தனன் முனரி*
*விழியி னிற்பல பூதரை அளித்தனன் வேணி*
*யுழியி னிற்பல பூதரை அளித்தனன் உந்திச்*
*சுழியி னிற்பல பூதரை அளித்தனன் தூயோன்". **(9628)***

என்ற பாடலைச் சுட்டலாம்.

**இல்லறம்**

திருக்குறள் ஆணுக்குப் பெண்ணும் (51) பெண்ணுக்கு ஆணும் (41) துணை என்று வலியுறுத்துவது போலவே, வீரபத்திரரின் ஆற்றலுக்கு (9618-9620) இணையாக வீரபத்திரை (9839) என்கிற பத்திரகாளியும் (9717, 9718) விளங்கினாள் என்பதிலிருந்து குடும்பம் என்ற கோயில் அமைய வேண்டிய முறையினையும் கணவன் மனைவி இருவரும் வாழ வேண்டிய முறைமையினையும் இந்நூல் குறிப்பாக உணர்த்துவதை உணரமுடிகிறது.

**பண்புநலன்கள்**

அரசனின் ஏவலை அமைச்சன் நிறைவேற்றும் முறையினைத் திருக்குறள் (635) விளக்குகிறது.

அதுபோலவே,

'*மன்னு யிர்த்தொகை துடைத்திடோ*
*வரம்பில வாகித்*
*துன்னும் அண்டங்கள் தகர்த்திடோ நுமதுதூ*
*மலர்த்தாள்*
*சென்னி யில்கொடே யாவதொன் றென்னினுஞ்*
*செய்வன்*
*என்னை இங்கு நீர்நல்கிய தெப்பணிக்*
*கென்றான்". **(9623)***

என்ற அடிகளின் மூலம் வீரபத்திரரின் உயர்பண்பும் புலப்படுகிறது. தூதுவனுக்குரிய இலக்கணங்களையும் (அதி-69) குறிப்பு அறிதலைப் (அதி-71.) பற்றியும் தெளிவாகத் திருக்குறள் விளக்குகிறது.

வீரபத்திரரும் சிறந்த தூதுவனாகவும், அமைச்சர்க்குரிய அனைத்து இலக்கணங்களும் பொருந்தியவராகவும் விளங்குவதை (9624) (9677-9682) ஆகிய பாடல்களின் மூலம் உணரலாம்.

படைகளின் சிறப்பினை (அதி-77,78) மூலம் திருக்குறள் விளக்குகிறது. அதைப் போலவே (9675) (9632-9647) ஆகிய பாடல்களின் மூலம் வீரபத்திரரின் படையின் மாண்பினைக் கந்தபுராணமும் நவில்கிறது.

மனிதன் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய குற்றங்கள் தோன்றாதவாறு வாழ்தல் வேண்டும் (360) எனவும் "யான் எனது

என்னும் செருக்கினை அறுக்க வேண்டும்" (346) எனவும் குறள் வலியுறுத்துகிறது. இதற்குத் தக்கனின் வாழ்க்கையே சான்றாக அமைவதைக் கந்தபுராணமும் தெளிவாக விளக்குகிறது. (9828, 9829)

## வாழும் வழி

"இன்னா செய்தார்க்கும் இனியவே " செய்தல் வேண்டும் (987) (314) என்றும் பகைவர்க்கும் அருள வேண்டும் என்று குறட்பாக்கள் வலியுறுத்துகின்றன. இதனையே •(9797-9801) (9809-9831) (98333) போன்ற கந்தபுராணப் பாடல்கள் வற்புறுத்துவதைக் குறிப்பாக உணர முடிகிறது. அன்பு, அருள், ஆற்றல், போன்ற பண்புகள் நிறைந்தவள் அன்னையெனும் பெண் வடிவம் என்பதனை (9803) ஆம் பாடல் உணர்த்துகிறது.

உலக உயிர்கள் அனைத்தும் பிறவியாகிய கடலைக் கடக்க, இறைவனை அடைதல் வேண்டும் (10) (50) என்கிறது வள்ளுவம். இதனையே கந்தபுராணம் (9818, 9826) பாடல்கள் வலியுறுத்துவதை உணரலாம்.

அரசனுக்கு இருக்க வேண்டிய பண்பினைத் திருக்குறள் (அதி.58) தெளிவாக விளக்குகிறது. எடுத்துக்காட்டாக 579-வது குறட்பாவைச் சுட்டலாம். போரில் மாண்ட அனைவரையும் உயிர்ப்பித்ததும், தவறு செய்தவர்களை மன்னித்து அருள் புரிந்ததும் இன்றைய ஆட்சியர் உணர வேண்டிய உன்னதப் பண்பாகும்.

*"சண்டை மகத்தில் எமை இகழ்ந்துநின்சினத்தான்*
*மாண்டு சிதைவுற்ற வலியிலோர் தம்முயிரை*
*மீண்டும் அளித்துருவு மேனா ளெனப்புரிதி*
*ஆண்டகை நீயென்றே அரனருளிச் செய்தலுமே"*
***(9808)***

*"வீர னதற்கிசைந்து மேனாளென இறந்தீர்*
*யாரும் எழுதிர் எனஉரைப்ப வானவர்கள்*
*சோரு முனிவர் மறையோர் துயிலுணர்ந்த*
*நீர ரெனஉயிர்வந் தெய்த நிலத்தெழுந்தார்"*
***(9809)***

என்ற பாடல்களின் மூலம் உணரலாம்.

## ஆய்வு முடிவுரை

1. வீரம், மக்களுக்கு உயிர் போன்றது.
2. 'தான்' என்ற ஆணவம் வீழ்ச்சிக்கு வித்தாகும்.
3. அறிவு, ஆற்றல், சொல்வன்மை ஆகியவை தலைமைக்கு வேண்டிய உயரிய பண்புகளாகும்.
4. ஆணும் பெண்ணும் சமம்.
5. அன்பே அருளாகிறது; அருளே இரக்கத்தைத் தருகிறது; இரக்கமே வீடுபேற்றிற்கு வழியாகிறது.
6. பிறவிக் கடலைக் கடக்க இறையடிகளே துணையாம்.
7. வீரபத்திரப்படலம், மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

## துணைநூல்கள்


1. திருக்குறள்
2. கந்தபுராணம் (9605-9840 பாடல்கள் மட்டும்) ❑


*சாதிசண்டை ஒழித்து சமரசத்தை வளர்த்து*
*சகோதர எண்ணத்துடன் சமத்துவத்தை வளர்த்து*
*பாரத் திருநாட்டை இந்த பார்தனில் உயர்த்திடவே*
*பக்தையின் வேண்டுதலை பணிவுடன் நடத்திடுவாய் – அருள்மிகு வீரபத்ரா*

– வாசுகி

# இலக்கியத்தில் வீரபத்திரர்

**வித்வான் அ. பாண்டுரங்கனார், திருவண்ணாமலை**

**சி**வபெருமான் அன்பர்களுக்கு அருள் பாலிக்க வேண்டியும், கொடியவர்களைத் தண்டிக்க வேண்டியும் பல்வேறு வகையான சூழ்நிலைகளில் பல்வேறு வகையான வடிவங்களை மேற்கொண்டார். அவ்வாறு நோக்கும்போது, சிவபுராணம் அறுபத்து நான்கு வடிவங்களைக் கூறுகிறது. அவற்றுள் இருபத்து நான்கு வடிவங்களைச் சிறந்த வடிவங்களாகக் கூறுகின்றார்கள். இந்த இருபத்து நான்கு வடிவங்களுள் வீரபத்திர சுவாமிகளையும் சேர்த்தே சைவ சமயநூல்கள் கூறுகின்றன.

அருளாளர் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் திரு அம்மானை என்ற ஒரு பகுதியை இயற்றியுள்ளார். அதன்கண், பதினைந்தாம் பாடலில் தக்கன் வேள்வியில் வீரபத்திரர் செய்த செயல்களையெல்லாம் சிவபிரான் செய்த செயல்களாகப் பாடுகிறார்.

*சந்திரனைத் தேய்த்தருளி, தக்கன் தன் வேள்வியினில்*
*இந்திரனைத் தோள் நெரித்திட்டு எச்சன் தலையரிந்து*
*அந்தரமே செல்லும் அவர் கதிரோன் பல்தகர்த்து*
*சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த*
*செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்*
*மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்*

இந்தப் பாடலில், தக்கன் செய்த வேள்வியில் வீரபத்திரர் செய்த வீரச் செயல்களையெல்லாம் சிவபிரான் செய்த செயல்களாகவே அவர் கூறுகிறார். சந்திரன், இந்திரன், சூரியன், தேவர்கள், தக்கன் முதலியோர் தண்டனை பெற்றதைக் கூறுகிறார்.

பிறகு, திருவுந்தியார் என்ற திருவாசகப் பகுதியில்

*சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்*
*ஓடியவாபாடி உந்தீபற*
*உருத்திரநாதனுக் குந்தீபற*
*வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய*
*கையைத் தறித்தான் என்றுந்தீபற*
*கலங்கிற்று வேள்வியின் உந்தீபற"*

தக்கன் வேள்வியில் வீரபத்திரர் செய்த இந்தச் செயல்களையெல்லாம் சிவபிரான் செய்தனவாகவே அவர் கூறுகிறார்.

பிறகு, பார்ப்பதியாகிய தாட்சாயணியைத் தக்கன் அவமானப்படுத்திய செய்தியையும் கூறுகிறார் மணிவாசகப் பெருமான்.

*"பார்ப்ப தியைச் பகைசாற்றிய தக்கனைப்*
*பார்ப்பது என்னே? ஏடி உந்தீ பற"*

தாட்சாயணி, தன் தந்தையாகிய தட்சன் செய்த யாகத்திற்குச் சென்றார். அந்த அம்மையாரை அவன் வரவேற்கவில்லை. அம்மையார் அவனைச் சபித்துத் திரும்பினார். அதனை இப்பாடலில் குறித்துள்ளார். இவ்வாறு மாணிக்க வாசகர், வீரபத்திரரையும், உமையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.❑

# வீரபத்திரர் வழிபாடு

**திரிபுரசுந்தரி கார்த்திகேயன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,(பி.எச்.டி)

**கணபதி துணை**

*ஓம் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி துணை*

*ஓம்ஸ்ரீ குருவே சரணம்*

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது ஆன்றோர் வாக்கு. அவனருள் இருந்தால்தான் அவன் தாளை வணங்க முடியும். இறைவணக்கமும் பணிவும் வாழ்வியல் ஆதாரங்கள். இவ்வடிப்படைத் தன்மைகள் உள்ளத்தில் ஊன்றிட இறை வழிபாடு மிகமிக அவசியமாகும்.

**ஈசனின் வடிவங்கள்**

*"போகியாய் இருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்*
*யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்*
*வேகி ஆனாற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்*
*ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்"*

இச்சிவஞான சித்தியார் திருவிருத்தம் இறைவனின் போகத் திருவுருவம், யோகத் திருவுருவம், வேகத் திருவுருவம் என்ற மூன்றையும் உணர்த்துகின்றது.

**போகத் திருவுருவம்:** கல்யாண சுந்தரர், உமாமகேஸ்வரர், சோமாஸ்கந்தர்

**யோகத் திருவுருவம்:** தக்ஷிணாமூர்த்தி, பிக்ஷாடனர்

**வேகத் திருவுருவம்:** காமாரி, வீரபத்திரர்

உயிர்களுக்கருளும் பொருட்டு ஈசன் கொண்ட பல்வகை வடிவங்களின் சிறப்பினை உணர்ந்து வழிபடுதலே முக்திக்குரிய வழியாகும். அதுவும் வாழ்வியல் நெறியுமாகும். இத்திருவுருவங்களில் வேக வடிவினராகிய வீரபத்திரரின் வழிபாட்டினைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"ருத்ர மூர்த்தியே உன் கோபத்திற்கு எங்கள் முதல் வணக்கம்" என்ற பொருளில் "நமஸ்தே ருத்ர மன்யவே" என்ற தொடராய் ஸ்ரீருத்ரம் துவங்குவதிலிருந்து வேகத் திருமேனியின் சிறப்பை உய்த்துணரலாம்.

**அருள்மிகு வீரபத்திரர்**

அசுரர்களை, தீயசக்திகளை அழித்தும் தேவர்களுக்கு நல்லுயிர்களுக்குத் தோன்றும் ஆணவத்தை ஒடுக்கியும் உலகினையும், உயிர்களையும் காத்து அறத்தை நிலைநிறுத்தும் மூர்த்திகளே வீரமூர்த்திகளாவர். இவ்வீர மூர்த்திகளுள் ஒருவரே வீரபத்திரர்.

இறைவன் உயிர்களின் வினையைப் போக்கவே வேக வடிவங் கொள்கின்றான் என்று அருணந்தி சிவாசாரியார் உரைப்பர். இவ்வினைகள் நல்வினை, தீவினை என்ற இரண்டாகும். நல்வினை பொன்விலங்கு போன்றது; தீவினை இரும்புவிலங்கு போன்றது. இரண்டுமே பிறப்பிற்கும் இறப்பிற்கும் காரணமாவது. இவ்வினைகளுக்கு-பிறப்பிற்கு-அடிப்படை ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களாகும்.

